# இரவின்
# இனிய கீதங்கள்

# SONGS IN
# THE NIGHT

## ஜனவரி 1

**நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து, முழங்கால் படியிடக்கடவோம் வாருங்கள். *(சங். 95:6)***

தெய்வீக திட்டத்தை அறிந்து, அதன் வழியாக தேவசாயலை, தேவ மகிமையை நிழலாட்டமாகக் காணும் பொழுதும், நம்முடைய அறிவின் கண்ணால், அந்த மெய்யான காட்சியைக் காணும் பொழுதும், தமது சபையைப் பாதுகாத்து பராமரிக்கின்ற அவரை, நினைத்துப் பார்க்கும் பொழுதும் அவர் முன்பாக நம்மை புழுதிக்குச் சமமாக எண்ணி நம்மைத் தாழ்த்தி (சாஷ்டாங்கமாக) பணிகிறோம். அப்பொழுது நாம் அபூரணர்கள் என்றும் நம்முடைய குருவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் நிற்க தகுதியற்றவர்கள் என்றும், அவருடைய தயவுக்கும் ஆசீர்வாதத்திற்கும் அபாத்திரர் என்றும் உணர்கிறோம். அவர் யோவானை மெதுவாகத் தொட்டு எழுப்பினதைப் போல நம்மிடம் ஆதரவாக, சமாதானமாக, அன்பாகப் பேசுகிறார். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். நாம் இரக்கத்தைப் பெறவும் நமக்கு ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யவும் கிருபையைத் தரவும் தம்முடைய விலையேறப்பட்ட இரத்தத்தால் நம்மை கிரயத்துக்குக் கொண்டார். அவரே நம்மை ஏற்றுக் கொண்டிருக்கிறார். தம்முடைய சரீரத்தின் அங்கமாக அவர் நம்மைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் நாம் அவரில் நிலைத்திருந்து நம்முடைய இருதயங்களில் அவரைத் தேடி அவருடைய சித்தத்தின்படியே செய்கிறவர்களாக இருக்க வேண்டும். R 3569:6

## ஜனவரி 2

**முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். *(எபே. 5:8)***

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார், உங்கள் நற்கிரியைகளாகிய வெளிச்சம் பிரகாசிக்கின்ற பொழுது அதைப் பார்க்கிற மற்றவர்கள் பரலோகத்தி-ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதாயிருக்க வேண்டும். அநேகர் நம்முடைய

நற்கிரியைகளை பாராட்டமாட்டார்கள் என்று முன்பாகவே எச்சரித்திருக்கிறார். என்னிமித்தம் உங்கள் மீது தீமையான காரியங்களை பொய்யாச் சொல்வார்கள். இருளின் பிள்ளைகள் வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பகைப்பார்கள். இம்மாதிரியான வேளைகளில் நாம் கவலைப்படாமல் "சந்தோஷப்பட்டு களிகூறுங்கள்" என்று புத்தி சொல்கிறார். " பரலோகத்தில் உங்களுக்கு பலன் மிகுதியாயிருக்கும்." ஒளியின் பிள்ளைகள் மற்றவர்கள் தங்கள் மீது குற்றஞ் சுமத்தும் பொழுதும் இப்படிப்பட்ட மகிழ்ச்சியி-ருப்பார்கள். அவர்கள் சத்திய வெளிச்சத்தில் பிரகாசிக்கும் பொழுது நீதியாய் நடக்கிறவர்களுக்கும் பெருந்தன்மையான இருதயமுள்ளவர்களுக்கும் தீமை மற்றும் தவறுகள் எடுத்துக் காண்பிக்கப்படும். R 5719:4

## ஜனவரி 3

***நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். (யோவா. 4:14)***

ஜீவத்தண்ணீராகிய சத்தியத்தை ஒருமுறையேனும் ருசி பாராதவர்களுக்கு வேண்டுமானால் தவறுகள், பொய்மைகள் ஆகியவற்றை விரும்பி நடத்தும் பொழுது தற்கா-கமாக ஒரு மனநிறைவையடையலாம். ஆனால் நிரந்தரமான மனநிறைவை தருவதோ சத்தியம் ஒன்று மட்டுமே; நமது பரமபிதாவின் வார்த்தையானவர், அவருடைய வார்த்தைகளை அவ்வண்ணமாகவே செயல்படுத்தியவர், தேவ தயவையும், கிருபையையும் மிகுதியாப் பெற்ற அவரே ஜீவ தண்ணீராகிய சத்தியத்தினாலே எல்லோருக்கும் நிரந்தரமான மனநிறைவை தரக்கூடியவர். இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராகவும், வழிகாட்டியாகவும், போதகரும், குருவுமாக ஏற்றுக் கொண்டவர்கள் எவர்களோ அவர்கள் அவர் மூலமாய் பிதாவினிடத்தினி-ருந்து வருகின்ற கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை பெறுவார்கள். இந்த ஜீவத் தண்ணீரைப் பெற்ற அவர்களுக்கு நித்திய காலமாய் ஊருகின்ற ஜீவத்தண்ணீரால் மனநிறைவு பெறுவார்கள். அவர்கள் மனநிறைவுக்காக வேறு வழிக்குப் போக வேண்டியதில்லை. அவர்கள் விரும்புகின்ற அளவுக்கு மற்றெதனைக் காட்டிலும் மனநிறைவை தருகிறது. பசியைப் போக்குகிறது, தாகத்தைத் தீர்க்கிறது. R 2424:2



## ஜனவரி 4

***ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார். (யோபு 23:10)***

நம்முடைய விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவைகள் சோதிக்கப்பட வேண்டும். அதிலும் நாம் இடுக்கமான வாசல் வழியே பிரவேசிக்கத் தொடங்கும் பொழுது நாம் சாத்தானுடைய பார்வையில் படுகின்றோம். உடனே அவன் சோதிக்கத் தொடங்குகிறான். ஒருபக்கம் ஆவிக்குரிய சந்தோச சமாதானங்கள் பெருகி வரும் பொழுது சோதனைகளும், வேதனைகளும் பெருகி வரும். இவைகள் நமக்கு நித்திய கனமகிமையையும் திவ்விய நிலைமைக்கு கொண்டு செல்லதக்கதாகவும் இருக்கிறபடியால் நாம் இவைகளைச் சகிக்க வேண்டும். காணக்கூடாத அவரைக் காண்கிறவர்களாயும் அவர் தம் கரம் பற்றி நடத்துகிறார் என்பதையும் உணரும்பொழுதும் எப்படிப்பட்ட சோதனையையும் வேதனையையும் சகிக்கலாம். ஒவ்வொரு துன்பங்களிலும் அவருடைய திவ்விய அருமையான வாக்குத்தத்தங்கள் அவர் நம்முடன் இருக்கிறதையும் நம்மை கைவிடாமல் வாழ்வில் தோன்றுகிற எல்லாத் தீமைகளி-ருந்தும் விடுவிக்க வல்லவராயிருக்கிறார் என்பதையும் உணருகிறோம். எது நடந்தாலும் அவர் நம்முடைய பெரிதான நன்மைக்காகவே செய்கின்றார். நாம் தேவனுடைய வழியையும் திட்டத்தையும் நம் சுயநலத்தைக் காட்டிலும் அதிகமாய் நேசிக்கிறோம் என்பதை அவர் அறிகிறார். ஏனெனில் அவர் ஒரு நோக்கத்திற்காக நம்மை அழைத்திருக்கிறார். நாம் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆக ஏக நோக்கமாகிறது. அந்த அழைப்புக்கு பாத்திரவான்களாக நாம் நடக்கும் பொழுது இவ்விதமாய் நாம் நம்முடைய பரம அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்கிறோம். R 1751:3

## ஜனவரி 5

***பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டான நித்திய ஜீவன். (ரோமர் 6:23)***

துன்பம், வருத்தம், மரணம் ஆகியவை நம்மையோ அல்லது நம்முடைய பிள்ளைகளையோ வருத்தாதிருக்க வேண்டும் என்பது நமது பரம பிதாவின் நோக்கமல்ல. மாறாக, இவைகளின் மூலமாக

மேன்மையான கிருபை வரமாகிய நித்திய ஜீவனை நாம் பெறும்படியாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் நமக்கு அருளிச் செய்திருக்கிறார். ஆகிலும் இந்தப் பரிசானது தேவனுக்கும் மனிதருக்கும் விசுவாசம், அன்பு, உதாரகுணம் ஆகிய குணங்களை தற்காலத்திலோ வருங்காலத்திலோ காட்டுகிற மக்களுக்கு வழங்கப்படுகிறது. கிறிஸ்துவின் பள்ளியிலே பயில்கின்ற நாம் பாக்கியவான்கள்; ஏனெனில் கிறிஸ்துவைப் போல ஆவியின் கனிகளாகிய அருங்குணங்களை அறிந்து, அறிவின் கண் திறக்கப்பட்டவர்களாகி தேவ கிருபையை காண்கின்ற கண்களையும், கேட்கிற காதையும் பெற்றிருக்கிறோம். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குரியவர்கள், நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவுடனே கூட உடன் சுதந்திரராகும் வாரிசுரிமையையும் பெறுவார்கள். உலகத்தாராகிய மற்றவர்கள் ஆயிரமாண்டு ஆட்சி காலத்தில் தேவ ஆவியைப் பெற்று ஆவியின் கனிகளைப் பெற்று தேவ அழைப்புக்குப் பாத்திரர்களாக நடந்துக் கொண்டால் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். மகன் என்றால் தகப்பனைப் போலவே இருத்தல் ஆகும். குமாரனுக்கு ஒப்பாக இருக்கிறவர்களே அல்லாமல் வேறுயாரும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள முடியாது. R 3432:6

## ஜனவரி 6

**நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். *(சங். 139:3)***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பரிசுத்தவான்கள் பின்பற்றி நடந்தாக வேண்டும். ஓ, இந்த வழி எவ்வளவு குறுகலானது! ஒவ்வொரு அடி வைப்பதிலும் தன்னைத்தான் வெறுக்க வேண்டும். இயேசு சொன்னார்: “தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு பாத்திரனல்ல.” நாம் இப்படி நம்மை நாமே வெறுத்து உலகின் நிந்தையை சகிக்காவிட்டால், பாடுகளில் பங்குபெறாவிட்டால் நாம் அவரிடம் கொண்டுள்ள அன்பை நிரூபிக்க முடியாது. அவர் விரும்புகிற மணவாட்டி வகுப்பாக ஆகமுடியாது. இறுதிவரை இதில் உறுதியாக நிற்பது எளிதல்ல. ஆனாலும் அப்படி உறுதியாக நிற்பவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நாம் பழைய கிரியகளை திரும்பிப் பார்த்து, பழைய ஆசைகளையும் பழைய உணர்வுகளையும் விடாமல் வைத்திருந்தோமானால் நம்முடைய சோதனைகளைச் சகிப்பது சிரமமாகவும், கூடாததாகவும் தோன்றும்; நாம் அப்போஸ்தலருடைய ஆலோசனையைக் கேட்டு அதன்படி இந்த உலகம், மாம்சம், சாத்தான் இவைகளை வெல்ல, பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருவோமாக. R 901:6



## ஜனவரி 7

**இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம். *(ரோம. 13:12)***

இப்பொழுது எத்தகைய வெளிச்சத்தைப் பெற்றிருக்கிறோம் என்று ஆராயக்கடவோம். *(1)* தேவனைப் பற்றிய அறிவாகிய வெளிச்சம். *(2)* தேவனுடைய சித்தமும், திட்டமும். *(3)* நாம் எதற்காக எப்படி வாழ வேண்டும் என்பது, தேவனுக்கு பிரியமான ஜனமாக வேண்டுமானால் எத்தகைய குணநலன்களை உடையவர்களாயிருக்க வேண்டும். *(4)* எவைகளில் பிரியமாயிருந்தால் தேவன் சந்தோஷப்பட்டு மேலான ஆசீர்வாதமாகிய நித்திய ஜீவனை அளிப்பார். *(5)* மிக உன்னதமான சகாமையுள்ள ஜீவனைத் தருவார். இந்த அறிவு ஞானமெல்லாம் உண்டாயிருந்து சர்வாயுதவர்க்கத்தை அணிந்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். எவைகள் தேவனுக்கு பிரியமென்று கண்டு இவைகளையே ஆடையாக அல்ல, ஆனால் ஆடை மேல் தரிக்கின்ற கவசமாக அணிய வேண்டும். நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்தவர்களாய் நில்லுங்கள். இருதயத்தில் சுத்தமும் தேவனிடத்தில் பூரண விசுவாசமும் இருப்பதை விட வேறெதுவும் முக்கியமல்ல என்று அறிய வேண்டும். தேவன் நமது பட்சமாய் இருக்கிறார் என்று அறிய வேண்டும். தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி மன உறுதியோடு விழித்துக் கொண்டிருங்கள். இவைகளெல்லாம் சேர்ந்து ஒளியின் கவசங்கள் என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் சத்திய வெளிச்சம் இதி-ருந்து கிடைக்கிறது. R 5770:1

## *ஜனவரி 8*

***ரெபெக்காளை அழைத்து, நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன் என்றாள். (ஆதி. 24:58)***

கிறிஸ்துவின் மணவாட்டியாகப் போகின்றவர்களை கேட்கக்கூடிய கேள்வி இதுவே. அவர்கள் பிதாவின் ஒரே பேறானவர் சத்தியத்திலும், கிருபையிலும் நிறைந்தவர் என்று அறிந்தவர்கள். அந்தக் கர்த்தரே எல்லாம் என்றும் "மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களை" சுதந்தரித்தவர் என்றும் அறிந்திருக்கிறவர்கள். அவரோடு சேர்தல் என்பது அவருடன் இணைந்து எப்போதும் அவரோடு இருந்து ஆச்சரியமும், மகிமையுமான எதிர்கால நன்மைகளில் பங்கு பெறுவதை அறிந்தவர்களாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் ரெபெக்காளைப் போல, " நான் போகிறேன்" என்ற உறுதியுடனும், உண்மையாயுமிருப்பார்கள். முழுமனதோடு கூடிய நேசமும், கர்த்தரிடத்தில் அசைக்கமுடியாத விசுவாசமுமே இந்தப் பயணத்தில் இறுதிவரை நடத்தும். மகிமையின் ராஜாவுடன் இறுதியில் மகிமையில் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். R 5188:1

## *ஜனவரி 9*

***அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத். 4:10)***

வனாந்தரத்தி-ருந்த நாற்பது நாட்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியில் ஸ்தாபிக்கப்படப் போகின்ற ராஜ்யம் மிகுந்த உபத்திரவத்தின் மூலமாகத்தான் ஸ்தாபிக்க முடியும் என்று கண்டார். நீண்ட நாட்கள் உபவாசத்தால் பலவீனப்பட்டிந்தார். ஆனாலும் தீர்க்கதரிசனத்தின் நுணுக்கமெல்லாம் அவருடைய மனதிற்கு முன்பாக இருந்தது. அவர் தன்னை மயிர்க்கத்திரிக்கிறவனுக்கு முன்பாக பேசாமல் ஊமையாக இருக்கின்ற ஆட்டைப் போலவும், வனாந்திரத்தில் உயர்த்தப்பட்ட சர்ப்பத்தை போலவும் தன்னை எண்ணிக் கொண்டார். சாத்தான் கொடுத்த ஆலோசனை ஒரு சோதனையே. ஆனாலும் அதை சிந்தித்துப் பார்த்தபொழுது



தேவனோடு தான் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறுகிறதாயும், தேவசித்தத்துக்கு எதிரிடையானதுமாக இருக்கக் கண்டார். எனவே உடனடியாக, "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறது" என்று பதிலுரைத்தார். அப்போது சாத்தான் அவரை விட்டோடினான். யேகோவாவின் வார்த்தைக்கு இவ்வளவாய் கீழ்ப்படிகிற இயேசுவினிடத்தில் தனக்கு வேலையில்லை என்று ஓடிவிட்டான். அதன்பிறகு தூதர்கள் வந்து அவருக்கு பணிவிடை செய்தார்கள். இதுபோலவே நாமும் சோதனை வேளையில் சாத்தானுக்கு எதிர்த்து நிற்போமேயானால் அவன் விலகி ஓடிவிடுவான். R 5084:6

## *ஜனவரி 10*

***கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப் பற்றியே மேன்மை பாராட்டுவேன். (சங். 71:16)***

உலகம், மாம்சம், சாத்தான் இவைகளாலும் இவைகளை எதிர்த்துப் போராடுவதால் உண்டாகும் துன்பம், கவலை, கண்ணீர் ஆகியவை தற்காலத்தில் மிக மிக அவசியமானதே. இந்த உபத்திரவம் துன்பங்கள் இல்லாமல் வெற்றி வாகை சூட எண்ணுவதோ, எதிர்பார்ப்பதோ தவறாகும். இந்த யுத்த களத்தில் நம்மை நாமே அளவுக்கு மிஞ்சி எண்ணிவிடக் கூடாது. நம்முடைய பலவீனங்களையும் அபூரண நிலைமைகளையும் பற்றி அறிந்து நாம் கர்த்தருக்கு நெருக்கமாக நடக்கவேண்டுமானால் நம்முடைய நீதியின் வஸ்திரங்களை இவ்வுலகின் கறைபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். "எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது" என்று அவருடைய கிருபையில் நம்பிக்கை வைக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். நமக்கு எதிராக இருக்கிறவர்களைக் காட்டிலும் பலமானவர் நம்மோடு நம் பட்சத்தில் இருக்கிறார் என்பதைக் கற்றுக் கொள்கிறோம். இந்த உலகை ஜெயிக்கிற ஜெயம் நம்முடைய மாம்ச பலத்திலல்ல. நம்முடைய மனதின் தீர்மானத்தின் படியல்ல. மாறாக நம்முடைய பலவீனத்திலே தம்முடைய பலத்தினால் நம்மை பலப்படுத்துகிற அவருடைய கிருபையினாலே நாம் பூரணராக்கப்படுகிறோம். தேவனை மெய்யாய் நேசிக்கிறவர்களுக்கு

எல்லாம் நன்மைக் கேதுவாக நடக்கும் என்பதை இதனால் கற்றுக் கொள்கிறோம். R 2195:2

## *ஜனவரி 11*

**உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக் கொள்வீர். *(சங். 73:24)***

தாழ்மையும், விசுவாசமும் உள்ள தேவபிள்ளைகள் தேவ வழிநடத்துதலை எல்லா நேரங்களிலும் புரிந்து கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொள்வார்கள். எங்கே தேவனைக் காணக்கிடைக்கவில்லையோ அங்கே அவரது ஞானத்தையும், அன்பையும், வழிநடத்துதலையும் அறிந்து அவரை நம்புவார்கள். தேவ ஞானத்தை முற்றுமுடிய நாம் உணரக்கூடாத அளவிற்கு அது நமக்கு எட்டாத ஞானமாயிருக்கிறது. இருந்த போதிலும் சில நேரங்களில் தேவஞானம் முன்பு விளங்காமல் பின்னாலே விளங்கும். சில நேரங்களில் அவருடைய கட்டுப்பாடு நமக்குக் கடுமையாகத் தோன்றும். தாங்கக் கூடாததாகவும் இருக்கும். இருந்தபோதிலும் பிற்பாடு நீதியின் கனியாகிய சமாதானத்தை தரும். கசப்புக்குப் பின்பு இனிப்பு. எனவே நாம் கசப்பை பொறுமையோடு சகிப்போம். மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையில், தேவ திட்டத்தில், தேவ வழி நடத்துத-ல் முழு விசுவாசமாய்த் தங்களை முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்கள், ஏற்ற வேளையில் நிச்சயமான இந்த நம்பிக்கையால் வரும் சந்தோஷத்தில் களிகூறுவார்கள். R 1562:2

## *ஜனவரி 12*

**உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்து வைக்கவில்லை; உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையும் சொல்-யிருக்கிறேன்; உமது கிருபையையும் உமது உண்மையையும் மகாசபைக்கு அறிவியாதபடிக்கு நான் ஒளித்து வைக்கவில்லை. *(சங். 40:10)***

உலகிலே நாம் ஒரு சல்-க்காசு கூட வைத்திராத போதும், வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாம் நம்மிடமிருந்து எடுக்கப்பட்ட போதிலும், நம்மிடம் சத்தியம் இருக்குமானால் தேவ பார்வையில்



நாம் ஐசுவரியவான்களாயிருப்போம். இந்த அறிவும் இந்த நோக்கமும் ஞானமும் நமக்குத் தேவையுள்ளதாக இருக்கிறது. இந்த ஞானத்தை நாம் உணரும் பொழுது இருளில் இருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய ஸ்தோத்திர ஸ்துதியைப் புகழாம-ருப்பது எங்ஙனம்? எனவே தேவன் இவ்விதமாய் யார் விசுவாசிக்கிறார்களோ அவர்கள் தேவ புத்திரர்களாகும்படியும் அவருடைய மாபெரும் திட்டத்தின் பணியில் பங்கு கொள்ளும்படியும் பணித்திருக்கிறார். இவைகளை நாம் அறிந்திருக்கிறபடியால் நம்முடைய அன்பையும் விசுவாசத்தையும் பரீட்சைப் பார்க்கப் பயன்படுகிறது. கர்த்தர் இப்படிப்பட்ட குணத்தை நம்மிடம் காண்கிறபடியால் திரைக்கு அப்பாலே போகக்கூடிய மகிமையைப் பெறுவோம். இல்லாவிடில் மகிமையடைய முடியாது. R 5335:4

## *ஜனவரி 13*

**நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள். *(யோவா. 15:8)***

கர்த்தர் நம்மை மெய்யான திராட்சைச் செடியாகவும், தமது பிதாவை மெய்யான திராட்சைத் தோட்டத்தை நாட்டின தோட்டக்காரராகவும், அவரை பின்பற்றுகிறவர்கள் அந்த திராட்சைச் செடியின் மெய்யான கிளைகளாகவும் அறிவிக்கின்றார். மெய்யான திராட்சைச் செடி என்ற பதத்திலே பொய்யான திராட்சை செடியும் உண்டு என்று அறிகிறோம். இதுபற்றி விளக்கமாக வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாள மொழியிலே, தம் கடைசிச் செய்தியாக சொல்கிறார். “பூமியின் திராட்சைப் பழங்களை” அறுத்து தேவ கோபாக்கினையாகிய ஆலையில் போடுவதாகச் சொல்கிறார். *(வெளி.14:19)* எனவே கர்த்தருடைய வார்த்தையில் “மெய்யான திராட்சை” என்பது அப்போஸ்தலர்கள் காலத்திலே உணர்ந்து கொண்ட பொருளைக் காட்டிலும் இப்பொழுது நன்கு விளங்குகிறது. தற்காலத்திலே உயிரோடிருக்கிற நாம் பிதாவினால் நாட்டப்பட்ட மெய்யான திராட்சைச் செடியையும் காணக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். பூமியின் செடியானது பரலோக திராட்சையின் போ-யானது. இந்தச் செய்தியை நாம் தெளிவாகப் புரிந்துக் கொள்வதோடு நம்முடைய அன்றாட வாழ்விலும் அதைக்

கடைபிடிப்போம். போ-யான திராட்சைச் செடியி-ருந்து போ-க் கிளைகளி-ருந்து போ-யான தத்துவங்களி-ருந்து இவைகள் தெய்வீகத் தோட்டக்காரரின் பாதுகாப்பில் உண்டானவையல்ல என்று அறிந்து உணர்ந்து அந்தப் பேராபத்தி-ருந்து தப்பித்துக் கொள்ளலாம். R 3544:2

## ஜனவரி 14

**ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதுக்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்கக்கடவர்கள். *(யாக். 1:19)***

எந்த அளவு கோபத்தில் உக்கிரமான குணத்தைக் காட்டுகிறோமோ அதேபோல் அதற்கு எதிரிடையான ஆழ்ந்த அன்பில் காண்பிப்போமேயானால் அது மிக நல்லது. கோபப்படவேண்டிய நேரத்தில் கோபப்படாம-ருந்தால் அதுவும் அபூரண நிலையையும் குற்றத்தையும் காண்பிக்கும். தீவிரமாய் சிநேகிக்கக் கூடாத நிலைமையும் குணத்தில் ஒரு குறையே. பரிசுத்தாவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக நாம் இருக்க கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே நம்மிலும் இருக்க வேண்டும். அந்த சிந்தையே காருண்யமும், தயையும், கிருபையும் சகோதரர்களிடம் மன்னிக்கக் கூடிய நல்ல பண்பும் தெய்வ பயத்தோடு கூடிய கீழ்ப்படிதலும் ஆகும். இந்த நற்குணங்கள் கொண்ட ஆவிதான் பிதாவினுடையதும் குமாரனுடையதுமாகும். இதற்கு எதிரிடையானது விரோதியான சாத்தானின் ஆவியும் அவனுடைய குணமும் ஆகும். இந்த இருவித குணங்களும் ஒன்றுக் கொன்று முற்றிலும் மாறுபட்டிருப்பதினால் நாம் இவ்விரு குணங்களையும் ஒரே நேரத்தில் பெற்றிருக்கிறவர்களாய் இருக்க கூடாது. நாம் தேவனையும் ஐசுவரியத்தையும் சேவிக்க கூடாது. நாம் கிறிஸ்துவையும் பே-யாளையும் சேவிக்க கூடாது. R 3928:2,4

## ஜனவரி 15

**அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். *(லூக்கா 6:12)***

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு சிறந்த பக்தி வைராக்கியம் உள்ளவரும் அடிக்கடி ஜெபத்தில் தரித்திருந்து



சர்வ வல்லவரை நாடித்தேடி ஒவ்வொரு காரியத்திற்கும் அவருடைய பரம ஆலோசனையைக் கேட்காம-ருந்ததில்லை. மகாப்பெரிய மீட்பரும், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாகிய கிறிஸ்துவும் கூட பிதாவிடம் ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. பிதாவின் தொடர்பும் ஐக்கியமும் வேண்டியதாயிருந்தது. நாம் கேட்கின்ற ஜெபத்திற்காக சர்வ வல்லவர் தன்னுடைய திட்டத்தை மாற்றிக் கொள்வாரா என்று சிலர் கேட்கலாம். நிச்சயமாக அவர் மாற்றிக் கொள்ள மாட்டார். மெய்யாகவே நாம் இவ்விதமாய் ஜெபிக்க வேண்டுமென்று அதாவது அவரது சித்தத்திற்கு ஏற்ப (உட்பட்டு) நாம் கேட்க வேதாகமத்தால் எச்சரிக்கப்படுகின்றோம். அவர் சித்தத்திற்கு மாறாக நாம் கேட்போமேயானால் அவை கொடுக்கப்படமாட்டாது என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றோம். எனவே நாம் தேவ வார்த்தையைக் கருத்தாய்ப் படிப்பது அவசியமாகிறது. அந்த தேவ வார்த்தையை படிப்பதன் மூலமும் தியானிப்பதின் மூலமும் நாம் தெளிவடைகிறோம். தெய்வீகத் திட்டத்தைக் குறித்துத் தெளிவடைந்த நாம் அதற்கு ஏற்ப ஜெபிக்கவும் நாம் கேட்கும் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படவும் அதன் மூலம் நாம் சத்தியத்தில் இன்னும் பலப்படவும் கூடும். தேவ சித்தப்படி தெய்வ கிருபைகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் நமது ஜெபம் தேவ சித்தத்திற்கு ஏற்றதாய் இருக்கிறதா என்று தியானிப்போமாக. R 4913:2

## ஜனவரி 16

**அநாதி தேவன் உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். *(உபா. 33:27)***

வஞ்சனைக்குரிய பயங்கரமான சோதனைகள் எதிர்காலத்தில் உண்டு எனப் பலமுறை வேதாகமத்தில் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வஞ்சனை பொய்த்தூதர்களாலும் அநீதியுள்ள வஞ்சகர்களாலும் மாயமான அற்புதங்களாலும் நடைபெறும். அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார். இதன் மூலம் முழு உலகமும் அதி-ருக்கக்கூடிய ஞானிகளும் கூட வஞ்சிக்கப்படுவார்கள். தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் மட்டும் தங்கள் ஞானத்திலோ அல்லது

மேன்மையினாலோ அல்ல மாறாகத் தேவ வல்லமையினாலே பாதுகாக்கப்படுவார்கள். "ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்." R 4379:3

## ஜனவரி 17

**கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்கு காத்திரு. *(சங். 37:7)***

நம்முடைய பொறுமை சோதிக்கப்படும் பொழுது நாம் சமாதானத்தை வெளிப்படையாகக் காண்பிக்கக்கூடாதபடி கோபம் கொள்ளக்கூடாது. நாம் ஏமாற்றம் அடையாமலும் நம்முடைய விசுவாசத்தை இழந்துவிடாமலும் இருக்க வேண்டியது அவசியம். நம்முடைய ஜெபத்திற்குரிய பதில் தாமதமாவதனாலேயே நம்முடைய பிதா நம்மை மறந்து விட்டார் என்று எண்ணக் கூடாது. வெளித் தோற்றத்திலே சாந்தமாய் அமைதியாய்க் காட்சியளிப்பது புதிய சிருஷ்டியின் நிலைமையாகாது. உள்ளத்தில் ஆவியின் கனிகள் வளர்ந்து பெருகினாலொழிய, நாம் புதிய சிருஷ்டியாக முடியாது. எனவே, "பிரியமானவர்களே உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெறிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்." *(1பேது. 4:12,13)* நம்முடைய தலைமயிர் ஒவ்வொன்றையும் எண்ணி வைத்திருக்கும் நம்முடைய பிதா, தன் பிள்ளைகளில் மிக இளைத்தவர்களையும் பலவீனர்களையும் அவர்களுடைய சோதனையில், தேவையில் கைவிடமாட்டார். தேவப் பாதுகாப்பு எத்தகைய பாசத்துடனும் பரிவுடனும் பரிணமிக்கிறது. "அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்." R 5802:6

## ஜனவரி 18

**மேலும் கிறிஸ்து உங்களி-ருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும்,ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். *(ரோம. 8:10)***

தெய்வீக நோக்கத்தில் பார்க்கும் பொழுது சரீரம் செத்ததாகவும், ஆவி அல்லது மனதோ உயிருள்ளதாகவும் கருதப்படுகிறது. தேவன் தெரிந்து கொள்வதெல்லாம் புதிய சிருஷ்டியைத் தான். ஏற்ற வேளையில் அதாவது முதலாம் உயிர்த்தெழுத-ல் புதிய சிருஷ்டிக்குரிய மேனியைக் கொடுக்கிறார். தேவசமாதானம் நம்மில் நிலைத்திருக்கவும், கிறிஸ்துவின் தயையும் இரக்கமும் நமக்கு கிடைக்கவும் இந்த சிந்தனை நம்முடைய மனதில் நீங்காத இடம் பெற்றிருக்க வேண்டும். நாம் தேவசித்தப்படி எண்ணாமல் மாமிச நோக்கத்திலே நம் மனம் போன போக்குப்படி தேவன் நம்மைப் பற்றி உயர்வாக நினைக்கிறார் என்று நம்மை நாமே நினைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி நினைப்போமேயானால் நாம் இருளிலும், குழப்பத்திலும் அமிழ்ந்து போய்விடுவோம். அதே நேரத்தில் ஆவி அல்லது சித்தம், அதன் நீதியின் நிமித்தம் உயிரோடிருப்பதாக கருதப்படுகிறது என்பதை மறந்துவிடக்க கூடாது. ஆவி தேவனோடு ஐக்கியப்பட்டிருந்தால் உயிருள்ளதாயிருக்கும். எனவே நமது நோக்கம் அல்லது சிந்தையிலே தெய்வ நீதியை விட்டுச் சற்றும் குறைவுபடாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நம்முடைய சுயசித்தத்தை அழித்து தேவசித்தத்திலே எப்போதும் நிலை கொண்டிருந்து அவருடைய சித்தத்துக்கு உண்மையான கீழ்ப்படிதலைக் காண்பித்தலே கிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் பிரியமான காரியமாகும். R 3203:2

## ஜனவரி 19

**சினேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான். இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான். *(நீதி. 17:17)***

ஞானியாகிய சாலமோன், சிநேகிதன் எல்லாக் காலங்களிலும் சிநேகிதமாக இருப்பான் என்று நன்றாகச் சொல்-யிருக்கிறார். தனக்கு அனுகூலமுண்டு என்று அறிந்து அந்தச் சமயத்தில் மாத்திரம் சிநேகமாக இருப்பவர்கள் சிநேகம் இன்னது என்று அறியாதவர்கள். சகோதரன் ஐசுவரியவானாக இருக்கும்பொழுது மட்டும் சிநேகிக்கிறவர்களின் நட்பு நட்பல்ல. உபத்திரவங்களும் துன்பங்களும் சோதனைகளும் பெருகும் பொழுது சிநேகியாதவர்கள் மெய்யான அன்பின் இலக்கணத்தை அறியாதவர்கள். இவர்கள் சுயநலத்தோடும் லாப நோக்கத்தோடும் உலக நேசத்தை உடையவர்கள். தேவன் நம்மீது வைத்த அன்பைக் காட்டியிருக்கிறார். அது சுயநலமற்றது, தாராளமானது. தம்முடைய ஒரே பேறான

குமாரனையும் தியாகம் செய்யத்தக்க தன்னலமற்ற அன்பு பாவச் சிறையி-ருந்த நம்மை விடுதலையாக்கித் தேவபிள்ளைகளாகச் செய்தது. அப்படிப்பட்ட மெய்யன்பு எதையும் தியாகம் செய்யத் தயங்காது. இப்படியிருக்க நாம் நம்முடைய அன்பை நிதானிப்போம். மற்றவர்களிடத்திலே நாம் கொண்டிருக்கிற அன்பு, கர்த்தரிடத்தில் நாம் வைத்திருக்கிற அன்பு, சகோதரர்களுக்காக நாம் காட்டும் அன்பு, நம்முடைய குடும்பத்தில் வைத்திருக்கும் அன்பு, நம்முடைய அண்டை அயலாரிடம் நாம் வைத்திருக்கும் அன்பு,நம்முடைய பகைவரிடம் நாம் காட்டும் அன்பு, இவர்களெல்லோருடைய மேன்மைக்காகவும் நாம் எந்தத் தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறோமா? R 4224:5

## *ஜனவரி 20*

**ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாம-ருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். *(1 பேது. 4:16)***

அப்போஸ்தலராகிய பேதுரு தம்முடைய உபத்திரவங்களினால் வெட்கப்பட்டுப் போகவில்லை. ஏனெனில் கிறிஸ்துவினிமித்தம் இவைகளைச் சகித்ததை உணர்ந்திருந்தார். எந்த ஒரு மனுஷனும் சட்டத்தை மீறியதற்காக ஜனசமுதாயத்தின் மத்தியில் கைது செய்யப்படும் பொழுது வெகுவாக சஞ்சலப்படுவான், சஞ்சலப்பட வேண்டும். ஆனால் இவைகளெல்லாம் அனுபவிக்கப்படும் பொழுது கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்பதாலும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வருவதாலும் இத்தகைய அவமானங்கள் நேருகின்றன என்பதை உணரக்கூடும். இந்த அவமானத்தால் நாம் சந்தோஷப்படுவோம். இந்த தேவவார்த்தையைப் படிக்கிறவர்களுக்குச் சோதனையாகச் சிறைப்படுத்தலோ, உபத்திரவமோ, சத்தியத்தினிமித்தமாகவோ, கர்த்தரின் நிமித்தமாகவோ, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஏற்படும் பொழுது, வெட்கப்பட்டுப் போகிறதில்லை. மாறாக, இதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துவார்கள். இயேசுவினிமித்தமாக, கிறிஸ்துவின் பாடுகளை அனுபவிக்கத் தகுதிபெற்றதே பாக்கியம் என்று கருதுவார்கள். ஏனெனில், கிறிஸ்துவும் இவ்வாறே சிறுமைப்படுத்தப்பட்டார்; கைது செய்யப்பட்டார்; கட்டப்பட்டார்; கசையடிப்பட்டார்; ஜனங்கள் முன்னிலையில் அவமானப்படுத்தப்பட்டார்; தேவதூஷணம் சொன்னதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையிலறையப்பட்டார். R 3189:6



## *ஜனவரி 21*

**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. *(1பேது. 3:12)***

நம்முடைய பரலோக பிதா, தகப்பனுக்குரிய பாசத்தோடு நம்மிடமும் நம்மைச் சார்ந்தவர்களிடமும் மிகுந்த அக்கறை காட்டுகிறார். நம்முடைய தலையிலுள்ள முடிகளையெல்லாம் எண்ணியிருக்கிற அவருக்கு எல்லாக் காரியமும் வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. தேவ சாய-ல் சிருஷ்டிக்கப்பட்ட நாம் விழுந்து போன மனுக்குலமாயிருந்தாலும், நாம் பாவிகளாயிருந்தாலும் தேவன் நமது மனுக்குலத்தை மிகவும் நேசித்திருக்கிறார். அந்த நேசத்தின் காரணத்தாலேயே தியாகத்தின் எல்லைக்கே சென்று தம் முதற்பேறானவரைத் தந்து நம் மீட்புக்கு வழி வகுத்தார். திரும்பவும் சீர்படவும், நித்திய மகிமையை அடையவும் செய்திருக்கிறார். அவர் நம்மை நேசித்ததாலேயே கிறிஸ்துவின் மூலமாய் நாம் அவருக்குப் பிள்ளைகளாகும்படி பெரிதான தயை செய்திருக்கிறார். இவ்வளவு பெரிய உலகத்தைப் பாதுகாக்கின்றவருக்கு அற்பமான நம்முடைய காரியங்களைக் கவனிக்க நேரமிராது என்று எண்ணக்கூடாது. அல்லது அடிக்கடி ஜெபத்திலே அவரைத் தொந்தரவு செய்கிறோம் என்றும் எண்ணக்கூடாது. நம்முடைய அற்ப விஷயங்களும் அவருக்கு பெரிய விஷயம். அறைக் கதவை மூடி அந்தரங்கத்தில் நாம் ஜெபிக்க, அவரோ அதற்குரிய பலனைப் பகிரங்கமான பரிசாக அளிப்பார். R 1865:5; 1864:3; 1865:4

## *ஜனவரி 22*

***சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். (கலா. 5:13)***

நாம் மற்றவர்களையும், தேவனையும், நமது

குடும்பத்தையும் நேசிக்கிற நேரத்தையும், சகோதரர் குடும்பங்கள், அண்டை அயலார், விரோதிகள் ஆகிய எல்லோருடைய நன்மைக்காகவும் எந்த தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறோமா என்பதையும் நம்மை நாமே நிதானிப்போமாக. கர்த்தருக்காக எந்த தியாகத்தையும் செய்யவில்லை என்பதை உணருவோமேயானால், நாமும் கர்த்தரை நேசிக்கிறோம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாதிருப்போமாக. நாம் சகோதரர்களையும், அன்பான மற்றவர்களையும் நேசிக்காதவர்களாக இருப்போமேயானால், அதையும் அன்பு என்று தவறாக எண்ணாதிருப்போமாக. நமது சத்துருக்களுக்கு தேவையான சமயத்தில் நாம் அன்பைக் காட்ட விருப்பமில்லாதிருந்து, நாம் தவறு செய்யாதிருப்போமாக. நன்மை, தயை, தன்னைத்தானே வெறுத்தல் இவையனைத்தும் இணைந்ததே ஒரு அன்பான இருதயத்தின் இலக்கணம் என்று நமது கர்த்தர் அறிவித்திருக்கிறார். R 4224:5

## ஜனவரி 23

***அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குத-லும், ஜெபம் பண்ணுத-லும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்.2:42)***

ஆசாரிப்பு கூடாரத்திலே பரிசுத்தஸ்தலம் நிழலாய்க் காண்பிக்கப்பட்டது. அதன் நிஜமான பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கக்கூடிய ஆவிக்குரிய இஸ்ரயேலரோ தேவஜனங்களாக அன்பினாலும், ஐக்கியத்தினாலும் ஒன்றுபட்டு தேவகிருபையால் உடன்படிக்கை செய்து பிரகாரத்திற்குள் வருகிறார்கள். அதன்பின்னர் "ராஜரீக ஆசாரியக் கூட்டமாக," "உன்னதங்களிலே அவரோடு கூட உட்காரத்தக்க"நிலைமைக்கு அழைக்கப்படுகிறார்கள். இன்றைக்கு உலகப் பிரகாரமாக நாம் தூரமாக இருக்கலாம். ஆனாலும் தீர்க்கதரிசியான மல்கியா சொன்னபடி, "அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார். கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது." *மல்.3:16* ஜெபிக்கும் பொழுதே தேவன் கேட்பார். கேட்டு அருளிச் செய்வார்.



நாம் அடிக்கடி வீடுகளை மாற வேண்டியிருந்தாலும் சபை எங்கே கூடுகிறது என்று அறிந்து அங்கே எப்பாடு பட்டாலும் சென்று விசுவாச வீட்டாரோடு ஐக்கியப்பட வேண்டும். தேவனை முதன்மையாக வைத்து, சபையார் ஐக்கியத்தையும் கிருபையில் வளர்வதையும் அடுத்ததாக வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விரண்டுக்கும் அடுத்தபடியாக உலகப்பிழைப்புக்கடுத்த காரியங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படியாக முதலாவது தேவனுடைய நீதியையும், ராஜ்யத்தையும் மனப்பூர்வமாக தேடுகிற புது சிருஷ்டிகளான அவர்களுக்குத் தேவையான யாவும் தேவனால் வழங்கப்படும். R 4090:5

## ஜனவரி 24

**தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தார். *(2 சாமு. 5:10)***

ராஜ்யத்திற்காகக் காத்திருந்த தாவீதின் அனுபவங்கள், கற்றுக் கொண்ட பாடங்கள், அபிவிருத்தியடைந்த குணலட்சணங்கள் ஆகியவை சுவிசேஷயுகத்தில் இருக்கிற யாவருக்கும் ஒரு மாபெரும் பாடமாக இருக்க வேண்டும். நாமும் தேவனால், தேவ நாமத்தில் அவருடைய சிங்காசனத்தி-ருந்து ஆட்சி செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். கிரீடத்தை பெறும் நாளில் வர இருக்கிற மகிமை சந்தோஷம் இவைகளை முன்னதாகவே ருசிபார்க்கும் வண்ணம் பரிசுத்தாவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு இருக்கிறோம். கண்ணியம், தன்னடக்கம், விசுவாசம், தாழ்மை, நம்பிக்கை ஆகிய இக்குணங்கள் தாவீதைக் கர்த்தருடைய ஜனங்களுக்கு ராஜாவாக்கியது. ஆவிக்குரிய இஸ்ரலேயர்கள் ராஜரீக ஆசாரியக் கூட்டமாக அழைக்கப்பட்டவர்கள் மனக்குலத்தை நீதியாய் நியாயந்தீர்ந்து ஆட்சி நடத்த வேண்டுமானால் தேவனோடு ஐக்கியப்பட வேண்டுமானால் இன்னும் எவ்வளவு கட்டுப்பாட்டுக்குள்ளும் கடமைக்குள்ளும் வளர வேண்டும் என்று தியானித்து நம்மை நாமே நிதானித்து நம்முடைய குறைவை நிறைவாக்க முயற்சி செய்ய வேண்டும். R 4236:1

## *ஜனவரி 25*

**கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். *(நீதி. 10:22)***

ஒருவன் இவ்வுலக ஆஸ்திகள் எவ்வளவு வைத்திருந்தாலும் அல்லது இல்லாம-ருந்தாலும் கர்த்தருடைய ஆசீர்வாதமுள்ளவன் எவனோ அவன் மெய்யாகவே ஐசுவரியவான். உலகிலேயே மிகப் பெரிய பணக்காரனாயிருந்து அவனுடைய பணம் அவனுக்குச் சமாதானத்தை, சந்தோஷத்தை, மகிழ்ச்சியைத் தராவிடில் அதனால் என்ன பயன்? நாம் எங்கு சென்றாலும் ஏழைகளை, பணக்காரர்களைக் காண்கிறோம். அவர்கள் சந்தோஷத்தை, உல்லாசத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாராவது தாங்கள் தேடுகின்ற சந்தோஷத்தைக் கண்டடைகிறார்களா? இந்த உலகம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால் வரக்கூடிய, என்றும் நிலைத்திருக்கக்கூடிய சந்தோஷ சமாதான ஐசுவரியம் இன்னதென்று காணக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் வர இருக்கின்றது மகிமையானதாயிருக்கும். தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி தம்முடைய வாக்குதத்தங்களினால் யாரை ஐசுவரியவான்களாக்குகிறாரோ அவர்களை ஆசீர்வதித்துச் சந்தோஷப் பாதையில் நடத்துகிறார். மற்றவர்கள் தேடுகின்ற வீணான சந்தோஷத்தைக் காட்டிலும், இவர்கள் அடைகிற சந்தோஷம் மேன்மையானதாக இருக்கும். இந்த சுவிசேஷ யுகத்தில் மெய்யான ஐசுவரியத்தை அடைய விரும்புகிறவர்கள் கேட்கக்கூடிய காதையுடையவர்களாயிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவதயவை கற்றுக் கொள்வார்கள். ஏனெனில் கிறிஸ்துவுக்குள்ளாக தேவஞானம், தேவ அன்பு, தேவ வல்லமை ஆகிய ஐசுவரியங்கள் மறைந்திருக்கின்றன. R 5171:1

## *ஜனவரி 26*

**என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன். *(சங். 89:34)***

தம்மிடத்தில் விசுவாசமுள்ள பிள்ளைகளுக்குத் தேவனாகிய கர்த்தர் கூறுகின்ற ஆறுதலும், சமாதானமுள்ள வார்த்தைகள் இவைகள். காணாதிருந்தும் எதிர்பார்த்திருக்கின்ற நன்மைகளை விசுவாசிப்பது எப்படி அடிப்படையானதோ அப்படியே



அனுபவமும் தேவனிடத்தில் வைத்திருக்கின்ற பற்றும் நம்பிக்கையும் விசுவாசத்திற்கு அடிப்படையானதாயிருக்கும். நமது தேவனுடைய குணலட்சணங்களில் பிரதானமானது அவர் மாறாதவராயிருக்கிறதே. அவருடைய உறுதிமொழி,“நான் கர்த்தர், நான் மாறாதவர்.” தேவனுடைய வசனமோ, வாக்கியமோ நமக்கு எதிராக இருந்தால் கூட அவர் மாறாதவராயிருக்கிறார். அவரது மறாத தன்மை பாவத்தை மன்னிக்கவும், பாவத்தை நீக்கவும் அனுமதிக்காது. ஆகவே பாவத்தின் தண்டனையாகச் சொல்லப்பட்ட காரியத்தில் கண்டிப்பானவராகவும் மாறாதவராகவும் இருக்கிறார். அது போலவே நன்மை செய்கின்றவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற வாக்குத்தத்தங்களும் உடன்படிக்கைகளும் ஒருக்காலும் மாறாது. R 3107:3

## *ஜனவரி 27*

**நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். *(யோவ. 14:16)***

எப்படிப்பட்ட ஆறுதலும் திருப்தியும் இந்த வசனத்தின் மூலம் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்குகிறார். பரிசுத்தாவியைத் தந்து பரிசுத்தாவியினால் அபிஷேகம் பண்ணி, பரிசுத்த வழிகளிலே நடத்தி பிதா குமாரன் ஆசீர்வாதத்தால் ஆவியில் நிறைந்து ஆவியில் பிறந்தவர்களாக்கி, தன்னுடைய குடும்பத்தில் அங்கமாகச் சேர்க்கிறார். பிதாவும் குமாரனும் நம்முடைய மனதை, இருதயத்தை நடத்திச் செல்கிறவர்களாகவும், தம்முடைய திவ்விய வேதாகமத்தி-ருந்து நீதியைக் கற்றுக் கொள்ளச் செய்கிறார். பிதாவின் மகிமையான இரட்சிப்பின் திட்டத்தை அறியச் செய்கிறார். நமக்கும் பூலோகத்திலுள்ள எல்லாருக்கும் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் நீள, அகல, ஆழம், உயரங்களை அறிகிற போது, நம்முடைய இருதயங்கள் நமக்குள்ளாக கொழுந்து விட்டு எரியச் செய்கிறது. நம்முடைய கர்த்தர் சொன்னதைப் போலவே கடந்தகால நிகழ்ச்சிகளை விளக்கி வருங்காலத்தின் காரியங்களை தமது ஆவியின் மூலமாக நமக்குக் காண்பிக்கிறார். ஆயிரவருட ஆட்சியிலே பூமியை முந்தின சீருக்குக்

கொண்டுவரும் பொழுது பூலோகத்தின் மக்கள் யாவரையும் பலப்படுத்தி உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வருகின்ற ஆசீர்வாதமானது எவ்வளவு மகா உன்னதமாயிருக்கிறது. R 4166:6

## ஜனவரி 28

***ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும், சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. (ரோம.8:22)***

பிரதிஷ்டைக்குட்பட்ட விசுவாச வீட்டாராகிய அருமையான சகோதரரே, இந்த ஏகமாய்த் தவிக்கின்ற பிரசவ வேதனையைப் படுகின்ற கூட்டத்தாரோடு ஐக்கியமாயிருக்க மறவாதிருப்போமாக. இவர்களது துன்பங்களிலும், வருத்தங்களிலும், பிரயாசங்களிலும் பங்கு கொள்வோமாக. இந்தக் கூட்டத்தின் பலவீனத்தை நினைவுகூர்ந்து பலராலும் பழிக்கப்படுகின்ற நிலைமையிலும் அறியாமையிலும், மூடநம்பிக்கைகளிலும் கூட இருப்போமாக. இந்த வேளைகளில், நாமும் கூட ஒருக்காலத்தில் பாவிகளாயிருந்தோம் என்பதையும் நினைவு கூர்வோமாக. அந்தப் பாவத்தின் அடையாளச் சின்னங்களை வடுக்களாக சுமந்து திரிகிறோம். இந்த தவிக்கிற சர்வசிருஷ்டியின் குரல் சேனைகளின் கர்த்தரின் செவியில் விழுகிறது. அவருடைய நேச நெஞ்சத்தை நெகிழச் செய்கிறது. அந்த தொனி, நமது காதுகளிலும் விழட்டும். நாமும் உருக்கமான இரக்கத்தினால் நம்முடைய வைராக்கியத்தை உயர்த்திக் காண்பித்து நம்முடைய பரலோகத்தின் பிதாவோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடும் கூட அந்தத் தெய்வீகத் திட்டப்படி சகலரையும் ஆசீர்வதிக்கின்ற நீதியும் சமாதானமும் உள்ள இராஜ்யம் வருவதற்கு பாடுபடக் கடமைப்பட்டிருக்கிறோம். R 3067:6

## ஜனவரி 29

***கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; (யாத். 15:2)***

கர்த்தர் நமக்கு பலமாயிருக்கிறார். நாம் மனித பலத்தில் சார்ந்திருக்கிறதில்லை. அதாவது நமது சொந்த பலத்திலோ மற்ற மனிதர்கள் பலத்திலோ நாம் நிற்கக்கூடாது. நாம் நம்முடைய



தலையாகிய கிறிஸ்துவை பற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லும் பொழுது நம்மை நடத்துகிற வழி, நீதிநெறி எல்லாம் அவரிடத்தி-ருந்து அவர் மூலமாய் வருகின்றது. அதுவே நமக்கு பலமாகவும், வழிகாட்டியாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதோடு நமக்குத் தேவையானதாகவும், அவசியமானதாகவும் இருக்கிறது. கர்த்தர் நமக்கு மீட்பானார். பாவத்தினால் விளைந்த மரண சாபத்தி-ருந்து அவரது இரத்தத்தின் மேல் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் நம்மை மீட்டார். பாவத்தை நேசித்துக் கொண்டிருந்த நம்மை அதி-ருந்து சீர்படுத்திப் பலப்படுத்தினார். இடுக்கமான வாசல் வழியாக நடக்கச் செய்தார். இந்த இடுக்கமான வாச-ல், நெருக்கமான வழியில் செல்வதைச் சந்தோஷமாக நடக்கும்படி செய்கிறார். ஏற்கனவே அவர் நம் மீட்பராக இருக்கிறார். நம்முடைய மீட்பு வர இருக்கின்றதாய் இருக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகும்படி நாம் பூரணப்பட வேண்டும். நாம் பிரதிஷ்டைக்குட்படும் பொழுது உலகிற்கு மரித்தோம், ஜீவனுக்குட்பட்டோம். இதற்கு பரிசுத்தாவி சாட்சி பகர்கின்றது. எனவே நாம் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைய வேண்டும். R 2934:4

## ஜனவரி 30

***தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். (கொலோ. 3:15)***

எல்லா மனித ஞானத்திற்கும் மேலான சந்தோஷ சமாதானம் உலகிற்கு அருளப்படுகிறதில்லை. அது பெயர் கிறிஸ்தவ மார்க்கத்தாருக்குத் தரப்படுவதில்லை. சடங்கு, ஆச்சாரங்களில் எவ்வளவு வைராக்கியமாய் இருக்கிறார்களோ அந்த வைராக்கியத்தாலும் அவர்களுக்கு அருளப்படுவதில்லை. இவைகள் பரிசுத்தாவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே அருளப்படுகிறது. தேவனுடைய கிருபையின் ஐசுவரியம் அவர்களிடத்திலே உண்டாகி கிறிஸ்துவைப் போல அவர்கள் எல்லாவற்றிலும் ஆவியின் கிருபையில் வளர்கிறார்கள். தங்கள் ஜீவனுள்ள தலையாகிய கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு இப்படிப்பட்ட ஆழ்ந்த சமாதானமும், சந்தோஷமும் உண்டாயிருந்து

அவர்களில் தங்கி தரித்திருக்கும். தேவனுடைய அன்பின் நீள, அகல, ஆழ உயரங்களை விசுவாசத்தின் மூலமும், கீழ்ப்படித-ன் மூலமும் பரிசுத்தவான்களோடே கூட இவர்களும் அறிந்து கொள்வார்கள். R 2456:6

## ஜனவரி 31

***நீ தண்ணீர்களை கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜீவாலை உன் பேரில் பற்றாது. (ஏசா. 43:2)***

அழைக்கப்பட்டு தெரிந்துக் கொள்ளப்பட்டு உண்மையுள்ள விசுவாசிகள் அனைவரும் அனுபவப் பள்ளியிலே படித்தாக வேண்டும். தேவ ஒழுங்கை கற்றாக வேண்டும். பரீட்சைக்கு நின்றாக வேண்டும். பரீட்சித்துப் பார்த்தப்பின் தேர்ச்சி பெற்றாக வேண்டும். இப்படிப்பட்ட சோதனையில், தேர்வில் நமக்கு நேர்கின்ற விரோதம், பகைமை, குழப்பம் இவைகளெல்லாவற்றிலுமிருந்து நம்மை விடுவிக்கக்கூடிய கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பது நமக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது. வெள்ளங்கள் புரண்டு நம்மீது வரும்பொழுது ஏமாற்றங்கள், தோல்விகள், உபத்திரவங்கள், நம்மைச் சுற்றிலும் அலை, அலையாய் மோதத்தான் செய்யும். இந்த அலைகளின் மத்தியிலே நல்ல போர்வீரனைப் போல உறுதியாகப் போரிட வேண்டும். ஆனால் நமது பலத்தின் மூல காரணராகிய கர்த்தரை இந்த போராட்டத்தின் மத்தியில் மறந்துவிடக் கூடாது. கர்த்தர் நம்மை அக்கரைக்கு இழுத்துக் கொள்கிறார். அதன்மூலம் அவருடைய கிருபையைப் பெற்றுத் தம்மால் தெரிந்துக் கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு அவர் வழங்கப்போகிற கனம், மகிமை, சாகாமையை பெற்றுக் கொள்ளலாம். R 4005:1

## பிப்ரவரி 1

***நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். (அப். 16:25)***

கிறிஸ்தவ ஜீவியமானது சோகமே உருவான வருத்தம் நிறைந்த வாழ்க்கையல்ல, சந்தோஷம் நிறைந்த ஒன்று. "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையும் உண்டாக்குகிறது" என்று அறிந்து இந்த உபத்திரவங்களைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டும். "அதிசீக்கிரத்திலே நீங்கும் லேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது." (ரோம. *5:3,4; 2* கொரி. *4:17*) எனவே இந்த துன்பத்தின் பாத்திரத்திலும், சுதந்திரத்தின் ஆச்சாரமாயிருக்கிற சந்தோஷத்திலும் நாம் பங்கு கொள்கிறோம். கர்த்தருடைய ஊழியத்தில் நம்முடைய வைராக்கியம் மற்றும் தைரியத்திற்கு ஆவியில் சந்தோஷப்படுதல் அவசியம். சிறையில், முதுகிலே காயத்துடன் கால்கள் கழுமரத்தில் மாட்டப்பட்ட நிலையில் பவுலும் சீலாவும் தேவனை பாடித்துதித்ததை நினைத்துப் பாருங்கள். இடுக்கமான வழியில் செல்லும் கிறிஸ்துவின் அடியார்களும் இப்படித்தான் இருக்க வேண்டும். R 4592:4



## பிப்ரவரி 2

***பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள். (சங். 149:5)***

இந்தக் காலத்தில் பரிசுத்தவான்கள் தேவனை புகழ்ந்து பாடும் போது, அவர்கள் தங்கள் படுக்கைகளில் ஓய்ந்திருப்பார்கள் என்று சங்கீதக்காரன் முன்னறிவிக்கிறான். இதில் படுக்கை என்பது விசுவாச பிரமாணத்தை அல்லது ஒட்டுமொத்த மத நம்பிக்கையை குறிக்கிறது என்பதை புரிந்து கொள்ளும் வரை இந்த கூற்று அர்த்தமற்றதாயிருக்கும். இந்த காலக் கட்டத்தில் தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் முழுமையான வெதுவெதுப்பான, போதுமான அளவான படுக்கையைப் பெற்றிருப்பார்கள். மற்றவர்கள் அமைதியின்றி, சௌகரியமின்றி இருக்கும் பொழுது, பரிசுத்தவான்கள் அமைதியுடனும் சௌகரியத்துடனும் தங்கள் விசுவாசத்தில் இருப்பார்கள் என்று இது நமக்கு தீர்க்கதரிசனமாக கூறுகிறது. நல்ல படுக்கையில் ஓய்ந்திருத்தல் என்பது அவர்களது மன நிலைமையை எடுத்துக் காண்பிக்கிறது. தேவனைத் துதிக்கும் போது தங்கள் கைகளில் உள்ள இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய வேதத்தை ஞானமாய் பயன்படுத்துகிறார்கள். R 5804:2

## பிப்ரவரி 3

***நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின. (சங்.119:54)***

“இரவில் கீதம்பாட அருளிச் செய்தார்;” என் வாயில் புதிய பாட்டை தந்தருளினார் என்று வேதத்தில் சொல்-யிருக்கிறது. அவருடைய பரிசுத்தவான்கள் முழு இருதயத்தோடு அவருடைய மகிமையைத் தேடுவதால் சந்தோஷம் அடைவார்கள் என்பதில் ஆச்சரியம் இல்லை. அவர்கள் தேவனுக்கு உரத்த குர-லே கீதம் சங்கீதமாக வாய் நிறையப் பாடுவார்கள். அபூரண நிலைமையிலே பாரத்தாலும், துக்கத்தாலும், பலவீனத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, பரிசுத்த வேத நியாயத்தீர்ப்புக்கான பாடல்கள், துதிகள் இவையே நமக்கு மகிழ்ச்சியைத் தந்து நமக்குப் பாதுகாப்பளிக்கின்றது. இதுவே ஜெயம் கொண்டவர்களைக் குறித்த தெய்வ கூற்று ஆகும். பரதேசிகளாகத் தங்கும் வீடாக இந்த உலகம் இருக்கின்ற போது, அவர்கள் சந்தோஷமாயிருக்க வேண்டும். இதைக் குறித்துத்தான் நமது கர்த்தராகிய ஆண்டவர், “ஒருவனும் எடுத்துக் கொள்ளக்கூடாத சந்தோஷத்தை நான் உங்களுக்குத் தருகிறேன்” என்று சொன்னார். ஆகவே புதிய ஜீவனைப் பெற்ற சிலர் சில பாரங்களையும் அனுபவிக்க வேண்டியதாக இருக்கும். ஆனாலும் இந்தப் பாரத்தைக் காட்டிலும் அதன் மூலம் வருகின்ற சந்தோஷம் இவ்வுலகம் தரக்கூடாதது. அதை எடுத்துவிடவும் முடியாது. புதிய ஆயிரவருட மகிமையின் ராஜ்யம் வரும் வரையில் நமக்கு யாத்திரையாகத் தரப்பட்ட நாட்களில் இரவின் கீதங்களாகத் தேவனுடைய வாக்கு நம்மைத் தேற்றும். R 2231:6

## பிப்ரவரி 4

***நீயும் எங்களோடே கூடவா, உனக்கு நன்மை செய்வோம்; கர்த்தர் இஸ்ரயேலுக்கு நல்ல வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்றான். (எண். 10:29)***

யாரெல்லாம் நம்மோடு கூட வருகிறார்களோ அவர்கள் ஆசீர்வாதம் பெறுகிறார்கள். அதுபோலவே நாமும் யாரையாவது கூட்டிச் செல்வோமாகில் அதுவும் ஆசீர்வாதம். இதன் மூலமாக நம்முடைய விசுவாசம், ஊக்கமும் பலமும் அடைகிறது; கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களாவோம். நாமும் மோசேயைப் போல கர்த்தர் நமக்கு நன்மையைத் தருவார் என்று நாம் ஒவ்வொருவரையும் அழைக்க வேண்டும். நாம் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொள்கிற நன்மைகளை, ஆசீர்வாதங்களை மற்றவர்களோடு நாளுக்கு நாள் பகிர்ந்து கொள்ள வேண்டாமா? தேவகரத்தில் பெற்றுக் கொண்ட நன்மைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பொழுது நம்முடைய கவலைகளை, பாரங்களை மறக்கிறோம்; உலகை மறக்கிறோம்; தொடர்ந்து தேவசித்தத்தையும் திட்டத்தையும் எண்ணுகிறோம். மோசேயின் மாதிரியைப் பின்பற்றி ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நாமும் மற்றவர்களை அழைத்து தேவவாக்குத்தத்தங்களைப் பகிர்ந்து கொள்ளும் வேலையில் நம்முடைய விசுவாசத்தையும் காண்பிக்கின்றோம். தேவ வாக்குறுதிகளையும் தேவ வாக்குத்தத்தங்களையும் அவர்களைப் பகிர்ந்துக் கொள்ளச் செய்கிறோம். R 4038:4



## பிப்ரவரி 5

***நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர். (எபே. 3:20)***

நம்முடைய மனதின் அறையைக் கட்டிக் கொண்டவர்களாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்து வெளிப்படும் நாளிலே நாம் மகிமையடையத்தக்கதாக, நம்பிக்கையோடு உறுதியாகச் சத்திய நெறியில் நிலைநிற்போமாக. கண்ணுக்குத் தெரிகின்ற இவ்வுலகுக்கே உரிய அனைத்து காரியங்களை நாம் கண்ணோக்காம-ருப்போமாக. காணாமல் இருக்கக் கூடிய நித்திய காரியங்களில் கண்ணோக்கமாக இருப்போமாக. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசக் கண்களோடு நோக்குவோமாக. அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற ஜீவ கிரீடத்தை நோக்குவோமாக. அவருடைய பிதாவின் வீட்டிலுள்ள வாசஸ்தலங்களில் நமக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிற ஸ்தலத்தை நோக்குவோமாக. நாம் சந்தேகத்தோடும் பயத்தோடும் பார்க்கக்கூடாது. முழுநம்பிக்கையோடும், முழு விசுவாசத்தோடும் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைப் பெற்று கர்த்தரின்

சந்தோஷத்துக்குள் பிரவேசிக்க நிச்சயித்திருப்போமாக. என்ன வந்தாலும் நம்புவேன் என்கின்ற விசுவாசம் நம்மில் இருக்க வேண்டும். இருளில் இருந்து நம்மைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய வழிகாட்டுத-ல் நடந்து அவருடைய விசுவாச வழியில் நடப்போமேயானால் அவருடைய பார்வையில் பிரியமாயிருப்போம். அவரது பலம் நம்மோடிருக்கும். அந்தப் பலத்தால் அவருக்குப் பிரியமான வழியிலே நடந்து உலகி-ருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாய், உலகை ஜெயித்தவர்களாய் சுயநலம், பாவம், மாம்சம், உலகம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி பெற இயலும். R 3892:4

## பிப்ரவரி 6

***பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். (கொலோ. 3:2)***

புதிய சிந்தை மேலானவைகளை நோக்கிப் பார்க்க, மாம்ச சிந்தை கீழானவைகளையும், தாழ்மையானவைகளையும் பூமிக்குரியவைகளையுமே நாடும். கர்த்தருக்குள் பிரதிஷ்டை பண்ணினவர்களும் கூடத் தங்களுடைய வழிகள் யாவற்றையும் திரும்பத் திரும்பச் சீர்த்திருத்திப் பரத்திற்குரிய மேன்மையான காரியங்களிலே முழுமனதோடும் இடைவிடாமல் அதன் மேலே நோக்கமாக இருக்க வேண்டும். தேவவழியி-ருந்து சற்றே விலகினாலும், பரத்திற்குரிய மேன்மையான நன்மைகளை விட்டுவிட்டுப் பூமிக்குரிய ஆசை, பேராசை இவைகளில் வளர்ந்து பெருகினால் புதிய மனுஷன், பழைய சுபாவமுடையவனாகி தேவ அன்பை இழந்து மறுபடியும் புதுப்பிக்கக்கூடாத ஒருநிலைமைக்குப் போய்விடுவான். சற்று அயர்ந்தாலும் கூட மிகப் பெரிய தேவ ஆசீர்வாதத்தை இழந்துப் போகக்கூடிய நிலைமை உண்டாகும். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்புக்குப் பாத்திரவான்களாக இருக்க வேண்டுமானால், நம்முடைய ஓட்டத்திலே மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாகி, பொறுமையோடே ஓடினால், நமக்காக வைக்கப்பட்டிருக்கும் பரலோக கிரீடத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம். R 3914:1



## பிப்ரவரி 7

***நானே வானத்தி-ருந்திறங்கின ஜீவ அப்பம். (யோவா. 6:51)***

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வானத்தி-ருந்து இறங்கி வந்த அப்பம் நானே என்று சொன்ன பொழுது அதைக் கேட்டவர்கள் அவர் என்ன சொல்கிறார் என்று உணராமல் இது கடினமான உபதேசம் என்று கூறினார்கள். இந்த மனுஷன் தன்னுடைய மாம்சத்தை சாப்பிடக் கொடுப்பாரா? தேவதிட்டம் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறதை அவர் சத்தியமாகச் சொன்னதை அவர்கள் அறியவில்லை. உலகம் பிழைக்க வேண்டித் தன்னையே தத்தம் செய்தார். கிறிஸ்து கூறியது சொல்லர்த்தமாக இயேசுவின் சரீரத்தைப் புசிப்பதல்ல; மாறாக, தேவன் கிறிஸ்து மூலமாக நமக்கு வழங்கும் ஆசீர்வாதங்களில் பங்கு கொள்வதேயாகும். அவருடைய குணங்களை, அவருடைய செய்கைகளை நாம் பின்பற்ற வேண்டும். கர்த்தருடைய வழிகள் என்ன என்று ஆராய்ந்து அவருடைய குணநலன்களில் நாம் பங்கு கொள்வோமேயானால் நாம் விசுவாசத்தில் பலப்பட்டு ஆவியின் கிருபைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வோம். எனவே நாம் நம்முடைய அன்றாட மன்னாவாகிய வேதபாகத்தை நமக்குப் பங்காகத் தேடி, அதை தினமும் புசிப்போமேயானால் பரமகானானுக்குப் பங்குள்ளவர்களாகி அங்கே சென்றடைவோம். கர்த்தராகிய இயேசுவின் பிரமாணமும், விசுவாசமும் இருளி-ருந்து நம்மை மீட்டு அவரது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்துச் செல்லும். R 4012:5

## பிப்ரவரி 8

***நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூறுங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லோரும் ஆனந்த முழக்கமிடுங்கள். (சங். 32:11)***

இந்த இரவின் கீதத்தைப் படிக்கிற எல்லா விசுவாசிகளும் இந்த ஆசீர்வாதமான செய்திகளை அதிகதிகமாகப் புகழ்ந்து கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். இந்த உலகத்தின் அற்பமான சந்தோஷத்தைக் காட்டிலும் உண்மையான சந்தோஷத்தைப் பெறுவார்கள். உலக காரியங்களில் பிரியம் வைத்தால் தொடர்ந்து துன்பம் அடைந்து சந்தோஷத்தை இழப்பார்கள்.

மேலானவைகளிலும் கர்த்தரிலும், அவர் வாக்குத்தத்தம் பண்ணின மகிமையான காரியங்களிலும் பிரியம் வைத்தால், உண்மையில் அவர்கள் சந்தோஷம் அடைவார்கள். ஏனெனில், கர்த்தர் மாறாதவராயிருக்கிறார். "அவரது நன்மைகளில் ஒன்றும் குறைவு படாது." நம்பிக்கையிலும் முயற்சிகளிலும் நேர்மையாயிருப்பவர்கள் கர்த்தரைப் புகழ்ந்து சந்தோஷத்துடன் கெம்பீரிப்பார்களாக. இதனால் அவர்களது மாம்சீக பலவீனங்கள் மூடப்படுவதோடு, அவர்களது சிந்தனையும் செம்மையாகிறது. நீதியின் ஆளுகையாகிய ஆயிரவருட அரசாட்சி சமீபமாயிருக்கிறது. இதில் பெரிய சத்துருவாகிய சாத்தான் கட்டப்பட்டு பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவார்கள். R 4273:4

## *பிப்ரவரி 9*

**உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக. *(உபா. 8:18)***

தேவன் வாக்குத்தத்தம் பண்ணிய ஆசீர்வாதங்களை நாளுக்கு நாள் பெற்றுக்கொள்ளும் பொழுது நாளுக்கு நாள் தாழ்மையிலும், அடக்கத்திலும் வளர வேண்டும். எவ்வளவாய் தேவனிடத்தில் நன்மைகளை பெற்றுக் கொண்டிருக்கிறோமோ அவ்வளவாய் நன்றியறிதல் உள்ளவர்களாய் தாழ்மை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். விசுவாசமும், நன்றியும் உள்ள இதயம் மட்டுமே அறிவின் மேல் அறிவையும், பலத்தின் மேல் பலத்தையும், கிருபையின் மேல் கிருபையையும், மகிமையின் மேல் மகிமையும் அடையும். இந்த நன்றியுணர்வு குறையும் பொழுதும் நம்முடைய அதிர்ஷ்டத்தினாலும், நம்முடைய முயற்சியினாலும் மட்டுமே இவைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணும் போதும் ஆவியில் அனல் இல்லாதவர்களாகி விடுவோம். நன்றியறிதல் இல்லாதவர்களாய் பரிசுத்தம் இல்லாதவர்களாய், தன்னைத் தான் ஏமாற்றுகிறவர்களாய் ஆவிக்குரிய கனி கொடாதவர்களாய் மாறி இறுதியில் ஆவியில் மரித்தவர்களாகவும் ஆகிவிடுவோம். R 3080:2

## *பிப்ரவரி 10*

**ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான். *(தானி. 12:12)***

வேதாகமம் சொல்லுகின்றபடியே ஒவ்வொரு காரியங்களும் நிறைவேறி வருகிறது. இப்படி வருங்காலத்துக்குரிய காரியங்களை நிகழ்காலத்திலேயே அறியும்படியாக ஞானத்தைத் தேவன் தந்து இருக்கிறது எவ்வளவு பாக்கியமான காரியம். யார் அவருடைய சத்தத்துக்குச் செவி கொடுத்துத் தங்கள் இதயக்கதவைத் திறக்கிறார்களோ அவர்களுக்கு ஏற்ற வேளையில் போஜனம் கொடுப்பது மட்டுமன்றி, அவர் அவர்களுக்கு ஊழியமும் செய்கிறார். தற்கால சத்திய வெளிச்சத்தில் நாம் நுழைந்ததி-ருந்து நாம் பெற்று வருகிற இந்த போஜனமாகிய ஆசீர்வதிக்கப்பட்ட சத்தியத்தி-ருந்து இந்தத் தெய்வீகத் திட்டம் எந்த மனிதனுக்கும் தோன்றியதில்லை. இது மனிதனுடைய திட்டமும், யோசனையும் இல்லையென்றும் நிரூபிக்கிறது. ஏனென்றால், எந்த மனிதனாலும் தேவனுடைய வார்த்தையி-ருந்து இப்படிப்பட்ட தெய்வீக காரியங்களை கொண்டு வர முடியாது. ஆகவே, பிரசன்னமாயிருக்கிற இயேசுவே இப்படிப்பட்ட பாக்கியமான நற்செய்தியை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறார். இப்படிப்பட்ட காரியங்களைக் கேட்போர், வாசிப்போர், கைக்கொள்ளுவோர் மிகுந்த பாக்கியவான்கள். R 5568:5

## *பிப்ரவரி 11*

**அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். *(யோவா. 1:14)***

மனுக்குலம் முழுவதும் ஆதாமின் பிள்ளைகளாக அவனுடைய மரணத்தீர்ப்பில் பங்குதாரர்களாக இருப்பதால் எந்த மனுஷனும் தன்னுடைய சகோதரனுக்காக மீட்கும் பொருளை தரமுடியாது. *(சங். 49:7,8)* ஆதாமின் விழுகையினால் உண்டான மரணத்தை ஈடுகட்ட எந்த மனிதனாலும் கூடாமல் போயிற்று. ஆதாமுக்கும் அவனது சந்ததியினருக்கும் ஒரு பரிபூரண மனிதனின் மரணத்தினால் மட்டுமே மீட்பைக் கொண்டு வரமுடியும். அப்படிப் பரிபூரணமான மனிதனாக எந்த மனிதனும் இல்லாததினால் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை வார்த்தையானவராக (லோகாஸ்) இருந்தவரை ஆதாமும் ஆதாமின் பிள்ளைகளும் மீட்படையும்படியாக மனிதனா வரும்படி தேவன் ஏற்பாடு செய்தார். R 5352:4

## பிப்ரவரி 12

***நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம். (1 கொரி 3:9)***

ஆபிரகாமின் சந்ததியாகிய ஆவிக்குரிய ஆபிரகாமை தெரிந்து கொள்ளுதல் ஒன்றே சுவிசேஷயுகக் காலத்தின் பணி. இது, இந்தப் பூமியின் வித்தி-ருந்தே தெரிந்து கொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது. இவர்களே பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கப் போகிறவர்கள். இந்த ஆவிக்குரிய சந்ததி பூரணப்படாத வரையில் பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கக்கூடிய வாக்குத்தத்தம் நிறைவேறாது. “நீங்கள் கிறிஸ்துவுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள்.” முத-ல் இருந்து கடைசிவரையில் ஒரே ஒரு பணிதான் நடந்துகொண்டிருக்கிறது. எனவே தான், “விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச் சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடப்படாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள். அவருடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்” என்றார். (யோவா. 4:37,38) அறுப்பின் பணி துவக்கமோ அல்லது முடிவோ இரண்டும் ஒன்றுதான். நோக்கம் என்னவென்றால், அவருடைய தெரிந்துக் கொள்ளப்பட்ட ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியைக் கூட்டிச் சேர்ப்பது ஒன்றே ஆகும். R 5302:1

## பிப்ரவரி 13

***உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். (1தெச. 5:24)***

அன்பானவர்களே, ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணத்திற்கு, ஆட்டுக் குட்டியானவரை நாம் திருமணம் செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். இன்று நாம் எதைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் அது நிச்சயமாக நம்முடைய இறுதி ஆயத்த நிலையைப் பாதிக்கும். இக்காரியத்தைக் குறித்து நம்முடைய மனதின் அடித்தளத்திலே அடிப்படையான நம்முடைய நோக்கத்தைவிட்டு மாறக்கூடாது. நமது சரீரம் அபூரணமானது என்பது கர்த்தர் அறிந்த ஒன்றே. எனவே, தேவ சோதனை நம்முடைய சரீரம் பூரணமானதா என்பது பற்றி இராமல் நம்முடைய இருதயம் பூரணமானதா என்பது பற்றியே இருக்கும். தேவனுக்கு முன்பாக நமது இருதயம் பூரணமானதாயிருந்தால் நம்முடைய சிந்தையும், செயலும் அன்பின் பிரமாணத்திற்கு இசைந்ததாக இருக்க ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய இருதயம் பக்திவிருத்தி உள்ளதாயிருக்கும்படி நாம் பார்த்துக் கொள்வோமேயானால் மிகப் பிரியமான தேவகுமாரனின் சாயலாயிருப்போம். நமது தெய்வீக மணவாளனைப் போல நாமும் மாறுவோம். ஏற்ற வேளையிலே சொல்ல முடியாத அந்த சந்தோஷத்திற்குள் கை வேலையல்லாத பரலோகத்தில் உள்ள நித்திய வீட்டிற்குள் நுழைவோம். அப்பொழுது கர்த்தர் நம்மை பிதாவினிடத்தில் அழைத்து இதோ, “தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட கறைதிறையற்ற மணவாட்டி” என்று மிகுந்த சந்தோஷத்தோடே காண்பிப்பார். R 5907:4



## பிப்ரவரி 14

***மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. (2 கொரி. 4:17)***

சத்தியத்திற்கு சாட்சி கொடுப்பதால் வருகின்ற அவமானம், நிந்தை, கே-, வசை இவைகளை தாங்கக் கூடியவர்களாக நாம் இருக்கிறோமா? உலகம் பாராட்டும், உலகத்தால் மகிழ்ந்து போற்றுகிற காரியங்களையும் விரும்புகிறோமா? மாறாக, ஜீவனைக் காட்டிலும் சத்தியத்தினால் வரும் தேவதயவை அதிகதிகமாக நேசிக்கிறோமா? தேவ சித்தத்தின்படி நாம் செய்கிறவர்களாக இருப்போமேயானால், அவருடைய நாமத்தைபோற்றி, அவருடைய துதியைச் சொல்- அவர் தரும் புதிய பாட்டைப் பாடிச் செல்பவர்களாக இருப்போம். இப்படிப்பட்ட புதிய பாட்டை அதாவது தேவதயவைச் சொல்- பாடுவதும் சத்தியத்திற்காகப் பாடுபடுவதும், மிகுந்த பிரயாசமும், பலமும் தரக்கூடிய தேவ வழியாகும். R 5441:6

## பிப்ரவரி 15

***கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார். (சங். 149:4)***

இப்படிப்பட்டவர்களைத் தான் தேவன் மகிழ்ச்சியோடு தம் குமாரனுடைய அறிவிலும், தயவுள்ள போதகத்திலும் எல்லா ஆசீர்வாதத்திற்குள்ளும் வழி நடத்துகிறார். இப்படிப்பட்டவர்கள் அடக்கத்திலும், தாழ்மையிலும் தொடர்ந்து இருந்தால் அவர்கள் தேவனுக்கு சுதந்தரராகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் இருக்கின்ற பாக்கியத்தைத் தருகின்றார். சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். அவர்கள் பூர்வ உடன்படிக்கையின்படி சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இவர்களே ஆபிரகாமின் வித்து எனப்படுவார்கள். ஆயிரவருட அரசாட்சியில் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ளும் பூமியிலுள்ள ஜனங்கள் இவர்கள் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆயிரவருட ஆட்சியின் இறுதியில் நேரிடும் இறுதி பரீட்சையிலும் உலகம் போதகத்தைக் கேட்கக்கூடிய நிலைமைக்கு மாற்றப்படும்; எல்லா ஞானத்திற்கும் ஊற்றும், காரணருமானவர் தேவனே என்ற மாபெரும் பாடத்தைக் கற்றுக் கொள்வார்கள். தேவ போதனையினால் மிகுந்த நன்மையைக் கண்டடைவார்கள். R 5370:5

## பிப்ரவரி 16

***இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப் பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல். (ஏசா. 28:12)***

நாம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கையாய் இருக்கின்றோம். தம்முடைய வாக்குத்தத்தங்களின்படி நம்மை பலப்படுத்த வல்லவராயிருக்கிறார். நம்மை அழைத்தவர் நமக்குக் கொடுத்திருக்கின்ற எல்லா நல்ல வார்த்தைகளின்படியேயும் நமக்கு இளைப்பாறுதல் நிச்சயமாகத் தருவார். வாக்குத்தத்தங்கள் நிச்சயமாக நிறைவேறும். இந்த இளைப்பாறுதல் அல்லது சமாதானம் பரிசுத்த ஆவியினால் கிடைக்கும். விசேஷ ஆசீர்வாதம் நாம் எவ்வளவாய் பரிசுத்தாவியைப் பெற்றிருக்கிறோமோ அவ்வளவாய்ப் பரிசுத்த குணமுள்ளவர்களாய்ப் பரிசுத்த சிந்தையுள்ளவர்களாய்ச் சமாதானம் நம்மில் நிறையும். இது சாதாரண விகிதாச்சாரத்தைப் பொறுத்தது. நாம் கிருபையில் எவ்வளவாய் வளர்கிறோமோ, கர்த்தருடைய அறிவில் எவ்வளவாய் வளர்கிறோமோ, சத்தியத்தில் எவ்வளவாய் வளர்கிறோமோ அவ்வளவாய் நாம் ஆறுதலும் பலமும் பெறுவோம். நாள்தோறும் தேவசமாதானம் நமக்குள் இருக்கும். நாம் அவருடைய தேவ அன்புக்குள் நிலைத்திருக்க முடியும். R 5432:3



## பிப்ரவரி 17

***அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும். உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்தி-ருந்து எடுத்துப் போடமாட்டான். (யோவா. 16:22)***

எந்த மனிதனும் எடுத்துக் கொள்ளக் கூடாத நம்முடைய சந்தோஷம் எத்தகையது? எத்தனை பாடுகள், உபத்திரவங்கள், துன்பங்கள் பெருகினாலும் நம்முடைய சந்தோஷம் மிகவும் ஆழமாகவும், அதிகமாகவும், அதிக இனிமையுள்ளதாகவும் உள்ளது. ஆக இது எவ்வளவு பெரிய சந்தோஷம்! வருங்காலத்தில் நாம் சுதந்தரிக்கப் போகிற எல்லா ஆசீர்வாதங்களையும் முன்பதாகவே ருசிபார்க்கின்ற சந்தோஷம். அவர் தொடங்கிய பரிபூரணப் பணியில் அவர் தாம் விரும்புகின்ற வழியிலே நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும், நம்மை ஊக்குவித்து முன்னேற்றப்பாதையில் நம்மைப் பூரணப்படுத்துகிறார். அவருடைய கிருபைகளை நிச்சயமாகப் பற்றிக் கொண்டிருப்போமேயானால் தம்முடைய திவ்விய வாக்குத்தத்தங்களின்படி விசுவாசக் கரத்தால் நம்மை பற்றி அழைத்துச் செல்கிறார். தம்மைவிட்டு நம்மைப் பிரிக்க எந்தச் சக்தியையும் அனுமதிப்பதில்லை. கிறிஸ்துவுக்குள் தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, துன்பமோ? நம்முடைய பிதாவின் கரத்தி-ருந்து நம்மை ஒருவராலும் பறித்துக் கொள்ள முடியாது. (யோவா.10:29) பிதாவாகிய தேவனே நம்மை நேசிப்பதால், நாம் அவருடைய அன்பில் நிலைத்திருப்பதாலும், அவருடைய திட்டங்களுக்கு கீழ்ப்படிந்திருப்பதாலும் அவர் நம்மை கை விட்டுவிடுகிறதில்லை. தேவனை நேசிக்கிறவர்களுக்கு எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற விசுவாசத்தில் இருக்கிறோம். நமக்கு எதிராயிருப்பவர்கள் எல்லாரைக் காட்டிலும் நமது பட்சத்தில்

இருக்கிற தேவன் வல்லவராயிருக்கிறார் என்ற இந்த நிச்சயத்தில் இருக்கிறோம். இது உலகம் தரக்கூடாத சந்தோஷத்தை தருகிறது. இதுவே எல்லா புத்திக்கும் மேலானது. இதுவே நம்முடைய இருதயத்தைப் பாதுகாக்கிறது. R 2232:1

## *பிப்ரவரி 18*

***ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். (எபே. 5:1)***

தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. இரண்டில் ஒன்றை நாம் தெரிந்துகொண்டே ஆக வேண்டும். கர்த்தரையும் அவரது ஊழியத்தையும் தெரிந்து கொள்ளாமல் நம்முடைய மனதுக்குப் பிரியமானதைத் தெரிந்துக் கொள்வோமேயானால் மற்ற மனிதரைப் போல சுபாவ மனிதராக நாம் மாறிவிடுவோம். கர்த்தர் நம்மை பாராட்டுகிறதும் தம்முடைய வெகுமதியைத் தருகிறதும் இந்த நம்முடைய தெரிந்துகொள்ளுதலைப் பொறுத்தே இருக்கும். பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கின்ற ஆசீர்வாதம் அவரிடத்தில் இருக்கிறது. ஆனாலும் அதைக் காட்டிலும் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும், கனம், மகிமை, சாகாமையும் விசேஷித்த விதமாக அவரை நேசிக்கிறவர்களுக்கு மட்டும் அளிக்கிறார். இவர்கள் தங்களுடைய வீடு, வியாபாரம், சொத்து, சுகம், சொந்தபந்தம் இவற்றுக்கெல்லாம் மேலாகத் தனக்கும் மேலாகத் தேவனை சேவிக்கிறவர்கள். நம்முடைய எல்லாவற்றையும் விட்டுவிட்டு கர்த்தரையே பின்பற்றிச் செல்லும் பொழுது, பின்னிட்டுப் பாராமல் மிக அருமையான வழியில் வந்திருக்கிறோம். தேவனுடைய வழியில் தேவகரம் நம்மைச் செலுத்தும் வழியிலே சளைக்காமல் செல்வோமேயானால் மிக உன்னதப்பரிசைப் பெற்றுக் கொள்வோம். தேவனுடைய ஆசீர்வாதம் தேவனுடைய பிள்ளைகளோடே என்றென்றும் நிலைத்திருக்கும். R 3721:4

## *பிப்ரவரி 19*

***ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி. 4:16)***



நாம் செய்யும் ஜெபமானது நமக்கு அனுகூலம் தருவதாக இருக்கிறது. அது ஒரு கட்டளையல்ல. எனவே, நமக்கு அனுகூலம் கிடைக்க ஜெபம் என்பது அவசியமாகிறது. மனிதன் தனது பூர்வ பூரண நிலையி-ருந்து விழுந்து போனதால் அபூர்ணராயும் மாம்சத்தில் பலவீனராயும் இருக்கிறோம். இருந்தபோதிலும், நாம் புதிய சிருஷ்டிகளாக இந்த பலவீனங்களை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இந்தப் பொறுப்பை நாம் ஏற்க வேண்டுமானால் நமக்கு உதவி, இரக்கம் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் நாம் கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும். எனவே, யார் அடிக்கடி இப்படி கிருபாசனத்தண்டையில் நாடித் தேடி வருகிறார்களோ அவர்களுக்குத் தகுந்த சமயத்தில் சகாயமும், கிருபையும் தேவன் கிடைக்கச் செய்கிறார். ஜெபத்தைக் கேட்கிறார். கேட்டதும் பதிலளிக்கிறார். R 5201:5

## *பிப்ரவரி 20*

***என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ அவனைக்குறித்து மனுஷ குமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார். (லூக். 9:26)***

தேவனுடைய வார்த்தை என்பது வெறும் பைபிள் மட்டும் அல்ல. பிரசங்கங்களும் புத்தகங்களும் சத்திய பிரசுரங்களும் தேவகுமாரனுடைய செய்தியை எவ்வளவாய் சத்தியமாகச் சொல்லகிறதோ அவையும் தேவ வார்த்தையே. வேதாகம போதகத்தையும் தேவமக்கள் வேத ஆதாரத்தோடு சத்தியத்தை சத்தியமாக எடுத்துக் காண்பிக்கும்பொழுதும் அது தேவனால் உண்டானதென்று வேதத்தைக் கொண்டே உணர்ந்து அறிய வேண்டும். அது குறித்து வெட்கப்படக்கூடாது. தங்களுடைய எல்லாவற்றையும் தேவனுக்கென்றே கையளித்தவர்கள் திறந்த மனதோடு சத்தியத்திற்கு இருதய சுத்தியோடு கர்த்தரின் காரியத்தைச் செய்ய எதையும் தத்தமாக்க சித்தமாக இருக்க வேண்டும்.

தேவதிட்டம் வெளியரங்கமாக எல்லா உதவியையும் செய்ய வேண்டும். அது தடைப்பட எக்காரணம் கொண்டும் காரணமாயிருக்கக் கூடாது. கர்த்தரையும் அவருடைய வார்த்தையைக் குறித்தும் எப்போதும் வெட்கப்படாதவர்களாயிருக்க வேண்டும். அதில் வெட்கப்பட ஒன்றும் இல்லை. சந்தோஷப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை உணர வேண்டும். அந்த ராஜரீக கொடியை உயர்த்திக் காண்பிக்கிறவர்களாக, மாபெரும் சந்தோஷம் தரும் நற்செய்தியை நமது முழு பலம் கொண்ட மட்டும் பறைசாற்ற வேண்டும். இருளில் இருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிற மற்ற எல்லாரிடமும் ஒத்துழைத்து அன்போடு பணியாற்ற வேண்டும். R 3777:4

## *பிப்ரவரி 21*

**உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக் கொள். *(சங். 34:13)***

கர்த்தரின் ஜனங்கள் தங்கள் உறுப்புகளில் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவது நாவுதான் மிகக் கடினமானது என்று கண்டு அதற்காகவே, "என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்" என்று ஜெபிக்கிறார்கள். இந்த ஜெபம், உண்மையாக இருதயத்தி-ருந்து புறப்பட்டதாக இருக்குமேயானால் ஜெபிக்கிறவர் தெய்வ உதவியைத் தேடுவதால் தன் பலத்திலுள்ள எல்லாவற்றிலும் இந்த நாவடக்கத்திற்காக உபயோகிக்கிறார் என்று பொருள். இந்தப் பாடத்தில் கண்டபடி தெய்வ உதவி நமது நாவைப் பொல்லாப்பிற்கும், நமது உதடுகளைக் கபட்டு வசனத்திற்கும் விலக்கிப் பாதுகாக்கும். இருதயம் உறுதியாக ஆவிக்குள் பூரணப்பட்டு, ஆவிக்குரிய புதுப்பிக்கும் பணியைச் செய்ய வேண்டும். "இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்" என்பது உண்மை. நமது உதடுகளால் திருத்தப்பட வேண்டியவை உண்டானால், திருத்தப்பட வேண்டியது உண்மையில் இருதயமாகும். நம்முடைய இருதயங்களை சர்வ வல்லவருடைய இருதயத்தோடு இசைவுடையவர்களாக நிறுத்த வேண்டும். அதாவது தெய்வீகக் குண நலன்களைக் கிருபையின் மூலம் மற்றவர்களுக்கு நீதியை நடப்பிப்பதற்கு மட்டுமல்ல, யாவரிடத்திலும், தயையும், இரக்கமும், தாராளமும், அன்பும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். R 3739:6



## *பிப்ரவரி 22*

**சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். *(ரோம. 2:7)***

நாம் எதைத் தேடுகிறவர்களாக இருக்கிறோம்? நமக்கு நாமே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்வது நல்லது. தற்கால சத்தியத்தை விளங்கச் செய்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்தக் கேள்வி நன்மை பயக்கும். இந்த உலகம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறது என்று நாம் அறிவோம். சொத்து, சுகம், மரியாதை, புகழ், பொழுதை இன்பமாகக் களிப்பது ஆகியவை கர்த்தரிடத்தில் திரும்பினவர்களில் சிலர் இந்த உலகத்திற்குரிய ஆவியை உடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குச் சீடர்களாகவும், அதே நேரத்தில் உலக ஆசை, நம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கிறவர்களாவுமிருக்கிறார்கள். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு சரியாய் செவி கொடுக்கிறவர்களாய் இருந்தால் இந்தக் கேள்வியை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். நீ எதைத் தேடுகிறாய் என்று கேட்கிற நமது கர்த்தருக்கு நம்முடைய இருதயத்தாலும், ஜெபத்தாலும் பதிலளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் பதிலளிப்பதற்கு முன் நம்மை நாமே சீர்தூக்கிப் பார்ப்போமாக. நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளலாமே ஒழிய, நாம் யாருக்கும் பதிலளிக்க வேண்டுமோ அவரிடத்தில் ஏமாற்ற முடியாது. நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் தெய்வ ஏற்பாட்டினால் உண்டாகப் போகிற மகிமையையும், கனத்தையும், அழியாமையும் தேடுகிறவர்களாயிருக்கிறோம். நாம் தேடுகிற எல்லாவற்றைக் காட்டிலும் நம்முடைய குருவாகிய கர்த்தர் சொன்ன அவருடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடக்கடவோம். R 4116:2

## *பிப்ரவரி 23*

**ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய் ..... மனத்தாழ்மையை தரித்துக் கொள்ளுங்கள். *(கொலோ. 3:12)***

வேதாகமத்திலுள்ள ஒவ்வொன்றும், தேவ ஜனங்களுக்கும், தேவகாரியத்தை தேவ சித்தப்படி செய்கின்ற மிக முக்கியமான

பணியினை செய்பவர்கள் தாழ்மையும் எளிமையுமான குணங்களை உடையவர்களாயிருப்பது அவசியம் என்று குறிப்பிடுகிறது. கர்த்தரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் இதை நினைவில் கொண்டு தங்கள் அன்றாட வாழ்வில் எப்பொழுதும் அடக்கமுடையவர்களாயிருந்து தங்களுடைய வாழ்க்கை, பேச்சு, செயல்முறைகளை தேவ வழியில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தருக்குரிய, ஆவிக்குரிய எந்த சேவையும் மகா மேன்மையானது. எவ்வளவாய்த் தேவ ஊழியத்தில் பங்குபெற அனுமதிக்கப்படுகிறோமோ அவ்வளவாய்த் தற்கால ஜீவியத்திலும், வரப்போகிற ராஜ்யத்திலும் ஆசீர்வாதத்தை வெகுமதியாகப் பெற்றுக் கொள்வோம். எனவே, அப்போஸ்தலனாகிய பேதுரு சொன்னது போல், மனத்தாழ்மையை தரித்துக் கொண்டவர்களாய் "ஏற்ற காலத்தில் தேவன் நம்மை உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போமாக." R 5262:5

## பிப்ரவரி 24

***எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். (மத். 6:11)***

இந்த இடத்தில் கர்த்தர் தாம் கற்பித்த ஜெபத்தினாலே இயற்கையாக உடலுக்கேற்ற உணவை மட்டும் கேட்கச் சொல்லுகிறார் என்று கருதினோமானால் அது தவறாகும். புதிய சிருஷ்டியாக எண்ணப்படுகிறவர்கள் மனமுவந்து வந்து இடுக்கமான பாதையைத் தெரிந்து கொண்டு அவருடைய அடிச்சுவட்டில் நடக்கும்படி கிறிஸ்து இயேசுவுக்குள் உடன்படிக்கை செய்தவர்கள் எப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும் என்று கற்பிக்கப்படுகிறார்கள். எப்படிப்பட்ட உணவை உட்கொள்ள வேண்டும்? எப்படிப்பட்ட தியானத்தை ஜீவ ஆகாரத்திற்கு ஏற்றவாறு செய்ய வேண்டும்? புதிய மனுஷனுக்குரிய புதிய சுபாவத்தைக் கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையையே பிரதானமாக நாடித் தேடினோமானால், பரலோகத்தின் பிதா இந்த பூலோகத்துக்குரிய நம் காரியங்களை மிக நன்றாகவே நடத்துவார். R 3806:5

## பிப்ரவரி 25

***பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரி. 4:6)***



நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து தாமே ஆவிக்குரிய ஆலயத்திற்கு அஸ்திபாரமிட்டார். அவராகவே அதைப் பூரணப்படுத்திப் பிரதான தலைக்கல்லாகவும் விளங்கித் தேவன் நியமித்த ஏற்ற வேளையில் மனிதரால் மாத்திரமல்ல தேவதூதர்களாலும் கூட மகிமைப்படுத்தும்படியாக ஆர்ப்பரிக்கப்படும். இந்தப் பணி அவரது கரத்தி-ருக்கிறது. தற்காலத்தில் வெளித்தோற்றத்திற்கு சோதனைகளும் மிகக் குறைவான முன்னேற்றமும் காணப்பட்டாலும் அவரது ஊழியர்கள் பலப்பட்டு தைரியம் கொண்டு வாழ்க்கையில் தேவபலத்தால் எல்லாம் கூடும் என்று கிறிஸ்துவுக்குள் வெற்றியின் நம்பிக்கை வைத்து மனித பலத்தினால் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, மாறாகக் கர்த்தருடைய ஆவியினாலே எல்லாம் ஏற்ற காலத்தில் வெற்றியாக வாய்க்கும் என்பதை நினைவு கூற வேண்டும். தம்முடைய விலை மதிக்கமுடியாத இரத்தம் சிந்தி, கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவர் நம்மை நேசிக்கும் நேசம், அந்த நேசத்தில் நாம் கொண்டிருக்கும் விசுவாசம், மாம்சம், சாத்தான், உலகம் யாவற்றையும் முற்றும் ஜெயங்கொண்டவர்களாக மட்டுமல்ல, மேன்மையான ஆசீர்வாத பாக்கியங்களைப் பெற்றுக் கொள்ள கிருபை செய்யும். R 2522:2

## பிப்ரவரி 26

***கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். (மத். 7:7)***

தேவன் தமது ஆசீர்வாதத்தை அளிக்கும் முன்பாகவே நாம் ஏன் கேட்கவேண்டும் என்று விரும்புகிறார்? நிச்சயமாகவே ஒரு ஞானமான காரணம் இருக்கக்கூடும். நமக்கு என்ன தேவை என்பதை நாம் உணர வேண்டும் என்று விரும்புகிறார். எந்த ஒரு தேவையையும் நாம் வேண்டி விரும்பிப் பெற்றுக் கொண்டால் அதைப் பேணி பாதுகாப்போம். இந்த அனுபவங்களால் நாம் புதிய சிருஷ்டியாக அவருடைய குமாரர்களாக அபிவிருத்தியடையச் செய்கிறார். எனவே, நாம் கேட்கவும், தட்டவும், தேடவும் செய்வோமேயானால்

தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களை நாம் கேட்பதற்கும் அதிகமாக அவர் வழங்கச் சித்தமாயிருக்கிறார். அவருடைய கிருபைக்கும், அவருடைய தெய்வீகத் தன்மைக்கும் ஏற்புடையதாக, இசைந்ததாக நம்முடைய மனம், வாக்கு, செயல்கள் மாறும் பொழுது அதிசயத்தக்க அவருடைய ஆசீர்வாதங்கள் மழையாய்ப் பெய்யும். R 3807:4

## பிப்ரவரி 27

***பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். (எபே. 6:16)***

புறம்பான மனிதன் அழிந்துக் கொண்டிருந்தாலும், உள்ளான மனிதன் புதிய சிருஷ்டியாக அபிவிருத்தி அடையக்கூடும். நமது கர்த்தராகிய இயேசுவின் மரணத்திற்கு ஏதுவாக பரிசேயரையும், பிரதான ஆசாரியர்களையும் தூண்டிவிட்டு அதில் சாத்தான் வெற்றியடைந்தான். ஆனால், இதே காரணத்தால் கர்த்தராகிய இயேசு மகிமையில் வெற்றி சிறந்தார். பிதாவாகிய தேவன், கர்த்தராகிய இயேசுவை நடத்தினது போலவே நம்முடைய வழிகளிலெல்லாம் அவர் நம்மை நடத்துவார். ஏதோ நம்மீது வெற்றி கொள்கிறது போல சாத்தான் காணப்பட்டாலும் இந்த "இலேசான நம்முடைய உபத்திரவங்கள் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்று போதிக்கப் பட்டிருக்கிறோம். சாத்தானை எதிர்க்கக் கூடிய பலம் நம்மிடத்தில் இல்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இவைகளை எதிர்க்கக் கூடிய சக்தி யாரிடமும் இல்லை. ஆனாலும் வல்லமையுள்ள கர்த்தரால் நாம் எல்லாவற்றையும் ஜெயிக்கலாம். அவர் சாத்தானையும் அவன் தூதர்களையும்விட மிகுந்த வல்லமையுள்ளவராய் இருக்கிறார். நாம் விசுவாசக் கண்ணாலே காணமுடியாதவைகளையும் கூட காண்கின்றவர்களாய் இருக்கிறோம். இதில் அசைக்கமுடியாத உறுதியுள்ள விசுவாசமுள்ளவர்களாய் நாம் நிலைத்திருக்க வேண்டும். அப்பொழுது தேவனால் அனுமதிக்கப்பட்ட சோதனைகளை வென்று ஜீவகிரீடம் பெறலாம். R 5184:6



## பிப்ரவரி 28

***நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்...... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். (மத். 5:13,14)***

கிறிஸ்துவின் சரீரமாக வெற்றிக் கொள்ளும் எல்லாரும் சீக்கிரமாக மறுரூபமாகி மகிமையடைவார்கள். சரீரம் பூரணப்பட்டு பின்பு திரைக்கு அப்பால் சென்று விடுவார்கள். திரைக்கு இப்புறமாக அவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். வெளிச்சம் மறைந்து இருள் கவ்வியிருக்கும். உப்பின் சாரம் இழந்து போனால் எப்படியோ அப்படியே ஊழல்கள் ம-ந்து மகா பெரிய உபத்திரவம் வந்து சூழ்ந்துக் கொள்ளும். அம்மாதிரி உபத்திரவம் உலகம் உண்டானது முதல் இதுவரையிலும் நடவாத ஒன்று. மனிதர்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நாம் உப்பால் சாரம் ஏறினவர்களாய் நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கின்றதாய் இருந்து அதைக் கண்டு மற்ற யாவரும் பிதாவை மகிமைப் படுத்த வேண்டும். நாம் மெய்யான நீதியிலும், சத்தியத்திலும், பொருட்களைக் கெடாமல் பாதுகாக்கின்ற உப்பின் தன்மையுடையவர்களாய் நாம் உறுதியான வழியிலே நிற்க வேண்டும். தற்போது தாழ்மையான நிலையிலுள்ள சபையாரைக் கொண்டு தேவன் உலகிற்கு சத்தியத்தை போதிப்பது அவரது நோக்கமல்ல. ஆனால் இது நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பரிசோதனையின் காலம்; கிறிஸ்துவின் சரீரமாக மகிமைப்படத் தகுதியுள்ளவர்களா என்று தேவன் நம்மைப் பரிசோதிக்கிறார். வெகுசீக்கிரத்திலே நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவுடனே கூட முழு உலகிற்கும் ஒளி வீச இப்பொழுதே நம்முடைய சிறு விளக்குகள் அணையாமல் பாதுகாக்க வேண்டும். R 3737:1

## மார்ச் 1

***நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக. என் முடிவு அவன் முடிவு போல் இருப்பதாக என்றான். (எண். 23:10)***

நமது கர்த்தராகிய இயேசு ஒரு நீதிமானாக இருந்தார். ஆகவே, மரணத்தை நினைக்கும் பொழுதெல்லாம் நாம் அவருடைய மரணத்தை நினைவு கூர வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் தம் ஜீவனையே கொடுத்தது போல நாமும் சகோதரர்களுக்காக ஜீவனைக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்வுலக வாய்ப்பு வசதி,

இன்பம், சந்தோஷங்கள் எல்லாவற்றையும் தெய்வீக திட்டத்திற்கு ஏற்ப அவர் தியாகம் செய்து மரித்திருக்கிறார். நாமும் "அவருடைய மரணத்துக்குள்ளாக" உடன்படிக்கை செய்ததை நினைவு கூற வேண்டும். அவரோடு கூட மரித்தோமேயானால் அவரோடே கூட என்றென்றைக்கும் வாழ்வோம். அவரோடே கூட பாடுபட்டால் அவரோடு கூட ஆளுகை செய்வோம். எந்த அளவு விசுவாசத்தோடே அவரோடு அவரில் நிலைத்திருக்கிறோமோ அவ்வளவாய் அவருடைய மகிமையிலும் சாகாமையிலும் ஆசீர்வாதத்திலும் உயிர்த்தெழுத-ல் நிச்சயம் பங்குபெறுவோம். பிஸ்கா மலையின் கொடிமுடியில் நின்று கொண்டு நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை முன்னிட்டுத் தற்காலத் துன்பங்களை சகித்து உள்ளான மனுஷனில் பலப்பட்டு உறுதியாக நிற்போமாக. நமது தலையாகிய கிறிஸ்து இவை யாவையும் வென்றது போல நாமும் நிச்சயமாய் வெல்வோம் என்ற நிச்சயத்தோடு நம்முடைய நோக்கத்தில் உறுதியாய் நிலைத்திருப்போமாக. R 4055:5

## <u>*மார்ச் 2*</u>

**இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். *(யோவா. 6:35)***

தேவன் தம்முடையவர்களுக்கு அளித்திருக்கிற வாக்குத்தத்தங்களின் மகிமையான காரியங்களில் நாள்தோறும் குறிப்பிட்ட நேரங்களில் முறையாகச் சகோதரர்களோடு அடிக்கடி பங்கு கொள்வதால் மட்டுமே நாம் அவரில் பலப்பட முடியும். நம்முடைய பயணத்தை விசுவாசத்துடன் தொடர்ந்ததால் தான் நாம் ஆவிக்குரிய கானானுக்குள் செல்ல முடியும். மாம்சீக இஸ்ரயேலர்கள் வனாந்தரத்திலே நாள்தோறும் மன்னாவைச் சேகரித்தது போல, ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நாமும் அன்றாட மன்னாவாகிய சத்தியத்தைச் சேகரிக்க வேண்டும். ஆவிக்குரிய வழிகளிலும் மாம்சீக வழிகளிலும் நமக்குரிய பங்கை அந்தந்த நாளிலேயே செய்து முடிக்க வேண்டும். கனிதரும் முன் விதை போட்டுப் பண்படுத்தி, களையெடுத்து விவசாயப் பணிகளைச் செய்வது போல ஆவிக்குரிய கிருபைகளைப் பெற்றுக் கொள்வதிலும் பரிபூரணமடைவதிலும் ஆயத்தமான பணிகளையெல்லாம் தீவிரமாய்ச் செய்ய வேண்டும். கல்லூரியில் தங்கியிருப்பதால் ஒருவன் கல்விமானாகிறதில்லை. ஆலயத்துக்குப் போவதினால் கிறிஸ்துவனாவதில்லை. கர்த்தரில் நாம் பலப்பட வேண்டுமேயானால் அவருடைய சத்தியத்தால் போஷிக்கப்பட வேண்டும். அவருடைய ப-யின் மேன்மைகளை உணர வேண்டும், சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். R 5279:4



## <u>*மார்ச் 3*</u>

**பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். *(லூக். 12:32)***

நம்முடைய பிரதான நோக்கமெல்லாம் ஆயிர வருட அரசாட்சியை நோக்கினதாயும், நம்முடைய அருமை மீட்பரோடு அவருக்கு மணவாட்டியாய் அவருடைய பாடுகளிலும் பங்கு கொண்டதினால் கிடைக்கப் போகும் பாக்கியமாகிய அவரோடு கூட சிங்காசனத்தில் அமர்ந்து மனுக்குலம் முழுவதையும் சீர்திருத்தி ஆசீர்வதிக்கச் செய்யும் மகிமையை அடைவதே ஆகும். நம்முடய போதகர் கூறுவது என்னவென்றால், யார் ஞானமாய்த் தம்முடைய வழிகளைப் பின்பற்றி வருகிறார்களோ, யார் பூமிக்குரிய காரியங்களை விட தேவகாரியத்தில் அதிக சிரத்தையும் அக்கரையும் காட்டுகிறார்களோ அவர்களுடைய வாழ்க்கையைத் தேவன் ஆசீர்வதித்து அவர்களை சமாதான சந்தோஷத்தில் நடத்துவார். யார் அவரில் விசுவாசமாயிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுதலையும் வெற்றியின் கிரீடத்தையும் சூட்டுவார். R 4567:5

## <u>*மார்ச் 4*</u>

**இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். *(மத். 28:20)***

இந்தப் பாடத்தில் ஒரு அருமையான சிந்தனை உண்டு. தன்னைத்தான் வெறுத்து தேவ திட்டத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்த ஒவ்வொருவரிடத்திலும் அவர்களுடைய முயற்சிகளிலும் அவர்களுடைய எல்லாப் பணிகளிலும் கர்த்தர் அவர்களுடனே கூட இருந்து அவர்கள் செய்கிற ஒவ்வொரு காரியங்களிலும் அவர்களுடன் துணையிருந்து அவர்கள் ஊழியத்தைத் தம்முடைய விசேஷக் கண்ணோக்கத்தோடு பேணிப்பாதுகாக்கின்றார். கிருபையோடு தம்முடைய போதனையை, யோசனையை அவர்களோடு பகிர்ந்துக் கொள்கிறார். கடந்த காலங்களில் தேவன் தம்முடையவர்களுக்கு

எவ்வளவு ஆதரவாய் இருந்தாரோ அதைக் காட்டிலும் விசேஷமாக இந்தக் கடைசி காலத்தில், அதாவது அறுவடை காலத்தில் இருக்கிறவர்களுக்கு அவருடைய இரண்டாம் பிரசன்னத்தில் இருக்கிறவர்களுக்கு அது எவ்வளவாய் ஆசீர்வாதமாயிருக்கும்! நாம் செய்கிற ஒவ்வொரு காரியங்களிலும் அவர் நம்மோடிருக்கிறார். நம்முடைய அனுபவங்களிலும் ஒவ்வொரு செயல்களிலும் அனுகூலமான அவருடைய கிருபையை நாம் ருசித்துப் பார்க்கும்படியாக செய்கிறார். அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை நாம் பார்க்கும்படி செய்கிறார். R 3166:6

## மார்ச் 5

**நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. *(யோவா. 15:5)***

ராஜ்யத்தின் செய்தியை நாம் கேட்பது மட்டும் போதாது. ராஜ்யத்தைக் குறித்த நல்ல மனதும், கருத்தும் இருப்பது மட்டும் போதாது. அதற்கு மேலாக நம்முடைய போதகர் சொல்வது போல **ராஜ்யத்தின் செய்தியைச் சரிவர அறிந்து தெரிந்து புரிந்துக் கொண்டவர்களாகச் செயல்பட வேதாகம ஆராய்ச்சி அவசியம்.** இந்த பூமிக்குரிய வாழ்க்கையாகிய சில வருஷங்களுக்கே பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்வது அவசியமானால், நித்திய ஜீவனையும் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள எவ்வளவு காலம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்? ஆகையால் ராஜ்யத்துக்குரிய குணலட்சணங்களைப் பெற்றுக் கொள்ள எவ்வளவு காலம், எவ்வளவு முயற்சி, எவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டாலும் அவையெல்லாம் ஞானமாகக் காலத்தை ஆதாயப்படுத்துவதாகும். இதன் மூலமாக அறுப்பின் போது முப்பதாகவோ, அறுபதாகவோ, நூறாகவோ பலன் தரலாம். இந்த காரியத்தில் நாம் எவ்வளவாய்த் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாய் சாட்சி பகர்கின்றோமோ அவ்வளவாய் நாம் அடையும் மகிமையும் இருக்கும். "மகிமையிலே நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்." ராஜ்யத்தின் மகிமையை சுதந்தரித்துக் கொள்ள



நாம் கொடுக்கும் கனியே நம்மை நிதானிக்கும். மிகுந்த கனிகளைக் கொடுக்கின்றவர்களாய் இருப்பவர்களை மாத்திரமே பாராட்டி என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள், உங்கள் பாக்கியத்திற்குள் பிரவேசியுங்கள் என்ற ஆசீரை பெறுவார்கள். R 4635:5

## மார்ச் 6

**நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். *(1 யோவா. 2:1)***

நமக்கு ஏன் ஒரு மத்தியஸ்தர் தேவை? புதிய சிருஷ்டியாக இருக்கின்ற போது நாம் சாபத்தை விட்டு நீங்கினவர்கள். பிதாவிடம் நெருங்கினவர்கள் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் கிருபாசனத்தண்டைக்கு நாம் செல்ல முடியும். விலையின்றி மீட்கப்பட்டவர்கள். இப்படியெல்லாம் இருந்தாலும் நமக்குப் புதிய சிருஷ்டியின் மேனி இன்னும் கொடுக்கப்படவில்லை. முதலாம் உயிர்த்தெழுத-ல் தான் அதைப் பெற்றுக் கொள்வோம். எனவே நாம் அதுவரை தேவ திட்டத்தின்படி இந்த அபூரண சரீரத்தைப் பயன்படுத்த வேண்டும். தேவனும் இதை அறிவார். நம்முடைய மாமிசம் பூரணமாயில்லாததினாலே, நாம் விரும்பினதை செய்ய முடியவில்லை. மாமிச பலவீனத்திலே நாம் இடறும்பொழுது தெய்வ ஏற்பாட்டின்படியான மத்தியஸ்தருடைய ஈடுப- நாம் தற்செயலாகச் செய்கின்ற தவறுகளையெல்லாம் மன்னிக்கச் செய்து பிதாவின் முன்னிலையில் நம்மை குற்றமற்றவர்களாக நிற்கச் செய்யும். R 4516:6

## மார்ச் 7

**விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள்... விழுந்தது. *(எபி. 11:30)***

"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு." *(பி-. 4:13)* விசுவாசமே பிரதானமானது. நாம் யோர்தானைக் கடந்திருக்கலாம். நாம் நீதிமானாக்கப்பட்டிருக்கலாம். மெய்யான பஸ்காவாகிய இராப்போஜனங்களிலும் பங்கு பெற்றிருக்கலாம். நாம் கர்த்தரிடத்தி-ருந்து எரிகோவின் மீது அடையப்போகும்

வெற்றியைக் குறித்து வாக்குத்தத்தங்கள் பெற்றிருக்கலாம். ஆனாலும், அப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் பயிற்சி செய்யாமல் எரிகோவை விழச்செய்ய முடியாது. நிழ-ல் விசுவாசம் அந்தப் பட்டணத்தின் பலமான சுவர்களை வீழ்த்தக் கூடுமானால், நிஜத்தில் நம்முடைய விசுவாசம் எவ்வளவு உயர்ந்ததாயிருக்க வேண்டும்! "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." எவ்வளவாய் நாம் கர்த்தரில் நம்பிக்கையும் விசுவாசமுமாயிருந்து அவருக்குப் பிரியமானதைச் செய்கிறோமோ அவ்வளவாய் நாம் ஜெயிக்கிற வெற்றி வீரர்களாய் உலகை மட்டுமல்ல எல்லாவற்றையும் வெற்றி கொள்ள முடியும். R 3088:4

## *மார்ச் 8*

***பலங்கொண்டு திடமனதாயிரு. (யோசு. 1:6)***

தைரியம் எப்பொழுதும் பாராட்டத்தகுந்தது. அதிலும் உடல் தைரியத்தைக் காட்டிலும் மன தைரியம் மிக மிக உயர்வானது. கர்த்தருடைய மக்களிடையே இந்த மன தைரியம் மிகுதியாய் இருக்க வேண்டியது அவசியம். இது இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. கிறிஸ்துவின் ஜீவியத்தில் இந்த மன தைரியத்தை உணர்ந்து உபயோகித்துவிட்டால் ஆவியில் பலப்படாவிட்டால் பலவகையான துன்பங்கள் நேரிடும். கர்த்தருடைய சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் மிக உயர்ந்த மன தைரியம் அவசியம். அபிப்ராய பேதங்கள், எதிர்ப்புகள் ஆகியவற்றைச் சந்திக்க இந்த உயர்ந்த மன தைரியம் அவசியம். ஒளிக்காக நிற்கின்ற பொழுது, இந்த ஒளியையே இருளென்று உலகமுழுதும் உள்ள தன் பலத்தோடு எதிராளியான சாத்தான் சாதிக்கும் பொழுது, மெய்யாகவே இந்த தைரியம் நமக்கு அவசியம். அவர்களுக்கு பக்கபலமாய் இருக்கின்ற சொத்து, நாகரீகம், ஆலயம், உயர்ந்த ஸ்தானங்கள் ஆகிய இவற்றை எதிர்க்கும் மெய்யான மன தைரியம் அடக்கமாக இருளை எதிர்க்கும். மெய்யான மன தைரியம் அடக்கமாகவும், மாறாத தைரியத்துடனும் போராடத்தக்கது. R 4062:1

## *மார்ச் 9*

***மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோம.5:5)***



நாம் மாபெரும் அற்புதமான காரியங்களைச் செய்கிறோம் என்பதால் தேவன் நம்மை நேசிக்கிறதில்லை. நாம் ப-யினாலே அவரோடு கூட உடன்படிக்கை செய்ததின் நிமித்தமாக அவர் நம்மை ஜெனிப்பித்தபடியால் நம்மீது அவர் வைத்த விசேஷ அன்பு விளங்குகிறது. யார் யார் ஆவியினால் முத்திரையிடப்படுகிறார்களோ அவர்களில் பிதா பிரியமாயிருக்கிறார். அப்படி விரும்புகிறவர்களே அவருடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவில் குழந்தைகளாயிருக்கிறோம். தேவன் நம்மை நேசிக்க ஆரம்பித்தார். நாம் கிறிஸ்துவில் பலப்படும் போது அவர் இன்னும் நம்மை நேசிப்பார். நம் வாழ்க்கை பயணத்தில் செல்லச் செல்ல நாம் தேவ அன்பில் வளர்வதும், அன்பில் நிலைநிற்பதும் அவசியம். நாம் குழந்தைகளாக இருப்பதால் பலப்பட வேண்டும். குழந்தைகளாயிருந்தும் பெரியவர்களாக வளர்ந்தாலும் நாம் அந்த அன்பிலும் அபிவிருத்தி அடையவேண்டும். இதை நாம் எப்படிச் செய்யமுடியும்? அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதினால், கிறிஸ்துவிலுள்ள தேவசித்தத்தின் பூரணத்திற்கு நம்முடைய சரீரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இப்படிச் செய்கிற ஒவ்வொருவரும் அவருக்குள் ஆவியில் வளர்கிறார்கள். இப்படிப்பட்ட வளர்ச்சி நாள்தோறும் நடக்க வேண்டும். படிப்படியாகத் தேவனுடைய குணங்களைப் பெற வேண்டும். இப்படியாக நாளுக்கு நாள் அவருடைய அன்பில் அவருடைய சித்தத்தில் நம்மை நடத்தும் பொழுது நாளுக்கு நாள் நாம் மறுரூபமாகுவோம். R 5276:2

## *மார்ச் 10*

***இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும், நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று..... பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். (யாக். 5:7,8)***

நம்முடைய பரலோகத் தந்தை நம்மிடத்திலே நீடிய பொறுமையென்னும் நற்குணத்தை வளரச் செய்ய விரும்பி அதற்கு மாபெரும் உதாரணமாகத் தம்மைத் தாமே காண்பிக்கிறார். பல நூற்றாண்டுகளாக அவருக்கு எதிராக அவருடைய அனந்த ஞானத்திற்கு எதிராக, அவருடைய நீதிக்கு எதிராக, அவருடைய ஆழமான

கிருபைக்கு எதிராகத் தீமையின் மேல் தீமையைத் தொடர்ந்து செய்து வந்த போதெல்லாம் நீடிய பொறுமையைக் காண்பித்ததால், அவருடைய சத்தியமான, மகிமையான, பரிசுத்தமான குணத்திற்கு எதிராகத் தீமையை மட்டுமே பொல்லாங்கர்கள் செய்த பொல்லாங்கைச் சகித்தார். ஏற்ற காலத்தில் தம்முடைய சாந்த குணம் போற்றப்படும், பின்பற்றப்படும் என்பதை அறிந்து பொறுமையோடே காத்திருந்தார். அதுபோலவே நமது கர்த்தராகிய இயேசுவும் தீமையை சகித்து ஏற்ற வேளைக்காகக் காத்திருந்தார். நம்மைப் போலத் தாழ்மையான மனிதனாக வந்ததிலேயே மாபெரும் தாழ்மையைச் சகித்தார். பிறகு குற்றமில்லாத அவரை அநேகர் குற்றப்படுத்தும் போது அதையும் பொறுத்துக் கொண்டு தாம் வந்த காரணமாகிய மீட்பு வேலை பூரணப்படும் வரையில் மரணமட்டும் நீடிய பொறுமையுடையவராயிருந்தார். தம்முடைய பரலோக பிதாவைப் போலவே அந்த “ஏற்ற வேளைக்காக” காத்திருந்தார். பிதாவிலும் குமாரனிலும் இருந்த இதே சிந்தை, பொறுமை பரலோகத்திலும் பூலோகத்திலும் வாழப்போகிறவர்களிடத்திலே நிச்சயமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நாளும் வரும், நிச்சயமாக நிறைவேறுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் ஆராதிக்கத்தக்க பரலோகத்தின் பிதாவும் பொறுமையுடன் காத்திருக்கிறார்கள். எனவே, இதே சிந்தையில் பொறுமையில் நாம் காத்திருக்க வேண்டும். தன் எஜமானைக் காட்டிலும் ஊழியக்காரன் பெரியவனல்ல. எதிர்காலத்தில் நாம் பெறப்போகின்ற சந்தோஷத்தை எதிர்பார்த்து விசுவாசத்தோடே கிறிஸ்து இயேசுவி-ருந்த சிந்தையிலே தேவனை நாம் மகிமைப்படுத்தினோமானால் நாமும் மகிமைப் படுத்தப்படுவோம். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் பிதாவாகிய தேவனாலும் சத்தியம் நீதி ஆகியவற்றின் வெற்றியால் களிகூறுவோம். R 3784:1

## ***மார்ச் 11***

***சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம். (கலா. 4:28)***

நமது தலையாகிய கிறிஸ்துவும் அவருடைய அங்கமாகிய நாமும் நிழலான ஈசாக்குக்கு ஒத்திருக்கிறோம். ஈசாக்கு என்றால்



சிரிப்பு அல்லது சந்தோஷம் என்று பொருள். அதுபோலவே நாமும் தற்காலத்தில் மற்றவர்களைக் காட்டிலும் சத்தியத்தினிமித்தமாகச் சந்தோஷமாயிருக்கிறோமல்லவா? சோதனையில், உபத்திரவங்களில், துன்பங்களில், ஏமாற்றங்களில், சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகின்ற காலத்தில் நமக்குரிய முழுப்பங்கையும் நாம் அனுபவிப்பது மெய் தான். ஆனால், அதே நேரத்தில் நாம் அடையப்போகின்ற சந்தோஷம், சமாதானம் மற்றவர்களுக்கு இல்லை. எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயங்களை ஆள்வதால் மிகுந்த சோதனையிலும் மிகுந்த சந்தோஷமாயிருக்க முடிகிறது. மேலும், உபத்திரவத்தினாலே நாம் அடைகிற பொறுமையினாலும் ஆவியின் கனிகளாலும் நாம் பூரணப்பட்டுப் பரலோக ராஜ்யத்திற்குரிய முழுசமாதானம் சந்தோஷம் நமக்கு உரியதானால், இக்காலத்தை விட மகிமை நிறைந்த எதிர்காலத்தில் மகிமையுள்ள ராஜ்யத்தில் நமது போதகரோடு இணைந்து தெய்வ ஞானத்திலே தேவ ஆசீர்வாதத்தைப் பூமிக்கெல்லாம் அளித்திடும் மகிமையைக் குறித்து என்ன சொல்லுவோம்? அப்பொழுது உலக முழுவதிலுமுள்ள மனுக்குலம் மகிழ்ச்சியாயிருக்கும். தற்போது, பாவம், சாபம், மரணம் ஆகிய இவைகளால் பாரஞ்சுமந்து தவிக்கிற சந்ததி எல்லாஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாயிருக்கிற தேவனைப் போற்றித் துதிக்கும். R 2861:5

## ***மார்ச் 12***

***உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும் தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ, கைக் கொள்ள மாட்டாயோ என்று அவர் உன்னை சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கு..... நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. (உபா. 8:2)***

தம்மிடத்தில் பிரதிஷ்டை செய்து கொண்ட தமது பிள்ளைகளுக்கு துன்பத்தை தேவன் அனுமதிக்கிறார். இப்படி அனுமதி அளிக்கிறதுக்கும் ஒரு பிரதான நோக்கமுண்டு. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சோதிக்க வேண்டுமா? ஏன் சோதிக்க வேண்டும்? எதை ரூபகாரப் படுத்த வேண்டும்? நாம் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகக் கூறிக்கொள்கிறோம். நம்முடைய எல்லாவற்றையும் அவருக்கென்று அர்ப்பணம் பண்ணுவதாகக்

கூறுகிறோம். "உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அன்பு கூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்." *(உபா. 13:3)* எவ்வளவாய் நீங்கள் சகிப்பீர்கள்? எந்த அளவுக்கு மிகவும் பொறுமையாய் சகிப்பீர்கள்? யார் மிக அதிகமாகச் சகிப்புத் தன்மையையும், பொறுமையையும் காண்பிக்கிறார்களோ, அவர்களே மிகச்சிறந்த குணமுடையவர்கள் என்று சாட்சி பெறுவார்கள். இப்படி சாட்சியைப் பெற்றவர்கள் ராஜ்யத்தில் மிக உன்னதமான நிலைமையடைவார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் காண்பிக்கின்ற இந்த விசுவாசத்தின் அடிப்படையில் பரலோக ராஜ்யத்தில் தங்களுக்குரிய ஸ்தானத்தைப் பெற்றுக் கொள்வார்கள். மகிமையில் நட்சத்திரத்திற்கு, நட்சத்திரம் எப்படி வேறுபடுகிறதோ அதுபோலவே ராஜ்யத்திலும் இருக்கும். யார் தன் சுபாவத்தை அடக்கி நல்ல போராட்டத்தைப் போராடி இருதயத்தின் வைராக்கியத்தையும் அன்பையும் காண்பிக்கிறார்களோ அவர்கள் வெகு உன்னத நிலைமையை அடைவார்கள். R 5395:6

## *மார்ச் 13*

**சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.** *(2கொரி. 2:11)*

திருச்சபைக்கு விரோதியான சாத்தான் பலமுள்ளவனாகவும், சிங்கம் போலவும் ஜாக்கிரதையுள்ளவனாகவும் இருக்கிறான். அவன் தந்திரக்காரனாயிருப்பதால் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறதைப் போல தனக்கு கிடைத்த எந்த சந்தர்ப்பத்தையும் நமக்கு எதிராகப் பயன்படுத்த தவறுவதில்லை. நம்மை முழுமையாக விழுங்குவதற்கென்றே தேடி காத்து பதிவிருக்கிறான். அவன் விழிப்புள்ளவனாயிருந்தாலும் **நம்மை நெருங்கும் போது கர்ஜனையோடு வருவதில்லை. மாறாகத் திருட்டுத்தனமாக ஊர்ந்து வருகிறான்.** நாம் நினையாத வேளையில் நாம் எதிர்பாராத இடத்தில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை எப்படியாகிலும் நசுக்கி நம்மை மேற்கொள்ள முனைகிறான். விசேஷமாக தேவனிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தைச் சிதைக்கப் பார்க்கிறான். இந்தச் சிங்கம் எப்படியெல்லாம் செய்யும், எப்படியெல்லாம் நடக்கும் என்பதில் கூர்மையான செவிகளையுடையவர்கள் சிறிய மாறுதல் சலனம் ஏற்பட்டாலும் விழிப்படைந்து விடுகிறார்கள். ஏனெனில் இவர்கள் காதுகளையும், கண்களையும் கர்த்தரே திறந்தருளியிருக்கிறார். இவர்களுடைய கண்களுக்கு க-க்கமிட்டு அபிஷேகம் பண்ணியிருக்கிறார். ஆகவே, அவர்கள் எளிதில் எதிராளியை அடையாளங்கண்டு அவனை எதிர்த்துவிடுவார்கள். எனவே, நாமும் தேவ வார்த்தையின்படி ஆவியின் பட்டயத்தையும், சர்வாயுத வர்க்கத்தையும் தரித்தவர்களாய்த் தேவனுடைய பலத்தில் நிற்போமாக. R 5183:6



## *மார்ச் 14*

**உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்.** *(1 சாமு. 7:3)*

யோவான் ஸ்நானகனைப் போல வர இருக்கின்ற இராஜ்யத்தின் செய்தியைக் கூறப்போகின்ற சகோதர சகோதரிகளாகிய நாம் வைராக்கியமுள்ளவர்களாகவும், முழு மனதோடும் நற்செய்தியைக் கூற வேண்டும். உலக வழக்கம், ஆச்சாரம் ஆகிய இவைகளுக்கு உட்படக்கூடாது. நமக்குக் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் நம்முடைய பரலோக மணவாளனாகிய கிறிஸ்துவின் ஸ்துதியைச் சொல்- அவரை அனைவருக்கும் அறிவித்து இந்த சுவிசேஷ யுகத்தின் அறுவடை காலத்தில் இருக்கின்ற நாம் அவருக்கு சாட்சி சொல்ல வேண்டும். தூற்றுக் கூடை அவர் கையி-ருக்கிறது. பதரைப் பறக்கடிப்பார். தானியத்தையோ தன் இராஜ்யத்தின் களஞ்சியத்தில் சேர்ப்பார். பெரும்பான்மையான கிறிஸ்தவ மண்டலங்களில் உள்ளவர்கள் சீக்கிரமே மாபெரும் உபத்திரவங்களுக்கு ஆளாகப் போகிறார்கள். உண்மையுள்ள ஊழியக்காரர்கள் எ-யாவைப் போல எடுத்துக் கொள்ளப்படுவார்கள். திரைக்கு இப்பக்கம் இருக்கின்ற நாம் அபிஷேகம் பண்ணப்பட்டவருடைய சரீர அங்கமாக ஏற்றுக் கொள்ளப்படும் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறோம். தற்கால உபத்திரவங்களில் பங்குபெற்று வருங்கால மகிமையையும் கனத்தையும் சுதந்தரித்துக் கொள்வோம். R 3713:4

**மார்ச் 15**

***ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். (மத். 7:14)***

இது மிகக் குறுகலான வழியல்லவா? ஆம், இது குறுகலான பாதைதான். ஆனாலும் கர்த்தருடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டு, உலக திட்டங்களையும் பிரச்சனைகளையும் புறக்கணித்து ஊழியம் செய்யத் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கிறவர்களுக்கு இந்த பாதை போதுமானதாய் இருக்கும். இந்த வழியில் செல்லும் போது அத்தனை ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் சகிப்பார்கள். இப்படிப்பட்ட தெய்வீக குணத்தைப் பெற தேவனுடைய நீதியின் பாதையில் நடந்துவர முயற்சிக்கிறாயா? சத்தியத்தை மெய்யாகவே கவனமாகப் படித்தறிந்து ஆராய்கிறாயா? உயிருள்ள ஒரு நிரூபமாக எல்லோராலும் வாசிக்கப்பட்டு, அறியப்படுகின்ற ஜீவனுள்ள நிரூபமாக இருக்கிறாயா? நீ வெட்கப்படாத ஊழியக்காரனாய் இருக்கிறாயா? கர்த்தருக்கு உன்னை முழுமையாக அர்ப்பணித்திருக்கிறாயா? அப்படியானால் தேவனே என்னையும் எனக்குரிய எல்லாவற்றையும் முழுமையாக உமக்கே, உமது சித்தத்துக்கே காணிக்கையாக்குகிறேன் என்று சொல்லக்கூடுமோ? இது ஒன்றை மட்டும் செய்வேன், மற்றவற்றைச் செய்யமாட்டேன் என்ற குறுகலான நோக்கத்தை விட்டுவிட்டு பரந்த நோக்கமுள்ளவர்களாகி என்னிடம் உள்ள தாலந்தை ஞானமாகப் பயன்படுத்தி நான் பெற்ற ஆச்சரியமான வெளிச்சத்தை மற்றவர்களும் பெற என் பரலோகப் பிதாவின் உண்மையுள்ள ஊழியக்காரனாய் மெய் சாட்சி சொல்லுவேன் என்று கூறுவாயா? R 5045:3

**மார்ச் 16**

***ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள்; உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. (கொலோ. 3:3)***

பிரதிஷ்டைக்குட்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முழு மனதோடு பின்பற்றுகிறவர்கள் தாழ்மையும், அடக்கமும் எளிமையுமுடையவர்களாய் அன்றாட வாழ்விலே ஆவிக்குரிய குணமுள்ளவர்களாய் மிகுந்த கனிவான தெய்வீக குணநலனைப் பெறுவார்கள். நாள்தோறும் தேவசித்தத்தை ஏற்றுக் கொள்ளுதல், அவருக்கு அடங்கி கீழ்ப்படிதல் ஆகியவைகளை தங்கள் ஒவ்வொரு செய்கைகளாலும் ரூபகாரப்படுத்துகிறார்கள். தேவனுடைய கரத்திலே நன்மையானாலும், தீமையானாலும் ஏற்றுக் கொள்ள மனதாயிருப்பார்கள். கோபமூட்டப்படும் போது இனிமையையும் குழப்பம், கலகத்தின் மத்தியில் அமைதியையும் வெளிப்படுத்துவார்கள். அசட்டை அவமானங்கள் நேரும் பொழுது பொறுமையோடு அமைதியாயிருப்பார்கள். எந்தப் பயமும், கவலையும் அவர்களுக்கு இராது. "கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிற" உள்ளான ஜீவனின் வெளியரங்கமான அபிவிருத்தியில் இதே போல் அநேக கிருபைகள் காணப்படும். R 5913:1

**மார்ச் 17**

***தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள். (ரோம. 12:9)***

பரிசுத்தமும் பாவமும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக இருப்பதால் இவைகளைக் குறித்து நம்முடைய சிந்தைனையும் நேசம் அல்லது வெறுப்பாகத்தான் இருக்க முடியும். நீதியின் பேரில் அன்பை வளர்க்க, பாவத்தை வெறுப்பதில் முன்னேற வேண்டும். எனவே நாம் பாவம், சுயநலம், அசுத்தம், மற்றும் ஒவ்வொரு தீயவழியையும் வெறுப்பதை அபிவிருத்தி செய்தால் நாம் ஆவியின் கனிகளாகிய நற்குணங்களை நம்முடைய இருதயத்தில் அபிவிருத்தி செய்வது சுலபமாகும். நம்முடைய மனதில் இருந்த பழையன எல்லாம் கடந்து போயின. எல்லாம் புதிதாயின. நாம் எப்பொழுது ஆவியின் ஜீவிகளாக மாறுகிறோமோ அப்பொழுது தான் இந்த மாற்றம் நிறைவேறும். நாம் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாயிருக்க வேண்டுமானால் நம்முடைய மனம் அதற்குரிய நிலையில் புதிதாக்கப் படவேண்டும். கர்த்தர் எதை விரும்புகிறாரோ அதையே செய்ய வேண்டும். நம்முடைய இருதயமும், சிந்தனையும், மனமும் ஒன்றுபட்டுக் கட்டுப்பாட்டுடன் தேவனுக்குப் பிரியமானவைகளையே செய்து விசுவாசப் பரீட்சையில் தேறினவர்களாகி தேவனுக்குப் பிரியமானவர்கள் என்று நம் ஒவ்வொரு செய்கைகளாலும் ரூபகாரப்படுத்த வேண்டும். R 4895:4

## மார்ச் 18

**நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன். நான் விழிக்கும் போது உமது சாயலால் திருப்தியாவேன். *(சங்.17:15)***

தேவசாயலை அடைவது எப்படி? நமது பரிசுத்த கர்த்தரின் சாயலை பெற நமது வாழ்நாள் முழுவதும் முயன்று அவரது குணலட்சணத்தை அடைய வேண்டும். இது ஒரே நாளில் ஒரே வருடத்தில் நிறைவேறக்கூடியதல்ல. படிப்படியாக நாம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால் கிறிஸ்தவ குணலட்சணங்களிலும் கிருபையிலும் வளர்வதை நாம் உணர வேண்டும். நமக்கு சத்தியம் தெரியும் என்பது மட்டும் போதாது. சத்தியத்தை பிடித்துவிட்டோம் என்று திருப்தியடைந்துவிடக் கூடாது. சத்தியம் முறையான பயனை குணலட்சணங்களில் பெற்றிருப்பதை நாம் காண வேண்டும். சத்தியமானது கலங்கமற்ற நல்ல இருதயங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்வது போல, "நாம் ஒருக்காலும் இடறி விழுவதில்லை." ஏற்ற வேளையில் தேவராஜ்யத்தில் தேவனோடும், தேவகுமாரனோடும் ஏற்றுக் கொள்ளப்படுவோம். R 4911:4

## மார்ச் 19

**இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்-க் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள். *(அப். 20:31)***

எபேசு சபையின் மூப்பர்களை விட்டுப் பிரியும் போது அவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலை வழியனுப்பினார்கள். அவர் எருசலேமை நோக்கிக் கப்ப-ல் பயணமாகும் பொழுது இவ்விதமாய் அவர்களுக்குப் புத்தி சொன்னார். இக்காலத்தி-ருக்கிற நமக்குப் பின்பற்ற வேண்டிய ஒரு நல்ல விசுவாசத்தையும் நல்ல முன்மாதிரியையும் வைத்துப் போனார். அவர்களை நோக்கி அவர் சொல்லும் பொழுது, "நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லோரும் இனி என் முகத்தைப் பார்க்க



மாட்டீர்கள் என்று அறிந்திருக்கிறேன். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்ததினால் எல்லாருடைய ரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறேன்." இதே காரியத்தைக் குறித்து தீர்க்கதரிசி எசேக்கியேல் *(33:7,8,9)* ஏற்கனவே உரைத்திருக்கிறார். அப்போஸ்தலர் தேவனுடைய எந்த ரகசியத்தையும் அவர்களுக்கு மறைத்து வைக்கவில்லை. பவுலைப் பொறுத்தவரையில் சத்தியத்திற்கு மாற்றே கிடையாது. மனித தத்துவத்துடன் கலப்படம் பண்ணாமல், யூதனென்றும், புறஜாதியாரென்றும் பாராமல், யார் என்ன நினைத்தாலும் கவலையின்றி உள்ளபடியே சத்தியத்தைப் பேசினார். மெய்யாகவே கிறிஸ்துவின் போதகர்கள் இப்படி நடப்பார்களேயானால் அவர்களே சிலுவையின் வீரர்களாகக் கருதப்படுவார்கள். R 1558:6

## மார்ச் 20

**ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவி-ருந்து புறப்பட்டுப் பிரிந்து போய்...... என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். *(2 கொரி. 6:17,18)***

ஆ! இது என்ன அருமையான யோசனை! எவ்வளவு நேர்த்தியான வாக்குத்தத்தம்! சுபாவத்தின்படி அபூரணரும் கெட்டுப் போனவர்களுமாயிருந்த நம்மை ராஜரீக சிருஷ்டிகரான தேவன் நம்மை அழைத்துத் தந்தைக்குரிய பாசத்தோடு "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." இது எவ்வளவு ஆச்சரியமானதாகத் தோன்றுகிறது! அப்போஸ்தலர் வேறொரு இடத்தில் சொல்லுகிறது போல இது காரியத்தின் முடிவல்ல, ஒரு துவக்கமே. "நாம் பிள்ளைகளானால் நாம் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்." R 5739:5

***மார்ச் 21***

***இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து இந்த யோர்தானைக் கடந்து போங்கள். (யோசு. 1:2)***

மோசேயைப் போல, யோசுவாவும் மிக எளிமையும் அடக்கமுமானவர். வாய்ப்பு எப்போது கிடைக்கிறதோ அப்பொழுது பதவியைப் பற்றிக் கொள்ள ஆசையில்லாதவனுமாயிருந்தான். தேவன் தாமே தன்னைப் பலப்படுத்தி ஊக்குவித்து ஒரு தலைவன் ஸ்தானத்திற்குக் கொண்டு வர வேண்டுமென எண்ணினான். கர்த்தருடைய பிள்ளைகள் யாவரும் இப்படிப்பட்ட தாழ்மையும் அடக்கமும் உடையவர்களாயிருந்தால் தேவ பார்வையில் அது எவ்வளவு சந்தோஷமானதாயிருக்கும். ஒவ்வொருவரும் தங்களுடைய எண்ணங்களை, கருத்துக்களை இவ்விதமான நெறிமுறையில் பரிசீ-த்து சீர்தூக்கி, இவ்விதமாய்த் தங்களை ஆன்ம பரிசோதனை செய்து, பேராசை, பொறாமை ஆகிய தீய ஆவியின் குணங்களாகிய தீமைகள் தங்களுக்குள் புகாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். பேராசையும், அகம்பாவமும், தன்னலமும் தேவனுக்கு விரோதமானது. தாழ்மை, அடக்கம், பணிவு ஆகிய குணங்களையுடையவர்களுக்குத் தேவன் கிருபையளிக்கிறார். R 4061:1

***மார்ச் 22***

***அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. (யோவா. 1:5)***

சத்தியத்தின் வெளிச்சத்தை பெற்றுக் கொள்கிற யாவரும் அதின் ஞானத்தால் சந்தோஷமடைகின்றனர். அந்த சந்தோஷத்தில் நிலைத்திருக்கவும் செய்கிறார்கள். அந்த சந்தோஷமான வெளிச்சத்தை மற்றவர்களும் கண்டு சந்தோஷப்படும்படி வெளிச்சம் வீசும் விளக்குகளாக இருக்க வேண்டும். சிலர் விளக்கைக் கொளுத்தி மரக்கா-ல் மூடிவிடுகிறது போல, இப்படிப்பட்ட பிரகாசம் அடைந்திருந்தும் அது மற்றவர்களைப் பிரகாசிக்க பண்ணுவதில்லை. இப்படிப்பட்டவர்கள் உண்மையற்றவர்கள், உற்சாகமற்றவர்கள், ஒரு வகையில் கோழைகள். மனுஷர் மத்தியில் தேவன் ஸ்தாபிக்கப் போகின்ற மகிமையின் ராஜ்யத்தில் கிறிஸ்து இயேசுவோடு கூட



மகிமையடையப் போகிற மணவாட்டி ஒளி வீசி யாவரையும் பிரகாசிப்பிக்கச் செய்ய வேண்டுமென்பதே தேவவிருப்பம். எனவே மனிதர் முன்பாக நமது வெளிச்சம் பிரகாசமாயிருப்பது அவசியம். நாம் கர்த்தரிடத்திலும் அவரது சத்தியத்திலும் உண்மையுள்ளவர்களாயிருந்தால், அதினிமித்தம் பாடுபடுவதில் மகிழ்ச்சியடைவோம்; நாம் மெய்யாகவே பிரகாசிக்கின்ற தீபங்களாக இருப்போம். யார் அவரைக் குறித்தாவது அவருடைய வார்த்தையைக் குறித்தாவது வெட்கப்படுகிறார்களோ அவர்களைக் குறித்து அவரும் வெட்கப்படுவார். அவர்களைத் தன் மணவாட்டியாகவும் அங்கீகரிக்கவும் மாட்டார். தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் அவர்களை உதவியாளர்களாகக் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார். R 4967:5

***மார்ச் 23***

***இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். (2 பேது. 1:12)***

இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருப்பது என்பது, "வேதத்தையும், சாட்சியாகமத்தையும்," *(ஏசா. 8:20)* கவனித்து ஜாக்கிரதையாகப் படித்து சரியாக சோதித்து அறிந்திருக்கிறோம் என்பதை குறிப்பிடுகிறது. அதன் பலனாக நாம் அதில் திருப்தியடைந்திருப்போமானால், நாம் விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருந்து அதி-ருந்து அசையாதிருப்போம். நாம் யாரில் விசுவாசம் வைத்திருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்திருக்கிறோம். அவரது ஐக்கியத்தின் சுகந்தத்தில் பங்கு பெற்றிருக்கிறோம். அவருடைய தெய்வீக திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அவருடைய கிருபையின் நிறைவை உணர்ந்து சந்தோஷத்தில் வழிநடத்தப்பட்டு, தெய்வ பக்தி, விசுவாசம் மற்றும் சாந்தகுணத்தின் ஆவியில் நாம் பங்கு பெற்றிருக்கிறோம். நாம் அவரது திட்டத்தின் பல்வேறு அம்சங்களை பார்ப்பதோடு மட்டுமல்ல, அதனுடைய அவசியத்தையும், அதன் காரணகாரியத்தையும் குறித்த காலத்தில் நிறைவேறுகிற தெய்வீக ஆசீர்வாதங்களையும் நாம் காணும்படி

அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். இதுதான்“இப்போது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருப்பது” ஆகும். உண்மையிலேயே இது மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமை. இதனால் வருகிற சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உலகத்தால் கொடுக்கவோ, எடுத்துப்போடவோ முடியாது. R 3089:3

## *மார்ச் 24*

**உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்; அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சைச் செடிகளும், அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது ஒ-வ மரங்களும் எண்ணெயும் தேனுமுள்ள தேசம்; அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவுபடாததுமான தேசம்.... உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும், நியாயங்களையும், கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. *(உபா. 8:7-11)***

இது எவ்வளவு நேர்த்தியான உபதேசம்! விசுவாசத்திற்கு கிடைக்கும் ஊக்கமான ஊதியம் தான் எவ்வளவு மேன்மையானது! இப்படிப்பட்ட தேவனை யார்தான் வணங்கி ஆராதித்துச் சேவிக்காமல் இருக்க முடியும்! இந்த வசனம் ஆவியின் இஸ்ரயேலருக்கு எப்படிப்பட்ட தேவவாக்காக இருக்கிறது! தமது உடன்படிக்கையின் பரிசுத்த ஜனத்தைத் தேவன் எவ்வளவு ஆச்சரியமாக வனாந்தரவழி போன்ற இவ்வுலக ஜீவியத்தில் நடத்திக் கொண்டிருக்கிறார். நமது அன்றாடத் தேவைகளை எல்லாம் அவர் திவ்வியமாகவே நடத்தி வருகிறார்! வீணான அலைச்சல்களி-ருந்தெல்லாம் அவருடைய அன்பின் கரம் நம்மை அனுசரணையாய் நடத்துகின்றது. நாம் இடது வலதுபுறம் சாய்ந்துவிடாமல் கைப்பிடித்து நடத்துகின்றார். அவர் நம்மை மலை, ஆறு, பள்ளத்தாக்கு, ஊற்று, ஏரிகளுள்ள தேசத்தில் அழைத்து வரவில்லையா? கோதுமையும், வாற்கோதுமையும், திராட்சை செடிகளும், அத்திமரங்களும், மாதுளஞ்செடிகளும், ஒ-வ மரங்களும், எண்ணையும், தேனுமுள்ள தேசமல்லவா? வானத்தின்



அப்பமாகிய மன்னா குறைவின்றி கிடைக்கின்ற தேசமல்லவா? நிச்சயமாகவே நாம் எதிலும் குறைவு பட்டிருக்கவில்லை. மாம்சீக இஸ்ரயேலர் தேவனுடைய நீதி நியாயப் பிரமாணங்களில் நடப்பது அவசியமென்றால், மெய்யான ஆவியின் இஸ்ரயேலராகிய நாம் தேவநீதி நியாயத்தில் நிலைகொண்டிருக்க வேண்டும் என்பது எவ்வளவு காரணகாரியம். நமக்கே அதிக பொறுப்பும் காரணங்களுமுண்டு. R 5527:6

## *மார்ச் 25*

**அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். *(மத். 7:17)***

தேவனுடைய மெய்யான ஜனங்கள் அவர்களோடு பழகுகின்ற எல்லோருடனும் கனிவான மிகுந்த பயன்களைத் தரக்கூடிய கிரியைகளினால் மிகுந்த கனிகளைக் கொடுக்கின்றவர்களாக இருப்பார்கள். ஒருபுறத்தில் சிதறி முட்களின் மத்தியில் விழுந்த விதையைப் போல பல தவறான போதகங்களையும் தவறுகளையும் தவறான முடிவுகளையும் பெரிதாய் எண்ணிப் பேத-த்துப் போன சிலர் முட்களைப் போலவே கனிதராமல் போவார்கள். சிலர் எட்டி பழுத்தென்ன, இலவம் காய்த்தென்ன என்ற ரீதியிலே எவருக்கும் உபயோகமில்லாமல் போய்விடுகின்றனர். கர்த்தருடைய பிள்ளைகள் மெய்யான போதகத்திற்கும், போ-யான போதகத்திற்கும் வித்தியாசம் தெரிந்து அடையாளம் கண்டு அவர்களை விட்டு விலகுவார்கள். இதில் ஒரு வகுப்பார் தீமையையும், அழிவுக்குரியதையுமே செய்வார்கள். மிகுந்த நற்பலனைக் கொடுக்கின்ற மற்றவர்களோ உதவி செய்கிறவர்களாகவும், கட்டுகின்றவர்களாகவும், சமாதானம் செய்கிறவர்களாகவும் பலப்படுத்துக்கிறவர்களாகவும் இருப்பார்கள். R 3747:2

## *மார்ச் 26*

**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். *(அப். 1:8)***

கிறிஸ்தவ மதத்தின் ஆவி எதையும் ஆக்கிரமித்துத் திரட்டக் கூடியதாக இருக்கிறது. மெய்யான விசுவாசிக்கு இந்த சுவிசேஷம் ஒரு கொள்கையை, ஒரு கட்டுப்பாட்டை வைத்து மிக உன்னதமான உணர்வடைய ஊக்குவிக்கிறது. இந்த சுவிசேஷம் அதிக உத்வேகம் தந்து ஒரு மெய்யான தீபமாகி மற்ற யாவரையும் பிரகாசிக்கச் செய்கிறது. இது அணையாத விளக்காக எரிந்துகொண்டே இருக்க வேண்டியது. அந்த உணர்வு குன்றிவிட்டால் அணைந்து ஒன்றுமில்லாமல் போய்விடும். எனவே ஊழியத்தைக் குறித்துச் சொல்லுகின்ற இடத்தில் "நீங்கள் முத்திரையாகப் பெற்ற ஆவியை அணைத்துப் போடாதிருங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேட்கக்கூடிய காதுள்ள எவனும் கேட்டுத் தன் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு மகிழக்கூடிய நற்செய்தி நமக்குக் கிருபையாக இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பணி கர்த்தருடைய "ராஜரீக ஆசாரிய கூட்டத்தை," "அவருடைய சிறுமந்தையை," அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அவருடைய ஆபரணங்களை, வேட்டைக்காரன் இறையைத் தேடுவது போல நாம் தேட வேண்டும். இவர்கள் சத்தியத்தில் பிரகாசமடைந்தவர்களாய் சத்தியத் தெளிவுள்ளவர்களாய் ராஜ்யத்தில் தங்கள் மீட்பரோடு கூட உடன் சுதந்திரராய் இருப்பதற்கு, தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வார்கள். R 4359:3

## *மார்ச் 27*

***இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. (யோசு. 1:8)***

கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் இரவும், பகலும் தியானமாயிருப்பது என்பது சொல்லர்த்தமாக எண்ணிவிடக் கூடாது. அப்படி சொல்லர்த்தமாக எடுத்துக் கொண்டோமேயானால் நாம் வேறெந்தக் காரியத்தையும் செய்யாமல் இரவும், பகலும் வேதத்தை மட்டும் வாசித்துக் கொண்டிருக்க வேண்டும். மாறாகத் தேவன் விரும்புவது என்னவென்றால், நாம் இவைகளையெல்லாம் கற்பிக்கப்பட்டபடியே செய்யக் கவனமாயிருக்கவும் புத்திமானாய் நடந்துக் கொள்ளவும் பலங்கொண்டு திடமானதாய் இருக்கவும்



வேண்டுமென்பதே நம்முடைய வாழ்வில் வரும் ஒவ்வொரு பிரச்னைகளிலும் பணிகளிலும் நாம் அவருடையவர்கள் என்பதும் நமக்கு எல்லாவற்றிலும் வழிகாட்டியும் குருவும் உறுதுணையும் அவரே என்பதால் நம்முடைய அன்றாட வாழ்வில் ஏற்படும் அற்ப காரியமாயினும், பெரிய காரியமாயினும் அதில் தேவனுடைய சித்தமென்ன என்பதை அறிந்து, தெரிந்து அதன்படியே செய்யவும் கவனமாயிருக்க வேண்டும். R 4062:4

## *மார்ச் 28*

***பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத். 16:19)***

அக்காலத்திலே அப்போஸ்தலனாகிய பேதுருவுக்குச் சொல்லப்பட்ட கட்டுவதும், கட்டவிழ்ப்பதும் ஆகியவை பொதுவாக விலக்கப்படுவதையும், அனுமதிக்கப்படுவதையும் குறிக்கும் வழக்கச் சொல். யூத ரபிமார்களிடையே இதுபோன்ற சொற்றொடர்களை அவர்களுடைய நியாயப்பிரமாணங்களில் அடிக்கடி காணலாம். யூதரபிமார்கள் (குருக்கள்) அலுவலைக் காண்பிக்கிற சட்டமன்ற நியாய ஸ்தல அதிகார வாசகங்கள் இவை. இந்த அதிகாரம் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. (மத். 18:18,19) ஒரு மனப்பட்டு செய்ய வேண்டிய பணிகளாகச் சொல்லப்பட்டன. நமது விசுவாசத்தால் இதைச் சொல்லர்த்தமாக அப்படியே எடுத்துக் கொள்கிறோம். அப்போஸ்தலர்களே தெய்வீக சித்தத்தைப் பிரதிப-ப்பவர்கள் என்றும், பின்வரும் ஊழியர்களுக்கு இத்தகைய பணி கொடுக்கப்பட்டதாக சாட்சி இல்லை எனவும் எண்ணிக் கொள்கிறோம். அப்போஸ்தலர் மட்டுமே தேவனால் நேரிடையான பார்வையில் இப்படிப்பட்ட நிச்சயத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் தேவ கண்காணிப்புப் பராமரிப்பினிலே எவற்றை ஏற்று அனுமதிக்கலாம் எவற்றை விலக்க வேண்டும் என்ற நியாயத் தீர்ப்பைக் கூறும் அதிகாரம் பெற்றிருந்ததை அறியலாம். R 3789:6

## *மார்ச் 29*

***ஒருவரையொருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்கு புசிக்கக் கொடுத்த அப்பம்..... என்றான். (யாத். 16:15)***

அக்காலத்தில் மன்னா வழங்கப்பட்டது. கிறிஸ்துவின் கிருபையை வழங்குவதற்கு ஒப்பாகச் சொல்லப்பட்ட ஒரு மிக அற்புதமான பொருள். அதை நாள்தோறும் சேகரிக்க வேண்டும். அடுத்த நாளில் அதை வைத்திருக்கக் கூடாது. இதில் பாடம் என்னவென்றால் தேவகிருபையையும் சத்தியத்தையும் பெற்றுக் கொண்டவர்கள் தாங்களே வைத்துக் கொள்ளாமல் அதை மற்றவர்களுக்கும் வழங்குகிறவர்களாய் இருக்க வேண்டும். ஆவிக்குரிய ஐசுவரியவான்கள் என்ற வகுப்பை உண்டாக்குவது இதன் நோக்கமல்ல. இதன் விளக்கத்தை அநேகந்தரம் பார்த்திருக்கிறோம். இதைப்பற்றி வேதம் என்ன சொல்கிறது என்றால், தேவவார்த்தையையும், ஆசீர்வாதத்தையும் மற்ற சகோதரர்களோடு பகிர்ந்து கொள்ளாமல் தங்களுக்குள்ளாக அடக்கி வைத்துக் கொள்பவர்கள் இறுதியில் ஒன்றுமில்லாமல் போவார்கள். நாம் இந்த மன்னாவைச் சேகரிப்பது நாள்தோறும் ஆற்றவேண்டிய பணி. நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில், பரலோக மன்னாவை அநுதினம் பெற்று போதிய பலம் பெறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். அதன் மூலமாகக் கர்த்தருக்குள் நாம் பலப்படவும், மற்றவர்களுக்கும் உதவவும் நாம் பெற்ற தேவ கிருபைகளை மற்றவர்களுக்கும் வழங்குவதால் உண்டாகும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளவும் வேண்டும். R 4012:5

## *மார்ச் 30*

***அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். (வெளி. 15:3)***

தேவ நீதியையும் மனுக்குலத்தின் பேரில் கொடுக்கப்பட்ட மரணத்தீர்ப்பின் நியாயத்தையும் எவ்வளவாய் நாம் அறிகிறோமோ அவ்வளவாய்த் தேவன் நமது பேரில் வைத்திருக்கின்ற அன்பையும் கிருபையையும் உணரலாம். ஒருவன்கூட கெட்டுப் போவது தேவனுக்குச் சித்தமல்ல என்பதை அறிந்து சந்தோஷப்படுகிறோம். எனவே எல்லோருக்கும் வாழ்வளிக்கும் வழியை நீளமும், அகலமும், ஆழமும், உயரமும் உடையதாய் தெய்வ அன்பு எல்லாரையும் அவரிடத்தில் ஈர்த்து ஜீவனை, நித்திய ஜீவனை அடைந்து



மகிழச் செய்கிறார். இப்படிப்பட்ட கிருபைகளை தேவன் கொடுத்திருப்பதால் பாவஞ்செய்யலாம் என்பது அர்த்தமல்ல அல்லது பாவி இந்தக் கிருபையை மறுத-க்கலாம் என்பது பொருளல்ல. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் தங்களுடைய விழுந்துபோன நிலைமையையும் மரணத்தீர்ப்பு கொடுக்கப்பட்டதின் நியாயத்தையும் அறிந்து தெரிந்து தெளிந்து இவைகளி-ருந்தெல்லாம் மீட்கப்பட்டது முழுவதும் தெய்வ கிருபையினாலே என்பதை உணர வேண்டும். இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளாத வரையில் தெய்வ திட்டத்தைப் புரிந்துக் கொள்ள முடியாது. இந்த நியாயங்களை அறிந்திருக்கிறதினாலேயே தேவன் தமது கிருபையை அளிக்கிறார். தேவனுக்கும் அவருடைய நீதியின் கொள்கைகளுக்கும் கீழ்ப்படிந்து அவருடைய கிருபையையும் மன்னிப்பையும் பெற்றுக் கொண்ட நிபந்தனையின் பேரில் தான் தேவன் நித்திய ஜீவனை அளிக்கிறார். R 3729:5

## *மார்ச் 31*

***தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்.... இருக்கிறது. (எபி. 4:12)***

தேவனுடைய வார்த்தையானது ஒவ்வொரு காரியங்களிலும் ஒவ்வொரு செயல்களிலும் உருவக்குத்துகிறதாயிருக்கிறது. பழைய தீர்க்கதரிசிகள் மூலமானாலும், அப்போஸ்தலர்கள் மூலமானாலும், இப்பொழுதிருக்கிற சீர்திருத்தக்காரர்களாலும் சொல்லப்படுகிற தேவ வார்த்தையானது ஜீவனும் வல்லமையுள்ளதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாகவும், எந்த மனிதச் செய்திக்கும் அப்பாற்பட்டதாயும் இருக்கிறது. அது ஒவ்வொன்றையும் பிரிக்கத்தக்கதாயும் அடையாளம் காட்டத்தக்கதாயும் சத்தியத்தில் பசி தாகமுள்ளவர்களையும் இல்லாதவர்களையும் பிரிக்கிறது. அப்போஸ்தலர் சொல்லுகிற வெளிச்சம் இதுவே. எதையும் வெளியரங்மாகக் காட்டுகிறது வெளிச்சமே. சத்தியமாகிய வெளிச்சத்தில் நடக்கும் ஜனங்கள் யார் என்றும் இருளில் நடக்கிறவர்கள் யார் என்றும் வெளியரங்கமாகக் காண்பிக்கிறது. நம்முடைய அபூரணத்திலே சிலரை வெளிச்சத்தின் பிள்ளைகளென்று நிதானிக்கிறோம். அதனாலேயே அவர்கள்

வெளிச்சத்தின் பிள்ளைகளாகி விடமுடியாது. சிலரை இருளின் பிள்ளைகள் என்று தீர்க்கிறோம். ஆனால் அவர்கள் இருதயத்தில் வேறுபட்ட சுத்தமுள்ளவர்களாக கூட இருக்க முடியும். தம்முடையவர்கள் யார் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். யார் தன் பக்கத்தில் இருக்கிறார்கள் யார் இருளில் இருக்கிறார்கள் என்பதெல்லாம் தேவனுக்கு நன்றாகத் தெரியும். சத்தியமாகிய கருக்குள்ள அரிவாள் தன் அறுவடைப் பணியாகிய பிரித்தெடுக்கும் வேலையை செய்யட்டும். நாம் திருப்தியடையத்தக்கதான பணியைச் செய்வோம். நம்முடைய சுயநோக்கத்தின்படி கருத்தின் படியல்ல. தெய்வீக ஞானமும், அன்பும் பிரிக்கிற வேலையை செய்யட்டும் என்று பொறுமையோடு காத்திருப்போமாக. இறுதியில் அவருடைய திட்டமே மிகச் சிறந்ததென்று நாம் உணர்ந்துக் கொள்வோம். R 3860:6

## ஏப்ரல் 1

***கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார். (சங். 25:14)***

தேவனுடைய வார்த்தையை நேர்மையுடனும், உண்மையாகவும் தேடுகின்ற யாவருக்கும் அற்புதமான அவருடைய உடன்படிக்கை காண்பிக்கப்படுகிறது. நமக்காகவும், உலக மக்களுக்காகவும் கிறிஸ்து இயேசு தம்மை ஒன்றுமில்லாமைக்குத் தாழ்த்தினார். அதனாலேயே அவர் மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டார். அதைப் போலவே நாமும் அடக்கத்தோடு பாடுபட்டு இறுதிவரையில் உறுதியாக விசுவாசத்தில் நிலைத்திருந்தோமானால் அவரோடு கூட மகிமையிலும் பங்கு பெறுவோம். அவருடைய ராஜ்யத்தில் பூமியின் குடிகளையெல்லாம் ஆசீர்வதிக்கின்ற பாக்கியம் எவ்வளவு மகிமையான ஐசுவரியம். அது எவ்வளவு பெரிய தெய்வீகப் பேரன்பு, என்ன அளவிடற்கரிய தேவகிருபை! தேவநீதி, தேவஅன்பு, தேவ வல்லமை தேவ ஞானம் எப்படி ரூபகாரப்படுத்தப்படுகிறது! பிதாவின் ஒரே பேறான குமாரனை நமக்கு மீட்பராகவும், சரீரமாகிய சபைக்குத் தலையாகவும் தந்தருளினார். இவரே நம்மைக் குற்றமற்றவர்களும் கற்புள்ள மணவாட்டியாகவும் மெய் அன்பிலே பிதாவின் முன் நிறுத்தப் போகிறார். **கர்த்தராகிய தேவனே** ஒன்றான நமது தெய்வம் என்று சொல்லும் பொழுது இயேசுவை நாம் நமது அருமையான மீட்பரென்றும், தேவனால் அனுப்பப்பட்டவரென்றும் கூறுவது மிகப் பொருத்தமே. தெய்வீக அதிகாரத்தின்படியே பிதாவைக் கனப்படுத்துகிறது போல குமாரனையும் கனப்படுத்த வேண்டும் என அப்போஸ்தலர் கூறினார். ஆனாலும் குமாரனைப் பிதாவென்று கனப்படுத்துகிறதில்லை. இந்த குமாரனையே பிதாவானவர் தம்முடைய எல்லாவற்றுக்கும் வாரிசாக நியமித்தார். பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கச் செய்தார். இந்தக் குமாரன் தாமே ஆயிரமாண்டு ஆட்சிக்குப் பிறகு, பிதாவே எல்லாவற்றிலும் எல்லாமாக இருப்பதற்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பார். R 4052:1



## ஏப்ரல் 2

***கர்த்தருக்குப் பிரியமானவன் அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான். (உபா. 33:12)***

சிறுபிள்ளைகளைப் போல, பிதாவாகிய தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பவர்கள் உலகப்பிரகாரமான தகப்பனிடத்திலே எவ்வளவு நம்பிக்கையாயிருக்கிறார்களோ அவ்வளவு நம்பிக்கையாய் இருப்பவர்கள் இந்த இடுக்கமான பாதையிலே செல்லும் பொழுது எல்லாவிதமான தைரியமும் தன்னம்பிக்கையும் அடைவார்கள். தேவனுடைய கிருபை அல்லாமல் நாம் பரிபூரண சமாதானத்தையோ இதய சாந்தியையோ அடையமுடியாது. "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" என்பதே வாக்குத்தத்தம். நம்முடைய இருதயத்தில் தேவனோடு மிக நெருக்கமாக இருக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தாலொழிய கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய ஆதாயங்களை ஒருக்காலும் அடையமுடியாது. இப்படிப்பட்ட நீதியின் மேல் பசிதாகமுள்ள தன்மையை நாம் ரூபகாரப்படுத்தும் பொழுது தேவன் தாமே ஏற்ற வேளையில் இந்த நீதியின் பசிதாகத்தைத் தீர்த்துவைத்துத் தம்முடைய குமாரனுக்கு ஏற்ற மணவாட்டியாக நிச்சயப்படுத்திக் கொள்கிறார். R 5425:1

## ஏப்ரல் 3

***கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி. 10:22)***

நம்முடைய கர்த்தருடைய பெருந்தன்மையான முன்மாதிரியை நாம் பார்க்கின்ற போது அவர் எல்லாவற்றிலும் ஐசுவரியமுள்ளவராக இருந்தும் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார் என்று அறிகிறபொழுது மிகுந்த சந்தோஷப்படுகிறோம். அவருடைய தியாகம் எவ்வளவாய் உயர்ந்ததாயிருக்கிறதோ அதற்குச் சரிசமானமாய் அவருடைய வெகுமதியும் உன்னதமாயிருக்கிறதை உணருகிறோம். அப்போஸ்தலனாகிய பவுலுடைய பெருந்தன்மையான முன்மாதிரியைப் பார்க்கும் பொழுது மிகுந்த ஐசுவரியமுடையவராயிருந்தும் மிகுந்த திறமையுடையவராயிருந்தும் அநேக உலக வசதிகளைப் படைத்தவராயிருந்தும் மனப்பூர்வமாக கர்த்தருடைய பாதத்தில் வைத்துவிட்டு சந்தோஷமாகக் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றினார். *(பி-. 3:11)* எல்லாவற்றையும் அவருக்காக நஷ்டமென்று விட்டுக் குப்பையுமாக எண்ணினார். இதை எண்ணும் பொழுது நம்முடைய இருதயம் சந்தோஷத்தினால் பொங்குகிறது. சகோதரர்களுக்காகச் செய்யும் சேவையில் அப்போஸ்தலனாகிய பவுல் எவ்வளவு ஆஸ்திகளைத் துறந்து விசுவாச ஓட்டத்தில் ஓடியதற்காக வருகின்ற ராஜ்யத்தில் எவ்வளவு பிரகாசமான நட்சத்திரமாக ஜொ-ப்பார். அதுபோலவே ராஜரீக ஆசாரியக் கூட்டம் முழுமையும் சந்தேகத்திற்கு இடமின்றி மகிமைப்படும். எவ்வளவு பெரிய தியாகமோ அவ்வளவு பெரிய ஆசீர்வாதமுண்டாகும். கர்த்தரின் நிமித்தமாக மிகப்பெரிய அவமானங்களை, மிகப் பெரிய சோதனைகளை, மிகப் பெரிய துன்பங்களை தற்காலத்தில் அனுபவிக்கிறோமோ அவ்வளவாய் நம்முடைய போதகரும் முன்மாதிரியுமான அவருடைய அனுபவங்களை ஒத்த அனுபவங்களை அடைகிறோம். தற்காலத்தில் விசுவாசப் பரீட்சையில் எவ்வளவு அதிகமாய்த் தியாகங்களைச் செய்கிறோமோ அவ்வளவு வெகுமதி காத்திருக்கின்றது. அப்போஸ்தலர் சொன்னது போல மகிமையில் நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் வித்தியாசப்படும். R 2762:3

## ஏப்ரல் 4

**புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்கு கொஞ்சங்கொடுங்கள்..... என்றார்கள் *(மத். 25:8)***

பரிசுத்த ஆவி யாருக்கும் அபரிமிதமாய் வழங்கப்படுவதில்லை. ஒருவர் தம் மிகுதியி-ருந்து மற்றவர்களுக்கு வழங்க முடியாது. மணவாளன் முன்னதாகவே திருமணத்திற்கு அழைக்கப்பட்ட எல்லோருக்கும் வேண்டிய ஆடைகள், விளக்குகள் மட்டுமல்லாமல் எண்ணெயும் வழங்கியிருக்கின்றார். யாராவது கவனமில்லாமல் போதுமான அளவு எண்ணெயைச் சேகரித்து வைக்காம-ருந்தால் அவர்கள் மணவாளனோடே கூடக் கதவு அடைபடுமுன் உள்ளே நுழைவதற்கு அருகதையற்றவர்களாகிறார்கள். யார் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்களோ, யார் அந்த மகிமையில் பங்குபெற நினைக்கிறார்களோ, அவர்கள் அதற்குரிய ஆயத்தத்தில் தங்களை முன்னதாகவே தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதே இந்த உவமையின் மூலம் கர்த்தர் நமக்குப் போதிக்கின்ற போதகத்தின் சாரம். கதவு அடைபடும் வரையில் அவர்கள் காத்திருப்பார்களேயானால் அவர்கள் எவ்வளவு தான் மனப்பூர்வமாக ஆசைப்பட்டாலும் அவர்கள் ஆயத்தமாயிருக்கிறவர்கள் அல்ல. ஆயத்தப்படுவதற்குரிய காலத்திலும், நேரத்திலும் பொறுமையோடு விழித்திருந்து ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். R 3868:5



## ஏப்ரல் 5

**ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயி-ருக்கிறது. *(சங். 42:8)***

நாம் எந்த நிலையி-ருந்தாலும் நாம் எந்த சூழ்நிலையி-ருந்தாலும், எங்கே இருந்தாலும் தேவனை துதிக்க ஆயத்தமாக இல்லையென்றால் நாம் எந்தச் சூழ்நிலையில் மாறினாலும் நாம் தேவனை துதிக்கப் போவதில்லை. தானியே-ன் காலத்தை நினைத்துப் பார்ப்போம். தரியுராயன் தன் அரண்மனையில் உறங்கியதைக் காட்டிலும் நல்ல உறக்கத்தை தானியேல் சிங்கங்களின் குகையில் உறங்கினார். ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட இடம் தானியேலைப் போல சிங்கக் குகையாயிருந்தால் அவ்விடத்திலே அவனுக்கு இளைப்பாறக் காலமில்லை என்றால் அவனை அங்கிருந்து அரண்மனைக்கு இடமாற்றினாலும் அங்கேயும் அவனுக்குத் தேவனை நினைக்க ஓய்விராது. ஆகவே ஒரு மனிதனுடைய சுய எண்ணம் மாறவேண்டுமே தவிர, சந்தர்ப்ப

சூழ்நிலையோ, சொத்து சுகமோ அவனுக்கு ஓய்வளிக்காது, மாறுதலைத் தராது. இடமெதுவானாலும் இருதயம் பொங்குகின்ற சந்தோஷத்தோடு தேவனைத் தொழுது கொள்ளும் மனிதன் பாக்கியவான். R 3123:4

## ஏப்ரல் 6

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழுப்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். *(ஏசா. 40:31)***

மெய்யான ஆவியின் இஸ்ரயேலராகிய கிறிஸ்துவின் சரீரமாகிய ஒவ்வொரு அங்கத்தினுடைய வனாந்தர ஜீவியத்தின் ஒவ்வொரு அனுபவத்திலும் கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் தொடர்ந்தே இருக்கும். அன்றாட வாழ்க்கை வளமாக பரலோக மன்னா வழங்கப்படும். பிளவுண்ட மலையினிடத்தி-ருந்து ஜீவத்தண்ணீர் புறப்பட்டு அன்றாட தேவைக்குரிய தாகத்தைத் தீர்க்கும். நாம் ஆபத்தான, விலக்கப்பட்ட வழிகளிலே நடக்கும் பொழுது நமது பிதாவின் தண்டனையின் பிரம்பு நம்மைத் திருத்தும். எப்படிப்பட்ட பலவீனமாயிருந்தாலும், வியாதி விக்கினங்கள் இருந்தாலும் அவைகளைக் குணமாக்கி நம்மைத் திரும்பவும் ராஜரீகப் பாதையிலும், செவ்வையான பாதையிலும் அன்புடன் கொண்டு வந்து சேர்க்கும். நம்முடைய பரலோக வழிகாட்டியின் மீது நம்முடைய முழுநம்பிக்கையையும் வைக்கும் போது அவருடைய ஈவாகிய இளைப்பாறுதலும் உலகம் தரக்கூடாத சமாதான சந்தோஷமும் கிடைக்கும். R 5548:4

## ஏப்ரல் 7

**அதற்கு ரூத் : நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டு திரும்பி போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். *(ரூத். 1:16)***

இதிலே உள்ள ஒரு கருத்தை நாம் நிச்சயமாகக் கவனிக்க வேண்டும். அதென்னவென்றால் ரூத் தன்னிலை விளக்கத்தோடு தான் செய்யப்போவது இன்னதென்று திட்டமிட்டுத் தெளிவான உறுதியான தீர்மானத்தை எடுத்துக் கொண்டாள். யூதேயாவில் சிலகால மட்டும் தங்குவது அவள் நோக்கமல்ல. அது மரணமட்டும் இருக்கும் வாழ்க்கை. மெய்யான மனமாற்றங்களெல்லாம் இந்த விஷயத்தில் ஒரே மாதிரி தான் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒருவன் கிறிஸ்தவனாகும் பொழுது மெய்யாகவே கிறிஸ்தவனாகிவிடுவதில்லை. தான் ஒரு திடமான மன உறுதியோடு உலகையும் அதன் பணிகளையும் அதன் ஆசை, நோக்கம் இவைகளையெல்லாம் தியாகம் செய்து தேவ வழியில் கர்த்தருடைய ஊழியத்திற்காக தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையை மரணமட்டும் கடைபிடிப்பதாக வாக்களிக்கும் பொழுது தான் மெய்யான கிறிஸ்தவனாகிறான். இப்படிப்பட்ட திட்டமான தீர்மானம் எடுப்பதற்கு மன உறுதியும் தேவ தயவும் தேவை. இதை ஒருக்காலும் குறைத்து மதிப்பிடக்கூடாது. பல்லாயிரக்கணக்கானவர்களுடைய வாழ்வில் தீர்மானம் எடுக்க முடியாத சூழ்நிலையிலேயே தங்கள் வாழ்நாட்களை வீணாக்குகிறார்கள். இப்படிப்பட்ட உறுதியான தீர்மானம் எடுக்கிறவர்கள் தேவனுடையவர்களாகி "தங்களுடைய அழைப்பையும் தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்." R 5614:4

## ஏப்ரல் 8

**கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை. *(நீதி. 15:33)***

நமது போதகரும் குருவுமாகிய இயேசு கிறிஸ்து தாழ்மையின் அவசியத்தை மனதில் பதிய வைக்கும்படி ஒரு உவமையைச் சொன்னார். தன்னுடைய கண்ணிலேயே உத்திரத்தை வைத்துக் கொண்டு சகோதரனின் கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்துவிடுவதாகச் சொல்வது பலவந்தமான செயல். நாம் எவ்வளவு அடக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதற்கு தேவனால் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். தாழ்மை என்பது எல்லா நற்குணங்களுக்கும் ஊற்றும் மூலகாரணமுமானது. **தோண்டுகிறவர்களையே தாங்குகிற பூமியைப் போல தாழ்மையும்**

**பொறுமையுமுடையவர்களாக இருக்க வேண்டும்.** பூமியில் எல்லாம் விளைகிறது போல் இந்த தாழ்மையி-ருந்து எல்லாப் புண்ணியங்களும் வளர வேண்டும். தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கிறவர்கள் எதையுமே கற்றுக் கொள்ள முடியாது. ஒரு மனிதன் தன்னைத்தானே ஆராயும் பொழுது தன்னுடைய பிழையையே அதிகமாகக் கண்டு உணர வேண்டும். நமது பக்கத்தி-ருக்கிறவர்கள் செய்யும் பத்தாயிரம் பெரும் பிழைகள் கூட நமக்கு அவ்வளவு முக்கியமல்ல, நம்மிடத்திலே ஒரு சிறு பிழையும் இல்லாமல் பார்த்துக் கொள்வதே சாலச்சிறந்தது. நம்முடைய பாவங்களும் நம்முடைய அபூரணங்களும் நம்மை மிகமிகத் தாழ்மைக்கு வழி நடத்த வேண்டும். பூரணமாக இருக்கின்ற இயேசுவும் பரிசுத்தத் தூதர்களுங் கூடத் தாங்கள் பூரணத்தில் இருப்பதை உணர்ந்தும் தங்களைத் தாழ்த்தும் பொழுது நாம் நம்மைத் தாழ்த்துவது எவ்வளவு அவசியம். R 5029:3

## *ஏப்ரல் 9*

***தாபரிக்கும் ஊருக்குப் போய்ச் சேர, அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார். (சங். 107:7)***

ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குத் தேவன் மிகச்சிறந்த சரியான பாதையிலே வழி நடத்துகிறார் என்பதே உண்மை. அப்படி அவரால் நடத்தப்படுகிற ஜனங்களும் அவர் வழி நடத்துகிறார் என்று அறிந்து அவைகளில் நடக்கத் தீவிரக் கவனம் செலுத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இறுதியிலே நாம் நிச்சயமாக அவரே நம்மை நடத்தினார் என்பதை உணர்வோம். நிச்சயமாக நாம் தெரிந்துகொண்ட வழிகளை விட அவருடைய வழியே நேர்மையானதென்று கண்டுகொள்வோம். அநேகர் தங்களுக்குப் பிரியமான பாதையைத் தெரிந்துக்கொண்டு, அதில் நடப்பதால், அது தேவவழியல்ல என்பதால் தேவன் அவர்கள் வழியை மாற்றி அவர்களுடைய அவசர புத்தியை மாற்றி அவர்களை உணர்த்தி அவர்களையும் தமது திவ்யபாதைக்கு இழுத்துக் கொள்கிறார். எவ்வளவாய்க் கர்த்தரைப் பற்றிய அறிவை நாம் அடைந்திருக்கிறோமோ அவ்வளவாய்த் தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பும் பூரணப்படும், நம்முடைய விசுவாசமும் அதிகரிக்கும். தற்கால ஜீவியத்திலும் இவைகளினாலே நல்ல பலன் உண்டாகும். வருங்காலத்தில் கிறிஸ்துவைப் போன்ற வைராக்கியமுள்ள பிள்ளைகளாய் மிக அதிகமாய்ப் பிரகாசிக்கின்ற நட்சத்திரமாய் ஆசீர்வாதத்தினால் நிறைந்திருப்பார்கள். நாம் முழு விசுவாசத்தோடு நம்மை இவ்வளவாய் நடத்தின தேவதயவின்படி தெய்வ கிருபையினாலே உலகம், மாம்சம் எதிராளியான சாத்தான் இவைகளையெல்லாம் எதிர்த்துப் போராடி வெற்றிமேல் வெற்றி கொள்ளத் தேவன் நம்மைப் பலப்படுத்துவார். R 4064:5



## *ஏப்ரல் 10*

***நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களை சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். (1 தெச. 2:4)***

இருதயம் நமது மனதை, எண்ணத்தைக் காண்பிக்கிறது. இது மெய்யாகவே தேவனையே மையமாகக் கொண்டிருக்க வேண்டும். இது தான் முழு மனிதனையும் நடத்துகிற சக்தி. மனிதனுடைய முழு பலத்தையும் கட்டுப்படுத்துகிறதே அவனுடைய மனம். இந்த மனம் பலவகையினாலும் கட்டுப்படுத்தப்படும். சிந்தனைகள், அநீதியாக, அசுத்தமாக பரிசுத்தமில்லாதிருந்தால் மனதில் வல்லமையும், இருதயத்தின் நினைவுகளும் பழுதாகிவிடும். எனவே, அப்போஸ்தலர் நம்முடைய இருதய சிந்தனைகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று ஞானத்தைக் குறித்து எச்சரிக்கிறார். தேவபயத்தில் பரிசுத்தமாக இருந்து பரிபூரணமடைய முயற்சிக்கிற யாவருக்கும் பரிசுத்தமே நித்திய அலங்காரமாயிருக்க வேண்டும். இந்த தெய்வீகச் சிந்தனையை அசட்டை பண்ணக்கூடாது. சிந்தனையை பல இடங்களிலும் அலைபாய விடக்கூடாது. சரியான கட்டுப்பாட்டிலும் ஒழுங்கிலும் தேவ வசனமாகிய ஆரோக்கியமான உணவைப் பரிசுத்தமாக உட்கொள்ளுவதினால் தேவகுணங்களைப் பெறலாம். R 4827:2

## *ஏப்ரல் 11*

***துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும்...... அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போ-ருப்பான். (சங். 1:1,3)***

நாம் நம்முடைய அபூரண சரீரத்திலே இன்னும் இருக்கும்வரை தேவனுடைய பிள்ளைகளாகும் பூரணத்தின் உச்சநிலைக்கு போக முடியாது. ஆனாலும் தேவனுடைய பிள்ளைகள் திட்டமான முறையில் தேவகிருபையை நன்குணர்ந்து அதில் வளர அடியெடுத்து வைத்து நடக்கத் துவங்க வேண்டும். கிருபையில் வளர எடுத்துக் கொள்ளும் முயற்சியில் காணக்கூடிய அளவுக்கு வளர்ச்சி தோன்றவில்லையென்றால், நாம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் அல்லது நின்ற நிலையிலேயே இருக்கிறோம் என்ற அபாய அறிகுறியை உணர வேண்டும். நாம் எப்பொழுதும் நமது கண்களுக்கு முன்பாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியை உதாரணமாக வைத்திருக்க வேண்டும். தேவனுடைய பரிபூரண சித்தத்தை இயேசு நிறைவேற்றிக் காண்பித்து நியாயப்பிரமாணம் முழுவதும் குறைவில்லாமல் நிறைவேற்றிய மாதிரியை உணர வேண்டும். எனவே, நாம் அவருடைய அடிச்சுவடாகிய சுயதியாகத்தையும், நீதியையும் விசுவாசத்தோடும் அன்போடும் வைராக்கியத்தோடும் நிறைவேற்ற முயல வேண்டும். தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற எண்ணமே அவருடைய சித்தத்தை நிறைவேற்றச் சக்தியுள்ளவர்களாகவும், தகுதியுள்ளவர்களாகவும் செய்யும். இறுதியில் ஏற்ற வேளையில் மகிமையுள்ள வெகுமதியைப் பெறும்படியாக வாய்ப்பை பெறலாம். R 4835:5

## *ஏப்ரல் 12*

***கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். (சங். 103:8)***

இந்தப் பாடத்தி-ருந்து கர்த்தர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்பதை மாம்சீக இஸ்ரலேயர்களை வனாந்தர வழியாய் நடத்திய பொழுது நடந்த சம்பவங்கள் நமக்கு விரிவாய் விளங்குகிறது. கர்த்தருடைய ஜனமாகிய இந்த சுவிசேஷயுகத்தின் சரித்திரத்திலும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களில் விசுவாசமுள்ள ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இதை உணரலாம். நம்முடைய சுயவாழ்க்கையிலே நினைத்துப் பார்ப்போமேயானால் தேவன் எவ்வளவு பொறுமையும் தயவும் உள்ளவராய் இருந்தார் என்பதை உணர முடியும். நீண்ட



காலத்திற்கு முன்பாகவே நம்மை நம்முடைய ஒழுங்கீனங்களினிமித்தம், உடன்படிக்கையை மீறினார்கள் என்று தூக்கியெறிந்திருக்கலாமே. அவ்வாறு இல்லாமல் இவ்வளவாய் பரலோக ராஜ்யத்தின் பழுதற்ற வழியில் நம்மை நடத்தி வருகிறது அவருடைய தயவல்லவா! இவைகளையெல்லாம் மெய்யாகவே நாம் உணருவோமேயானால் நிச்சயமாகவே நம்மை அடக்கமுள்ளவர்களாகவும், தேவ நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவர்களாகவும் செய்யும். கிறிஸ்து மூலமாய்த் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் கிறிஸ்து முலமாய்த் தேவனிடத்தில் எவ்வளவாய்த் தயை பெற்றோமோ அவ்வளவாய் மற்றவர்களுக்கும் நாம் தயை செய்யவேண்டும் என்பதையே. நமக்கு எதிராகக் குற்றஞ் செய்பவர்களை தயவாய் மன்னிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆவியும், குணமும் இல்லாதவர்களும் தன் சகோதரனிடத்திலும், உடன் ஊழியக்காரரிடத்திலும் கருணை காண்பிக்காத எவரும் அவருடையவர்களாயிருக்க முடியாது. இதி-ருந்து நமக்கு தீங்கு செய்கின்ற மற்றவர்களிடத்திலும் நாம் எவ்வளவாய் மன்னிக்கிறவர்களாகவும் தயையுள்ளவர்களாகவும் கிருபையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை அறிகிறோம். R 4056:1

## *ஏப்ரல் 13*

***நமக்கு முன்வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு...... ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேணும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். (எபி. 6:18)***

தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்கு நேரும் ஒவ்வொரு உபத்திரவத் தொல்லைகளி-ருந்தும் ஓர் ஆசீர்வாதமான ஆறுதலையடைகிறார்கள். இது உலகிலுள்ள மற்ற யாருக்கும் தெரியாது. தேவனுடைய பிள்ளையைத் தவிர வேறு யாரும் இந்த ஆறுதலை அறிய முடியாது. இருதயமும் மாமிசமும் பலவீனப்பட்டு விழப்போகும் தருவாயிலும், அன்பு, நம்பிக்கை மற்றும் தைரியமும் தேவ வார்த்தையால் சாந்தத்தொனியில் காதில் ரகசியமாக ஒ-க்கப் பெறுவதே தெய்வீக ஆசீர்வாதமான ஆறுதல். இந்த ஆறுதலே குணமளித்து ஆற்றித்தேற்றி புத்துணர்வு அடையச் செய்யும்

புண்ணியமாக விளங்குகிறது. ராஜாதி ராஜனில் தேவ சேவையில் முழுமையாய் ஈடுபட்டுப் பாரஞ்சுமந்து விசுவாசமாய் ஓட்டத்தைத் தொடர்கிறவர்களுக்கு பெருந்தன்மையான இந்த ஆறுதல் சிறப்பாக வைத்து வைக்கப்பட்டிருக்கிறது. உலக காற்றால் அடிபட்டு அலைந்து திரிகின்றவர்களுக்கு இந்த ஆறுத-ன் இனிமையோ இந்தப் புத்துணர்வோ இந்த அன்போ என்னவென்றே தெரியாது. R 5803:1

## ஏப்ரல் 14

***உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது. (மத். 15:28)***

விசுவாசத்தைப் பற்றி அதிகதிமாய் நாம் படிக்க படிக்க, தேவனுடைய பார்வையில் விசுவாசம் இன்றியமையாத ஒன்றாக மட்டுல்லாமல் மிகவும் விலையேறப் பெற்றதாகவும் இருக்கிறது. விசுவாசமில்லாமல் நாம் தேவனண்டையில் வரமுடியாது. விசுவாசமில்லாமல் நாம் அவருடைய அன்பில் நிலைத்திருக்க முடியாது. அவருடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசமில்லாமல் நாளுக்கு நாள் அவருடைய தயவையும் ஆசீர்வாதங்களையும் வழி நடத்துதல்களையும் அடையமுடியாது. பரிசுத்தாவியினால் ஜெனிபிக்கப்பட்ட அவருடைய பிள்ளைகளாகவும், தேவனுடைய சுதந்திரரும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரருமாகக் கருதப்பட வேண்டுமானால் அவருடைய வார்த்தையாகிய வாக்குத்தத்தங்களில் உள்ளபடியே விசுவாசம் வைக்கவேண்டும். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசத்தில் நடக்கிறவர்களாக இல்லாவிட்டால் நாள்தோறும் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க முடியாது. உலகம், மாம்சம், சாத்தான் இவைகளால் நமக்கு வரும் எதிர்ப்புகள் நமக்குப் பாரமாகத் தோன்றினாலும், இவைகள் மறைமுகமாக நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதத்துக்குக் காரணமாக இருப்பதை உணர வேண்டும். தேவ வாக்குத்தத்தத்தில் விசுவாசமாயிருக்கிற ஒவ்வொருவரும் பயிற்சியினால் விசுவாசத்தை வளர்த்து எந்த பரீட்சைக்கும் ஆயத்தமாயிருக்கும் நிலைமைக்கு வளரவேண்டும். பரலோக ராஜ்யத்தின் மகிமைகளுக்கும், ஆசீர்வாதங்களுக்கும் பாக்கியங்களுக்கும் பங்கடைய வேண்டுமானால் கிறிஸ்துவின் பள்ளியிலே அநேக பாடங்களைக் கற்று விசுவாசப் பயிற்சியினாலே தேறினவர்களாய் இருக்க வேண்டும். R 3787:5



## ஏப்ரல் 15

***கிறிஸ்துவோ மரித்தோரி-ருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். (1 கொரி.15:20)***

அநேகர் மரணமாகிய நித்திரையி-ருந்து தற்கா-கமாக எழுந்திருக்கிறார்கள். ஆனாலும் மறுபடியும் விழுந்துவிடுகிறார்கள். ஆனால் நமது கர்த்தராகிய இயேசுவோ "நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவராகவும்," " மரித்தோர்களில் முதற்பிறந்தவராகவும்" இருக்கிறார் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். அதன்படி மரித்தவர்களி-ருந்து முதலாவது எழுந்திருக்க வேண்டியவராதலால், அவருடைய உயிர்தெழுதல் ஆவிக்குரிய நிலையில் பூரண உயிர்தெழுதலாகும். நித்திரையடைந்தவர்களில் அவர் முதற்பலனானவர் என்று சொல்லும் பொழுது மற்றவர்களும் இவ்விதமான ஆவிக்குரிய உயிர்த்தெழுதலையடைவார்கள் என்று அர்த்தப்படுத்துகிறது. ஆனாலும் கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலே மற்ற உயிர்த்தெழுதலுக்கெல்லாம் முந்தியது. அதுபோலவே அவருடைய சரீரமாகிய சபையும் முதற்பலன் என்று குறிப்பிடப்படுகிறது. கிறிஸ்துவாகிய தலையும், சரீரமாகிய சபையும் முதற்பலனாகி முழு உலகத்திற்கும் ஜீவன் கொடுக்கக் காரணமாகிறது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறாதவது: "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்." R 3377:5

## ஏப்ரல் 16

***இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். (மத். 26:26)***

அப்பம் எல்லா உணவையும் குறிக்கிறது போல இந்த அப்பத்தின் அடையாளப் போதனை கிறிஸ்துவின் மூலமாக அவருடைய ப-யின் விளைவாக வருகிற ஜீவனை ஏற்றுக் கொள்கிற எவரும் இந்த அப்பத்தை அவருடைய சரீரமாக ஏற்றுக் கொண்டாக வேண்டும். நாம் வாழவேண்டுமென்பதற்காக அவர் மரித்தார். தம்முடைய உரிமைகள், வசதிகள் ஆகிய யாவற்றையும் தாமாகத்

தத்தம் செய்த அவருடைய சரீரத்தை புசிப்பது அவருடைய வாழ்க்கையை, வழிமுறையை அவரில் உள்ள விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளும் பொழுது அவருடைய போதகத்தை ஏற்றுக் கொள்வதாகிறது. இப்படிப்பட்டவர்கள் பரிபூரண மனித சுபாவத்தின் அதாவது ஆதாம் இழந்த யாவற்றையும் கிறிஸ்துவினால் மீட்கப் பெற்றவர்களாகிறார்கள். பரலோகத்தின் அப்பமாகிய இதை புசிக்காத எவரும் நித்திய ஜீவனை அடையமுடியாது. இது தற்காலத்திலுள்ள விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, வருங்கால விசுவாசிகளுக்கும் பொருந்தும். கிறிஸ்துவின் ஈடுப- மூலமே யாவரும் ஜீவனுக்குரிய உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் உரியவர்களாகிறார்கள். நமது கர்த்தரின் சரீரத்தைக் குறிக்கும் அப்பம், அவருடைய ஈடுப- தேவனால் அங்கீகரிக்கப்பட்டதின் மூலம் நாமும் நீதிமான்களாக்கப்படுவதாக போதிக்கின்றது. R 3879:6

## ஏப்ரல் 17

***ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். (எபி. 12:3)***

நமது நிமித்தமாக அருமையான மீட்பர் பட்ட அவமானங்களை எவ்வளவு பொறுமையாகச் சகித்தார் என்பதை எண்ணுவது உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சியைச் சொல்லுவதும் படிப்பதும் அநேக இருதயங்களையும் மனந்திரும்பச் செய்திருக்கிறது. ஏற்கனவே மனந்திரும்பி கர்த்தராகிய ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் கூட வல்லமையான அந்த ரத்தத்தின் மீட்புபணி நெட்டுயிர்க்கச் செய்கிறது. நாம் பாடனுபவிக்கிற ஒவ்வொரு முறையும் அவரையே எண்ணி எள்ளளவும் பாவமில்லாத அவர், எவ்வளவாய் பாடுகளை என்னிமித்தம் ஏற்றுக் கொண்டார் என்று நினைவு கூறும் பொழுதெல்லாம் அவருடைய தியாகத்தின் மாட்சிமை, அவருடைய நீதியின் நெறி நம்முடைய அநீதியை நமக்குச் சுட்டிக் காட்டுவதாயிருக்கும். அப்போஸ்தலர் பாடமாகக் கொடுத்திருக்கின்ற வார்த்தைகள், கொஞ்சமும் நியாயமில்லாமல் தீமையை கொடுமையை, பாடுகளை, மிகுந்த பொறுமையுடன் நமது நிமித்தம் அனுபவித்தார் என்பதை அவரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். சீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவங்களையே பெரிதாக எண்ணுகிற நாம் அவருடைய பாடுகளை நமது மனக்கண் முன் நிறுத்தினோமேயானால் நமக்குக் கலக்கமோ மயக்கமோ வராது. R 2313:5



## ஏப்ரல் 18

***பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லோரும் இதிலே பானம் பண்ணுங்கள். (மத். 26:27)***

நமது கர்த்தர் திராட்சை ரசத்தை இரத்தம் என்று கூறுகிறார். எனவே அது ஜீவனை குறிப்பிடுகிறது. இது பேணிப் பாதுகாத்து கொள்கிற ஜீவனல்ல. மாறாக சிந்தப்படுகிற, கொடுக்கப்படுகிற, தியாகப் ப-யாகிற ஜீவனாக இருக்கிறது. இது அநேகருடைய பாவங்களின் மன்னிப்புக்காகக் கொடுக்கப்படுகின்றதாகக் கூறுகிறார். அவருடையவர்களென்று எண்ணுகிற யாவரும் அந்தப் பாத்திரத்தில் பங்கேற்க வேண்டுமென்றும் அவருடைய தியாகப்ப-யை ஏற்கவேண்டுமென்றும் கூறுகிறார். அப்படியே அவர்கள் விசுவாசத்திலும் மாதிரியைக் காண்பிக்க வேண்டும். விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட விரும்புகிற யாவரும் இந்த ஒரே ஜீவப-யை ஏற்றுக் கொண்டாக வேண்டும். மிகப்பெரிய போதகர் ஒருவருக்கு கீழ்ப்படிந்து விசுவாச ஜீவியம் ஜீவிக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் அதனால் நித்திய ஜீவனை அடைய முடியாது. ஒருதரம் உலகமுழுமைக்கும் பாவத்திற்கும் ஈடுப-யாகச் செலுத்தப்பட்ட இரத்தத்தினை ஏற்றுக் கொள்ளாமல் வேறெந்த வகையிலும் நித்திய ஜீவனை அடைய முடியாது. பூமியிலே பரலோகத்தின் கீழே இரட்சிக்கப்பட இந்த நாமமேயல்லாமல் வேறு நாமம் கொடுக்கப்படவில்லை. இதேபோல கர்த்தர் தம்முடைய பாத்திரத்தில் பங்கு பெறும்படியாகத் தம்மோடு ஒரே அப்பமாக பிட்கப்படும்படியாக அழைக்கின்ற அழைப்பினை ஏற்று அவரோடு கூட ஞானஸ்நானத்தில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டவர்களாக அவர்களுடையவர்களாக இருப்பதைத் தவிர வேறுவழியில் இந்தப் புதிய திவ்ய சுபாவத்தை அடையமுடியாது. இப்படிச் செய்வதால்

அவரோடு கூட மகிமை, கனம், சாகாமை ஆகிய உயிர்த்தெழுத-ன் மாட்சிமையிலும் இணைக்கப்பட்டிருப்போம். எனவே, நாம் இந்த மாபெரும் நினைவு கூறுத-ல் மறவாமல் கர்த்தருக்கு நன்றியைக் காணிக்கையாக்கக்கடவோம். ஏனெனில், அவர் நம்மை நீதிமானாக்குகிறார். அவரோடேக் கூடத் தியாகம் செய்யும்படி அவர் விட்டுச் சென்ற பணியை நாம் தொடரும்படி நம்மை அழைத்திருக்கிறார். இந்த சிந்தனை மிக்க துயரத்தின் தியானத்தால் நம்முடைய முழுஇருதயத்தையும் ஆராய்ந்து நம்முடைய குறைவையெல்லாம் ஒப்புக் கொண்டு முழுமையான தியாகத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்து விசுவாசத்தின் மூலம் வெற்றிக் கொள்ள அவரையே பின்பற்றி அவருடைய பாடுகளின் வழியே வெற்றியிலும் பங்குபெற பாத்தியதை உள்ளவர்களாவோமாக. R 2772:6; 2773:5

## *ஏப்ரல் 19*

***இதுமுதல் இந்த திராட்சைப் பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத். 26:29)***

ராஜ்யம் வரும்பொழுது தற்கால உபத்திரவங்களும், சோதனைகளும் கடந்து போய்விடும். திராட்சரசம் உண்டாக்குவதும் ஆலையை மிதிப்பதும் கடந்து போய்விடும். தற்காலத்தில் நமது மீட்பரோடு கூட மெய்யாகவே பாடுபட்டுத் தங்களுக்குரிய பங்காகிய ஜீவப-யை முற்றுமுடிய நிறைவேற்றினவர்களுக்கு திராட்சை ரசத்திற்கு பதிலாகக் கற்பனைக் கெட்டாத சந்தோஷமும், ஆசீர்வாதமும் மகிமையுமுண்டாகும். ராஜ்யம் வெகுசமீபமாய் இருக்கிறது. நமது கர்த்தராகிய இயேசு சொன்னதற்கு பிறகு 1800 வருடங்கள் கழிந்து இப்பொழுது அது மிகவும் சமீபமாயிருக்கிறது. அதற்குரிய சாட்சி ஏற்ற வேளைகளில் ஒவ்வொரு இடங்களிலும் விளங்கி வருகிறது. அதை எதிர்பார்த்து நம்முடைய இருதயங்கள் சந்தோஷப்பட்டாலும், விசுவாசத்தோடே நாம் பானம் பண்ண வேண்டிய பாத்திரமாகிய உபத்திரவம், துன்பம், அவமானம், கே-இவைகளைத் தாங்கி, நம்முடைய விசுவாசத்தையும், அன்பையும் ரூபகாரப்படுத்த வேண்டியிருக்கிறோம். R 3365:1



## *ஏப்ரல் 20*

***நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் ப-யிடப்பட்டிருக்கிறாரே.... புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். (1 கொரி. 5:7,8)***

நினைவு கூருதலான இராப்போஜனத்திற்கும், யூதர்களுடைய பஸ்காவிற்கும் உள்ள வேறுபாடு, பொருள் என்ன? எப்படி இந்த நிழல் உண்மைப் பொருளை பிரகாசிக்க செய்கிறது? இஸ்ரலேய-ன் தலைச்சன்களெல்லாம் சங்கரிக்கப்பட இருந்தது. அதுபோலவே "பரலோகத்தில் பேரெழுதப்பட்டவர்களாயிருக்கிற முதற்பேறானவர்களின் சபை" நித்திய ஜீவனா? மரணமா? என்ற நிலையி-ருக்கிறது. அன்று தலைச்சன்களெல்லாம் பஸ்கா ஆட்டைப் புசித்து இரத்தத்தை நிலைக்கால்களில் தடவியதால் காக்கப்பட்டது. அதுபோலவே விசுவாச வீட்டிலேயிருந்து நாமும் வெள்ளாட்டைப் பார்க்கிலும் விசேஷமான விலையேறப்பட்ட இரத்தத்தினால் தெளிக்கப்பட்டவர்களாகி பஸ்கா ஆடாகிய இயேசு கிறிஸ்துவை உட்கொள்ளுவதால் மரணத்தி-ருந்து நீக்கப்பட்டு தேவகிருபையினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் நிச்சயத்தை அடைந்திருக்கிறோம். இப்பொழுது நாம் ஆட்டையல்ல, மாறாக "உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" நினைவு கூறுகிறோம். நாம் அவரது மாம்சத்தை உண்பதல்ல; ஆனால் விசுவாசத்தினால் அவரது தியாகப்ப-யில் பங்கு பெற்று அவரது அடிச்சுவட்டில் தவறாது செல்வதன் மூலமாக நினைவு கூறுதலாகும். இரவாகிய இந்த சுவிசேஷயுகத்தில், நாம் ஆட்டுக்குட்டியானவரோடு கூட விருந்தில் பங்கு கொள்ள வேண்டும். ஆயிரவருட ஆட்சியில் விடியற்காலை வரை அதாவது நாம் மீட்படையும் வரை இதைச் செய்ய வேண்டும். இந்த நினைவு கூருதலான இராப்போஜனம் ஒரு வருடாந்திர விழா அல்ல. மாறாக விசுவாசத்தின் விருந்தாகவும் பிற்காலத்தில் நாம் அவரோடே கூட நவமான விருந்தில் எல்லா நலனோடும் பங்குகொள்ளப் போவதை நினைவு கூர்ந்து இதைச் செய்ய வேண்டும். R 4128:3

## *ஏப்ரல் 21*

***கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோ. 3:13)***

மன்னிக்கின்ற குணம் நம்மோடு எப்பொழுதும் இருப்பது மாத்திரமல்ல, அதை எப்பொழுதும் எந்த சூழ்நிலையிலும் பகிரங்கமாகக் காண்பிக்க வேண்டும். நம்முடைய தாராள மனதும் இரக்கமும் எந்தத் தீமையையும் சிறிய அளவிலும் கூட நினைக்க இடம் தராது. நாம் வார்த்தையிலும், செய்கையிலும் எல்லாருக்கும் அன்றாட வாழ்விலே கருணை காட்டுகிறவர்களாயிருக்க வேண்டும். இது தெய்வீக குணம். தேவன் இரக்கமும் மன உருக்கமும் உள்ளவராக நாம் பாவிகளாக இருக்கையில் அவர்களே வந்து மன்னிப்பு கேட்கட்டும் என்றில்லாமல் தாமாக அவர்களை மன்னிக்கின்ற மாண்புள்ளவராயிருக்கிறார். இதையே முழு வேதாகமச் செய்தியாக, “தேவனோடே ஒப்புரவாகுங்கள்” என்று நாம் போதிக்கப்படுகிறோம். தேவ குணமாகிய இந்த மன்னிக்கும் தன்மை, எதையும் மன்னிக்க ஆயத்தமாயிருந்தால் நமது முகத்தை முரட்டு சுபாவத்தி-ருந்து சாந்த சுபாவத்தை வருவிக்கும். **தேள் கொட்டுகிறதைப் போல பேசுகிறதுக்கும், தேன் சிந்துகிறது போல பேசுகிறதுக்கும் உள்ள வேற்றுமையை அறிந்திருக்க வேண்டும்.** நாம் எப்பொழுதும் எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் இருதயத்தில் மன்னித்துச் சிநேகம் பாராட்டும் தேவ குணமுள்ளவர்களாக இருப்பதையே தேவன் விரும்புகிறார். R 4978:3

## ஏப்ரல் 22

***அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார். (ஏசா. 53:12)***

பிதாவானவர் குமாரனுடைய விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் நன்கு அறிந்திருந்ததினாலே அவர் ஏராளமான வெகுமதியை அளிப்பார். ஆதாம் மற்றும் அவனுடைய இனத்திற்காகவும் தன்னுடைய குமாரன் இரத்தம் சிந்தி, அவர்களது பாவத்திற்கு ஈடுப-யாக ஒப்புக் கொடுக்கப்பட்டதை நன்றாக அறிந்திருந்ததினால் அவர் அனுபவித்த ஒவ்வொரு சோதனைக்கும், வருத்தத்திற்கும், பிரயாசத்திற்கும், துன்பத்திற்கும் நஷ்ட ஈடாக



மேன்மையான பரிசுகளை அளிக்கிறார். இந்த சுவிசேஷ யுகத்தில் தேவனால் அழைக்கப்பட்டுத் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொருவரும் இதேவிதமான ஆச்சரியமான தேவனுடைய ஆசீர்வாதங்கள், ஆறுதல்கள், இருதய சந்தோஷம் இவைகளை அடைவது நிச்சயம். அழைத்த நோக்கத்தை உண்மையுள்ள தேவன் தாமே உணர்ந்து தம்மை நேசிக்கிற ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட மேன்மையான பரிசுகளை அளிக்கின்றார். நாம் அவரோடு கூட பாடுபட்டோமேயானால் அவரோடு கூட ஆளுகை செய்வோம் என்கிற வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கிறோம். மீட்பரின் அடிச்சுவட்டில் நடந்தோமேயானால் பிரசவ வேதனைக்கும் ஒப்பாகச் சொல்லப்படுகின்ற வேதனைகளிலும் துன்பங்களி-ருந்து இரட்டிப்பான திருப்தி தருகின்ற பரிசும் மகிழ்ச்சியும் தேவனிடத்தி-ருந்து கிடைக்கும். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசத்தில் ஏற்றுக் கொண்டவர்கள், “என்ன வந்தாலும் அவரை நம்புவேன்” என்ற நிலைக்கு வந்துவிடுவார்கள். R 3591:4

## ஏப்ரல் 23

***கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார். (1 சாமு. 12:22)***

மாம்சீக இஸ்ரயேலருக்கு தேவன் பேரில் நன்றி உணர்வும், விசுவாசமும் உண்டாக்குவதற்காக சாமுயேல் தீர்க்கதரிசி, எகிப்தி-ருந்து புறப்பட்ட பொழுது தேவன் செய்த மாபெரும் அதிசயங்களை ஞாபகமூட்டி, வனாந்தரத்தி-ருந்து கானான் தேசம் வரையில் அவர்களை வழிநடத்தியதையும் நினைவு படுத்தினார். இதே வார்த்தைகளை நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குச் சொல்லும் பொழுது எவ்வளவு வ-மையுடையதாக இருக்கும். எகிப்தின் அடிமைத்தனமாகிய பாவம், மரணம், சாபம் இவைகளி-ருந்தும் நம்மை விடுவித்திருக்கிறார். இருளில் இருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நடத்திச் செல்லுகிறார். பயங்கரமான குழியி-ருந்தும், உளையான சேற்றி-ருந்தும் நம்மை தூக்கியெடுத்தது மட்டுமல்லாமல் நமது பாதங்களை கிறிஸ்து என்னும் கன்மலையின் மேல் நிற்கச் செய்தார். நமது வாயில் புதுப்பாட்டை அருளுகிறார். அவரது அன்பை நம்மேல் பொழிகிறார். நம்முடைய பாவங்களை மன்னித்ததோடல்லாமல் கிறிஸ்துவுக்குள்

நம்மை ஏற்றுக் கொண்டு, அவருடனே கூட உடன்சுதந்தரராயிருப்பதற்கு அழைத்தார். நமக்கு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்ததோடு அல்லாமல் இந்த வனாந்தர ஜீவியத்திலே நம்முடைய இருதயம் மகிழ்ச்சியாயிருக்க நாம் பெற்றுக் கொள்ளப் போகிற சுதந்திரம் எவ்வளவு திவ்வியமானது என்பதை முன்னதாகவே ருசிபார்க்கப் பரிசுத்தாவியின் மூலமாய் அருள் செய்திருக்கிறார். R 4201:4

## ஏப்ரல் 24

**வசனத்தைக் கேட்டு, ஏற்றுக் கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள். இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார். *(மாற். 4:20)***

நம்முடைய இருதயம் நல்ல விதை முளைப்பதற்கான நல்ல நிலமாக இருக்க நிச்சயித்துக் கொள்ள வேண்டும். ராஜ்யத்தின் வசனங்களாகிய நல்ல விதைகளைப் பெற்றுக் கொண்டு, அது பலன் தரும்படியாக அபிவிருத்தி செய்ய வேண்டும். பலன்களிலே வித்தியாசமாக சில முப்பதும், சில அறுபதும், சில நூறுமாக எஜமானுடைய பாராட்டைப் பெறும்படியாக நாம் மேன்மையான மிகுந்த பலன்களைக் கொடுக்கத்தக்கதாக முயற்சி செய்ய வேண்டும். அதுவே நம்முடைய ராஜாவுக்கு மிகப்பிரியமானதும் கூட. நம்முடைய முழுபலத்தோடு இந்த ராஜ்ய சேவை செய்வோம். நம்முடைய விசுவாசத்தை எப்படி அதிகரிக்க முடியும்? களங்கமற்ற இருதயத்தோடும் விதை விளையத்தக்கதான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு, அதிக அளவில் தேவ பக்தியோடும், பயத்தோடும், பூரணராகும்படி கடந்து போவோமாக. அறுவடையோ சமீபமாயிருக்கிறது. நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாகி இன்னும் சந்தர்ப்பம் இருக்கின்ற பொழுதே எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு மிகுந்த கனிகளைக் கொடுப்பதற்கு வேண்டிய யாவற்றையும் செய்வோமேயானால், நமது ஆண்டவரின் பூரணப் பாராட்டையும் பெற முடியும். R 3765:1

## ஏப்ரல் 25

**நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து..... தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன். *(2 தீமோ. 1:3,4)***



தங்களுடைய சத்துருக்களை சிநேகிக்கின்ற இருதயமுள்ளவர்கள்தங்கள்விசுவாசவீட்டாரைசிநேகிக்கின்றவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாகக் கர்த்தரை சிநேகிக்கின்றவர்கள் தங்களைக் காட்டிலும மற்றவர்களையும், மற்றவர்களின் நலனையுமே உணர்ந்து ஜெபிக்கின்றவர்களாயிருப்பார்கள். அப்படிப்பட்ட இருதயங்களில் கோபதாபங்கள், இரக்கமின்மை, பொறாமை முத-யவற்றுக்கு இடமில்லை. அப்படிப்பட்ட இருதயங்களில் தேவ அன்பு நிறைந்திருப்பதை பரிசுத்தரின் மூலமாக அபிஷேகம் பண்ணும் போது, அபிஷேகத்தைலம் ஒவ்வொரு நரம்புகளிலும், நாவிலும், இருதயத்திலும் ஊடுருவி பாய்வதை கனிவுள்ள முகத்தின் மூலம் காண முடியும். "இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்." பரிசுத்தமான ஊற்றி-ருந்து கசப்பான தண்ணீர் வரமுடியாது. R 4201:2

## ஏப்ரல் 26

**நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்க வேண்டும்: நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று. *(ரோம. 13:11,12)***

தன்னுடைய நாளில் வாழ்ந்துகொண்டிருந்த பரிசுத்தவான்களுக்கு சுவிசேஷ யுகத்தின் ஆரம்ப நாளில், "காலத்தை அறிந்தவர்களாய் நித்திரையை விட்டெழுந்திருக்கதக்க வேளையாயிற்று" என்று அப்போஸ்தலர் கூறினாறென்றால், பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடிக் கொண்டிருக்கும் நமக்கு, இந்த சுவிசேஷ யுகத்தின் இறுதிக்காலத்தில் இருக்கிற நமக்கு நித்திரையை விட்டெழுந்திருப்பது எவ்வளவு அவசியமானது. "இரவு சென்று போயிற்று, பகல் (மகிமையுள்ள ஆயிரவருட அரசாட்சியின் நாள்) சமீபித்திருக்கிது." விடியற்காலையில் லேசான வெளிச்சம் வீசத் தொடங்கிவிட்டது. ராஜரீகமான மணவாளன், ஆயத்தமாகி காத்திருக்கிற மணவாட்டியை அவருடன் சேர்த்துக் கொள்ள வருகிறார். எனவே நாம் நமது மீட்பு சமீபமாயிருக்கிறதை உணர்ந்து மகிமையுள்ள அந்த மீட்பை பெற நித்திரையை விட்டெழுந்து விழிப்புள்ளவர்களாயிருப்போமாக. R 3830:5

## *ஏப்ரல் 27*

***நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. (1 யோவா. 5:3)***

தேவன் செய்கிற எல்லா நன்மைக்கும் இருதயத்தில் நன்றியுணர்வுள்ளவர்களே சத்தியத்தை நேசிக்கின்றவர்களாகவும், கர்த்தரை மெய்யாகவே தங்கள் முழுமனதோடே சேவிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். தேவனுடைய வார்த்தையை மறவாமல் நினைவில் கொண்டு தெய்வீக உதவியைத் தேடி வேதவாக்கின்படியே வாழ வேண்டுமென்பதை வரையரை செய்கின்ற வாக்கியமே, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்பது. அப்படிப்பட்டவர்களுக்கே தேவனுடைய வார்த்தையானது நாள்தோறும் புதிய பொருளையும், புதிய உத்வேகத்தையும் தந்து உற்சாகப்படுத்த வல்லமையுள்ளதாயிருக்கிறது. நன்றியுள்ளவனாய் ஒருவன் இருப்பானேயானால் தேவனுடைய கட்டளைகளின் ஆழங்களையும் கடந்த காலங்களில் கிடைத்த தேவனுடைய அருளையும் மறக்கமாட்டான். "என் தேவனே, உமக்கு பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று சொல்- கர்த்தரைப் போலவே நாள்தோறும் தேவ வார்த்தைகளால் களி கூறுவான். நாமும் அப்படியே இருப்போமாக. அவரது கட்டளைகள் நமக்கு பாரமாய் இராது. சத்திய ஆவியினாலே நாம் முத்திரையிடப்பட்டவர்களாய் எவ்வளவாய் அவரை நேசிக்கிறோமோ, அவ்வளவாய் அவரது வேதத்தின் வெளிச்சத்தில் வாழ்ந்து காட்டுவோம். R 4201:5

## *ஏப்ரல் 28*

***உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. (லூக். 6:32,33)***

கர்த்தருடைய ஜனங்களுக்கு நன்றியுணர்வு மாத்திரமல்ல, அதைக் காட்டிலும் மேலான குணங்கள் இருக்க வேண்டும். நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை மன்னிக்கின்ற தயை இருக்க வேண்டும். நமக்கு விரோதமாய் பொய்யாய் சாட்சி சொல்லுகிறவர்களையும் மன்னிக்கிற தயையும் இரக்கமுமுள்ளவராயும் இருக்க வேண்டும். எப்படிப்பட்ட குணங்களைக் கர்த்தர் உடையவராய் இருந்தாரோ அதே குணங்களுடையவர்களாய் இருப்பவர்களுக்கு பரலோகத்தில் கிடைக்கப் போகும் வெகுமதி, மிக்க மனமகிழ்ச்சி தருவதாயும் ஆனந்த பாக்கியமுள்ளதாயுமிருக்கும். R 4200:5



## *ஏப்ரல் 29*

***யாவரோடும் சமாதானமாயிருக்கவும்...... நாடுங்கள். (எபி. 12:14)***

புதிய சிருஷ்டிகளாக மாறிய நாம், புதிய சிருஷ்டியாகவே வளர மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நமது மாம்சத்தை ஜெயிக்கக்கூடிய சக்தியை அதிகமாகப் பெருக்க வேண்டும். அதுவே நமக்குப் பாதுகாப்பு. நமது சுயநலத்தை எதிர்த்து நாம் போராட வேண்டும். கர்த்தருடைய ஜனங்களில் பலர் இப்படிப்பட்ட போராட்டங்களை சந்திக்க இயல்பாகவே தகுதியுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இந்தப் போராட்ட குணத்தை சரியான நெறியிலே பயன்படுத்தினால் மிக்க நன்மையுண்டாகும். போராட்டம் அவசியம், மிகமிக அவசியம். **போராட்டமில்லாமல் வெற்றி இல்லை. அதற்காகச் சகோதரர்களிடமே போராடக்கூடாது.** நாம் தனிப்பட்ட முறையில் சாத்தானை எதிர்த்துப் போராட முனையக் கூடாது. நாம் சாத்தானுக்கு ஒப்பானவர்கள் அல்ல. ஆனால் அவனை எதிர்க்கிறவர்களாய் இருக்க வேண்டும். அதி சீக்கிரத்தில் கர்த்தர் தாமே அவனைப் பிடித்துக்கட்டி ஆயிரவருட சிறையில் தள்ளிவிடுவார். அவர் அவனை வென்று அவனுடைய கிரியையெல்லாம் அழித்து விடுவார். ஆனால் அதற்கு ஆயிரம் ஆண்டுகள் செல்லும். நாம் மாம்சத்தில் இருக்கும் போதே சாத்தானையும் அவன் கிரியைகளையும் வென்றுவிட முடியாது. அது நமது பணியுமல்ல. கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற பணி என்னவென்றால், நமது சுய இச்சையை வெல்லவேண்டும். அப்பொழுதுதான் ஆதாமின் விழுந்து போன சந்ததியின் இந்த சரீரத்தை கட்டுப்படுத்த முடியும். சாத்தான் நம்மை தொடாதபடிக்கு நம்மைக் காத்துக் கொள்ள முடியும். R 5923:5

## ஏப்ரல் 30

***நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2தீமோ. 2:15)***

பொது ஊழியத்தில் இறங்குவதற்கு முன்னர் நமது போதகரும் குருவுமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவே தனிமையில் சென்று தெய்வீகத் திட்டத்தைக் குறித்து படிக்க வேண்டியது ஞானமான முறை என்று அதைக் கடைபிடித்தது போல அவரது சீடர்களாகிய நாம் எவ்வளவு அதிகமாக கடைபிடிக்க வேண்டும். ஏனென்றால், நாம் அபூர்ணர்கள், பாவ ஆதாமின் வழி வந்தவர்கள். கர்த்தரின் வார்த்தையையும், அவருடைய ஆவியையும், அவரது ஆலோசனைகளையும் நாம் முந்தி தேட வேண்டும். **முறையாகத் தேவதிட்டத்தை கற்றறிந்த பின்னரே நாம் ஊழியத்தை தொடங்க வேண்டும்.** முறையாகத் தேவதிட்டங்களைக் கற்காமல், அவசரப்பட்டுச் சென்று வம்பிலே மாட்டிக் கொள்ளக்கூடாது. நாம் செய்வதற்குரிய பணியை தேவதிட்டத்திற்கு இசைவாக தேவசித்தப்படி பொறுமையோடு கற்போமேயானால் எவ்விதத் தடையுமில்லாமல் தேவசித்தப்படி, அவர் விருப்பப்படி ஊழியம் சிறப்பாக இருக்கும். அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்குச் சொன்ன இந்த வார்த்தையை நாம் நன்கு கவனித்து வெட்கப்படாத ஊழியனாக இருக்க வேண்டும். நாம் பூரண ஆயத்தமாக இல்லாவிட்டால், தேவ ஊழியத்தில் உபயோகமாக இருக்க முடியாது. எனவே, முத-ல் தேவவசனத்தில், நீதியில், தியானத்தில் தேர்ச்சி பெற்று, எவ்வித நிபந்தனையுமின்றி, முழுமையாகக் கர்த்தருக்கு நம்மை நாம் பிரதிஷ்டை செய்ய வேண்டும். இரண்டாவதாக பிரதிஷ்டையின் உறுதிமொழிகளை நிறைவேற்ற தேவ சித்தம், தேவவசனம், தேவதிட்டம் ஆகியவைகளை ஆராய வேண்டும். இத்தகைய நிலையை அடைந்தபின் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் பணிபுரியலாம். R 3717:1

## மே 1

***இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். (1கொரி. 2:2)***



இராஜரீக ஆசாரியக் கூட்டமாக இருப்பதற்கு அழைக்கப்பட்ட சகோதரரே, உங்களுக்காக நற்செய்தியில் கொடுக்கப்பட்டிருக்கிற மகிமையுள்ள நம்பிக்கையை உங்கள் முன்பு இலக்காக வைத்து, அதே நோக்கத்திற்காக முயற்சி செய்யுங்கள். ஆகிலும், தேவ ஆவி வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கின்ற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டுவிலகிப் போவார்கள். 1 தீமோ. *4:1*ல் கூறப்பட்ட கெடுக்கிற ஆவியின் கிரியைகளுக்குக் கொஞ்சமும் பயப்படாமல் உங்கள் நோக்கத்தில் மகிமையுள்ள நம்பிக்கையையே பெரியதாக எண்ணுங்கள். பெயர் கிறிஸ்துவர்களை விட நாம் பிரத்யேகமாய்த் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட மக்களாக, தேவனுடைய சம்பத்தாக இருக்கிறோம் என்பதை ஒருக்காலும் மறக்கக்கூடாது. உலகி-ருந்து பிரிந்து உயர்ந்த நம்பிக்கையையும், உயர்ந்த கொள்கையையும் பிடித்துக் கொண்டு, தேவனுடைய ஆழங்களை அறிவதற்கு கடந்த கால இருளை விட்டு ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வந்திருக்கிறோம். எனவே தான், இந்த உலகின் ஆவியை உடையவர்களும் பெயர் கிறிஸ்தவர்களும் அறியாமையி-ருந்து நம்மை எதிர்க்கிறார்கள். நாம் வெளிச்சத்தி-க்கிறோம். அவர்கள் இருளி-ருக்கிறார்கள். R 5970:1

## மே 2

***என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. (யோவா. 6:37)***

தேவன் குறித்திருந்த காலங்கள் நிறைவேறின பொழுது புறஜாதியாருக்கும் தயை செய்யும்படி தேவன் சித்தங்கொண்டார். ஆகவே, தாராள மனதுள்ள புறஜாதியானாகிய கொர்நெ-யு என்கிற ஒரு நல்ல மனிதனிடத்திலே நற்செய்தியை அனுப்பினார். அன்றி-ருந்து தேவனுடைய கிருபை யூதருக்கு எப்படியோ அப்படியே புறஜாதியாருக்கும் திறக்கப்பட்டது. "பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தார்." யூதரும், புறஜாதியாரும் ஒரே நிபந்தனைகளில் பெற்றுக் கொண்டனர். அதாவது இயேசுவில் விசுவாசம் வைத்து அவரது அடிச்சுவட்டில் பின்பற்றி நடக்க

பிரதிஷ்டை செய்தார்கள். அப்போஸ்தலனுடைய வாக்கியம் சொல்லுகின்ற வண்ணமாக, இயேசுவின் நற்செய்தி "வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது." 18 நூற்றாண்டுகளாகியும் இன்னமும் சுவிசேஷம் எல்லா மனுக்குலத்திற்கும் பிரசங்கிக்கப்படவில்லை. அப்போஸ்தலர் சொல்லுகிறதின் கருத்தென்னவென்றால், சுவிசேஷம் யூதர்களுக்கு மட்டுமல்ல, சர்வஜாதி ஜனங்களுக்கும் உரியது. முன்பு அது யூதர்களுக்கு மட்டுமே உரியதாயிருந்தது. இப்போது அப்படியல்ல. எல்லோரும் கேட்கிறதற்குக் காதுள்ள யாவரும் ராஜ்யத்தின் நற்செய்தியை கேட்கக்கடவன். இந்தத் தேவனுடைய கிருபையின் செய்தியை ஏற்றுக் கொள்ளும் இருதயமுள்ளவர்கள் தங்கள் சரீரங்களைத் தேவனுக்கேற்ற பரிசுத்தமான ஜீவப-யாகக் கிறிஸ்துவின் மூலம் செலுத்தக்கடவர்கள். R 5101:1

## மே 3

***என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. (யோவா. 7:16)***

கர்த்தருடைய ஸ்தானாதிபதிகள் யாராயினும் தேவனுடைய வார்த்தையை உள்ளபடியே சொல்லவேண்டும். மனிதனுடைய கருத்தோ, தத்துவமோ போதிக்கப்படக்கூடாது. "சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக." *(எரே.23:28)* "வேதத்தையும், சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." *(ஏசா. 8:20)* "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு;" *(2தீமோ. 4:2)*"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்..... இருக்கிறது." *(எபி. 4:12)*"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்." *(யோவா. 17:17)* "அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் என்று அறிந்து கொண்டார்கள்." *(அப். 4:13)* தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் சாட்சி பகர விசுவாசமுள்ள யாவரும் வீணாய் அலப்புதலோடு பேசமாட்டார்கள்.



மாறாக, "ஏற்ற வேளையில்" "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை" பிரகடனப்படுத்துவார்கள். R 3726:6

## மே 4

***இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரண பரியந்தம் நம்மை நடத்துவார். (சங். 48:14)***

இப்பொழுது தேவனுடைய கிருபையை நம்முடைய எல்லாக் காரியங்களிலும் தேட வேண்டியவர்களாயிருக்கிறோம். நமக்கு அவரது வழிகாட்டுதல் நிச்சயமாக உண்டு. நம்முடைய சோதனை நேரங்களிலும், உபத்திரவ துன்பகாலங்களிலும், மயங்கி நிற்கின்ற வேளைகளிலும் நம்மை ஆதரித்துப் பாதுகாத்துப் பராமரிக்கின்ற அவரது தயவுள்ள கரம் நம்மை நடத்தும். தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரலேயர்களாக நாம் எவ்வளவாய் உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுகிறோமோ அவ்வளவாய் மரண யோர்தானைக் கடந்து பரத்துக்குரிய இன்பக்கானானுக்கு நம்மை அழைத்துச் செல்லும். யாருடைய விசுவாசம் விழித்திருக்கிறதோ அவர்கள் பாக்கியவான்கள். உலகம் கண்டுணராத தேவனுடைய கிருபையை கண்டுணர்ந்துகொண்டவர்கள் பாக்கியவான்கள். கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையை உடையவர்களே இவ்விதமான தேவ நடத்துதலை நிச்சயமாக அடைவார்கள். R 3997:3

## மே 5

***நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே. (சங். 68:19)***

நமது தேவன் எவ்வளவு அன்பும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். எவ்வளவு ஞானமும் பலமுமுள்ளவராயிருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களை அவர் ஒருபோதும் கைவிடுவதில்லை. நாம் எவ்வளவு தான் நன்மை செய்ய முயற்சி செய்தாலும் நம்முடைய எதிரியானவன் நம்மிலும் பலங்கொண்டு நம்மை நன்மை செய்யவிடுவில்லை. நாம் எப்பொழுது பலவீனமாக இருப்பதை உணருகிறோமோ

அப்பொழுது நம்முடைய பலவீனத்தில் பலமும் உதவியற்ற நிலையில் உதவியும், தகுதியற்ற நிலையில் தகுதியும் தேவனுடைய வல்லமையினாலே நமக்கு உண்டாகும். நம்முடைய பலவீனத்தில் அவருடைய பலம் விளங்குவதால், நாம் அவரில் பூரணப்படமுடியும். நாம் பலவீனமாக இருக்கிறோம். முடமாக இருக்கிறோம் என்பதினால் தேவ அன்பிலும் தேவபலத்திலுமிருந்து நம்மை பிரித்துவிட முடியாது. எவ்வளவாய் அவரது சித்தத்தை நிறைவேற்ற முயற்சி செய்கிறோமோ அவ்வளவாய் அவருடைய ஒத்தாசையின் கரம் நம்மீது இருக்கும். ஏனெனில், “நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்.” R 5803:2

## மே 6

**என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு. *(சங். 116:7)***

பரிபூரண சமாதானத்தை நாம் அடைய வேண்டுமானால் நாம் பிதாவின் அன்பில், அவருடைய பராமரிப்பில் அசைக்கமுடியாத விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் வானத்தை அண்ணாந்து பார்க்கின்றபொழுது தாரகைகள் நிறைந்த ஆகாயத்திலே தேவனுடைய வல்லமையையும் மகத்துவத்தையும் காண்கிறோம். இவைகளினால் நம்முடைய இருதயமும் மனமும் திருப்தியடைந்துவிட முடியாது. நாம் எதிராளியை ஜெயிக்க வேண்டுமானால், தேவனிடத்தில் தங்கித் தரித்திருக்கக் கூடிய ஆழ்ந்த விசுவாசத்தில், அடிப்படை விசுவாசத்தில் நிலைத்திருப்பதின் மூலம் தெய்வீகக் கொடையாகிய ஆவியின் கனிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் அவருடைய வார்த்தைகளின் மூலமாக நமது பிதாவையும் அவரது குமாரனையும் அறிந்து அவரில் நம்முடைய நம்பிக்கையை வைத்திருப்போமேயானால் நாம் சமாதானத்தில் இளைப்பாற முடியும். R 5432:5

## மே 7

**நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும்.**



**வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். அவரோடு கூட நாங்கள் பரிசுத்த பருவதத்தி-ருக்கையில்... *(2 பேது. 1:16,18)***

இன்று கிறிஸ்துவ அனுபவங்கள் இவ்வாறு தான் இருக்கின்றது. அநேகர் தந்திரமான கட்டுக் கதைகளை நம்புகிறவர்களாயிருக்கிறார்கள். நாமோ அவருடைய மகத்துவத்தை, வல்லமையைக் காண்கிறவர்களாக அவரோடு கூட மறுரூபமலைக்குச் செல்ல வேண்டும். நம்முடைய அறிவின் கண்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆச்சரியமான காரியங்களை நாம் காண்கிறோம். பழையவைகளை புதிய வெளிச்சத்திலும், புதியவைகளை இந்த நாளில் காணவேண்டிய பிரகாரமாகவும் காண்கிறோம். நன்கு முன்னேறிய கிறிஸ்தவன் பரிசுத்த பருவதத்தில் தனது ஆண்டவரை ஜொ-க்கிறவராக புதிய பிரகாசத்தில் காண்கிறான். நம்முடைய ஐக்கியம் பிதாவோடும், குமாரனோடும் கூட பரிசுத்த மலையில் பரிசுத்தமாயிருப்பதாக. இப்படிப்பட்ட ஆசீர்வதமான அனுபவம் நமக்கு உண்டாவதாக. இந்த பூமிக்குரிய துன்பங்களிலெல்லாம் விடுபட்டு கிறிஸ்துவுடனே கூட பரலோகத்தில் அமர்ந்து இருந்து இராஜ்யத்தின் செய்திகளை அதிகமதிகமாகக் கேட்போமாக. R 4890:5

## மே 8

**அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. *(மாற். 4:39)***

தம்முடைய சிறுமந்தையாகிய தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு சில நேரங்களில் புயல் வீசத்தக்கதான காரியங்கள் நேரிடலாம். சில நேரங்களில் முழுவாழ்க்கையுமே புயலாக மாறலாம். அப்பொழுது அப்போஸ்தலனுடைய வார்த்தையை நினைத்துக் கொள்ள வேண்டும். சோதனைப் புயல்கள் வராதவர்கள் தேவனுடைய புத்திரராக எண்ணப்படுகிறதில்லை. தேவபுத்திரருக்கே இப்படிப்பட்ட காரியங்கள் அனுமதிக்கப்படுகின்றது. “நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால், தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள்

புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே." (எபி. 12:7) நாம் தேவனுடைய புத்திரராக இருந்தால் இந்த சோதனையும், பரீட்சையும் அவசியமே. அப்பொழுது தான் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைய முடியும். (கொலோ. 1:12) இந்த சோதனைகளெல்லாம் தேவனுக்குச் சமீபமாகக் கொண்டு செல்வதற்கே. நமக்கு தெய்வீக பாதுகாப்பும் பராமரிப்பும் தேவை என்பதை உணருவதற்கே. இந்தப் புயல்களி-ருந்தும் நமக்கு ஒரு மகத்தான ஆசீர்வாதம் காத்திருக்கிறது. R 5239:2

## மே 9

***தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம். (1 ராஜா. 8:56)***

பாவத்திலும், வருத்தத்திலும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து புலம்பிக் கொண்டிருக்கும் பொழுது ஆசீர்வதிக்கப்பட்ட மிகச் சிலரே எந்த வருத்தத்திலும் துன்பத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக பாவத்தின் பலன்களை அனுபவிக்கும் போது சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து பாடக்கூடியவர்களாயிருப்பார்கள். இந்த துன்பத்திலும் இன்பம் காண்கிறதற்கு இவர்களிடம் உள்ள ரகசியம் தான் என்ன? 1. தேவனிடத்தில் ஒப்புரவாகுதலை அனுபவித்திருக்கிறார்கள். 2. தங்களுடைய சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். மீட்பராகிய கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினால் ஒப்புரவாக்கப்பட்டு விசுவாசத்தின் மூலம் கிறிஸ்து இயேசுவுக்கு சொந்தக்காரரானவர்கள். குறுகலான வழியைத் தெரிந்து கொண்டு, இடுக்கமான பாதையிலும் நடுக்கமின்றி, நல்ல ஆயனின் வாசல் வழியே பிரவேசிப்பவர்கள். தங்கள் சுயசித்தத்தை விட்டுவிட்டு தங்களால் இயன்ற மட்டும் தேவசித்தத்தை நிறைவேற்ற உறுதிபூண்டு வாக்குத்தத்தம் செய்தவர்கள். R 4892:5

## மே 10

***நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரி. 3:16)***



ஆலயமென்கிற வார்த்தை சபைக்கு பொருந்துவதற்குப் பல உவமைகளால் சொல்லப்படுகிறது. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்தாவியின் ஒரு ஆலயமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு சபையும் பரிசுத்த ஆலயமாகக் கருதப்படுகிறது. திருச்சபை முழுமையாகக் கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு பரலோக நிலைமைக்கு மாற்றப்படும் பொழுது தேவனுடைய ஆலயமாக மாறும். அப்பொழுது தேவன் அவர்களில் வாசமாயிருப்பார். இன்னொரு உவமையில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜீவனுள்ள கல்லாக வருங்கால மாபெரும் ஆவிக்குரிய ஆலயத்திற்கு ஏற்றதாக செதுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு அந்த இடத்தில் வைக்கப்படுவதற்கு ஆயத்தமாக்கப்படுகிறான் என்று சொல்லப்படுகிறது. முற்காலங்களில் ஆசாரிப்புக் கூடாரங்களில் மகா பரிசுத்த ஸ்தலத்தி-ருந்து செக்கினா என்ற ஒளி தேவபிரசன்னத்தைக் காண்பிப்பது போல தற்காலத்திலும் ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டவர்கள் ஆவிக்குரிய வழிகளிலே நடந்து கர்த்தராகிய இயேசுவின் அன்பிலே நிலைத்திருந்து கடைசிவரை கீழ்ப்படிந்து இந்த மகிமையான ஒளியைப் பெற்றுக் கொள்வார்கள். R 5831:5

## மே 11

***வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம். (அப். 20:35)***

மற்றவர்கள் நன்மைக்காகத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்த நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் காட்டிலும் தன்னைத்தான் வெறுப்பதற்கு வேறு முன்மாதிரி கிடையாது. அவர் ஆவிக்குரிய சுபாவத்திலே மகிமையிலும் கனத்திலும் ஐசுவரியமுள்ளவராயிருந்தார். அதனால் தான் நமது நிமித்தமாக அவர் தரித்திரரானார். மனுக்குலத்தையே மீட்க மனித சாயலானார். இதன் முடிவாக தன் ஜீவனையே கல்வாரியில் ப-யிட்டு நாம் ஐசுவரியமடைய, தெய்வீக நன்மைகளைப் பெற, கிறிஸ்துவினால் உண்டாகும் தேவகிருபைகளை அடைய, தெய்வீக மேன்மையில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நாம் உடன் சுதந்திராகும்படி அருள் செய்தார். இப்படிப்பட்ட உன்னத உடன்சுதந்திரராக வேண்டுமானால் நாம் அவரைப் பின்பற்றி, அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய

ஆவிக்குள்ளாக ஜீவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். விசுவாச வீட்டாரிலே யாருக்காவது என்ன குறையாவது உண்டென்று கண்டால் (ஆவிக்குரியது மட்டுமல்லாமல் உண்ண, உடுக்கவும்) உடனடியாகக் குறைவை நிறைவாக்க நம்மால் ஆன யாவையும் செய்ய வேண்டும். R 5927:6

## மே 12

**முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு.... இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து...... *(எபி. 2:3,4)***

மனுக்குலத்திற்கு நித்திய ஜீவன் இல்லை என்பது மட்டுமல்ல, கிறிஸ்துவையல்லாமல், நித்திய ஜீவனடைய வேறு நம்பிக்கையான வழியும் இல்லை. எனவே, கிறிஸ்து முதலாவது வரவேண்டியதாயிருந்தது. அவர் வந்து ஒப்புரவாக்குத-ன் ஊழியத்தைச் செய்து கடந்த கால தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும்படியான காரியத்தைச் செய்ததால் நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. கடந்தகால ப-களில் நிழலான அநேக ப-கள் செலுத்துப்பட்டு வந்திருந்தும், இரத்தம் சிந்துத-ல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது என்பதால் மெய்யாகவே கர்த்தராகிய இயேசு தாமே ப-யாகிப் போனதால் நிஜமான ப- நிறைவேற்றி முடிக்கப்பட்டது. நிழலான ப-கள், சர்வாங்க தகனப-கள் முடிவுற்றன. கர்த்தராகிய இயேசு தன்னுடைய இரத்தம் சிந்துதல் மூலமாக நித்திய ஜீவனையும், சாகாமையையும் வெளியரங்கமாக்கினார். நித்திய ஜீவன் ஆயிரவருட அரசாட்சியில் உலகிற்கு கொடுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. அவருடைய மணவாட்டி, சிறுமந்தை, உடன் சுதந்திரர் என்று அழைக்கப்படும் அவருடைய திருச்சபையார் சாகாமையைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் இதற்கு முன்பு யாராலும் வெளிப்படுத்தப்படவில்லை. இவைகள் சந்தேகமாக தெளிவில்லாமல் பலரால் விவரிக்கப்பட்டிருந்தது. நம்முடைய மீட்பராகிய கிறிஸ்து என்னும் மாபெரும் போதகரால் தேவன் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற மீட்பு இத்தகையது என்று இப்பொழுது விளங்குகிறது. இருளி-ருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரை நம்முடைய இதழ்களாலும், இதயத்தாலும் போற்றிப் பாடுவோமாக. அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தால் பிரதிஷ்டையின் போது நாம் புதிய ஜீவனுக்கென்று பிறந்தவர்களாகி அவரால் அவர் மூலமாகப் பிதாவாகிய தேவனின் வல்லமையோடு அவருக்குரிய கனம், மகிமை, சாகாமை இவற்றில் பங்கு பெறச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். R 3795:5



## மே 13

**உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்கு போதித்தருளும். *(சங். 119:66)***

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற எவரும் தாங்கள் முழு அபிவிருத்தி அடைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. தேவனுடைய நீதியையும், அன்பையும், நியாயத்தையும் குறித்து எனக்கு போதனை செய்யவேண்டுவதில்லை என யாரும் சொல்லமுடியாது. ஆனால் என் சகோதரருக்கு அந்த போதனைகள் அவசியம் என்று சிலர் சொல்லக்கூடும். நாம் அவ்வாறு சொல்லாமல் மற்ற சகோதரரிடத்தில் தவறு இருக்கிறது என்று சொல்வதை விட **என்னிடத்திலே தவறு உண்டென்று எண்ணுவதே ஆவிக்குரிய சகோதரனின் அடிப்படை சிந்தனையாக இருக்க வேண்டும்.** அப்பொழுது அவர்கள் தவறே செய்வார்களானாலும் அந்தச் சகோதரன் தவறு செய்வதாகத் தோன்றுகிறது. அவருக்காக நான் வருந்துகிறேன். ஒருவேளை அது தவறு என்று அவர் அறியாம-ருக்கக்கூடும். ஒருவேளை நானே தவறாக எண்ணியிருக்கக்கூடும். நான் சிந்திக்கிறபடி அவர் சிந்தித்திருந்தால் வேறுவிதமாய்ச் செய்திருப்பார். எனவே, நான் அவரை நியாயந்தீர்க்காமல், சர்வவல்லமையுள்ள தேவன் தம்முடைய தவறாத நீதியால் நியாயந்தீர்ப்பாராக. ஆதலால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும். *(1 கொரி.4:5)* R 5604:2

## மே 14

**தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார். *(2 கொரி. 5:19)***

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார். சுவிசேஷயுகத்தில் அவருடையவர்களாகின்ற ஒவ்வொருவருக்காகவும் தெய்வீக நீதியை நிறைவேற்றினதிநிமித்தம் நியாயபிரமாணத்தின்படி விழுந்துபோன முழு மனுக்குலத்தின் பலவீனங்களுக்காக தம்மை ஒப்புக் கொடுத்தார். ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்; நியாயப்பிரமாணத்தின் நீதி கிறிஸ்து மூலமாய் நிறைவேற்றப்பட்டுவிட்டது. நாம் கிறிஸ்துவுக்குள் இருப்போமானால் மாம்சத்தின்படி நடவாமல் ஆவிக்கேற்றபடி நடக்க வேண்டும் என்கிறார். நமது மீட்பராகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்கள் நம்மேல் சுமத்தப்பட்டு நமது மாம்சீக அபூரணம் எல்லாம் மூடப்பட்டன. இரண்டாவதாக நமது சரீரம் அர்ப்பணிக்கப்பட்டு, அதனிமித்தம் நீதிமானாக்கப்பட்டு ப-யிடப்பட்டதினிமித்தமாக நம்முடைய சரீரங்களெல்லாம் மரித்து புதிய ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றதாக எண்ணப்படுகிறது. ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டதி-ருந்த அழிவுக்குரிய நம்முடைய சரீரங்களெல்லாம் புதிய சிருஷ்டியாகக் கருதப்பட வேண்டும். பழைய மனித சரீரமாக அல்ல. ஏனெனில் அது ப-யிடப்பட்டுவிட்டது. புது சிருஷ்டியின் ஊழியனாக மாற்றப்பட்டது. இன்னும் மனித சரீரத்தில் இருப்பதினால் (தற்கால ஜீவ முடிவு பரியந்தம்) நீதியின் சால்வை கொடுக்கப்பட வேண்டும். இதைச் செய்கிறவர் நம்முடைய இரட்சகர். R 5918:3

## மே 15

**உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து..... *(உபா. 5:9)***

தேவன் வைராக்கியமுள்ளவராயிருப்பது போல மனிதனும் தேவனுக்குரிய காரியங்களில் அவர் வெறுக்கக்கூடியதை வெறுத்து, சினேகிக்கக் கூடியதை சிநேகித்தால் அது தேவபார்வையில் விலையேறப் பெற்றதாயிருக்கும். **தேவன் பாவத்தை வெறுக்கிறார். பாவியை வெறுக்கிறதில்லை.** நாமும் அதுபோலவே இருக்க வேண்டும். தேவன் நீதியில் கண்டிப்பாய் இருக்கிறார். அதனால் பாவிக்கு நீதியான தண்டனை கிடைக்கிறது. நாம் தேவனையல்லாமல் வேறே தெய்வ வணக்கமுடையவர்களாயிருந்தால் அவர் நம்மீது எரிச்சலுள்ளவராயிருப்பார் என்று உணர வேண்டும்.



தகாதவிதமாய் எரிச்சலாயிருந்தால் கசப்பு போன்ற விழுந்துபோன மனித குணங்களுக்கு வழி நடத்தும். தேவன் தம்மைத்தாமே எரிச்சலுள்ள தேவன் என்று சொல்லுகிறதின் காரணம் நம்முடைய நம்பிக்கை, மதிப்பு, நம்முடைய சிந்தனை முழுவதும் அவருக்குள் இருக்க வேண்டுமென்பதேயாகும். நாம் எல்லாவற்றிலும் அவரைப் போலவே வைராக்கியமுள்ளவர்களாக அவரது சித்தம் நம்முடைய வாழ்வின் எல்லாப் பணிகளிலும் காணப்பட வேண்டும். சர்வவல்லமையுள்ள தேவனுடைய இந்தக் குணம் சுயநலம் என்று எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், தற்கால ஜீவியத்தில் நம்முடைய ஒவ்வொரு அலுவல்களிலும், பணிகளிலும் நமக்கு வெற்றியைத் தருகிறார். வருங்காலத்திலும் தம்மை நேசிப்பவர்களுக்கு, தம்மிடத்தில் உண்மையாயிருப்பவர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணினபடியே ஆயத்தம் செய்து வழங்கச் சித்தமாயிருக்கிறார். R 4789:2

## மே 16

**சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னால் உங்கள் எரிச்சல் தணியக்கடவது. *(எபே. 4:26)***

கோபத்தைத் தூண்டக்காரணம் எதுவாயிருந்தாலும் அதை சீக்கிரமாக சரிசெய்து கொள்ள வேண்டும். கோபத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது. கோபமும், கடும் சொல்லும் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் இவைகள் நித்திய வெறுப்பை உண்டு பண்ணக்கூடியவை. கோபம் என்ற வார்த்தையே கோபாக்கினை என்று சொல்லும்படி ஆகிவிடக்கூடாது. அபூரண நிலைமையில் விழுந்தபோன நிலைமையில் கோபாக்கினை என்பது மிகவும் ஆழமானது. சீக்கிரத்தில் தீர்ந்துபோகாதது, பழிக்குப்பழி வாங்கக்கூடியது. மற்றவர்களைப் பற்றித் தீமையான காரியங்களைப் பேசுவது அதைவிடத் தீமையானது. அநேகர் இவ்வித பலவீனத்தினால் நிலைதடுமாறி தங்களுடைய அன்றாட வாழ்வில் தெய்வீக வழியாகிய அன்பின் வழியைவிட்டு வெகுதொலைவில் போய்விடுகிறார்கள். அவர்கள் மற்றவர்களுடைய காரியங்களைப் பற்றிப் பேசுவதை விரும்பமாட்டார்கள். மற்றவர்களையும் தங்களைப் போல நடத்தாதவர்கள் ஜீவ வழியில் இல்லாதவர்கள். இப்படிப்பட்ட செயல்களைக் கர்த்தருடைய பிள்ளைகள்

செய்யக்கூடாது. தேவனுடைய பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடியவர்கள், தேவனுடைய பரிசுத்த உடன்படிக்கையின் ஜனங்கள் தங்களை விட மற்றவர்களை மேன்மையாக நடத்துவார்கள். R 5974:1

## மே 17

***காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு...... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரி. 4:17,18)***

இவைகளின் பொருளென்ன? இவைகளைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ஆவிக்குரிய பார்வையில் பார்க்கிறார். அவர் பூமியின் கவர்ச்சிகளையும் பார்க்கிறார். ஆனால் ஆவிக்குரிய பார்வையினால் காணக்கூடாதவைகளைக் காண்பதால் பூலோகக் கவர்ச்சிகளெல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது. விசுவாசத்தின் கண்களால் பரலோகத்தின் தேவனையும் மகிமையடைந்த கர்த்தராகிய இயேசுவையும், பரம சேனைகளையும், வரயிருக்கின்ற இராஜ்யத்தின் கனம், மகிமை, சாகாமையையும் கண்டார். விசுவாசத்தினாலே அவர் மாபெரும் ஆயிரவருட அரசாட்சியையும், அந்த இராஜ்யத்தில் தனக்குள்ள சுதந்திர பாகத்தையும் போதகரும் குருவுமாகிய இயேசுவுடன் உடன் சுதந்திர பாகம் பெறுவதற்குரிய அழைப்பையும் கண்டார். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தார். அந்த குருவின் கொடியின் கீழ் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். உலகிலுள்ள எல்லாக் காரியங்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வரப்போகிற இராஜ்யத்தின் மகிமைக்கு முன்பாக ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்பதை உணர்ந்திருந்தார். தேவனுடைய வசனத்தின் மேல் அவருடைய நம்பிக்கை இருந்தது. R 5951:6

## மே 18

***மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபி. 7:25)***



சுவிசேஷ யுகம் முழுவதுமாக கர்த்தருடைய ஜனங்கள் விசுவாசக் கண்களால் தங்கள் மத்தியஸ்தராகிய மகா பிரதான ஆசாரியர் வெளிப்பட்டுத் தங்களுக்காகப் பிதாவினிடத்தில் வேண்டிக் கொண்டதைக் கண்டார்கள். அவர் பிதா நியமித்த காலத்திற்காகக் காத்திருந்து, இரண்டாம் வருகையில் வந்து, தம்முடைய சபையை கூட்டிச் சேர்த்து, அவர்களுக்கு மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களையும், உலகிற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இழந்தவைகளை திரும்பக் கொடுத்த-ன் ஆசீர்வாதங்களையும் கொடுப்பதைக் கண்டார்கள். இவைகளெல்லாம் உலகத் தோற்ற முதல் தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டவைகள். கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் தம்முடைய ப-யை நிறைவேற்றி முடித்தது போலவே, தன்னுடைய ப-யை நிறைவேற்றி முடிப்பவர்களின் விசுவாச கண்களுக்கு இந்த ஆசீர்வாதங்கள் முன்னாதகவே தோன்றும். இனி இவர்கள் தேவனுக்கு முன்பாக அந்நியரும் புறஜாதியாருமாய் இராமல், நேரடியாக அல்ல, மத்தியஸ்தர் மூலமாக, பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகிறார்கள். நமது மத்தியஸ்தரும் நமக்காக வேண்டுதல் செய்கிறவருமான கிறிஸ்துவின் மூலமாகத் தேவனுக்கு முன்பாக நிற்கவும், கிறிஸ்துவின் மூலமாகவே பிதாவினிடத்தில் எதையும் கேட்கவும் தயை பெற்றவர்களாகிறார்கள். R 2823:4

## மே 19

***இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தி-ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கப்படக்கடவது. (மத். 5:16)***

இந்தப் பாடத்தில் வருகின்ற செய்தியின்படி இந்த உலகம் கர்த்தராகிய இயேசுவின் நற்செய்தியை அவர் மூலமாகவோ அவருடைய பின்னடியார் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளும் என்று உறுதிப்படுத்துகிறதில்லை. ஆகவே இருள் அதைப்பற்றிக் கொள்ளாவிட்டாலும் கிறிஸ்து பிரகாசித்தது போல வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்ய வேண்டும். தீமை செய்கின்ற நோக்கமுடையவர்கள் வெளிச்சத்தையும் எதிர்ப்பார்கள். அது

போலவே இந்தச் செய்தியை வேறுவிதமாக ஏற்றுக் கொள்பவர்களும் இருப்பார்கள். எனவே, நம்முடைய நற்கிரியைகளின் மூலம் நமது வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கப்படக்கடவது. சிலர் நமது கிரியைகளை சரியாகவும் சிலர் தீங்காகவும் கணிக்கலாம். நம்முடைய கர்த்தர் வந்தபொழுது அவரை எதிர்த்தவர்கள் சாமானியமான மக்களல்ல. தேவஜனங்கள் என்று சொல்-க் கொண்ட பரிசேயரும் சதுசேயரும் ஆகும். அவர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்ட வழியின்படியே கூட நடவாதவர்கள். தங்கள் குற்றங்கள் ரூபகாரப்படுத்தப்படுவதை உணர்ந்தார்கள். இயேசுவின் போதனை மகா உன்னதமானது என்று உணர்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. R 4746:3

## மே 20

**பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே. (கொலோ. *3:9,10*)**

சரியான அறிவினாலும், சத்திய அறிவிலுமே புதிய சிருஷ்டியானது புதுப்பிக்கப்பட்டுப் புத்துணர்வு அடைந்து கட்டப்பட்டு பலப்படுகிறது. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக முட்டாள்தனமாயிருக்கிறது. பழைய மனித சிந்தையோ இவ்வுலகத்திற்குரிய ஞானமாயிருக்கிறது. புதிய சிருஷ்டிகள் பெற்றுக் கொள்வதோ தேவ ஞானமாயிருக்கிறது. புதிய சிந்தை சத்திய அறிவால் படிப்படியாக அபிவிருத்தியடைந்து பலப்படுகிறது. புதிய மனம், புதிய பலம் பெற்று புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கி புதிய சிருஷ்டியின் நோக்கத்தை அடைகிறது. இந்த அறிவோ பூமியி-ருந்து வராமல் பரத்தி-ருந்து வருவதாயிருக்கிறது. வேதாகமத்தில் எத்தனை அதிகாரங்கள் இருக்கிறது? எத்தனை புத்தகங்கள் இருக்கிறது? எத்தனை வசனங்கள் மனப்பாடமாய் மேற்கோள் காட்டமுடிகிறது என்பது முக்கியமல்ல. ஆனால் வாழ்வில் தெய்வ சித்தப்படி என்னென்ன வழிகளில் நம்முடைய நடைமுறைகள் இருக்கிறது என்பதே முக்கியம். தெய்வசித்தம் என்னவென்பதைத் தெளிவாக அறிந்திருப்பதும் தேவனுடைய சித்தத்திற்கும் கீழ்படிவதுமே அவசியம். தேவனால் பேசப்பட்ட காரியங்களுக்கு எவ்வளவு



முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதைப் பொறுத்தே நம்முடைய அறிவு அபிவிருத்தியடையும். பூமிக்குரிய காரியங்களைக் காட்டிலும் பரத்துக்குரிய காரியங்களில் எவ்வளவாய் நம்முடைய நோக்கம் இருக்கிறதோ அவ்வளவாய்த் தெய்வ அறிவும் தேவாசீர்வாதமும் பெருகும். R 4894:6

## மே 21

**அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான். (அப். *10:43*)**

நம்முடைய பாவங்கள் முடப்படாமல், மன்னிப்பைப் பெறாமல் வேறுவழியில் நாம் தேவனை நெருங்கமுடியாது. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேல் வைக்கும் விசுவாசத்தைத் தவிர வேறெந்த வழியிலும் பாவமன்னிப்பைப் பெறமுடியாது. கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமல் வேறெந்த வழிகளிலும் மீட்பு கிடையாது. புறஜாதியாரும் அறியாமையில் கிறிஸ்துவைப் பற்றித் தெரியாமல் மீட்புக்குள் வரமுடியாது. சரித்திர நாயகனாகிய கிறிஸ்துவைப் பற்றிய அறிவில்லாமல் வேறெந்த தத்துவங்களினாலும் மீட்பை அடையமுடியாது. எவ்வித நீதியை நடப்பித்தாலும் மீட்படைய அது போதுமானதாயிராது. தேவனால் நியமிக்கப்பட்ட பரிசுத்தமான ஒருவராகிய புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரையல்லாமல் மீட்பைப் பெறமுடியாது என்பதை மேலே கண்ட வசனத்தி-ருந்து உணரலாம். அவரில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. தேவனுடைய முழுதிட்டமும் தெய்வீக நீதி, ஞானம், அன்பு, வல்லமை இவைகளை கனப்படுத்துகிறது. மேலும் இது பிதாவாகிய தேவனோடு தொடர்பு உண்டாக்க ஒரே வழிஇயேசு கிறிஸ்து தான் என்று அவரையும் கனப்படுத்துகிறது. அவர் மூலமாகப் பிதாவை அறிந்து ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் யாவரும் நித்திய ஜீவனை அடைவார்கள். இந்த அறிவின் மூலம் இப்பொழுது இல்லையானாலும் வருங்காலத்தில் ஆயிரவருட அரசாட்சியில் அநேக மனுக்குல மக்கள் இந்த அறிவுக்கு உட்படுவார்கள். R 2997:4

## மே 22

**ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச்**

***சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபி. 12:1)***

ஒவ்வொருவரும் பந்தய மைதானத்தில் இடுக்கமான வாசல் வழியாய் எப்படி ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்களைத் தாங்களே சோதித்துப் பார்ப்பார்களாக. மற்றவர்களை விடத் தங்களுடைய இருதய பலவீனங்களை, சரீர பலவீனங்களை நன்றாக அறிவார்கள். இந்த ஓட்டப்பந்தயத்தில் தாங்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதை பந்தய ஓட்டத்தில் மெய்யாகவே ஓடிக்கொண்டிருக்கிறார்களா என்பதையும் அப்படிப்பட்ட அழைப்புக்குத் தெரிந்துக் கொள்ளப்பட்டு ஓடிக்கொண்டிருப்பதில் பாக்கியமும் மகிழ்ச்சியும் அடைகிறார்களா என்பதையும் சிந்திக்க வேண்டும். நாம் அப்படிப்பட்ட ஓட்டத்திலே முதல் சுற்றை ஓடியிருக்கிறோம் என்ற சந்தோஷம் உண்டாகுமானால் நாம் மகிழ்ந்து அதிக உற்சாகத்துடன் இன்னும் வேகமாக ஓடமுயற்சி செய்வோமாக. இரண்டாவது சுற்றை நாம் கடந்திருப்போமானால் நாம் இன்னும் மகிழ்ச்சியோடு தொடர்வோமாக. இவ்வளவு தூரம் வந்துவிட்டோம் என்று அசதியாயிருந்துவிடக்கூடாது. நாம் மூன்றாவது முடித்துவிட்டோம் என்று எண்ணுவோமேயானால் அப்பொழுது நாம் பரிபூரண அன்பிற்கு அடையாளமான நிலையில் விரோதிகளையும் நேசிக்கக்கூடிய நிலைமையில் மிகுந்த சந்தோஷமடையக் காரணமுண்டு. இந்த நிலையில் இறுதிவரை இதே விசுவாசத்தில் நிலைத்திருந்தால் வெற்றி நமதே. பரிசும் நமதே. ஆயினும், அப்போஸ்தலர் சொல்லுவது போல, “சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க” எல்லாச் சோதனைகளையும் சந்திக்கத்தக்கதாக சர்வாயுதவர்க்கத்தையும் தரித்தவர்களாக நிற்கச் சொல்லுகிறார். அதனால் நாம் எவ்விதத் தீமையையும் எதிர்த்து நிற்கத் திரணியுள்ளவர்களாவோம். அப்பொழுது எல்லா வெகுமதியையும் அளிக்கிறவரும் எல்லாவற்றையும் காண்கிறவருமாயிருக்கிறவர், “நல்லது, உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பாயாக” என்பார். R 2755:5



## *மே 23*

***எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். (ரோம. 4:7)***

இந்தப்பாடம் படிக்கின்றபொழுது நம்முடைய நீதியின் வஸ்திரம் புதிய சிந்தையின் பாவத்தை மூடாது என்பதை நினைவில் வைக்க வேண்டும். புதிய சிந்தையுள்ளவர்கள் பாவமே செய்யக்கூடாது. விழுந்தபோன மாம்சத்தில் பரிபூரண நீதியில்லை. புதிய சிந்தையுள்ளவர்களானவர்கள் பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவஞ்செய்தால் அதை மூட எந்த நீதியின் வஸ்திரத்தாலும் முடியாது. அது புதிய சிந்தையுள்ள புதிய சிருஷ்டியாக இருக்கமுடியாது. ஆதாமின் மூலமாகத் தொடர்ந்து வருகின்ற பாவங்கள் தான் மூடப்படுகிறது. ஆனால் புதிய சிருஷ்டியோ தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டாம் மரணமே. எனவே புதிய சிந்தையில் அபூரண சரீரத்துடன் புதிய சிருஷ்டிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நீதியின் வஸ்திரத்தோடு மணவாட்டியின் ஆடையையும் தரித்தவர்களாய் தனக்கு நியமிக்கப்பட்ட நாயகனாகிய கிறிஸ்து இயேசுவுக்கு முன்பாக நேர்ப்பார்வையில் ஒருவரையொருவர் சந்திக்கும் வண்ணமாக எல்லாப் பூரண பொருத்தங்களோடு இருக்கிறோமா என்பதைச் சிந்தித்துக் குறைவாய் இருப்பதை நிறைவு செய்ய வேண்டும். R 4842:4

## *மே 24*

***நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினாலே அவனைத் தாங்குகிறார். (சங். 37:23,24)***

சுயசித்தத்தை விட்டுவிட்டு தெய்வசித்தத்திற்கு தன்னை முழுமையாய் ஒப்புக் கொடுக்கிற மனுஷன் தேவனுடைய பிள்ளையாக மாறுகிறான். அவனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். யார் தங்கள் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவிக்கிறார்களோ அவர்களுடைய யோசனைகளெல்லாம் தேவனுடைய நீதியில் நிலைநிறுத்தப்படும். மனிதன் தன் மனதில்

யோசனையின்படி நடவாமல் கர்த்தருடைய பார்வையில் பிரியமான காரியங்களை செய்யும் பொழுது அவனுடைய நடைகளும் அவனுடைய வழியும் அவருக்குப் பிரியமாயிருக்கும். அவர்கள் விழுந்தாலும் தள்ளுண்டு போகாமல் கர்த்தருடைய கரத்தினாலே தாங்கப்படுவார்கள். கர்த்தருடைய வழியை அறிந்தவர்கள் அதிலே நடக்கவும் அவர்களுடைய பலவீனத்திலே தாங்கவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய சிருஷ்டியாக ஜீவிக்கத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் தங்கள் நல்ல மனசாட்சியின்படி உடன்படிக்கையின்படி நடக்க முயற்சி செய்யும் பொழுது அவர்களுடைய எல்லா பலவீனங்களையும் தாங்குகிறவராகி அவர் அவர்களுடைய பலவீனத்தையே பலமாக மாற்றுகிறார். நீதியின் பாதையில் நிலைநிறுத்துகிறார். ஆவியின் கனிகளால் தமது அருங்குணங்களால் அவர்களை அலங்கரிக்கிறார். தாம் உருவாக்கப் போகும் இராஜ்யத்தில் தமது குமாரனுக்கு ஒப்பான உடன் சுதந்தரராயிருக்கக்கூடிய நிலைக்கு ஆயத்தமும் தகுதியும் உண்டாகச் செய்கிறார். R 3156:6

## மே 25

***கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். (எபே. 6:10)***

தேவ ஜனங்களுக்கு வேண்டிய புத்திமதியை அப்போஸ்தலனாகிய பவுல் எந்தச் சூழ்நிலையிலும், எல்லாக் காலங்களிலும், எந்த நிலைமையிலும் கர்த்தருடைய சத்துவத்தின் வல்லமையினாலே பலப்படும்படி கூறுகிறார். சிம்சோன் அவனது காலத்தில் இயல்பான மனுஷனாக இருந்தான். அவனுக்கும் அது பொருத்தமாக இருந்தது. இன்று கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக உன்னதமானவரின் குமாரர்களாக, ஊழியக்காரர்களாக இருக்கும் நமக்கும் அது பொருந்தும். நாம் சிம்சோனையும் முற்பிதாக்களையும் திரும்பிப் பார்த்தால், அப்போஸ்தலர் விவரித்ததுபோல, தேவனிலும் அவரது வாக்குத்தத்தங்களிலும் விசுவாசம் வைத்து, பொறுமையோடு ஜெயங்கொண்டதற்கு அவர்களது குணலட்சணத்தின் வ-மையே காரணம் என்பதை உணர்வோம். நாமும் இப்படித்தான் இருக்க வேண்டும். அவர்களைக் காட்டிலும் நாம் எல்லாவற்றையும் சகித்து கிறிஸ்துவுக்கு நல்ல போர்வீரர்களாக, சத்தியத்தின் வீரர்களாக, நீதியின் வீரர்களாக, பாவம், தீமை, தவறு, வஞ்சகனான தந்திரமுள்ள எதிராளியையும் எதிர்த்து போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். அவன் நம்மையும் முழு உலகத்தையும் பிசாசின் போதகங்களால் வஞ்சித்து இருண்ட யுகத்தில் அவர்கள் மனதை குருடாக்கினான். தற்போது நமது கண்கள் தேவகிருபையால் அப்போஸ்தலர் ஜெபத்திற்கிசைய அதிகதிகமாக திறக்கப்பட்டிருக்கின்றன. “சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் ... உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.” R 4089:4



## மே 26

***கர்த்தர் நம்முடைய ராஜா. அவர் நம்மை இரட்சிப்பார். (ஏசா. 33:22)***

கர்த்தருடைய ஜனங்களுக்கு நியாயமும் அவருடைய வழிகளும் அவருடைய ரட்சிப்பின் திட்டங்களும் ஆழமாக அவர்களுடைய இருதயத்தில் பதித்திருக்க வேண்டும். உலகமும் உலகைச் சேர்ந்தவர்களும் தங்களுக்கு சீசரைத் தவிர வேறு ராஜா இல்லை என்று கூக்குர-ட்டாலும் கர்த்தருடைய ஜனங்களுக்கும், இஸ்ரயேலருக்கும் இதற்கு நேர் எதிரிடையாக, கர்த்தரே ராஜா; அவர்களுக்கு எல்லாம் அவரே. தேவகட்டளைப்படி நாம் பூமிக்குரிய அதிகாரிகளுக்கு மதிப்புக் கொடுப்போம். ஆனாலும் தேவனுக்கு விரோதமான எந்த காரியத்திலும் கீழ்ப்படியமாட்டோம். நம்முடைய ராஜாவாகிய தேவனால் நியமிக்கப்பட்ட இம்மானுயேல் நம்மோடே இருந்து நமக்கு வழிகாட்டுவார். கிறிஸ்துவே அவர். அவர் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருந்தால் நம்முடைய நடக்கைகளிலும் வார்த்தைகளிலும் நாம் எங்கிருந்தாலும் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பது சுலபம். நாம் அவரை மறுத-த்தால், அவரும் நம்மை மறுத-ப்பார்; நாம் அவரை அறிக்கையிட்டால் அவரும் நம்மை பிதாவின் முன்பாகவும் பரிசுத்த தூதர்கள் முன்பாகவும் அறிக்கையிடுவார்; இறுதியாக நம்மை மீட்டு தமது சரீரமாக, முன்பே வாக்களித்தபடி அவருடைய சுதந்தரத்தில் பங்குகொண்டு பூமியின் குடிகளையெல்லாம் ஆசீர்வதிக்க வேண்டிய நிலைமைக்கு உயர்த்துவார். R 3219:4

## மே 27

**கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். *(சங். 122:1)***

உண்மையான ஆலயமும், தேவனுடைய வீடுமாகிய, குமாரர்களின் வீட்டின் உறுப்பினராக இருப்பதற்குரிய அழைப்பைக் கேட்டவர்களும், அந்த அழைப்பை தங்கள் நல்ல, நேர்மையான உள்ளத்தில் பெற்றுக் கொண்டவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். "கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்." சங்கீதக்காரன் குறிப்பிடுகிற இன்னொரு கூற்றையும் இங்கு இணைக்கிறோம். "நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." பூமிக்குரிய வீடுகளில் அல்ல, பூமிக்குரிய ஆலயங்களிலல்ல, தற்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற ஆவிக்குரிய வீட்டில், பரலோக ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாயிருப்பவர்கள் அங்கத்தினராயிருக்கிறவர்கள் என்றென்றும் தேவனுடைய வீட்டிலே வசிப்பார்கள். அதை விட்டு வெளியே வந்தால் அதை இழப்பவராவார்கள். ஏனெனில் கர்த்தர் அவர்களை வீட்டின் தூண்களாகவும் எல்லா ஜனங்களுக்கும் சத்தியம் மற்றும் கிருபையின் ஊழியர்களாகவும் அறிவித்திருக்கிறார். இந்த பாடத்தின் வசனம் உலகத்தாருக்கு ஆயிரவருட யுகத்திற்கு பொருத்தமாயிருக்கிறது. மனுக்குலம் அனைத்தும் ஆவிக்குரிய ஆலயத்திற்கு வரும்படி, கிறிஸ்து மூலமாக பிதாவினிடத்தில் வரும்படி, ஆராதிக்கும்படி அழைக்கப்படுவார்கள். இந்த செய்தியைக் கேட்டுக் கீழ்ப்படிபவர்கள் உண்மையில் சந்தோஷப்படுவார்கள். இந்த சந்தோஷத்தைக் குறித்துதான் தூதர்கள் இயேசு பிறந்த போது, "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று கூறினார்கள். R 3284:4

## மே 28

**கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான். *(சங். 40:4)***

நாம் கர்த்தருடைய ஜனங்களாவதற்கு உலகைவிட்டு விடுவோமேயானால் அவர்மேல் வைத்த விசுவாசத்தினால் அவருடைய அனுபவ பாடங்களை நாமும் கற்றுக் கொண்டு



வாழ்வில் அவைகளை நமது அனுபவத்தில் கொண்டுவருவோமேயானால் அப்பொழுது கர்த்தருடைய சித்தத்தை செய்ய நம்முடைய சித்தத்தை முழுமையாக அர்ப்பணம் செய்ய ஆயத்தப்பட்டு ப-யினாலே அவரோடு உடன்படிக்கை செய்தவர்களாவோம். அவருடைய வழிகாட்டுதலை பின்பற்றி அவர் நமக்காக வைத்திருக்கும் சுதந்தரத்தை பெற்றுக் கொள்வோம். அத்தகைய விசுவாசம் நம்மில் இருக்குமானால் தீர்க்கதரிசியான தாவீதைப் போல "நான் பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்" என்று சொல்லுவோம். இந்த சுவிசேஷயுகத்தில் இப்படிப்பட்டவர்கள் தான் கர்த்தரிடத்தில் வழி நடத்தப்படுவார்கள். தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்பவர்கள் தற்காலத்தில் எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சகிப்புத் தன்மையோடு அவைகளை எதிர்த்து மேற்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களே ஆயிர வருட அரசாட்சியில் முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கப் போகிறவர்கள். எனவே நாம் இந்த விசுவாசப் பாடத்தை நன்றாக கற்றுக் கொள்வோமாக. கர்த்தரில் நிலைத்திருக்கிற நம்பிக்கையைக் கொண்டு நாம் பெற்ற நம்முடைய அனுபவங்கள் ஆசீர்வாதமானதாக இருக்கும். நாம் எவ்வளவாய் நம்முடைய விசுவாசத்தை நிரூபிக்கிறோமோ அவ்வளவாய் தேவன் நம்மை உயர்த்துவார். R 3064:6

## மே 29

**பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று. *(ரோம. 5:20)***

நம்முடைய நம்பிக்கைக்கெல்லாம் ஆதாரமான திறவுகோல் போன்ற வசனம் இது. நம்முடைய முதல் பெற்றோரிடமட்டும் பாவம் பெருகவில்லை. அவர்கள் வழி தோன்றிய எல்லாரிடத்திலும் பாவம் பெருகினது. அதற்கு ஏதுவான மரணத்தீர்ப்பும் நேர்ந்தது. ஆனால் தேவனுடைய கிருபை இதைக் காட்டிலும் பெருகினது. அதனால், அவர் கிறிஸ்துவின் மூலமாக பாவத்தின் சம்பளமாகிய மரணத்தையும் பரிகரித்து, விழுந்துபோன ஆதாமின் இனத்தையும் அது ஏதேனில் இழந்த எல்லாவற்றையும் திரும்ப சீர்பொருந்தும்படியாக தேவன் கிருபை செய்தார். அதற்கு மேலாக தேவகிருபை பெருகினது. இந்த உலக பாவிகளி-ருந்து ஒரு சிறிய

கூட்டத்தை தமக்கென தெரிந்துகொண்டு கிறிஸ்துவுக்கு மணவாட்டியாகும்படியும் உடன் சுதந்தரராயிருக்கும்படியும் தேவன் கிருபை செய்தார். பாவமாம்ச சாயலை உடையவர்களும், தெய்வீக கனமகிமை பெறும்படியாகவும் கிறிஸ்துவுக்கு ஒப்பாயிருக்கும்படியாகவும் கிருபை செய்தார். தூதர்கள், அதிகாரங்கள், வல்லமைகள், பேரிடப்பட்டிருக்கிற எல்லாவற்றிற்கும் மேலாக இவர்களை உயர்த்துவேன் என்று சொல்-ய தேவன் வாக்குமாறாதவர். பாவிகளாகிய நம்மை இவ்வளவு மேலான சிலாக்கிய பாக்கியத்திற்கு அழைத்த தேவனுடைய கிருபை எவ்வளவு பெரியது. நாம் எவ்வளவாய் பாவத்தி-ருந்தவர்கள் இப்பொழுதோ அவருடைய குமாரனுக்குள் இணைக்கப்பட்டவர்களாய் இருக்கப் போகிற நிலைமைக்காக, எப்பொழுதும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். நம்முடைய சொல்-லும், செய-லும் எல்லாவற்றிலும் நாம் தேவனுக்கு நன்றி பாராட்டுகிறவர்களாய் இருக்கத் தவறக்கூடாது. ஏனெனில் அவர் நம்மை இருளி-ருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்திருக்கிறார். R 2842:4

## மே 30

***சத்திய ஆவியாகிய அவர் வரும்பொழுது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோவா. 16:13)***

நம்முடைய கர்த்தருடைய வாக்குத்தத்தின்படியே கிறிஸ்துவின் அங்கமாகும்படி அர்ப்பணம் செய்த மெய்யான சபைக்கு அவர்களோடே தங்கித்தரிக்கும்படி பரிசுத்தாவி அவர்களுக்கு அருளப்பட்டது. நாம் எல்லோரும் அந்த ஆவியினாலே ஒன்று சேர்ந்து கிறிஸ்துவுக்கு சீடராகி கிறிஸ்து இயேசுவில், பிதாவோடு ஐக்கியப்பட்டிருக்கும் தலையாகிய கிறிஸ்துவோடே கூட சரீரமாக முழுச்சபையும் இணைய வேண்டும். இப்படி இணைவதற்கே பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்படவேண்டும். அப்படி ஆவியில் நாம் நிரப்பப்படும் பொழுது திவ்விய அருமையான வாக்குத்தத்தங்களை பெற்றவர்களாய் கிறிஸ்துவின் சரீரங்களாகி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்கு பாத்திரராகி உடன் சுதந்திரப்பாகத்தைப் பெற்று தெய்வ சுபாவத்திற்கு உள்ள ஆவிக்கேற்ற மாளிகையில் வாசம்பண்ண தேவ அனுக்கிரகம் ஏற்படும். R 2820:3



## மே 31

***நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம். (எபி. 10:39)***

இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் கிறிஸ்து இயேசுவுக்காக விட்டுவிட்டவர்கள் பின்னிட்டுப் பார்க்கக்கூடாது. நாம் தெரிந்துகொண்ட வழியின் மூலம் மிக உன்னதமான பரிசைப் பெற இந்த உலகத்திலுள்ளவைகளையும் நம்முடைய சுயசித்தத்தையும் விட்டுவிட்டு, கர்த்தரின் சித்தத்தைச் செய்ய அவரோடு அவரில் அவருடைய சிந்தனையில் நிலைத்திருந்து, அவருடைய ஆச்சரியமான பணியை நமக்கு நோக்கமாக நம் கண்முன்னே எப்போதும் வைத்திருக்க வேண்டும். உலகபாரங்கள், வேதனைகள், சோதனைகள் இவைகளெல்லாம் நம்முடைய ஓட்டத்திற்கு தடையாக இருக்கக்கூடும். ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் பாரமான யாவற்றையும் அப்பாலே எறிந்துவிட்டு நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமான இயேசுவை நோக்கிப் பார்க்கக்கடவோம். கிறிஸ்தவ அனுபவத்தின் துவக்கத்திலேயே நம்முடைய சுயசித்தத்தை விட்டுவிட்டவர்களாய் ஆட்டுக் குட்டியானவரையே தொடர்ந்து பின் செல்லத்தக்கவர்களாய் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவோம். நம்முடைய ஓட்டத்தை துவக்கிவிட்டோம். கிறிஸ்து இயேசுவுக்குள் துவங்கிய இந்த ஓட்டம் தடைபடாமல் இறுதிவரை உறுதியாய் நிலைத்திருக்க நாம் எல்லா முயற்சியும் செய்வதுடன் இதற்காக தேவ தயவை நாடி ஜெபிக்கவும் வேண்டும். R 3721:5

## ஜூன் 1

***கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். (சங். 55:22)***

தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றவர்கள் நெருக்கமான வழியிலும் இடுக்கமான வழியிலும் சென்று கொண்டிருக்கிறார்கள். கண்ணீர்விடக்கூடிய அனுபவங்கள் ஏற்பட்டாலும் முணுமுணுக்கக்கூடாது. அப்படிப்பட்ட வேளைகளில் நம்முடைய போதகரும், குருவுமாகிய கிறிஸ்துவைப் போல "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ"

எனக் கேட்க வேண்டும். கசப்பான சோதனை வேளையிலும் மோசேயைப் போல சரியான தேவவிசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் தேவனால் கொடுக்கப்பட்ட திவ்விய அருமையான வாக்குகளின்படி கசப்பையும், துன்பத்தையும், சாபத்தையும் இனிமையாக மாற்றுவார்கள். இஸ்ரலேயர்கள் வனாந்தரத்தில் கசப்பான தண்ணீரி-ருந்து ஏ-முக்கும் அதன் நிழலுக்கும் ஓய்வுக்கும் வழி நடத்தியது போல ஆவிக்குரிய இஸ்ரலேயர்களையும் அவர்களுடைய தகுதிக்கு மேலாக தேவன் சோதிக்கிறதில்லை. சோதனையை சகிக்கிறார்களா என்கிறதே தேவப்பார்வை, முழுமையாக சோதித்து மனமடிவடையச் செய்வது தேவ நோக்கமல்ல. R 5278:6

## ***ஜூன் 2***

***நீங்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய தகனப-என்னவென்றால்: நித்திய சர்வாங்க தகனப-யாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் ப-யிட வேண்டும். காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் ப-யிட வேண்டும். (எண். 28:3,4)***

நம்முடைய ப- குறைவுள்ளதும் அபூரணமானதாகவும் இருந்தாலும் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலமும் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவப-யாகவும் பிதாவகிய தேவனுக்கு செலுத்தப்படும் போது அது பரிசுத்தமும் பிழையற்றதுமாக ஏற்றுக் கொள்ளப்படும். *(ரோம.12:1; 1பேது. 2:5)* இயேசுவின் மூலமாக செலுத்தப்படுகிற ப- பரிசுத்தமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமானால் நம்முடைய ப- எவ்வளவு சிறியதாயிருந்தாலும் ப-க்குரிய பரிசு நமதே. நாம் செலுத்தும் ப- மனப்பூர்வமான ப-யாக இருக்க வேண்டும். அதில் எந்த சிறு சிறு பகுதியையும் எடுத்து வைக்கக்கூடாது. அது சர்வாங்கதகனப-யாகவும் இருக்க வேண்டும். முற்றுமாக பீடத்தில் சுட்டெரிக்கப்பட வேண்டும். குருவான கிறிஸ்துவின் ஆவியை உடைய எவரும் தங்களுடைய சிறிய கொடைகளை தங்களுக்கு என்று ஒளித்துக் கொள்ளாமல் தேவனுடைய ஊழியத்திற்கு செலுத்துவார்கள். நம்முடையது எல்லாம் மிகச்சிறிய காரியம். ஆனால், நாம் பெறுவதோ விலைமதிக்கமுடியாத மாபெரும் முத்து என்பதை



உணருவார்கள். அந்த முத்துதான் நித்திய ஜீவனும், சாகாமையுமான தேவ ஆசீர்வாதங்கள். R 1133:1

## ***ஜூன் 3***

***பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே. (எபி. 12:14)***

**பரிசுத்தம் என்பது ஒரு தாயத்து அல்ல. அதை நாம் சட்டைப் பையில் போட்டு வைப்பதற்கு;** அது விசேஷ நாட்களில் தரித்துக் கொள்ளும் உடையுமல்ல. பரிசுத்தம் என்பது ஒரு சாதாரண உலோகத்தை காய்ச்சி விரும்பிய நிலைக்கு கொண்டுவருவதற்கு ஒத்திருக்கிறது. அந்த உலோகத்தின் எல்லா பாகத்தையும் முழுமையாக முன்னிருந்த நிலைமையி-ருந்து முற்றிலும் மாற்றுவதாகும். கர்த்தருடைய ஜனங்களுக்கு பாவத்தி-ருந்து விடுதலை பெற்று முதன்முறையாக, பிரதிஷ்டையின் போது கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் தரிக்கப்படுகிறது. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அந்த இரட்சகர் மூலமாக நம்மை தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும் போது அந்நிலைமை பரிசுத்தம் எனக்கருதப்படுகிறது. ஆனாலும் இது போதாது. இது ஒரு மாபெரும் நோக்கத்தின் ஆரம்ப முயற்சியாகும். நம்முடைய சுயசித்தத்தை விட்டு தேவசித்தம் நம்மில் நடக்க நாம் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அல்லது தேவசித்தம் நம்மில் நிறைவேற கிறிஸ்து நம்மில் கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும். அவருடைய பரிசுத்த தயவுள்ள சித்தத்தின்படி அவருடைய பரிசுத்த குணங்களை அடைய நமக்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பத்தையும் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். R 5739:3

## ***ஜூன் 4***

***அவரை நீங்கள் காணாம-ருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள்... சொல்- முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூருகிறீர்கள். (1 பேது. 1:8)***

இயேசுவின் நாமத்தை பெற்றிருப்பர்வகளில் அநேகர் தேவனிடத்தில் வருங்காலத்தைக் குறித்து ஒரு நம்பிக்கையை வைத்திருக்கின்றனர். ஆனால் சிலர் தற்காலத்திலேயே இரட்சிப்பின்

சந்தோஷத்தின் மேல் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் தனிச் சுதந்திரத்திற்கு என்று ஜீவிக்கவில்லை; தங்கள் தலையாகிய கிறிஸ்துவுக்குள் சரியாக வளரவில்லை. இவர்கள் மனவ-மை, அறிவு, பொறுமை, தேவ பக்தி, சகோதர அன்பு மற்றும் பொதுவான அன்பு ஆகியவைகளோடு விசுவாசத்தில் வளர வேண்டும். எனவே கிறிஸ்துவின் பள்ளியின் நிபந்தனைக்கு இணங்கும் வகையில் கர்த்தர், பாவம், மரணம் என்கிற பயங்கரமான குழியி-ருந்து தூக்கி எடுத்து தங்கள் கால்களை இயேசு கிறிஸ்து என்னும் கன்மலையின் மேல் நிற்க வைத்தார் என்று மேன்மேலும் கூறுகிறவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் நமது தேவனை துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயில் கொடுத்தார் என்று கூறுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். R 3496:5

## ஜூன் 5

**என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும். *(ஏசா. 32:18)***

நாம் கர்த்தருக்கு நெருக்கமாக வாழ்வோமேயானால் நம்முடைய விசுவாசம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். எவ்வளவாய் நாம் வேதம் காட்டும் தேவவழியில் நடக்கிறோமோ அவ்வளவாய் நம்மை பலப்படுத்தி நிறுத்துவார். நமது துன்பநேரங்களில் நாம் அவரை நோக்கி ஜெபத்தில் கூப்பிடலாம். அவரை நம்பியிருக்கிறவர்களையும் அவரில் விசுவாசமாய் இருக்கிறவர்களையும் அவரால் நியமிக்கப்பட்டிருக்கிற வழியிலே நடக்கின்றவர்களையும் உரிய வேளையில் அவர் காப்பாற்ற தவறுவதில்லை. இப்படி அவருடைய தயை அவருக்கு பயந்தவர்கள் மேல் இருக்க நம்முடைய மனதில் தைரியமாகவும், பூரண நம்பிக்கை நிச்சயத்தோடும் நமது பயணத்தை தொடரக்கடவோம். நம்முடைய எல்லாவற்றையும் பிரதிஷ்டையில் கர்த்தருக்கென்று ஒப்புவித்த நாம் நம்முடைய வாழ்வின் எல்லா பணிகளிலும் அவருடைய பிரசன்னத்தையும், அவருடைய வழிகாட்டுதலையும் தேடுவோமேயானால் அமைதியும், சமாதானமும் உண்டாகும். R 5548:3



## ஜூன் 6

**கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக. அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும்..... இருக்கும். *(சங். 149:1,8)***

முன் எப்போதைக் காட்டிலும் இப்போது அவருடைய பரிசுத்தவான்கள் தேவனை உண்மையோடும் ஆவியோடும் ஆராதிக்கிறார்கள். ஏனெனில் தேவனுடைய குணநலன்களை நன்கு அறிந்திருக்கிறார்கள். முன்பிருந்த அறியாமையும் இருளும் மறை பொருளுமானவை எல்லாம் மாறி தேவனுடைய வார்த்தையானது மிகுந்த பிரகாசமாய் விளங்குகிறது. இந்த காலம் முன்பு வாழ்ந்த சகோ. ஜான் கேல்வின் போன்ற சீர்த்திருத்த வாதிகள் கூட இன்று நாம் காண்கிறவைகளை காணவோ நிகழ்கால தீர்க்கதரிசனங்களை அறிந்து உணர்ந்திருக்கவோ முடியாது. ஆயிரமாயிரமான மனுக்குலத்தை நரகத்தில் தள்ளி நித்திய வேதனை அளிப்பது ஒருக்காலும் தேவசித்தமாய் இராது. இன்றும் அநேகர் இப்படிப்பட்ட நரக போதனையை போதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் தேவனை மெய்யாகவே துதிக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஏனெனில், அவர்கள் இன்னும் தேவசித்தத்தை அறியவில்லை. இன்னும் எவ்வளவோ காரியங்களை கிறிஸ்துவ போதனை என்று சொல்-க் கொண்டு சத்தியத்திற்கு மாறாக போதிக்கிறார்கள். ஆனால் தேவமக்கள் தேவனுடைய வார்த்தையின் உண்மையின்படியே சொல்லுகிற மக்கள் மட்டும் ஆச்சரியமான தேவனுடைய அன்பையும், ஞானத்தையும், நீதியையும், வல்லமையையும் எடுத்துக் கூற இயலும். இதற்கு முன்பு இத்தகைய தீர்க்கதரிசன வெளிப்பாடு இல்லை. R 5804:4

## ஜூன் 7

**ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். *(2கொரி. 11:3)***

கிறிஸ்துவின் நிமித்தம் வரும் அவமானம், உபத்திரவம் ஆகியவைகளை ஏற்றுக் கொண்டு எல்லாவற்றிற்காகவும் எப்பொழுதும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து சந்தோஷமான

வாழ்க்கை வாழ்வதே கர்த்தருடைய ஜனங்களுக்கு தகுதியானது. அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதைப் போல நாம் பயத்துடனே கூட களிகூறக்கடவோம். தெய்வபயத்துடனே சுயநலம் சற்றுமில்லாமல் நாம் வாழ்வோமேயானால் உலகின் வஞ்சக கண்ணி வலைகளில் சிக்கமாட்டோம். நமது மெய்யான வழிகாட்டியும் நமது மிகச்சிறந்த நண்பரும் நம்மை நேசித்து நம்மை விலைக்கிரயமாக வாங்கியவரும் நம்முடன் எப்பொழுதும் இருக்கிறவருமான கிறிஸ்து இயேசு கூட நாம் களிகூறக்கடவோம். நம்முடைய பலம், தைரியம், ஞானம் ஆகிய இவைகளைக் குறித்து சந்தோஷப்படாமல் நமக்கு ஒரு மீட்பர் உண்டு; எல்லாரிலும் பெரியவரான அவர் பிதாவின் மூலம் நம்மை எல்லாத் தீங்கினின்றும் பாதுகாக்க வல்லவராயிருக்கிறார் என்கிற சந்தோஷத்தினாலே களிகூறக்கடவோம். இப்படியாக கர்த்தரே நமது நம்பிக்கையும், பலமும், கேடகமும், துருகமும், இரட்சிப்புமாக இருக்கிறார். R 3886:3

## ஜூன் 8

**ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. *(யோவா. 15:13)***

தம்முடைய சிறுமந்தையாகிய சபையினருக்கு, விசுவாசத்தில் உடன்படிக்கை செய்துகொண்ட கிறிஸ்துவின் அங்கங்களில் சிறியவர்களுக்கு செய்த எந்த ஒரு நன்மையையும் தமக்கே செய்ததாகக் கருதப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனவே கர்த்தருடைய சேவையில் நம்முடைய முழு ஜீவனையும் கொடுப்பது நமது விசேஷமான, கடமையாக எண்ண வேண்டும். சகோதரருக்காக நாம் எதையும் செய்ய சித்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் நம் சகோதரரெல்லாம் அவருடையவர்கள். அவர்களுக்காக நம்முடைய ஜீவனை கொடுப்பது நாம் கர்த்தருடைய நோக்கத்திற்காக நாம் காண்பிக்கிற விசுவாசத்தை குறிப்பிட்டு காட்டுகிறதாயிருக்கும். இதன் மூலமாக நம்முடைய சரீர பலத்தை, சுகத்தை, ஜீவனை முழுமையாக கொடுப்பதாகாது. ஆயினும் முடிந்த அளவு, இயன்றவைகளில் சகோதரர்களுக்கு உபகாரமாக இருப்பது நன்று. கர்த்தரை பின்பற்றுகிறவர்களெல்லாம் மாம்சத்தின்படி சகோதரர்களல்ல, ஆனால் ஆவியின்படி சகோதரர்கள். எனவே நம்முடைய அறிவையும், திறமையையும், பலத்தையும்,



சுகத்தையும், ஆவிக்குரிய சகோதரர்களுக்காக செலவிட வேண்டும். நற்செய்தியை நாம் எடுத்துச் செல்லும் போது நாம் எவ்வளவோ தியாகங்கள் செய்ய வேண்டியிருக்கும். நம்முடைய சுய நன்மையை கருதாமல் கிறிஸ்துவின் சரீரமாகிய அங்கங்களுக்காக நம்மால் முடிந்த எந்த உதவியையும் தயங்காமல் செய்ய வேண்டும். R 3932:6

## ஜூன் 9

**சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள். *(1 பேது. 3:8)***

கிறிஸ்துவின் சரீரங்களாகப் போகிறவர்கள் எப்படிப்பட்ட சகோதர சிநேகமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று வேதாகமம் விளக்கிச் சொல்லுகிறது. ஒருவருக்கொருவர் அன்பில் வித்தியாசப்படலாம். நாம் கர்த்தருடையவர்களானால் கிறிஸ்துவின் அன்பு நம்மில் ஊடுருவியிருக்க வேண்டும். "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல." *(ரோம. 8:9)* இந்த சகோதர அன்பு நம்முடைய இருதயங்களிலே கொழுந்துவிட்டு எரிகிறதாயிருந்தால் போதாது; இந்த பரிசுத்த அன்பு சுடராய் பிரகாசிக்கிறதாகவும் எரிந்து பிரகாசிக்கிறதாகவும் முற்றிலும் பற்றிவிடக்கூடிய அன்பாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அன்பு சகோதரனது எவ்வித குறையையும், தவறுகளையும், பெருமை பாராட்டாது. மாறாக எல்லா நன்மையான குணங்களையும் நோக்கிப்பார்த்து நல்லவைகளையே பாராட்டி, அபூரணம், பலவீனம் ஆகிய இவைகளுக்கு எதிராக ப-யினால் உடன்படிக்கை செய்த பரிசுத்தமான சகோதரர்களுக்காக ஜீவன் முதலாய் எதையும் தரக்கூடியதாக இருக்கும். R 3932:2

## ஜூன் 10

**அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான். *(யோவா. 7:17)***

சத்தியத்தின் வாஞ்சையில்லாத எவரும் தற்கால சத்திய வெளிச்சத்தைக் காணவோ, அறிந்துக் கொள்ளவோ இயலாது.

சத்தியத்தின் மேல் மெய்யான வாஞ்சையான எவரும் தங்கள் சிந்தனை, சொல், கிரியைகளிலும் உண்மையுள்ளவர்களாய் இருப்பார்கள். உலகம் விரும்பும் பெருமை, பேராசை, வீண்கௌரவம் ஆகியவற்றைத் தேடமாட்டார்கள். இவைகளைத் தேடுகிறவர்களோ தற்கால சத்தியத்தை அறியமாட்டார்கள். அப்போஸ்தலர் மூலமாக கர்த்தர் உபதேசித்த வார்த்தைகளில் கவனாயிருக்கக் கடவோம். இப்பொழுது கடைசி நாட்களில் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். ஏனெனில் அவர்கள் சத்தியத்தில் வாஞ்சையில்லாதவர்கள், போ- போதனைகளில் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே நாம் எச்சரிக்கையாக இருந்து பொய், போ- உபதேசங்களி-ருந்து காத்துக் கொள்ள உண்மையான சத்தியத்தில் உண்மையாகவே வாஞ்சையாய் இருக்கக்கடவோம். R 3847:5

## ஜூன் 11

***நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். (லூக். 24:48)***

அப்போஸ்தலர் நமது மீட்பரின் கன்னி பிறப்பு, அவருடைய பரிசுத்தமான வாழ்வு, ஜீவியம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகிய காரியங்களுக்கு மட்டும் சாட்சியாயிராமல் இவைகளுக்கு மேலாக நியாயப்பிரமாண முழுமையையும் நிறைவேற்றி, மீட்பருக்குரிய எல்லாத் தகுதியையும் உடையவராக கர்த்தர் இருந்தார் என்பதற்கு சாட்சி சொல்வதே அவருடைய முக்கியமான பணியாகும். இப்போது கர்த்தர் என்றென்றும் ஜீவிப்பவராக இருந்து தம் மூலம் தேவனிடம் வருபவருக்கு உபகாரியாயிருக்கிறார். அப்போஸ்தலர்கள் தங்கள் பணியை எவ்வளவு விசுவாசமாக நிறைவேற்றினார்கள்! தேவனுடைய எந்த ஆலோசனையையும் அப்போஸ்தலர்கள் மறைத்து வைக்கவில்லை. உலகப்பிரகாரமான ஞானம் உடையவர்கள் பெரிய குற்றவாளியாக அடிக்கப்பட்டு மரணதண்டனை பெற்றவரை, ஒரு கேவலமான நிலைமையை அடைந்த அப்படிப்பட்ட ஒருவரை போதகர், குரு என்று அழைக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட தலைவருக்கு சீடர்களை ஏற்படுத்துவது மிகக்கடினமாக இருந்திருக்கும். ஆனால் இந்த உண்மையுள்ள சாட்சிகளாகிய அப்போஸ்தலர்கள் சிலுவையின் சின்னத்தை



சிறுமையின் சின்னமாக மாம்சமும் இரத்தமும் எண்ணுகிற வழியில் தைரியமாக அவமானத்தை முழுமையாக எடுத்துச் சொன்னார்கள். அப்போஸ்தலருடைய சிறுமையான செய்கைகளையும் விட்டுவைக்கவில்லை. பேதுரு மறுத-த்தது, யூதாஸ்காரியோத் காட்டிக் கொடுத்தது அவர்களுக்குள்ளே யார் பெரியவன் என்று பேசிக் கொண்டது ஆகிய யாவற்றையும் போதித்தார்கள். தேவன் வெளிப்படுத்த விரும்பிய அனைத்து சத்தியங்களையும் எளிமையாக வேதாகமத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார். R 3911:3

## ஜூன் 12

***இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும். (பி-. 2:10)***

நமது ஆண்டவரை தேவன் இவ்வளவாய் உயர்த்தியிருப்பதை நினைக்கும் போது, இந்த சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, உண்மையுள்ள பரிசுத்தவான்களை மணவாட்டி வகுப்பில் அங்கமாக்கி, அவருடைய கனம், மகிமை, சாகாமை ஆகியவைகளில் உடன்சுதந்தரராக்குகிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதை நாம் மனதில் வைப்போமானால், நாம் செய்கைகளிலும், பேச்சிலும், தேவ பக்தியிலும் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும்! பூமிக்குரிய சந்தோஷமும், துக்கமும், ஐசுவரியமும், தரித்திரமும், பலவீனமும், தாழ்மையும் எவ்வளவு அற்பமானதாயிருக்க வேண்டும்! மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்கும் தகுதியாகும்படிக்கு நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படிக்கும் நாம் தீவிரமாய் முயற்சிப்போமாக. R 3979:4

## ஜூன் 13

***இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். (ரோம. 6:22)***

இவைகள் மெய்யாகவே ஜீவனுக்குரிய வார்த்தைகள், இவைகளினாலே நாம் நம்பிக்கையடைந்து ஆவிக்குரிய தூண்டுதலை பெறுகின்றோம். மாம்சத்திற்குரிய பூரணத்தை அல்ல. ஆனால் ஆவிக்குரிய செய்கைகளையும், பூரணத்தையும் இருதயப்பூர்வமான

நோக்கத்தையும் அதற்குரிய செய்கைகளையும் தேவன் ஏற்றுக் கொள்வார். மனப்பூர்வமாக நாம் தேவனுடைய வழிகளை நோக்கிப் பார்ப்போமேயானால் அவருடைய வழிகளில் பூரணப்படவும் நமக்கென்று அவர் குறித்தத் திட்ட அளவின் படி நடப்பது எளிதாக இருக்கும். ஆவிக்கேற்றபடி நடக்க முடியும். அழிந்து போகக்கூடிய நம்முடைய சரீரங்களோ ஆவிக்கேற்ற வண்ணமாக நடக்கக்கூடாதவைகள். ஆனால் நம்முடைய மனமோ ஆவிக்கேற்றபடி நடக்கக்கூடியது. நம்முடைய எண்ணங்கள் பூரணமாக, மனப்பூர்வமாக, பிதாவின் திட்டத்திற்கு இசைந்திருப்பதால், படிப்படியாக சரீர பலவீனங்களைக் கடந்து நம்முடைய பரலோக பிதா நமக்கு நியமித்திருக்கிற திட்டப்படியே நாம் பூரணமடைய முடியும். R 4869:5

## ஜூன் 14

**தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர்கள் இக்கட்டுகளி-ருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார். *(சங். 107:13)***

இஸ்ரயேலர்கள் துன்பச்சுமை மிகுதியான போது தேவனிடத்தில் திரும்பினார்கள். அவர்களுடைய இருதயங்களும் கர்த்தரிடத்தில் திரும்பிற்று. ஆபத்துக் காலத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட அவர்களுக்கு கற்பிக்கப்பட்டபடியே கூப்பிட்டவுடன் அவர்களுடைய இக்கட்டுக்களி-ருந்தெல்லாம் அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார். அதுபோலவே புதிய சிருஷ்டியாகிய நாமும் உலகம், மாமிசம், சாத்தான், பாவம், மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தி-ருந்து விடுதலையடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவனை நோக்கி கூப்பிடும் பொழுது மாமிச பலவீனங்களி-ருந்தும் இடுக்கண்களி-ருந்தும் நம்மை நீங்கலாக்கி இரட்சித்து, அவரைத் துதிக்கும் புதிய பாட்டை தந்தருளுகிறார். வாழ்வின் எந்த பிரச்சனைகளி-ருந்தும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையே நோக்கி பார்க்க வேண்டும். ஏனெனில் நம்முடைய உதவி பரத்தி-ருந்து வருகின்றதாயிருக்கிறது. நாம் இப்பொழுது படும் கஷ்டங்கள் உபத்திரவங்கள் மூலமாகத்தான் நாம் நித்திய கனமகிமையை பெற்றுக் கொள்ள முடியும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவரோடு கூட கணப்பொழுதில் மறுரூபமாகி எடுத்துக் கொள்ளப்படும் நாமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போலவே எல்லாவித உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்து நம்முடைய மாமிசத் திரையைக் கிழித்து திரைக்கு அப்பால் செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் மறுரூபமாகி மகிமையின் மேல் மகிமையடைந்து அவர் இருக்கிறவண்ணமாகவே நாமும் மாறி அவருக்கு ஒப்பான நிலைமைக்கு செல்வது தேவகாரியம். இக்காரியம் நம்மில் நடைபெற நாம் நம்மை முழுமையும் அவருக்கே தத்தம் செய்வோமாக. R 3983:6



## ஜூன் 15

**கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார். *(1 சாமு. 17:47)***

இந்த பழைய சம்பவங்களி-ருந்து புதிய சிருஷ்டிகள் தற்காலத்தில் கற்றுக் கொள்ளும் பாடமென்ன? தாவீது என்றால் மகா அருமையாய் நேசிக்கப்பட்டவன் என்று பொருள். தாவீது தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறார். தாவீது கோ-யாத்துடன் நடத்திய போராட்டம், நமது கர்த்தராகிய இயேசு 40 நாள் உபவாசத்திற்கு பின் வனாந்தரத்தில் சோதனைக்காரனுடன் நடத்திய போராட்டத்திற்கு ஒத்தது. அவ்விடத்தில் நம்முடைய கர்த்தர் சாத்தானை எதிர்த்து வென்றது, பிதாவினிடத்தில் அவர் கொண்டிருந்த ராஜரீக விசுவாசத்தை காண்பிக்கிறது. அதோடு கூட தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை இயேசு எவ்வாறு செய்தார் என்பதனையும் சோதனையின் வேளையிலும் சோர்ந்து போகாமல் எந்தத் தியாகத்திற்கும் ஆயத்தமாயிருந்ததால் வெற்றியை பெற்றார். தேவனுடைய ஒழுங்கின்படி முழு மனுக்குலத்திற்கும் பாவம், சாபம், மரணம் ஆகியவைகளி-ருந்து விடுதலை பெற்றுத் தந்தார். “நான் உலகத்தை ஜெயித்தேன், நீங்கள் பயப்படாதிருங்கள்” என்று அவர் சொன்ன வார்த்தை, எதிராளியாகிய சாத்தானை மட்டுமல்ல பாவத்தின் ஊழியக்காரர் அத்தனை பேரையும் உலகையும் ஜெயித்தார் என்பதைக் குறிக்கிறது. அவர் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவராயிருந்தார். தேவனோடு தாம் செய்து கொண்ட

உடன்படிக்கையை நிறைவேற்ற “என்று எழுதியிருக்கிறது” என்ற சத்தியமாகிய கூழாங்கல்-னாலே சாத்தானை வீழ்த்தினார். மனித மலைபோல இருந்த கோ-யாத் தாவீதின் முன் தரைமட்டமாக விழுந்தான். அது போலவே இயேசு கிறிஸ்துவும் சாத்தானை வீழ்த்தினார். “சாத்தான் மின்னலைப் போல வானத்தி-ருந்து விழுகிறதை கண்டேன்” என்றும் கூறினார். “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று குறிப்பிட்டு, கர்த்தராகிய இயேசு தன்னுடைய சீடர்களை அனுப்பினார். தன்னைப் போலவே அவர்கள் தேவபலத்தால் எல்லாவற்றையும் விசுவாசத்தினாலேஜெயித்து இறுதியாக தம்மோடு இராஜ்யத்தை பெற்று பூமியின் குடிகளையெல்லாம் ஆசீர்வதிக்கும்படி சொன்னார். இப்பொழுது அவர் தம்முடைய பரிசுத்தவான்களுக்குள்ளே இப்படிப்பட்ட ஆவியின் கிரியையை நடப்பித்துக் கொண்டிருக்கிறார். R 4216:4

## ஜூன் 16

**இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் ..... கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும்... *(2 கொரி. 6:3,6)***

ஒருவன் எவ்வளவு தூயவனாய் இருக்கிறானோ அவ்வளவாய் இலக்காகிறான். வேட்டையாடுகிறவர்கள் தாங்கள் விரும்புகின்ற பறவையை குறி வைத்து அதையே வேட்டையாடுவார்கள். அதுபோல கர்த்தருடைய ஆலயத்தின் பாத்திரத்தை சுமக்கிறவர்களைக் குறித்துக் கொண்டு எதிராளியானவன் அவர்களையே குறியாக வைப்பான். எனவே நாம் மாம்சத்தோடும் உலகத்தோடும் எதிராளியான சாத்தானோடும் போரிட வேண்டியவர்களாயிருக்கிறோம். இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாய் கர்த்தருடைய மக்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் தங்களுடைய நீதியின் வஸ்திரங்கள் தூய்மையானதாக இருக்க பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம் அசதியாக இருந்தாலும் வஸ்திரங்கள் கறையாகிவிடும். எதிராளியானவன் எப்படியாவது மாசுபடுத்திடவே இயன்றதையெல்லாம் செய்வான். நாம் எல்லாக் காவலோடும் நம்மை காத்துக் கொள்ள வேண்டும். எதிராளியானவன்



நம்மைத் தொட அனுமதித்தோமானால் நிச்சயமாக நம்மை தீட்டுப்படுத்திவிடுவான். ஆகவே நாம் அவனுக்கு எதிர்த்து நிற்போமேயானால் அவன் நம்மை விட்டு ஓடிவிடுவான். சோதனைக்கு இடங்கொடாதபடி நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். R 5259:5

## ஜூன் 17

**அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீடர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம் பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்-.... *(மத். 26:36)***

அறுவடையின் காலப்பகுதியாகிய இந்நாட்களில் இருக்கும் நாம் திருச்சபையின் கெத்செமனே வேளையி-ருக்கின்றோம் என்பதை உணர வேண்டும். சோதனையின் வேளையில் நாம் சோர்ந்து போகாமல் நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொள்வதோடு மற்றவர்களையும் சோர்ந்து போகாம-ருக்க ப-யின் இறுதிக் கட்டத்திற்கு ஆயத்தம் செய்ய வேண்டும். நாம் இந்த ப-யை நிறைவேற்ற சரியான ஆயத்தத்தில் இருக்கிறோமா என்று சிந்திப்போமாக. நாம் உறங்கிக் கொண்டிருக்கிறோமா என்பதை நிதானிக்க வேண்டும். தூங்குகிறவர்கள் இரவிலே தூங்குகிறார்கள். நாம் இரவுக்கும் இருளுக்கும் உரியவர்களாயிராமல் பகலுக்கும் வெளிச்சத்திற்கும் உரியவர்களாய் இருப்போமாக. சோதனை நாளில் நிற்கத்தக்கதாக நாம் சர்வாயுதவர்க்கத்தையும் தரித்தவர்களாக இருப்போமாக. இன்னும் கொஞ்சகாலத்திலே இறுதி சோதனைகளெல்லாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் வேளையிலே, நாம் அவைகளை சந்திக்க ஆயத்தமாயிருப்போமாக. கெத்செமனேயில் இயேசுவை எல்லோரும் கை விட்டது போல நாமும் எல்லாராலும் கைவிடப்படவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். இந்த வேளையில் நாம் நம்முடைய போதகரும் குருவுமாகிய இயேசு கிறிஸ்துவைப் போலவே உறுதியாக நின்று எல்லாரும் கைவிட்டாலும் நமக்கு உதவ ஒரு மத்தியஸ்தர் உண்டு என்பதை மனதில் வைக்க வேண்டும். கெத்சமனே வேளை வருமானால்,

அதை நாம் தவிர்க்காமல், பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் வேண்டுதல் செய்து, முதலாம் உயிர்த்தெழுதல் மூலம் நம்மை மரணத்தி-ருந்து இரட்சிக்க வல்லமையுள்ள பரிந்து பேசுகிறவரை நோக்கி ஜெபிக்க வேண்டும். நாம் அவருடைய அன்பில் நிலைத்திருந்தோமானால் நம்மை முற்றிலும் வெற்றியடையச் செய்து தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை உன்னதமான நிலைக்கு உயர்த்துவார். R 3886:6

## ஜூன் 18

**நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். *(ஏசா. 1:19)***

நம்முடைய சுய ஆசை, எண்ணங்களை அடக்கி தேவனுடைய வார்த்தைக்கு முழுமனதோடு கீழ்படியும்படியான சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளும்படியாகத் தேவன் ஏற்பாடு செய்திருக்கின்றார். இதன்மூலம் சீக்கிரத்தில் நாம் தேவனுடைய பிரதிநிதிகளாகி வருங்கால உலகை தேவ திட்டப்படி கீழ்ப்படிதலுக்கு கொண்டுவந்து கட்டுப்படுத்தமுடியும். கீழ்ப்படித-ல்லாத எவரும் மற்றவர்களை அடக்கி ஆளமுடியாது. எனவே தான் வருங்காலத்தில் ஆளுகையைப் பெறப்போகிறவர்கள் தற்காலத்தில் கீழ்ப்படிதலை நன்கு கற்றுத் தேறினவர்களாயிருக்க வேண்டும். மிகுந்த உபத்திரவத்தினால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் என்று வாசிக்கிறோம். அவர் தம்மை முழுமையுமாக தயங்காமல் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார். இப்படிப்பட்ட கிறிஸ்துவின் ஆவி நம்மில் அபிவிருத்தியடைய வேண்டும். கிறிஸ்துவின் வருங்கால ஆயிரவருட அரசாட்சியிலும் நாம் அந்தப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும். R 5890:2

## ஜூன் 19

**தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும்... தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். *(எபே. 6:13)***

யுத்தத்திற்கு அல்லாமல் எவரும் கேடகம் பிடிக்கமாட்டார்கள், கேடகத்தை பிடிக்கவேண்டுமென்றால் யுத்தம் வரும் என்று எதிர்பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒருவன் சிலுவையின் போர்வீரனாக இருக்க வேண்டுமானால் அவனுக்கு இருக்க வேண்டிய விசேஷமான போர் ஆயுதம் ஆவியின் பட்டயம். இந்த ஆவியின் பட்டத்தை உபயோகிக்கிறதி-ருந்து அவனுடைய பலமும் விசுவாசமும் ரூபகாரப்படும். சகோதரர்கள் ஒருவருக்கொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதிப்படுத்திக் கொண்டு, *(யூதா. 20)* விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி சத்தியத்திற்கும் கர்த்தருக்கும் தங்களது விசுவாசத்தைக் காண்பிக்க வேண்டும். *(1தீமோ. 6:12)* இப்பிரபஞ்சத்தின் இருண்ட வழிகளில் சிக்கிக் கொண்டவர்கள் புதிய சிருஷ்டியின் புதிய ஒழுங்குக்குள் வர தகுதியற்றவர்களாய்ப் போய்விடுகிறார்கள். வர இருக்கின்ற மகிமையின் இராஜ்யத்தில் கிறிஸ்துவோடு கூட சுதந்தரராக வரமுடியாது. எனவே நாம் தள்ளுண்டு போகாமல் இருக்க ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொண்டு விசுவாசத்தோடும் மன உறுதியோடும் நம்முடைய பலம் அல்ல தேவபலம் என்று ரூபகாரப்படுத்தும் வழியில் நிலைநிற்க ஜெபிப்போமாக. R 5098:2



## ஜூன் 20

**தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள். *(யாக். 4:6,7)***

வருங்கால மகிமைக்குரிய பாக்கியங்களை நாம் விருப்பமாக சிந்தித்து பார்க்கும் பொழுது, கர்த்தருடைய மகிமை அந்த ஆலயத்தை நிரப்பும் பொழுது, நாம் அறியப்பட்டபடியே எல்லாராலும் அறிந்திருக்கும்படி ஆகும் பொழுது சந்தோஷம் அடைகிறோம். இந்த சந்தோஷம் உண்மையாகவே நிலைத்திருக்க வேண்டுமானால் கிறிஸ்துவின் பள்ளியிலே அவர் பாதபடி அமர்ந்து அவர் வேதப்படி நடவாவிட்டால் நாம் ஒதுக்கிவிடப்பட்டவர்களாக ஆவோம் என்பதை மறந்துவிடக்கூடாது. நம்முடைய பெயர்கள் கிறுக்கப்பட்டு போய்விடும். நமக்கென்று தயார் செய்யப்பட்ட கிரீடங்கள் மற்றவர்களுக்கு வழங்கப்படும். எவ்வளவு பெரிய பரிசை இழந்து எவ்வளவு நஷ்டத்திற்கு உள்ளாவோம். இதை உணர்ந்து அப்போஸ்தலர் எழுதுகிறார்: "அவருடைய இளைப்பாறுத-ல் பிரவேசிப்பதற்கான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக்

காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம்." ஜீவனுள்ள கற்களாக இப்பொழுது ஆயத்தமாக்கப்பட்டு வருகின்றவர்களுக்கு பெருமை எள்ளளவேனும் இருக்கக் கூடாது. பெருமை பேராசையை உண்டுபண்ணும். அது பேராபத்தில் முடியும். தேவனுடைய சேவையில் நம்மை தகுதியற்றவர்களாக்கிவிடும். கொஞ்சம் ஆசை, பெருமை வளர்ந்துவிட்டால் நான், எனது என்கிற செருக்கும், பெருமை, வெறுப்பு, மற்றவர்களை குறைவாக பேசுகின்ற தீமையான முடிவு ஆகிய கிறிஸ்துவின் ஆவிக்கு எதிரான குணங்கள் தோன்றிவிடும். அப்பொழுது கிறிஸ்து தம்முடைய குணத்தில் எள்ளளவேனும் இல்லை என்று நம்மை சபித்து விலக்கிவிடுவார். நாம் பொறுமையையும் மனத்தாழ்மையையும் இரண்டு கண்களாகக் கொள்வோம். R 4297:5

## *ஜூன் 21*

**என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்தி-ருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை. *(ரோம. 7:18)***

புதிய சிந்தை புதிய சிருஷ்டிகளுக்கு உருவாகின்ற வேளையிலே மாம்சமும், மாம்சத்தின் கிரியைகளும் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக மாம்சத்தில் நாம் உயிரோடிருக்கிறோம். ஆகவே மாம்ச சிந்தை தலையெடுக்காத வண்ணம் முறியடிக்க வேண்டும். புதிய சிருஷ்டியின் நோக்கமெல்லாம் விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடி வெற்றியடைவதேயாகும். இந்தப் போரில் வெற்றிகாண்பதென்பது கர்த்தர் இந்த சுவிசேஷயுகத்தில் சாட்சிகளாய் ஜீவித்து வெற்றிபெறுகிற ஒவ்வொருவருக்கும் அளிக்கப்போகின்ற வெகுமதி விசேஷித்த கனமும் ஆசீர்வாதங்களுமாகும்.... மாம்ச சிந்தையின் அழுக்கான நோக்கம் சுயநலத்தை சார்ந்ததாகும். சுயநலம் அவமானத்தை உண்டாக்கும். அது வெளிப்படையாக தன்னைத்தானே காண்பிக்காமல் தாராளமானது போல போ-யான குணத்தைக் காண்பித்து மறைக்கும். இதனால் பொறாமை, பேராசை, கபடு, சூது இவைகளெல்லாம் உண்டாகின்றன. அப்போஸ்தலர் சொல்லுகின்ற வண்ணமாக இவைகள் மாம்சத்தின் கிரியைகளாயும் சாத்தானின் கிரியைகளாயும் இருக்கின்றன. இந்த சுயநலம் தன்னுடைய சரீர இன்பத்தையே பெரிதாக எண்ணும். புதிய சிருஷ்டியோ இந்த குணங்களையெல்லாம் எதிர்த்துப் போராடி அழிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். R 3986:2



## *ஜூன் 22*

**தேவனிடத்தில் அன்பு கூறுகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூற வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம். *(1 யோவா. 4:21)***

பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்; அதோடு மாத்திரமல்ல தீமை செய்யக்கூடிய எண்ணத்தை அடியோடு மாற்றும்; எல்லாரையும் நேசிக்கின்ற காருண்யமான இருதயம் மற்றவர்கள் செய்கின்ற சிறு பிழைகளையெல்லாம் பெரிதுபடுத்தாது. மற்றவர்கள் குற்றஞ்சாட்டினாலும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும். அன்பு அநேக சிநேகிதர்களை உருவாக்கும். தன்னை குற்றஞ்சாட்டுகிறவர்களையும் குற்றப்படுத்தாத அன்பு அவர்களுக்காக வேண்டுதல் செய்யும். இப்படிப்பட்ட நீதியை நடப்பிக்கிற விரோதிகளையும், குற்றஞ்சாட்டுகிறவர்களையும் மன்னித்து அன்பு பாராட்டுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். சத்தியத்தின் நிமித்தம் விசுவாச வைராக்கியம் பாராட்டப்படுகிறவர்கள் பேறுபெற்றோர். ஏனெனில் பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. இப்படிப்பட்ட நீதிமார்க்கத்தாரை தேவன் தாமே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார். விரோதிக்கிறவர் களையும் சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிக்கிற குணத்தையுடைய இந்த சிறு மந்தையை தேவனே கண்காணிக்கிறார். இப்படிப்பட்ட நீதியில் நடக்கிறவர்களை தேவன் ஒரு போதும் கைவிடார். நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளத்தக்கதாக நாம் கடுமையாக உழைப்போமாக. R 3736:2

## *ஜூன் 23*

***நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி..... (எபே. 4:1,2)***

தேவன் நம்மேல் பாராட்டின இரக்கம் எவ்வளவு பெரியது என்று பாராட்டுவதை விட, அதே குணத்தை நாம் கொண்டவர்களாக விளங்குவதும், அதே இரக்கத்தை விசுவாச வீட்டார் யாவருக்கும் காண்பிப்பதும் நம்மேல் விழுந்த கடமையாகும். விசுவாச வீட்டிலே நாம் இரக்கம் காண்பிப்பது உண்மையானால் வெளியிலே யாவரோடும் இரக்கம் காண்பிப்பவர்களாக இருப்போம். நம்முடைய பலவீனங்கள், குறைகள் ஆகியவற்றை நன்கு உணர்ந்திருப்போமானால் சகோதரர்களிடமும் மனுமக்கள் அனைவரிடமும் இரக்கம் காண்பிக்கிறவர்களாயிருப்போம். இரக்கம், தாராள மனம், கருணை ஆகிய இக்குணங்கள் தேவன் விரும்புகின்றவை; இவைகளை அபிவிருத்தி செய்கின்றவர்கள் தேவப்பார்வையில் ஆவியின் கனிகளுக்கு ஆயத்தப்படுத்தும் அருங்குணங்களையுடையவர்களாய் இருப்போம். இப்படிப்பட்ட குணங்களால் கிறிஸ்துவின் மகிமையின் சிங்காசனத்தில் பங்குபெறுவோம். மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியிலே ஆயிரமாயிரம் மனிதர்களுக்கு இரக்கம் காண்பிக்கப் போகிறவர்கள் தற்காலத்திலேயே இரக்கம் காண்பிக்க கற்றுக் கொள்ள வேண்டும். இவ்விதமாய் இரக்கம் காண்பிக்கின்றவர்களே இரக்கம் பெறுவார்கள் என்பதே தேவ நியதி. R 5135:2

## ஜூன் 24

***உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள். (மத். 24:42)***

இந்த உவமையில் சொல்லப்பட்ட புத்தியுள்ள கன்னிகைகளுக்கு ஒப்பாக கர்த்தரை மெய்யாய்த் தேடுகின்ற ஒவ்வொருவருக்கும் ஞானமாக இந்தக் காலத்தில் விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். மணவாட்டி மணவாளனின் பிரசன்னத்தை அறிந்திருக்க வேண்டும். விளக்கும் எண்ணையும் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும். இப்படி எந்த நிலையிலும் ஆயத்தமான நிலைமையி-ருப்பவர்களுக்கு அவர் வருகை ஆச்சரியமானதாக இருக்க முடியாது. இதோ மணவாளன் வந்திருக்கின்றார் என்று எச்சரிக்கவும் தேவையில்லை. அவர் பிரசன்னமாயிருக்கும் இந்த நேரத்தில் மனித குமாரனை எதிர்நோக்கி இருக்கின்ற புத்தியுள்ள கன்னிகைகள் ஏற்கனவே



ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற கல்யாண ஊர்வலத்தில் பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அந்த எண்ணிக்கை பூர்த்தியாகவில்லை. எண்ணிக்கை பூர்த்தியான பிற்பாடு கதவு அடைக்கப்படும். இப்படி எல்லாக் காவலோடும் எச்சரிக்கையாயிருக்கின்றவர்கள் தங்களுடைய இருதயத்திலே கர்த்தராகிய இயேசுவின் சிந்தையுடையவர்களுக்கு மணமகன் வந்திருக்கின்றார் என்கின்ற முதல் செய்தியை கேட்டவுடனேயே ஈர்க்கப்படுவார்கள். இவர்கள் தங்கள் விளக்குகளை திரித்தூண்டப்பட்டதாய், வேத வாக்கியங்களை சோதித்து உணர்ந்து, அறிவிப்பு வந்தவுடனே ஆயத்தமுள்ளவர்களாய் புத்தியுள்ள கன்னிகைகளோடு பிரவேசிப்பார்கள். புத்தியுள்ள கன்னிகைகளுக்கு இது ஒரு பரீட்சையாக, விளக்கில் எண்ணெய் தீராதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். மணவாளனைக் குறித்த காரியங்களில் பக்தியும் நேசமும் காத்திருக்குத-ல் பொறுமையும் காண்பிக்க வேண்டும். இப்படிப்பட்ட குணங்களையுடையவர்களையே மணவாளன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இவர்களே அரண்மனைக்குள் அனுமதிக்கப்படுவார்கள். R 3869:4

## ஜூன் 25

***பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. (யூதா 3)***

சில நேரங்களில் சத்தியத்தைக் குறித்து வாக்குவாதங்கள் ஏற்படலாம். அப்பொழுது நாம் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் பெருமைபாராட்டாமல் சத்தியத்தின்படி அடக்கமாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுத்த இந்த விசுவாசத்தின் மேல் பெருமை கொள்ளவோ, பொறாமை கொள்ளவோ கூடாது. இவற்றுக்குக் காரணம் சுயநலமே. எனது கருத்துதான் சிறந்தது என்ற எண்ணம் எப்பொழுதும் எழக்கூடாது. சொந்தக் கருத்துக்களுக்கு இடம் தரக்கூடாது. தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய வழியையும், சத்தியம் என்ன போதிக்கிறது என்பதையும் கற்றுக் கொள்ளும் ஆர்வமே மிகுதியாக இருக்க வேண்டும். நாக்கை அடக்கி ஆளவேண்டுமே

தவிர அதன் இஷ்டத்திற்கு விட்டுவிடக்கூடாது. நம்முடைய எல்லா நடக்கைகளிலும் ஆவியின் கனிகள் வெளிப்படவேண்டும். சகோதர சிநேகத்துடனும், அன்புடனும், சாந்த குணத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். எப்பொழுதும் எல்லா சாந்த குணத்துடனும் நடந்து கொண்டோமானால் கோபம், வெறுப்பு, பகை, சச்சரவுகள் தோன்றாது. திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக நாம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வது மட்டுமல்ல. அதற்காக விசேஷ வண்ணமாக ஜெபிக்கவும் வேண்டும். R 5057:4

## ஜூன் 26

**மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே..... *(எபே. 1:11,12)***

தேவன் ஏன் கிரியையைக் காட்டிலும் விசுவாசத்தை சோதிக்க வேண்டும் என்கிற கேள்வி இயற்கையாக எழுகிறது. எந்த செயலாகிலும் அதை நடப்பிக்கிறவருடைய தகுதியைப் பொறுத்தே இருக்கும். ஆதாம் பூரணமாக சிருஷ்டிக்கப்பட்ட போதிலும் விழுந்து போனதினாலே, விழுந்துபோன மனுக்குலம் பூரண கிரியைகளைச் செய்ய தகுதியுள்ளவர்கள் அல்ல. தற்கால அபூரண நிலையில் யாரும் நீதியிலோ, ஞானத்திலோ, அன்பிலோ பூரணராக இருக்கவே முடியாது. எனவே தேவன் தம்முடைய ஞானத்திலும் அன்பிலும் நம்முடைய கிரியைகளை சோதிக்காமல் (ஏனெனில் நாம் அபூரணர்) நம்முடைய விசுவாசத்தை மட்டும் சோதிக்கிறார். நம்முடைய நம்பிக்கையும், விசுவாசமும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும், ஞானத்திலும், அன்பிலும் நிறைந்திருக்க வேண்டும். இவற்றில் நாம் சந்தேகப்படுகிறவர்களாக இருப்போமானால் நாம் அடிப்படை நம்பிக்கையை இழந்தவர்களாக இருப்போம். நாம் விழுந்துபோன நிலைமையிலே இருக்கிறோம். மற்றவர்களைப் போல நாமும் மரிக்கிறோம் என்பதை நாம் உணர்கிறோம். தேவன் நமக்கு ஒரு இரட்சகரை கொடுத்திருக்கிறார் என்பதை வேத வசனத்தி-ருந்து அறிகிறோம். இது நம்மால் உண்டாகாமல் தேவனாலும் கிறிஸ்துவினாலும் உண்டாயிருக்கிறது. எனவே ஆரம்ப முதல் முடிவு



வரை அறிந்த தேவன், தமது சித்தத்தின்படியே எல்லாவற்றையும் நடப்பித்து, ஏற்ற காலத்தில் பூமியிலே நீதியை நிர்மாணிப்பார் என்று நமது விசுவாசம் உறுதி கூறுகிறது. R 5115:2

## ஜூன் 27

**பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. *(ஏசா. 55:9)***

தேவனுடைய மகத்தான திட்டங்களை அறியும்பொழுதுதான் தேவனுடைய உயர்ந்த நோக்கத்தை நாம் உணர முடியும். பாவத்தை தொலைத்து பூமியின் வம்சங்களையெல்லாம் அவருடைய நன்மையினாலும் சீர்திருத்தத்தினாலும் ஆசீர்வதிப்பதை உணர முடியும். யூத யுகத்தின் தேர்வையும் சுவிசேஷயுகத்தின் தேர்வையும் அதன் முடிவில் உண்டாகும் உலக ஆசீர்வாதத்தையும் அறியக்கூடிய காலத்தில் நாம் வாழ்கிறோம். மனித நோக்கத்தி-ருந்து தேவ நோக்கமும், மனிதனுடைய வழியைப் பார்க்கிலும் தேவனுடைய வழிகளும் எவ்வாறு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் காணும் போது, அவர் உலகத்தை ஆசீர்வதிக்க அவரது கிருபையையும் அன்பின் நீள, அகல, ஆழ உயரங்களையும் கண்டுணர முடிகிறது. உள்ளான மனுஷன் குறுகிய மனப்பான்மை மற்றும் சுயநலத்தி-ருந்து தூக்கி எடுக்கப்பட்டு அவருடைய வல்லமையால் பலப்படுத்தப்பட்டு குமாரனுடைய சாயலுக்கு அதனிமித்தம் பரம பிதாவின் சாயலுக்கு ஒப்பாகும்படி உயர்த்தப்படும் மகிமையான ஒரு படத்தை நாம் பார்க்கிறோம். நாம் தேவனுடையவர்களாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக, தற்காலத்தில் தேவன் சிறுமந்தையை தெரிந்துகொள்ளும் வேலையில் நாம் ஈடுபடுத்தப்பட்டவர்களாக இருக்கிறோம். சீக்கிரத்தில் பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கும் வேலையில் நாம் ஈடுபடுத்தப்படுவோம். எப்படிப்பட்ட சோதனைகள் துன்பங்கள் வந்தாலும், வரக்கூடிய இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை நினைத்து நாம் பொறுமையோடு சகிப்போமாக. R 3964:4

## ஜூன் 28

**நான், நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும்.... வாங்கிக் கொள்ளவும்... ஆலோசனை சொல்லுகிறேன். *(வெளி. 3:18)***

கிறிஸ்தவனுக்குப் புதிதாக ஒரு சோதனை வரும்பொழுது

கிறிஸ்துவின் இந்தக் கட்டளை ஞாபகத்திற்கு வர வேண்டும். அது ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுப்பதோடு சுய தியாகம் செய்வதற்கு தூண்டும். பொன் அக்கினியினால் சோதிக்கப்படுகிறது. நெருப்பும் உலையுமில்லாமல் எப்படி தங்கம் சோதிக்கப்படமுடியும்? பொன்னிலுள்ள அழுக்கை நீக்குவது எப்படி? வேறு எந்த வழியும் இல்லை. எனவே இதை நூதனமாக எண்ண வேண்டாம். அக்கினி எரியட்டும். அழுக்கு அகற்றப்படட்டும். அருமையானவர்களே, நெருப்பின் தன-ல் ப-பீடத்தி-ருந்து ஜீவ ப-யை எடுத்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். புடமிடுகிற மாபெரும் தேவனின் கண் உன் மீது நோக்கமாயிருக்கிறது என்பதை மறக்க வேண்டாம். புடமிடும் பொழுது எவ்வளவாய் தம்குணத்தின் பிரதிப-ப்பு உன்னில் காணப்படுகிறதென்று பார்க்கிறார். நீ எப்படிப்பட்ட குணலட்சணம் உடையவனாய் மாறிக் கொண்டு வருகிறாய் என்பதைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார். நம்முடைய ஒவ்வொரு சோதனையிலும் அவர் நம்மை கண்காணித்துக் கொண்டே இருக்கிறார். ஒவ்வொரு சோதனையிலும் நம்முடைய சகிப்புத்தன்மை எவ்வாறு பலப்பட்டு வருகிறது என்பதை கண்காணித்து வருகிறார். இந்த உலகத்திற்குரிய நேசமோ, உற்றார், கணவன், மனைவி, குழந்தைகள், சிநேகிதர், பாசமோ தேவ ஒழுங்கிற்கு விரோதமாக இருக்க அனுமதிப்பதில்லை. உலகிலுள்ள எல்லாரையும் விட தம்மை அதிகமாக சிநேகிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நம்மை இயக்குவதெல்லாம் நம்முடைய சக்தியாக இல்லாமல் தேவனுடைய சக்தியாக இருக்க வேண்டும். அது சத்தியத்திலும் நீதியிலும் நிலைத்ததாக இருக்க வேண்டும். நாம் விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடி, நல்ல பக்தி வைராக்கியம் உடையவர்களாய் மரணமட்டும் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவித்து நடப்பது நமது கடமையாகும்.
R 1944:5

## ஜூன் 29

***ஆதலால் நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். (லேவி. 20:7-8)***



இதன் பொருள் என்னவெனில் நீங்கள் உங்களைத் தேவனுக்காக பிரத்தியேகப்படுத்துங்கள். நீங்கள் தேவனை பிரதானபடுத்தும் பொழுது உங்களை தேவன் பிரதானப்படுத்துவார். நாம் நம்மை அர்ப்பணித்தால், நம்மை அவர் புனிதப்படுத்துவார். நாம் நம்மை முழுமையாக ஒப்புக் கொடுக்கும் பொழுது தேவன் நம்மை அங்கீகரித்து தம்முடையவர்களாக ஏற்றுக் கொள்கிறார். தமக்கென்று ஏற்றுக் கொண்டபின் அதற்கு அச்சாரமாக பரிசுத்தாவியை பொழிகிறார். ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகின்றோம். அப்பொழுது புதிய இருதயம், புதிய சிந்தை, புதிய நோக்கம் உருவாவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட வகுப்பாரைக் குறித்து அப்போஸ்தலராகிய பவுல் " இது தேவனுடைய சித்தம்," தேவன் உங்களை குறித்துக் கொண்டதினால் பரிசுத்தமாக்குகிறார். யாரைக் குறித்து அழைத்திருக்கின்றாரோ, அவர்கள் ஏற்புடையவர்களான போது அவர்களை பிரதிஷ்டைக்குட்படுத்தி தம்முடைய பணிக்கென்று அவர்களை நியமிக்கின்றார். நாம் அவருக்குரியவர்களாகி அவருடையப் பணியை தொடர்வோமாக.
R 5877:3

## ஜூன் 30

***சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. (1 தெச. 5:23)***

பரிசுத்தப்படுத்துதலும், பிரதிஷ்டை செய்யப்படுதலும் ஒரே அர்த்தமுள்ளது போல காணப்பட்டாலும் பொருளில் வித்தியாசமுண்டு. பிரதிஷ்டை என்று சொல்லப்படும் வார்த்தை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்கக்கூடிய ஒரு நிச்சயமான தீர்மானத்தை அந்த கணப்பொழுதில் தீர்மானிப்பதைக் குறிக்கும். அது நம்முடைய சித்தத்தையும் நம்முடைய எல்லாவற்றையும் தேவனுக்கு ஒப்புக் கொடுப்பதாகும். இப்படிப்பட்ட நிச்சயத்தோடு தங்களை முழுமையாக ஒப்புக் கொடுக்காதவர்கள் கர்த்தருடன் நிஜமான பிரதிஷ்டை செய்து கொள்ளாதவர்கள். தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிற ஒவ்வொருவரும் இந்த பிரதிஷ்டையை முழுமையாக செய்யாம-ருக்க முடியாது. இந்தப் பிரதிஷ்டையை அதன் பொருளை மற்றவர்களுக்கு விளக்கிக் காண்பிக்க பிரதிஷ்டையைத் தவிர வேறு வார்த்தைகளே இல்லை.

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது முழுமனதோடு செய்யப்பட்ட பிரதிஷ்டையோடு நின்றுவிடாமல் பிரதிஷ்டை தொடங்கி இறுதிவரை உறுதியாக இராஜ்யத்தின் குணநலன்களை படிப்படியாக அடைகிறது வரையில நீடிக்கும். கிறிஸ்தவ ஜீவியத்திலே தொடர்ந்து இதே குணநலன்களோடு ஜீவமார்க்கத்தின் இறுதிவரை உறுதியாக நிற்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டாக வேண்டும். R 5876:6

## *ஜூலை 1*

***ஈசாக்கு சாயங்கல வேளையிலே தியானம் பண்ண வெளியிலே போயிருந்தான். (ஆதி. 24:63)***

தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒவ்வொரு நாளும் எல்லாக் காரியங்களும் தேவனால் நன்மைக்கு ஏதுவாக செய்யப்படுகிறதினால் தேவதயவை தியானிக்காமல் இருக்க முடியாது. எனவே ஒவ்வொரு நாளின் முடிவிலும் தங்களுக்கு கிடைத்த நன்மைகளுக்காகவும், பாதுகாப்பு பராமரிப்புக்காகவும் தவறாமல் நன்றி சொல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் தேவனுடைய திவ்விய அருமையான வாக்குத்தத்தங்களினால் பாதுகாக்கப்பட்டு வருகின்ற ஒவ்வொரு தேவதயவுக்காகவும் நம்முடைய முழங்கால்களை முடக்கி நம்முடைய இருதயத்தின் அடித்தளத்தி-ருந்து வரும் நன்றிக் கடன்களை ஸ்தோத்திர ப-யாகச் செலுத்த வேண்டும். R 799:3

## *ஜூலை 2*

***நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அதுமாத்திரமல்ல, உபத்திரவம், பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களினாலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோம. 5:1,3,4,5)***

புதிய சிருஷ்டியாகிய ஒவ்வொருவருக்கும் இது மிக அருமையான நீதியின் போதனை. "எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயங்களையும், சிந்தனைகளையும்



கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக" காத்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக நமக்கு எத்தகைய பிரச்சனைகள் காணப்பட்டாலும் நம்முடைய அந்தரங்கத்திலே நமக்கு சமாதானம் உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களுக்கு சோதனைகள் துன்பங்கள் வருகின்ற பொழுது அவைகளோடே போராடுகின்ற சந்தோஷமும் சேர்ந்தே வரும்-மழையும், புயலும் அதன்பிறகு வெய்யிலும் வருவது போல. தங்கள் பிரதிஷ்டையினால் வரக்கூடிய நீதியின் கனிகளாகிய சந்தோஷத்தை அனுபவிப்பார்கள். உபத்திரவத்தினால் பொறுமையையும், பொறுமையினால் பரீட்சையையும், பரீட்சையினால் நம்பிக்கையையும் கற்றுக் கொண்டு வெட்கப்படாத ஊழியக்காரராயிருந்து ஜீவ கிரீடத்தை பெறும் நிச்சயத்தை அடையலாம். R 5879:2

## *ஜூலை 3*

***கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார். (எபி. 10:30)***

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சில வேலைகளில் ஜாக்கிரதையாக இல்லாததினால் துன்பம் ஏற்படும் பொழுது அவைகளை நன்மைக்கு ஏதுவாக ஏற்றுக் கொண்டால் அதன் மூலம் சில பாடங்களை கற்றுக் கொள்ளலாம். அப்போஸ்தலராகிய பவுல் எச்சரிக்கையாகச் சொல்லுகின்ற வார்த்தைகளை ஞாபகப்படுத்துவோம். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்." *(1 கொரி. 11:31)* இதன் மூலம் நாம் நம்மை நன்றாக நிதானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்படி நிதானிக்கத் தவறினால் தேவன் தாமே நம்மை நியாயந்தீர்க்க வேண்டிவரும். அப்பொழுது நாம் சீர்பொருந்த நம்மை சிட்சிக்கவும் கூடும். நாம் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாகி மரணமட்டும் கீழ்ப்படிதலும் அடக்கமுள்ளவர்களாய் இருந்து அந்த சிட்சைகளை சரியாக ஏற்றுக் கொண்டோமானால் பரத்துக்குரியப் பரிசுகளைப் பெறுவோம். நாம் இப்படி தாழ்மையாக வாழத் தொடங்கும் பொழுது தற்கால மகிமையைப் பெறும் பட்டம் பதவி இவைகளை விரும்பாமல் எளிமையின் ஆவியில் நிறைந்து கர்த்தராலே உயர்த்தப்படும் நேரத்திற்காக காத்திருப்போம். அப்பொழுது நமது இரட்சகரின் சிங்காசனம், மகிமை ஆகியவற்றில் பங்கு பெறுவோம். R 5890:5

## ஜூலை 4

**சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக, உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர். *(சங். 60:4)***

கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கெல்லாம் நாம் இந்த மகிமையின் நற்செய்தியை அறிவிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். கர்த்தர் நமக்குத் தருகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தவறாமல் பயன்படுத்தி நம்முடைய சொல், செயல், கைப்பிரதி ஆகிய எல்லாவற்றின் மூலமும் நாம் அறிவிக்க வேண்டும். இந்த மகிழ்ச்சியின் நற்செய்தியை நாம் அறிவிக்காமல் விட்டுவிடுவோமானால் நம்மிடம் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் அனல் அணைக்கப்பட்டு விடும். அது ஒருபோதும் அணையலாகாது. தேவசெய்தியை நற்செய்தியை உடையவர்களாய் இருப்பது அதோடு கூட மாபெரும் பொறுப்பையும் சுமத்துகின்றது. நாம் அத்தகைய பொறுப்புள்ளவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். தேவனுடைய நற்செய்தியையும் அவர் நம்மை நேசிக்கின்ற நேசத்தையும், அவர் நமக்காக ஏற்பாடு செய்திருக்கின்ற இரட்சிப்பின் மகிமையுள்ள திட்டம், அது நிறைவேறுதற்குரிய காலம் ஆகிய இவைகளில் நாம் கொண்டுள்ள அக்கரையை தேவனும் மனிதனும் அறிய வெளிப்படையாக புலப்படுத்த வேண்டும். R 5489:5

## ஜூலை 5

**இதோ, இஸ்ரயேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை. *(சங். 121:4)***

என்றும் கைவிடாத தேவனுடைய செயல்களை ஒரு கணம் எண்ணிப் பார்ப்போமாக; எப்பொழுதுமே தவறாத அவருடைய நியாயத்தீர்ப்புகளையும் ஒருக்காலும் தோல்வியுறாத நித்திய வாழ்வுக்குரிய ஞானமான திட்டங்களையும், யுகாயுகமாக மனுக்குலம் பிழைத்திருக்கவும் தழைத்துச் செழித்திருக்கவும், தவறாக எதிர்க்கிற எந்தச் சக்தியாயினும் அவற்றை முறியடிக்க தேவ வல்லமையையும் தன்னுடைய மகத்தான திட்டத்தை நிறைவேற்ற எல்லாவற்றையும் எக்காலத்திலும் இடைவிடாமல் கண்காணித்து பாதுகாக்கின்ற பராமரிப்பையும், எப்பொழுதும் திறந்திருக்கிற காதுகளையும், இமைக்காத கண்களையும் உடைய தேவ செயலையும் எண்ணி எண்ணி தியானிப்போமாக. இவ்வுலகின் கவலைகள் தேவைகள் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புவித்துவிட்டு வர இருக்கின்ற அவருடைய ராஜ்யத்தையே தியானிக்கையில் அவருடைய குமாரனுடைய திவ்விய ஆசீர்வாதங்களும் திவ்விய சுபாவமும் படிப்படியாக நம்மை வந்து அடையும். R 1560:2



## ஜூலை 6

**நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக் கொண்டால், அதைச் செலுத்த தாமதியாதே. *(பிரச. 5:4)***

கிறிஸ்தவ ஜீவியத்தில் அபிவிருத்தியடைய ஒவ்வொருவரும் சரியானத் தீர்மானங்களை எடுப்பதோடு அதை ஒரு பொருத்தனையாக தேவனிடத்தில் நேர்ந்து கொள்ளவும் வேண்டும் என்பதே முதல்படியாகும். விரோதியின் தாக்குத-ல் எந்த சுவர் பலவீனமாகக் காணப்படுகிறதோ அதை சரிசெய்ய தொடங்குவான். ஆனால் சிலர் தீர்மானமாக எதையும் செய்ய முடியாதவர்களாகி தேவனைப் பற்றிய தீர்க்கமாக தெரிந்தும் தெளிந்தும் திட்டமான முடிவுக்கு வரமுடியாமல் திகைத்து பேத-த்து உடன்படிக்கை மூலம் பிரதிஷ்டை செய்ய முடியாதவர்களாயிருப்பார்கள். இவர்கள் தங்கள் பலவீனங்களை காணக்கூடாதவர்களாகி “கண் சொருகிப்போன குருடானாயிருக்கிறார்கள்.” தங்களுடைய பலவீனங்களை உணர்ந்து அந்த பலவீனங்களி-ருந்து மேற்கொள்ளத் தீர்மானமாக கர்த்தரிடத்தில் வராதவர்கள் தேவ குணலட்சணங்களைப் பெறமுடியாது. அபிவிருத்தியடையவும் முடியாது. ஒருவன் குணலட்சணங்களில் அபிவிருத்தி அடைந்தால் தான் ஜெயங்கொள்ள முடியும். R 4348:3

## ஜூலை 7

**பின்பு அவன் (ஆபிரகாம்) அவ்விடம் விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய் கூடாரம் போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு ப-பீடத்தைக் கட்டி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான். *(ஆதி. 12:8)***

கானானியர்களுடைய ஒழுங்கீனமாக மார்க்கங்களி-ருந்து விடுபடுவதற்காக ஆபிரகாம் அங்கிருந்து மலைப்பாங்கான நாடாகிய பெத்தேலுக்கு சமீபமாக குடிபெயர்ந்தான். அங்கே தனக்கு வீட்டைக் கட்டினான். கர்த்தருக்கென்று ஒரு ப-பீடத்தைக் கட்டி, அவருடைய

நாமத்தை தொழுது கொண்டான். இது போல ஒவ்வொரு வீட்டின் தலைவனும் தங்களுடைய குடும்ப காரியங்களை கவனமாக பார்த்துக் கொண்டால் அந்தக் குடும்பம் எவ்வளவு நன்மையும் ஆசீர்வாதமும் நிறைந்ததாயிருக்கும். நாமும் நம்முடைய குடும்பங்களை கர்த்தரிடத்திற்கும் கர்த்தருடைய தொழுகைக்கும் ஆயத்தம் செய்பவர்களாய் நம்முடைய வீடுகளி-ருந்து ஜெப தூபம் கிறிஸ்துவின் மூலமாய் பிதாவாகிய தேவனுக்கு ஏறெடுக்கப்படும் பொழுது, அவருக்கு அது சுகந்த வாசனையாயிருக்கும். அவருக்கு உகந்த மக்களென்று நமது குடும்பத்தை ஆசீர்வதிப்பது எவ்வளவு நிச்சயம். R 3936:3

## ஜூலை 8

***பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள்; பக-ன் கஷ்டத்தையும் வெயி-ன் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களை சமமாக்கினீரே. (மத். 20:12)***

யார் ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட சுவிசேஷயுகத்தின் ஒரே பரம அழைப்புக்குரிய பரிசுக்காக ஓடவேண்டும். இந்தப் பரிசு எத்தன்மையானது என்பதை உணர்ந்தவர்கள் மட்டுமே அதற்குரிய ஓட்டத்தில் மனப்பூர்வமாக தங்களுடைய எல்லாவற்றையும் தியாகம் செய்து ஓட தயாராக இருந்து அதே பந்தயப்பொருளுக்காக ஓடுகின்ற மற்றவர்களையும் அழைத்து செல்ல முடியும். இப்படிப்பட்ட தீர்க்கமான முடிவுக்கு வந்தவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு காலம் தாழ்த்தாமல் முழுமனதோடு பிரதிஷ்டைக்கு தங்களை ஒப்புக் கொடுக்கும் பொழுது ஆவியினால் ஜெயிக்கப்படுவார்கள். எனவே பந்தயத்தில் ஓடுகின்ற உடன் ஊழியரே இலக்கை நோக்கி பந்தயத்தில் முன்னேறுவீர்களாக. நீங்கள் 11ம் மணி வேளையில் வந்தவர்களாயினும் முன்பிருந்தே விசுவாசத்தி-ருப்பவர்களாயினும் நாம் எல்லோரும் ஒரே விசுவாசத்திலே ஒரே கர்த்தரைச் சேவிக்கிறவர்கள். அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஒரே ஞானஸ்நானத்தில் இணைக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்ட யாவருக்கும் ஜீவ கிரீடம் பரலோகத்தில் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. R 1046:5



## ஜூலை 9

***நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும் யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணும் மட்டும்.... என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை. (சங். 132:2,4)***

தாவீதின் இருதயத்திலே கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்ட வேண்டும் என்கிற ஆசை இருந்தது போல, கர்த்தருடைய ஜனங்களுக்கு இயல்பாகவே கர்த்தருடைய இராஜ்யம் நிறுவப்படுவதற்குரிய தற்கால பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்கிற ஆசை உண்டாகும். கர்த்தருடைய ஆலயத்திற்கு ஏற்ற பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கற்கள் ஆகியவற்றுக்கு ஒப்பான கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்கப் போகும் ஆபரணங்களை சேகரிக்கின்ற தருணம் இதுவே. **கற்களை தோண்டி எடுக்கிற வேலைமாத்திரமல்ல அதை ஒழுங்குபட வெட்டி சுத்திகரித்து தேவாலயத்தில் வைக்கக்கூடிய தகுதிக்கு அதை சீர்படுத்தும் வேளையும் இதுவே.** வேதாகமம் கூறுகின்றபடி நாம் ஜீவனுள்ள கற்களாக ஆவிக்கேற்ற மாளிகையாக கட்டப்பட்டு வருகின்றோம். இந்த ஆலயத்தில் தேவன் வாசமாயிருக்க வேண்டுமானால் அது எத்தகைய தூய்மையுள்ளதாக இருக்க வேண்டும். அத்தகையத் தூய்மையடைய நாம் எல்லாவித முயற்சியும் மேற்கொள்ள வேண்டும். R 4261:3

## ஜூலை 10

***சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன். கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர். (சங். 4:8)***

கர்த்தர் நம்மை பாதுகாத்து பராமரிக்கிறார் என்று நாம் அறிந்திருப்பதால் நம்முடைய பாரத்தையெல்லாம் அவர் மீது வைத்துவிட வேண்டும். தற்காலத்திலே தோன்றுகிற உபத்திரவங்கள் சோதனைகள் மத்தியிலே வாடாத மகிமையின் கிரீடத்தை நாம் பெற்றுக் கொள்வோம் என்கிற நிச்சயமே நமக்கு ஊக்கமளிக்கிறதாயிருக்கிறது. நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் எல்லா அடக்கத்தோடும் கிறிஸ்துவுக்கே கீழ்ப்படியக் கடவோம்.

ஏனெனில், அவருடைய விலையேறப்பட்ட இரத்தத்தின் மூலமாகத்தான் மீட்படைந்தோம். பெற்றுக் கொண்ட மீட்பை பேணிப்பாதுகாத்து விசுவாசத்தின் மூலமாக நமக்கு என்ன நேரிட்டாலும் சோர்ந்து போகாம-ருக்கக் கூடிய பலத்தை அவர் மூலமாகப் பெற்றுக் கொள்கிறோம். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். அவர்களும் தேவனை எதிர்த்து நிற்கிறார்கள். தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர்களுடைய சோதனைகள் எல்லாவற்றிலும் ஆசீர்வாதத்தையும் கிருபையையும் நிச்சயமாகத் தருகிறார். R 1054:1

## *ஜூலை 11*

***அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன். (ஏசா. 45:4)***

கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, மெய்யான திருச்சபையாக கிறிஸ்துவுக்குள் ப-யின் மூலமாக வர வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் வரும் பொழுதுதான் மறைந்து கிடக்கின்ற புதையல்களெல்லாம் கிடைக்கும் வாய்ப்பு உண்டாகும். மாபெரும் பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நாம் நடந்து கற்றுத் தெரிந்து தெளிந்த சத்தியத்திலே ஆசாரியர்களைப் போல விசுவாசத்திலே அபிவிருத்தியடையும் பொழுது மெய்யாகவே நாம் நாளுக்கு நாள், மாத மாதம், வருடா வருடம் தேவகிருபையின் ஐசுவரியத்தில் பெருக முடியும். இதனால் தான் அப்போஸ்தலராகிய பவுல் இந்தக் கிருபையின் ஐசுவரியங்கள் எல்லாம் நமக்காக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். தற்காலத்திலும் கூட ஓரளவு தேவஞானம், தேவ தயவு, தேவ ஆசீர்வாதம் இவைகளை அனுபவிக்க முடியும். ஆனாலும் "ஞானம். அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது."அதை அவ்வண்ணமாகவே பெற நாம் கிறிஸ்துவுக்குள் அதே ஆவியில் ப-யின் ஜீவியத்தை நிறைவேற்றி முடிக்கும் பொழுது பெற்றுக் கொள்வோம். R 2762:4

## *ஜூலை 12*

***இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்திலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவா. 20:31)***



இந்த உலகத்தின் ஆவி, மாம்சம், சாத்தான் ஆகிய இவைகளை நாம் வெல்லுகின்ற ஒரே வழி விசுவாசம் தான். நமக்கு முன்பாக சுவிசேஷத்தின் நாயகரான மேசியாவான இயேசுவை மையமாகக் கொண்டு நாம் ஜீவிக்க வேண்டும். இதுவே சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை. இயேசு தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் உலகை மீட்டு ஏற்ற வேளையில் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அந்த ஆசீர்வாதத்தை தந்தருளுவார் என்பதே உலகிற்கு வைக்கப்பட்டுள்ள ஒரு நம்பிக்கை. அதற்குரிய தேவனைப்பற்றிய அறிவுக்கும் கீழ்ப்படிதலுக்கும் வருகிறவர்கள் மட்டுமே நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வர்கள். கீழ்ப்படியாதவர்கள் இரண்டாம் மரணத்திற்குச் செல்வார்கள். அடுத்தப்படியாக இந்த நம்பிக்கையின் மையமான மேசியாவாகிய கிறிஸ்துவை தவறாமல் பின்பற்றுகிறவர்களுக்கு, அவரால் அழைக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்ட கீழ்ப்படிதலுள்ள விசுவாசக் கூட்டத்தாருக்கும் தங்கள் குருவாகிய கிறிஸ்துவோடே கூட வரப்போகும் மாபெரும் இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாகவும் மனுக்குலம் முழுவதையும் ஆசீர்வதிக்கக் கூடிய பாக்கியத்தையும் தருகிறார். அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருப்பது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான். இதுவே அப்போஸ்தலர் சொல்லுகின்ற இயேசுவின் ஆயிர வருட அரசாட்சியின் சந்தோஷச் செய்தி. R 3580:5

## *ஜூலை 13*

***நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார். (மத். 18:35)***

மன்னிக்கிற மாண்பு எப்பொழுதும் மனப்பூர்வமாக இருதயத்தில் இருக்க வேண்டியதே. தேவபிள்ளைகளின் சிறப்பு மன்னிப்பைத் தவிர எந்த தீய எண்ணமும் யாரிடமும் எப்பொழுதும் கொண்டிருக்கக்கூடாது. நமக்கு விரோதமாக குற்றஞ்செய்த எல்லாரையும் அது எவ்வளவு பயங்கரமான குற்றமாயிருந்தாலும் மன்னிக்க வேண்டியது தேவபிள்ளைகளின் இலட்சணம். இதன் மூலம் குற்றஞ்செய்தவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து சீர்திருந்த

வாய்ப்பாகும். ஊதாரிப் பிள்ளை வீட்டுக்குத் திரும்பியவுடன் அவன் தந்தை எவ்வாறு ஏற்றுக் கொண்டாரோ அவ்வளவாய் நாமும் மன்னித்து மறக்கின்ற தன்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். குற்றம் புரிந்தவர்கள் தங்களைத் தாழ்த்தி நம்மண்டை வருகின்ற பொழுது நாம் எதிர்கொண்டோடி அணைத்து, ஆதரிக்க வேண்டும், மன்னித்து மறக்க வேண்டும். அப்பொழுதுதான் சகோதர சிநேகத்தால் நாம் நிலைத்திருக்கிறோம் என்று காண்பிக்கக்கூடும். R 2296:4

## ஜூலை 14

**கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள். (யோவா. 16:24)**

தேவன் செய்த நன்மைகளுக்காக நன்றி கூறி ஸ்தோத்திரம் செலுத்தும் அன்பின் ஆவியை விருத்தி செய்வதே. கிறிஸ்துவ ஜீவியத்தின் மகிழ்ச்சியின் இரகசியம். இத்தகைய அன்பின் ஆவியை நாம் உடையவர்களாய் இருக்க தேவ தயவையும் தேவ கிருபையையும் நாம் அன்றாட வாழ்வில் நினைவில் கொண்டு வரவேண்டும். நம்முடைய ஜெபத்தில் நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளையெல்லாம் நினைத்து நன்றி கூற வேண்டும். ஒவ்வொரு நாளும் தேவ நடத்துதலால் தேவபராமரிப்பினால் நாம் பாதுகாக்கப்படுவதினால் நம்முடைய விசுவாசம் வேரூன்றிக் கட்டப்பட ஏதுவாகிறது. தேவபிரசன்னத்தையும் தயவையும் முழுமையாக உணரமுடிகிறது. இப்படிப்பட்ட அனுபவங்களினால் நம்முடைய அன்பும் சந்தோஷமும், அதிகதிகமாக பெருகுகிறது. முந்தி அவர் நம்மில் அன்பு கூர்ந்ததால் நாம் அவரில் அன்பு கூறுகிறோம். நம்முடைய அன்றாட வாழ்விலே தேவ அன்பை நாம் ருசிபார்க்கிறோம். அவருடைய வழிகளை மெய்யாகவே பின்பற்றும் பொழுது மனப்பூர்வமாக அந்த திவ்விய பாதையில் நடக்கின்ற ஒவ்வொருவருக்கும் தேவனுக்குள் நிறைவான சந்தோஷம் உண்டாகும். இதனிமித்தம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனிடத்தில் நாம் அடிக்கடி தேவதயவை நாடி ஜெபிக்க கற்பிக்கிறார். "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்." இயேசுவின் வழியில் நம்முடைய எல்லா மன்றாட்டுகளையும் ஏறெடுப்போமாக. R 2031:5



## ஜூலை 15

**சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்கு பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறது. (அப். 13:38)**

அப்போஸ்தலர் இங்கே குறிப்பிடுவது தூதராக இருந்த கர்த்தராகிய இயேசு மாம்சமாவதற்கு முன் செய்ததை சொல்லவில்லை அல்லது அவர் இப்பொழுது உயர்த்தப்பட்ட நிலையில் தெய்வீக சுபாவத்தில் பிதாவின் சிங்காசனத்தில் அவரோடே கூட உட்கார்ந்த போது நடத்துகிற காரியத்தை குறிப்பிடவில்லை. மாறாக, "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" செய்த காரியத்தைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். "மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று" என்று அப்போஸ்தலனாகிய பவுல் மறுபடியும் வ-யுறுத்துகிறார். இதுதான் நற்செய்தியின் மையக்கருத்தாகும். அதாவது பூரண மனுஷனாகிய முதல் மனிதன் ஆதாமின் கீழ்ப்படியாமையால் வந்த சாபம் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் ப-யினால் ஈடுகட்டப்பட்டது. எனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய மகிமையின் ஸ்தானமாகிய பரத்தை விட்டு தரித்திரராக பூமிக்கு வரவேண்டியதாயிற்று. ஆனால் மனிதனுடைய பாவச்சாயல் அவரிடத்தில் காணப்படவில்லை. அவர் குற்றமற்றவரும் பாவிகளுக்கு விலகினவரும் பரிசுத்தருமாயிருந்தார். ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும் ஈடுகட்டவே மீட்புக் கிரயமாக தமது ஜீவனைத் தந்தார். ஒவ்வொரு ப-யும் இந்த அடிப்படை ப-க்கு தொடர்பு உடையதாக வேதாகமம் காட்டுகிறது. பிதாவின் ஸ்தானாதிபதியாக வந்து எப்படி இந்த மீட்பு பணியைச் செய்தாரோ அவ்வண்ணமாகவே வரப்போகும் யுகத்தில் மீட்கப்பட்ட யாவரையும் ஆசீர்வதிக்கின்ற ஸ்தானாதிபதியாகவும் இருப்பார். இப்படியாக எல்லாரும் தெய்வ தயவைப் பெற்றுக் கொள்ள, மன்னிக்கிற மாண்பே முதற்படியாக அமைகின்றதை நாம் உணரவேண்டும். R 2150:1

## ஜூலை 16

**சீஷருடைய மனதை திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்-, நாம் அநேக**

**உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று சொன்னார்கள். *(அப். 14:22)***

அநேக உபத்திரவங்களின் வழியாய் என்று சொல்லுகின்ற பொழுது இந்த “உபத்திரவம்” என்ற வார்த்தையை விளைந்த தானியங்களை போரடிப்பதற்கு ஒப்பாக சொல்லலாம். கதிர்களை ஓங்கி அடிக்கும் பொழுது தானியம் தனியாகவும், உமி தனியாகவும் பிரிகிறது. தானியமணி உமியி-ருந்து விடுபட அடிபட வேண்டியிருக்கிறது. இதுபோலவே கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்த ஜனங்கள் கோதுமை மணிகளாக அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படவேண்டுமானால் இப்படிப்பட்ட உபத்திரவத்தை அடைந்தே தீர வேண்டும். கோதுமை மணிக்கு ஒப்பானது புதிய சுபாவம். இந்த உலகத்திற்குரிய நிலைமை உமிக்கு ஒப்பானது. பூமிக்குரிய நிலைமையாகிய உமி நீக்கப்பட்டாலொழிய கோதுமை மணி தோன்றாது. கோதுமை மணி தோன்ற வேண்டுமானால் அது அடிக்கப்பட வேண்டும், பிரிக்கப்பட்டாக வேண்டும். நாம் இந்த உலகை விட்டு, உலகநோக்கத்தை விட்டு பிரிந்தாலொழிய தெய்வ சிந்தையில், தேவ வழியில் செல்லமுடியாது. சோதனைகளையும், உபத்திரவங்களையும் எவ்வளவாய் பொறுமையாய்ச் சகிக்கிறோமோ அவ்வளவாய் நித்திய மகிழ்ச்சியை நாம் சுதந்தரித்துக் கொள்ள முடியும். நமக்கு விடப்படுகின்ற தொல்லைக் கஷ்டங்கள், அவற்றை சந்தித்த நமது போதகரும் குருவுமாகிய இயேசுவை அறியாமல் வராது. பாடுகளை அனுபவித்த கர்த்தராகிய இயேசுவே நம்குரு. இந்தப் பாடுகளினாலும் நாம் மகிமையடைகிறோம். R 2213:5

## ஜூலை 17

***... தசமபாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகு மட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணுவேன். (மல். 3:10)***

நாம் தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு எவ்வளவு விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறோம், என்னென்ன தியாகங்கள் செய்திருக்கிறோம் என்று எண்ணிப்பார்ப்பது நமது கடமையாகும். ஏதோ ஒரு நாள் தியாகம் அல்லது மாதத்தில் ஒருமுறை, வருஷத்தில் ஒருமுறை அல்ல. ஆனால் மரணபரியந்தம்



நம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது. இன்னும் கொஞ்சம் காலத்தில் சோதனைக்காலம் முடிந்துவிடும். அதுவரை நாம் சோதிக்கப்படுகிறோம். எனவே இது நாம் பெறப்போகும் ஆசீர்வாதங்களுக்கு தகுதியுள்ளவர்களா இல்லையா என்பதை பரிசோதிக்கக்கூடிய காலமாயிருக்கிறது. எனவே இந்த சோதனையில் கர்த்தர் காண்பித்த வழியிலேயே, ஜீவ வழியிலே நம்மை ஊற்றினோமானால், அது தேவனுக்கேற்ற ஜீவப-யாய் அமைந்ததானால், நாம் உடன் சுதந்தர பாகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நம்முடைய தியாகங்கள் மற்றும் செய்கைகளினால் நாம் அந்தத் தகுதியைப் பெறுகிறதில்லை. நாம் இந்தப் பாக்கியத்தை கிறிஸ்துவின் தியாகத்தால் பெறுகின்றோம். எனவே, நாம் நம்முடைய ஒவ்வொரு மணிநேரமும், நாளும் நாம் செய்துகொண்ட பிரதிஷ்டைக்கு ஏற்ப நடந்து கொள்கிறோமா என்பதை கவனிக்க வேண்டும். எந்த ஒரு பொழுதையும் நாம் வீணாகக் கழிக்காமல், சுயநலமாக இராமல், தேவவசனம் காட்டுகின்ற வழியில் முன்னேறுவோமேயானால் தேவ பார்வையில் அது விலையேறப் பெற்றதாயிருக்கும். நாம் தேவனிடத்தில் செய்து கொண்ட பொருத்தனைகளை எவ்வாறு நிறைவேற்றுகிறோம் என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற செல்வத்தில், பொருளில், சமயத்தில், சாமார்த்தியத்தில் எத்தனைப் பங்கு, எத்தனைச் சதவீதம் தேவசேவையில் பயன்படுத்துகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். R 3685:5

## ஜூலை 18

**தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்கிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார். *(லூக். 11:28)***

நாம் வேதத்தை ஆராய்கிறவர்களாயும் கூர்ந்து கவனிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது நம்பிக்கையைக் குறித்து சந்தேகப்பட்டுக் கேட்கிற யாவருக்கும் ஏற்ற பதிலை காரணகாரியத்தோடு கிருபை பொருந்தியதாகவும் உப்பால் சாரமேறியதாகவும் விளக்க முடியும். **நம்முடைய திறமையின்படி வேதவார்த்தையை பயன்படுத்தக் கூடாது.** தேவஞானத்தினாலே தேவசித்தப்படி சொல்லப்பட்ட கருத்தையே நாம் சொல்ல

வேண்டும். தேவனுடைய பிரமாணம் பரிபூரணமாயிருக்கிறது. நாம் அந்த அளவு பரிபூரணப்படவில்லையாயினும் நாம் இருதய சுத்தியோடு தேவசித்தத்தின்படி தேவனுக்கேற்கும் வண்ணமாக எதையும் செய்ய வேண்டும். ஆவியின் கனிகளாகிய அருங்குணங்கள் நம்மில் காணப்பட நாம் முயற்சி செய்வோமேயானால் அது தேவ பார்வையில் பாராட்டுப் பெறும், மற்ற மனிதருக்கும் மாதிரியாகக் காணப்படும். நம்மிடம் எல்லா அறிவும், வைராக்கியமும் இருந்தும் கீழ்ப்படித-ன் ஆவியில்லாமல் போனால் நம்மிடத்தில் அன்பின் ஆவி இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விடும். ஆகவே எல்லாத் தகுதிகளும் நம்மிடத்தில் உண்டாக திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல அவைகளைக் காத்து அதன்படியே செய்கிறவர்களாகவும் இருந்தால் தான் பாக்கியவான்களாயிருப்போம். R 3678:4

## *ஜூலை 19*

***எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். (2 கொரி. 3:5,6)***

நாம் தேவனுடைய ஸ்தானாதிபதிகளாயிருந்து அவரது இரக்கத்தையும், புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களையும், மனுமக்களுக்கு எடுத்துக்கூறி, அவர்கள் விரும்பினால் இந்த புது உடன்படிக்கையின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டு, இழந்ததை திரும்பப் பெறலாம் என்பதை போதிக்க வேண்டும். நமது செய்தியை சந்தோஷத்துடன் கேட்டு பாவத்தி-ருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் ஆயிர வருட ராஜ்யத்தின் மகா ராஜாவும், மகா பெரிய ஆசாரியரும், மகா பெரிய தீர்க்கதரிசியும், மத்தியஸ்தரும், மேசியாவுமாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாவதற்கு அழைக்கப்படுகிறார்கள். ஆகவே, நாம் புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருந்து அதற்காக நமது வாழ்வை தியாகம் செய்ய வேண்டும். புது உடன்படிக்கை ஒரு உடன்படிக்கையாயிராமல் ஒரு வாக்குத்தத்தமாக இருக்கிறது. நாம் நமது ஜீவனை மாத்திரம் அர்ப்பணிக்காமல் உடன் ஊழியக்காரராகிய கிறிஸ்துவின் சரீர அங்கத்தினரையும், அவர்களது ஜீவனை அர்ப்பணிப்பதற்கு உதவி செய்ய வேண்டும். இந்த மேன்மையான



ப- சீக்கிரத்தில் நிறைவேறும். அதன்பின் மகிமையான தலையின் கீழ் நாமும் மகிமையில் இருப்போம். R 4332:2

## *ஜூலை 20*

***தேவ அநுக்கிரகம் பெற்று நான் இந்நாள் வரைக்கும் சாட்சி கூறி வருகிறேன். (அப். 26:22)***

தன்னை கொலை செய்யும்படியாக ஏற்பாடு செய்தவர்களிடம் இருந்து காப்பாற்றப்பட்ட பவுல் தேவ அநுக்கிரகத்தினால் தான் காப்பாற்றப்பட்டதை பிரசித்தப்படுத்தினார். அப்பொழுதும் பவுல் தன்னை எருசலேம் சிறைச்சாலையிலே உதவிய லீசியாசை பெருமைப்படுத்தவில்லை. தேவ அநுக்கிரகமே தம்மை பாதுகாத்து பராமரித்தது என்று சாட்சி பகர்ந்தார். கர்த்தருடைய ஜனங்களுக்கு இது எவ்வளவு ஒரு நல்ல பாடமாக இருக்கின்றது. எவ்வளவு பேர் தாங்கள் அதிர்ஷ்டவசமாக அல்லது மனித உதவியால் தப்பி பிழைத்ததாக சாட்சி கூறுகின்றனர். தேவதயவு இவ்வண்ணமாக தேவப்பிள்ளைகளைப் பாதுகாத்து பராமரிக்கிறது என்ற பேருண்மையை மறந்து போகிறார்கள். தேவன் தமக்கு பயந்தவர்களை தம்முடைய தூதர்களைக் கொண்டு பாதுகாத்து பராமரித்து அவர்களை சுற்றிலும் எந்த ஒரு வாதையும் தீங்கும் நேரிடாவண்ணம் மீட்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். R 3197:3

## *ஜூலை 21*

***கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள். (யோவா. 15:4)***

மிகுந்த கனிகளைக் கொடுப்பது நம்மிடத்திலே இருக்கக்கூடியக் காரியமல்ல. நாம் எவ்வளவாய் அவரில் நிலைத்திருக்கிறோமோ அவ்வளவாய் அவர் வழியில் சிந்தனையில் நம்முடைய செயல்பாடும் இருக்கும். “நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்குக் கொடுக்கப்படும்” என்று ஆண்டவர் கூறுகிறார். பரலோக கிருபாசனத்தில் இருக்கும் பிதாவிடம் நாம் விருப்பத்துடன் கேட்கும்போது, ஆவியின் கனிகளில் விருத்தியடைய பரிசுத்த ஆவியாகிய திராட்சை செடிக்கு தேவையான

முக்கிய சத்தை அதிகதிகமாகக் கொடுப்பார். நாம் உலகப்பிரகாரமான யாதொன்றையும் கேட்கக்கூடாது. தேவசித்தப்படி தெய்வ நடத்துதலை கேட்கவேண்டுமேயல்லாமல் தேவ ஞானத்துக்கு விரோதமாக எதையும் கேட்கக்கூடாது. தெய்வ வழி நடத்துதல் மெய்யான திராட்சைச் செடியாகிய கிறிஸ்து என்னும் திராட்சைக் கொடியில் இணைக்கப்பட்ட யாவருக்கும் தேவ ஆவி விரும்பும் வண்ணம் கொடுக்கப்படுகின்றது. உலகப் பெற்றோர்கள் தரும் பரிசுகளைக் காட்டிலும் பரமபிதா பரிவுடன் அளிக்கும் பரிசுத்த ஆவியினால் மேன்மையான தேவதயவும் ஆசீர்வாதமும் பெறுகின்றோம். R 2466:2

## ஜூலை 22

**கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும். *(யாக். 2:20)***

நாம் என்ன கிரியை செய்கிறோம் என்ன செய்திருக்கிறோம் என்று தியானிப்பது நலம். தேவகிருபையைக்கேட்டு, கண்டு, ருசிபார்த்துதுண்டானால் நாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெறத்தக்கதாக இந்த பாக்கியமான நற்செய்திகளை ருசிபார்க்கும்படி செய்ய வேண்டும். அப்படி கிரியை செய்யவில்லையென்றால் நம்முடைய ஆன்மீக வாழ்க்கை பலவீனப்பட்டு அவலமடைந்து செத்துக் கொண்டிருக்கிறதென்று பொருள். மாறாக கர்த்தருடைய நேசத்தின் நிமித்தமாக நாம் கொழுந்து விட்டு எரிகிற அன்பினாலே தேவசேவை, சகோதர சேவை செய்கிறவர்களாக அவருடைய மீட்பின் மாபெரும் திட்டப்படி நடப்பவர்களாயிருந்தால் பலமுள்ளவர்களாயிருப்போம். அநேகரை இந்த நற்செய்தியினால், நாம் விசுவாசிகளானது போல, நாம் தேவதயவைப் பெற்றது போல, அவர்களும் பெறும்படிச் செய்வோம். இப்படிப்பட்ட வைராக்கியமுள்ள நற்கிரியைகளைச் செய்த உடன் ஊழியராயிருந்த பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல் ஆகியோரை விசேஷித்த வண்ணமாக இயேசு நேசித்தார். நாமும் விசுவாச கிரியைகளைச் செய்யும் போது இரட்சகராகிய இயேசுவால் நேசிக்கப்படுவோம். R 4377:6

## ஜூலை 23

**கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். *(நாகூ. 1:7)***



உலகின் பெரும் இக்கட்டுகளிடையே நாம் இருக்கும் பொழுது நமக்கு ஆதரவாகவும் அரணாகவும் இருந்து பரலோகத்தின் தேவன் நம்மை பாதுகாக்கிறார். நாம் நம்மையே நம்பியிருந்தோமானால் இப்படிப்பட்ட பாதுகாப்பு நமக்கு இராது. மாறாக நாம் தேவனை நம்பியிருந்தால் நமக்கு தேவ பராமரிப்பு இயல்பாகக் கிடைக்கிறது. நமக்கு மாத்திரமல்ல உலகத்திலுள்ள ஒவ்வொவருவருக்கும் தங்கள் பாவத்தினிமித்தம் வருந்தி மனந்திருந்தி தேவநீதியைத் தேடும்பொழுது தேவ தயவு கிடைக்கும். தங்களுடைய பொறுமையையும் ஐசுவரியத்தையும் நம்பியிருக்கிறவர்களையோ தேவன் புழுதி மட்டும் தாழ்த்துகிறார். உலகம் கெட்டுப் போகக் கூடாது என்பதற்காக ஒரே பேறான குமாரன் என்றும் பாராமல் அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகில் அன்பு கூர்ந்திருக்கின்றார். எனவே சர்வலோகமும் அவருடைய கடிந்து கொள்ளுதலாகிய சீர்திருத்தலுக்கு மனந்திரும்பினார்களானால் அனைவரையும் ஏற்றுக் கொள்ள சித்தமாயிருக்கிறார். அவரது கிருபையின் சூரியன் அவர்கள்மேல் உதிக்கும் போது அவரது நியாயத்தீர்ப்புகளை அவரது மக்கள் மதிப்பார்கள். அவருடைய நீதியான கோபத்தால் தண்டிக்கப்படும்பொழுது மனிதர் செய்யும் அநீதியை சுட்டிக் காண்பிக்கின்றார். இவ்விதமாய் முழு உலகமும் உலகத்தின் பரிகாரியாகிய கிறிஸ்து இயேசுவை நோக்கிப்பார்த்து அவரே வழியும், சத்தியமும், ஜீவனும், வாசலும் என்று உணர்ந்து அவருக்கொப்பாகத் தியானவாழ்க்கை வாழும்பொழுது தேவன் மிகவும் பிரியப்படுவார். R 1787:3

## ஜூலை 24

**கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள். அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. *(அப். 4:33)***

அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் உயிர்தெழுதலைக் குறித்து மகா வல்லமையாய்ச் சாட்சி கொடுத்தார்கள். அரசியலைக் குறித்தல்ல, சமூகக் கேள்விகளைக் குறித்தல்ல, உலகம் விமர்சிக்கும் அநேகக் காரியங்களைக் குறித்தல்ல, இவைகளுக்கு எந்த விதத்திலும் சம்பந்தமில்லாமல்

அப்போஸ்தலர்கள் பிரசங்கித்ததெல்லாம் உயிர்த்தெழுத-ன் நிச்சயத்தையே. நாமும் இதையே திருச்சபையின் மையக் கருத்தாகக் கொண்டிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுத-ன் முதற்பலனானவர். அவரோடு கூடச் சபையும் அதற்குப் பின்பு முழு உலகமும் தெய்வீகத் திட்டத்தில் இப்படி ஒரு உயிர்த்தெழுத-ன் அனுபவத்தில் வரவேண்டியதாக உள்ளது. எனவே நம்முடைய வாழ்வில் இதையே பிரதான சாட்சியாக சொல்லவேண்டும். "எல்லாராலும் வாசித்து அறியப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் நிரூபம் நீங்களே" என்று அப்போஸ்தலர் கூறியபடி நாம் கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் சாட்சிகளாக இருக்க வேண்டும். ஆதிகால சபையிலும் இந்தச் சத்தியத்தையே சாட்சிகளாகச் சொன்னார்கள். நாம் கர்த்தரிடத்தில் செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்ற சத்தியத்தை சத்தியத்தின்படி போதித்து தேவனுக்கு உண்மையுள்ள சாட்சியாக இருக்க வேண்டும். **நாம் போதிக்கிறதை விட நாம் சத்தியத்தில் வாழ்ந்து காட்டுவதே முக்கியமானது.** தேவ வைராக்கியத்தில் நிலைத்து சத்தியத்தில் வாழ்ந்து சத்தியத்தின்படி போதிக்கிறவர்களாகவும் இருப்போமாக. R 4391:1

## ஜூலை 25

**இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார். *(1 பேது. 2:21)***

இந்தப் பாடம் நாம் எப்பொழுதும் நினைவில் வைக்கவேண்டிய ஒன்றாகும். பெரிய பெரிய சோதனைகள் வரும்பொழுது மட்டுமல்ல சிறிய துன்பங்கள் வரும்போதும் கிறிஸ்துவின் அடிச்சுவற்றைப் பின்பற்ற மனதாயிருக்க வேண்டும். "உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தை பொல்லாததென்று தள்ளிவிடும் போதும்" கர்த்தரிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் விசுவாசமாயிருப்பதனால் தீமையான காரியங்களை பொய்யாகச் சொல்லும்போதும் நாம் இந்த வசனத்தை நினைவில் வைக்க வேண்டும். இப்படிப்பட்ட வேளைகளில் இந்த திவ்விய வாக்கைச்



சிந்தித்துப்பார்த்து நம்முடைய இருதயத்தை அதற்கு இசைவாகத் தேற்றிக் கொண்டிருக்க வேண்டும். தேவன் இவைகளையெல்லாம் அறிந்து கொண்டுதான் இருக்கிறார். என்ன செய்தாலும் நமது நன்மைக்காகத்தான் செய்வார். இறுதியாகவும் உறுதியாகவும் நாம் நித்திய கனமகிமையடைய அவர் நிச்சயம் ஆவன செய்வார். பரத்துக்குரிய இந்த விசேஷ வகுப்பார், இப்படிப்பட்ட சோதனைகளினாலும் அனுபவங்களினாலும் தங்களுடைய குணநலன்களை வருங்காலத்திற்குரியதாக அபிவிருத்தியடையச் செய்வதற்காகவே தேவன் இவ்விதமாக அனுமதியளிக்கிறார். R 3617:4

## ஜூலை 26

**சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். *(அப். 8:4)***

சில கிறிஸ்தவர்கள் இயற்கையின் அழகைப்பற்றியும் சமூகத் துறைகளைப் பற்றியும் உலகக் காரியங்களை பற்றியும் பேசிக் காலத்தை வீணாக்கும் தவறைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் தொடர்ந்து தவறான பிரசங்கம் பண்ணுகின்ற மற்ற சபையினரையும் குறித்து திட்டிக் கொண்டேயிருப்பார்கள். அவைகள் சத்தியத்தோடே தொடர்புடையதாக இருக்கலாம். ஆனாலும் கர்த்தரைச் சேவிக்கிறவர்கள் தாங்கள் தெரிந்து கொண்ட கிறிஸ்துவின் நற்செய்தி அல்லாமல் வேறெதையும் பிரசங்கிக்க நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. **கிறிஸ்துவும் அவருடைய செய்தியுமே நமக்கு வெளிச்சமாயிருக்க வேண்டும்.** நாம் அந்த வெளிச்சத்தில் வெளிச்சம் காண்கிறவர்களாக அந்த வெளிச்சத்தின் மூலம் மற்றவர்களை ஆசீர்வதிக்கின்றவர்களாக இருக்க முடியும். இருள் வெளிச்சத்தை எதிர்க்கிறதாயும் இருப்பதால் வெளிச்சம் எப்பொழுதும் பிரகாசிக்கின்றதாயிருக்க வேண்டும். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தி-ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." நம்முடைய வாயி-ருந்து புறப்படுகிற வசனமே வெளிச்சம் என்று சும்மாயிருந்துவிடக்கூடாது. நம்முடைய அன்றாட வாழ்விலும் நம்முடைய சொல் செயல் யாவிலும் அந்த வெளிச்சத்தின் பிரகாசம் தெரிய வேண்டும். தேவனுடைய சித்தம் என்னவென்றால் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தம்முடைய

சுத்தசத்திய செய்தியை எடுத்துச் சொல்பவர்களாயிருக்க வேண்டும் என்பதே."கர்த்தருடைய வீட்டின் நற்செய்தியை எடுத்துச் சொல்லுகிற ஊழியக்காரரே உங்களைச் சுத்திகரியுங்கள்." R 4330:5

## ஜூலை 27

***கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள். ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள். (சங். 96:2,3)***

சத்தயத்தினால் உண்டான யாவரும் சத்தியத்தைக் கேட்பார்கள், சத்தியத்தினிமித்தம் சாட்சிச் சொல்லவும் தயங்கமாட்டார்கள். நம்முடைய போதகராகிய இயேசுவை உலகம் அறியவில்லை. அதுபோலவே நம்மையும் உலகம் அறியாது. அவரை சிலுவையில் அறைந்தது போல கிறிஸ்தவ மண்டலங்கள் நம்மையும் சிலுவையில் அறைவார்கள். நாம் நாகரீகமடைந்த காலத்தில் வாழ்கிறோம். அப்போதிருந்த பரிசேயர் சதுசேயர் வேதபாரகர்களைக் காட்டிலும் இப்போது நம்மை அழிப்பதற்கு ஜனங்களை நமக்கு விரோதமாகத் தூண்டி விடுவதில் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் தேவகிருபையினாலே நாம் தொடர்ந்து சத்தியத்திற்குச் சாட்சி பகரமுடிகிறது. இதுவும் கொஞ்சகாலத்திற்குத் தான். ஏனெனில் "ஒருவரும் கிரியைச் செய்யக் கூடாத" இராக்காலம் வருகிறது என்றுச் சொல்லப்பட்டிருப்பதால் அந்த நாள் வருவதற்குள்ளாக நாம் சத்தியத்திற்கு சாட்சிச் சொல்லக் கூடியப் பணியை அதிதீவிரமாகச் செய்து முடிப்போமாக. R 5898:6

## ஜூலை 28

***நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது. (யோவா. 6:63)***

நம்முடைய கர்த்தரின் போதகங்கள் எவ்வளவு கருகலானதாயிருந்தாலும் புரிந்து கொள்ள முடியாத உவமைகளாகத் தோன்றினாலும் தேவதயவினால் அதை சரியாகப் புரிந்து கொள்ளும் பொழுது நமக்கு ஜீவன் தருவதாயும் நமக்கு ஆவியின் உற்சாகத்தை அளிப்பதாயும் இருக்கிறது. நம்முடைய கர்த்தரின் செய்திகளெல்லாம் புறமதச் செய்திகளைப் போல் இல்லாமல் மெய்யான வேதாகம மார்க்கத்தைச் சேர்ந்ததாகும். இது ஜீவ வழிக்குரியச் செய்தியாகவும் பரிசுத்தச் செய்தியாகவும் இருக்கிறது. இது மன்னிப்பை அளிக்கும் செய்தியாக இருப்பதோடு தவறைக் கண்டித்து உணர்த்தும் செய்தியாகவும் இருக்கிறது. இது அன்பின் செய்தியாக இருப்பதோடு, நீதியின் செய்தியாகவும் இருக்கிறது. அவருடைய ஆச்சரியமான வார்த்தைகள் ஜீவனுள்ளதாயும் அழகுள்ளதாயும் வசீகரமானதாயும் அதே வேளையில் உறுதியானதாயும் இருக்கிறது. நாம் அவைகளை பல வருடங்கள் படித்தாலும் புதிய அழகும் அதிக கருத்தாழமும், நாம் எந்த அளவுக்கு நம்முடைய போதகரின் வழியிலே அவருடைய ஞானத்திலே, அவருடைய ஆவியிலே, அவருடைய கிருபையிலே வளருகிறோமோ அந்த அளவுக்கு நமக்கு தெரிகிறது. R 4644:6



## ஜூலை 29

***ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோம. 12:12)***

ஜெபம் என்பது தேவனோடு சம்பாஷித்தல். இது நம்முடைய ஆன்மீக ஜீவியத்திற்கு மிக மிக இன்றியமையாதது. இந்த ஜெபத்தொடர்பு மூலமாக மகா உன்னதராகிய தேவனிடத்தில் நம்முடைய மீட்பர் மூலமாக நாம் பேசுகின்றோம். இந்த ஜெபத்தை நாம் அசட்டை செய்வோமானால் தேவதயவை அசட்டை செய்வதாக அர்த்தம். தேவன் இதில் பிரியப்பட மாட்டார். நாம் நம்முடைய உலகப்பிரகாரமானக் காரியங்களுக்குக் குறித்த நேரத்தில் வருதல், செய்தல் ஆகியவற்றைக் காட்டிலும் அதிக அக்கரையாக இந்த ஜெபத்தை ஏறெடுப்போமேயானால் தேவனுக்குப் பிரியமானவர்களாக தேவனை சேவிக்கின்றவர்களாக சத்தியத்தில் உண்மையும் வாஞ்சையுள்ளவர்களாக தேவ சேவை செய்கின்றவர்களாக இருப்போம். அப்பொழுது நம்முடைய போதகரும் குருவுமாகிய இயேசுவின் வழி நடத்துதலும் பாராமரிப்பும் நமக்குக் கிடைக்கும். R 2213:6

## ஜூலை 30

***மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். (மீகா. 7:18)***

புறஜாதியாரின் கடவுள்கள் கொடுமையானவர்களாகவும் பழிக்குப் பழி வாங்குபவர்களாகவும் சொல்லப்படுகிறது. வேதாகம தேவன் மட்டுமே அன்பே உருவானவராகவும் "அவருடைய கிருபை என்றுமுள்ளது" என்று பலமுறை சங்கீதங்களில் சொல்லப்படுகிறது. இருப்பினும் இப்படிப்பட்ட ஞானமும், நீதியும், அன்பும், வல்லமையுமுள்ள இந்த தேவனை எவ்வளவு தவறாக உலகம் புரிந்து கொண்டிருக்கிறது. அதற்கேற்றாற் போல கிறிஸ்துவ மண்டலமும் நித்திய நரகமாகிய எரிநகர போதனையால் அநேகர் நெருப்பில் வேதனைப்படுவது தேவனுக்கு பிரியமாயிருக்கிறது என்று போதிக்கின்றன. தேவன் ஒருபோதும் இப்படிப்பட்ட எரிநரக ஏற்பாட்டை உண்டுபண்ணினவர் அல்ல. தேவவார்த்தையை சரியாகக் காணக்கூடிய கண்களையும் கேட்கக்கூடிய காதுகளையும் உடைய எவரும் இப்படிப்பட்டக் கூற்றை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். வேதவாக்கியங்களின் மூலமாக தேவ அன்பு, தேவ குணநலன்கள், மெய்யான தேவபக்தி ஆகிய இவைகள் உருவாகிட உதவி செய்கிறது. தேவ அன்பு நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் சிறைப்படுத்தி அவருக்கு விசுவாசமுள்ளவர்களாகவும் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் என்றென்றும் இருக்கச் செய்கிறது. R 4892:3

## ஜூலை 31

***கர்த்தாவே, உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்தரிப்பார்கள். மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது இராஜ்யத்தின் மகிமைப் பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள். (சங். 145:10-12)***

தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி அவரது ராஜ்யத்தின் ஆசீர்வாதமான காரியங்களை அறிவிக்கும் சலுகை பரிசுத்தவான்களுக்கு இருக்கிறது என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறார். இது இப்போது நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அவரது பரிசுத்தவான்களுக்கு தற்கால சத்தியத்தில் அவர்களது கவனத்தை ஈர்க்கும்படி செய்கிறார். அவரது யுகங்களைப்பற்றிய மகா பெரிய திட்டத்தின் அறிவின் மூலமாக அவர்களது பாதைக்கு வெளிச்சத்தைக் கொடுத்து, அவரது மகிமையின் குணாதிசயத்தை



வெளிப்படுத்துகிறார். மேலும், அவரது நாமத்தை மகிமைப்படுத்தவும் சத்தியத்தை மற்றவர்களுக்கு போதிக்கவும் தேவையான வல்லமையை அவரது பரிசுத்தவான்களுக்குள்ளே வைக்கிறார். சிலருக்கு நல்ல பிரசங்கம் பண்ணும் திறமையையும், சிலருக்கு நல்ல சம்பாதிக்கும் திறமையையும் கொடுக்கிறார். கேட்கிற காதுள்ளவர்களுக்கு அவரது ராஜ்யத்தைக் குறித்தும், அதன் மகிமையைக் குறித்தும் அவரது தெய்வீக திட்டங்களைக் குறித்தும் அவர்களை பேசும்படி செய்கிறார். சிலருக்கு அவரது சத்தியத்தை அச்சடிக்கப்பட்ட கைப்பிரதிகள் மூலம் கொடுக்கும் சந்தர்ப்பத்தைத் தருகிறார். இன்னும் சிலருக்கு இவ்வித பல்வேறு முறைகள் மூலம் மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறார். கேட்கக்கூடிய செவியுள்ளவர்களுக்கு இந்த நற்செய்தியை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த சத்தியத்தை எந்த அளவுக்கு வைராக்கியத்துடனும் உற்சாகத்துடனும் பரப்புகிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய இருதயத்தில் ஆசீர்வாதம் பெருகும்; அவருடைய கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் விருத்தியடைவோம். R 2714:6

## ஆகஸ்டு 1

***ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். (யோவா. 12:26)***

மெய்யான தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்பட காலம் வெகு சமீபமாயிருக்கிறது. இது பாபிலோனாகிய பேர் சபைகளில் சாத்தானின் பிடியி-ருக்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை ஒவ்வொரு தேசத்திலுமிருந்து கூட்டிச் சேர்க்கும் காலமாயிருக்கிறது; கிறிஸ்து நம்மை விடுதலையாக்கித் தந்த சுதந்தரத்தை நிச்சயிக்கிற காலமாயிருக்கிறது; கிறிஸ்துவை தங்களுடைய ஒரே ராஜாவும் வழிகாட்டியுமாக அடையாளம் தெரிந்துகொண்டு அவரை பின்பற்ற உரிய வேளையாயிற்று. "நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள். எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்" (ஏசா. 2:22) என்ற வார்த்தைகளை கேட்கும் காலம் இது; தேவன் தமக்கு பிரியமான வழியில் தமது வேலையை செய்து முடிக்க திராணியுள்ளவர் என்பதை உணரும் காலம் இது; ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு ஏற்ற வேளையில்

ஏற்ற சத்தியத்தை எந்த முறையில் அறிவிப்பார் என்பதை எதிர்நோக்கும் காலமாயிருக்கிறது. இந்த உணர்வு வந்தவுடன் போப்பு, கர்தினால், பிஷப் போன்றவர்களை அங்கீகரிப்பது தேவ ஏற்பாட்டிற்கு மாறானது என்பதை தெரிந்து கொள்ளலாம். ஆவிக்குரிய இஸ்ரயேலரை, விலையேறப் பெற்றவர்களை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களை, தேவனுடைய சம்பத்தை பேர் சபையி-ருந்து கூட்டிச் சேர்க்கும் வேலையையும் கர்த்தருடைய வேலையை நிறைவு செய்வதையும் எதுவும் தடுக்க இயலாது. உலக மக்கள் அக்கறையின்றி தங்கள் சொந்த வழியில் சென்று கொண்டிருந்தாலும் கர்த்தருடைய இந்த வேலை சீராக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. R 2714:6

## ஆகஸ்டு 2

***என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன். (சங். 42:11)***

மெய்யான விசுவாசிகள் கிறிஸ்துவின் நிமித்தமாய் வருகின்ற சோதனையில் சமாதானத்தை ஒரு போதும் இழக்க மாட்டார்கள். ஏனென்றால் தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு கிறிஸ்துவை பின்பற்றி அவரோடு பாடுகளை சகிப்பவர்களுக்கு அருளப்பட்டிருக்கும் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் உண்டாக்குகிற நம்பிக்கையின் விசுவாசம் மேலானதாக இருக்கிறது. உபத்திரவமில்லாமல் சமாதானமுண்டாயிருக்குமானால், உலகத்தார் உங்களை புகழ்ந்து பேசுவார்களானால், நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த உலகம் புகழும் புகழ்ச்சியும் சமாதானமும் ஒரு கனவு போல இருக்கும். கனவிலே அரசனாகக் கண்டு விழித்துப் பார்க்கும் போது ஒன்றுமில்லாதவனாயிருப்பதை அறிவான். இது சமுத்திரத்தில் மரித்தவனின் சமாதானம் அமைதியாயிருப்பது போல் இருக்கும். நாமோ தேவ வார்த்தையினால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை பெற்றிடக்கூடிய நிச்சயத்தோடே ஓடக்கடவோம். R 347:6



## ஆகஸ்டு 3

***பூர்வகால முதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன். (ஏரே. 31:3)***

முழு உலகமும் சந்தோஷத்தை தேடிக் கொண்டே இருக்கிறது. மெய்யாகவே இயேசுவை அறிந்து, தங்களை முழுமனதோடு அவருக்கு ஒப்புக் கொடுத்து பிரதிஷ்டை செய்து கொண்டு, ஜீவத்தண்ணீரைப் பெற்று சந்தோஷத்தை கண்டடைந்த சிலர் இந்த உலகம், வேறு வழியில் தேடும் சந்தோஷம் எல்லாமே வீண் என்று தெரிந்து கொள்வார்கள். அவர்கள் தங்கள் இருதயத்தில் முழுநிறைவு அடைந்தவர்களாய் அவர்கள் சந்தோஷம் நிறைவாய் இருப்பதால், துன்பங்கள், உபத்திரவங்கள், சோதனைகள், ஏமாற்றங்கள் எதுவாயினும் சளைக்காமல் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். இந்த அனுபவங்கள் அவர்கள் மகிமைக்கு தகுதியானவர்கள் என்பதை நிரூபித்து இன்னும் அதிகமாக மகிமைக்கு அவர்களை தயார்ப்படுத்தும். R 3496:4

## ஆகஸ்டு 4

***எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி.... சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபே. 1:22,23)***

அன்பானவர்களே காலம் மிகவும் குறைவாக இருக்கிறது. நாம் தேடும் மாபெரும் பரிசு மிக சமீபத்தி-ருக்கிறது. நாம் அடைய வேண்டிய குணலட்சணங்களை வேதாகமம் காட்டுகின்ற வெளிச்சத்தின்படியே நாம் நம்மை முழுமையாக கர்த்தருக்கென்று பூரண பிரதிஷ்டை செய்தாக வேண்டும். இது நாம் உலகத்திற்கென்று மரித்தவர்களாவதைக் குறிக்கிறது. அப்பொழுது நாம் கிறிஸ்துவுக்குள் பிழைப்பவர்களாயிருக்கிறோம். தேவ கிருபையினால் உலக தலைமையையும் அதிகாரங்களையும் ஒதுக்கி விட்டோமானால் அப்போஸ்தலனாகிய பவுலுடனே கூட நாமும் “கிறிஸ்து எனக்கு ஜீவன்” என்று சொல்லத்தக்கவர்களாவோம். கிறிஸ்துவின் அங்கங்களாக கிறிஸ்துவை வழிகாட்டியாகக் கொண்டு தேவ நடத்துத-ன் முன்மாதிரியைப் பின்பற்றினோமேயானால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒத்த

குணலட்சணங்களையுடையவர்களாக ஆகக்கூடும். இயேசு தம் சுயசித்தத்தை விட்டுவிட்டு பிதாவின் சித்தத்தையே சிரமேற்கொண்டு நடந்தது போல நாமும் நடப்போமேயானால் இயேசு பிதாவினிடத்தில் பெற்ற பரிசுகளை நாமும் பெறுவோமென்று நிச்சயத்திருக்கலாம். தேவராஜ்யத்தில் நமது தலையும் கர்த்தருமானவரால் பரிசு கிடைப்பது நிச்சயம். R 2846:1

## ஆகஸ்டு 5

***என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். (1 தீமோ. 1:12)***

கர்த்தர் நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையையும் செய்கின்ற ஒவ்வொரு செய்கையையும் அறிந்து நாம் மற்றவர்களைப் போல் அல்லாமல் நம்முடைய சொல்-லும், செய-லும் உண்மையாக இருக்கக் காணும்பொழுது அது நமக்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தை, திருப்தியை அளிக்கிறது. நம்முடைய வார்த்தைகள் நம்முடைய முழு இருதயத்தையும் எப்பொழுதும் பிரதிப-க்காது, எப்பொழுதும் நம்முடைய செய்கைகள் தேவனுக்கப் பிரியமாகவே இருக்கிறது என்ற சொல்வதற்கில்லை. ஆனாலும் நம்மால் இயன்றளவு நம்முடைய சொல்லும் செயலும் அவருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் இசைவானதாயிருக்க வேண்டும் என்று எண்ணி செயல்பட்டாலும் நம்முடைய சொல்லும், செயலும் குறைவுள்ளதாகவே இருக்கிறது. நம்முடைய முயற்சியையும் உள்ளத்தையும் தேவன் கணக்கில் எடுத்து நம்முடைய அபூரணக் கிரியைக் கூட ஏற்றுக் கொள்ளும் போது நாம் எவ்வளவு ஆறுதல் அடைகிறோம். நாம் அபூரணராயிருப்பதால் பூரண நற்கிரியை செய்ய முடியாதவர்களாயிருக்கிறோம். ஆயினும், நமது அபூரணம் கிறிஸ்துவின் பூரணத்தினாலும் ப-யினாலும் நிறைவடையும். தேவன் மகா கிருபையான ஏற்பாட்டை செய்திருக்கிறார். நம்முடைய இருதயத்தின் விருப்பத்தின்படியும் நோக்கத்தின்படியும் நமது கிரியைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. R 3002:1



## ஆகஸ்டு 6

***மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள். (நீதி. 14:12)***

இந்த வசனத்தை நாம் ஒவ்வொருவரும் மனதில் பதித்து வைத்திருப்பது நலம். நமது சொந்த வேலைகளை செய்து முடிக்க நமக்கு திராணி போதாது என்பதே இதன் பாடம். நமக்கு தெய்வீக வழிகாட்டுதலும், ஆலோசனையும் அவசியம். மனித கணிப்புகள் அது எவ்வளவு பெரிய அறிவுப்பூர்வமாக இருந்தாலும் நம்பக்கூடாதவை. மனிதனுக்குத் தக்கரீதியாக வெகுநேர்த்தியாகத் தோன்றுகிற வழிகளில் நடந்தால் அது ஏமாற்றத்திலும், மரணத்திலும், இரண்டாம் மரணத்திலும் முடியும். உண்மையாகவே ஞானமான வழி என்னவென்றால் நம்முடைய பலவீனத்தை அறிவீனத்தை உணர்ந்து நமது சிருஷ்டிகரான தேவனை நோக்கி கெஞ்சுவதேயாகும். வேதாகமம் சொல்லுகிறது “வா-பப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை” என்ற வசனத்தை கவனிக்கிறவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம். இந்த தேவ வழிகாட்டுதலை எவ்வளவு இளமையிலே நம் கற்றுக் கொள்கிறோமோ அவ்வளவு பலன் கிடைக்கும். நமது சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு இசையப் பண்ணுவது சுலபமாக இருக்கும். கர்த்தரின் வழிநடத்துதல் மூலம் நமக்கு கிடைக்கும் பாடம், திருப்தி மற்றும் சமாதானம் மிகவும் விலையேறப் பெற்றதாக இருக்கும். நமக்குரிய யாவற்றையும் தேவனிடம் அர்ப்பணம் செய்து, அவரது சித்தம் நம்மில் நிறைவேற ஒப்புக் கொடுத்தால் நீதிமானாக்கப்பட்ட விசுவாசியாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கம் ஆகலாம். R 3241:1

## ஆகஸ்டு 7

***நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். (மத். 5:14)***

நாம் கர்த்தருக்கு மிகவும் சமீபமாக இருப்போமேயானால் ஆவியின் அருளை ஏராளமாய்ப் பெற்றவர்களாயிருப்போம். நாம் அவரை விட்டு கொஞ்சம் அப்புறமாகப் போனாலும் வெளிச்சம் போய்விடும். நாம் ஜெபத்தையும் வேத ஆராய்ச்சியையும் கர்த்தருடனான உறவையும் அசட்டை செய்வதால் நம்மிலுள்ள

ஆவியின் வெளிச்சம் மங்கிப் போகும். மாறாக நமது பலவீனங்களை உணர்ந்து, எவ்வளவாய் இக்காரியங்களில் உற்சாகமுள்ளவர்களாய் இருப்போமோ அவ்வளவாய் அதிகமாய் பிரகாசமடைவோம். வைராக்கியத்துடன் அவருடைய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அவரது சித்தத்தை தியானித்து அதை நம் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த வேண்டும். இதுவே நம்மிடத்திலுள்ள விளக்கு அணையாமல் எரியச்செய்கின்ற எண்ணையாக அமையும். இப்படியாக குன்றி-ட்ட விளக்காக நாம் பிரகாசிப்போமாக. R 5129:3

## ஆகஸ்டு 8

***பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூறுகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூறுகிறான். (1 யோவா. 5:1)***

பிதாவை நேசிக்கிற ஒவ்வொருவரும் குமாரனையும் நேசிக்க வேண்டும்.ஏனெனில் அவர் தேவனுடைய தற்சொரூபமும், மாமிசத்தில் மனுஷனாக வந்து பிதாவின் மகிமையுள்ள குணத்தை விளங்கச் செய்தவராய் இருக்கிறார். அவர் பிதாவை நேசித்து அவருடைய சித்தத்தின் மேலுள்ள வைராக்கியத்தால் அவருடைய சித்தத்தை நிறைவேற்றி இறுதியில் ஜீவனையும் விட்டார். அது போலவே நாமும் நமது தலையும், இரட்சகருமாகிய கிறிஸ்துவின் வழியிலே பிதாவை கனப்படுத்தி அவரது சித்தத்தை நிறைவேற்ற நம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். அவருடைய அங்கமாக இருக்கின்ற நாம் அவர் தெய்வ பயத்தோடே நடந்ததைப் போல நடக்கக்கடவோம். இஸ்ரயேல் மக்கள் கர்த்தரை தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் நேசிக்கவில்லை. ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நாம் முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும், முழு ஆவியோடும் கர்த்தரை நேசிக்க வேண்டும். நாம் கர்த்தருடையவர்களாயிருந்து அவரை சேவித்து அவருக்கு பிரியமானவைகளை செய்து அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிந்து நம்முடைய ஜீவனையே கொடுக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். R 4052:2



## ஆகஸ்டு 9

***லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். (லூக். 17:32)***

நம்முடைய கர்த்தரால் கூறப்பட்ட லோத்தின் மனைவியைக் குறித்த இந்த சம்பவத்தை நிழல்-பொருளாக தியானித்துப் பார்க்க சிலர் விரும்புகின்றனர். அநேகர் லோத்தின் மனைவியைப் போன்று பரிதவிக்கக் கூடிய நிலையில் பழைய வாழ்க்கையை எண்ணி தேவ தண்டணைக்குள்ளாகி விடுகிறார்கள். எனவே யூதா, சோதோம், கொமோரா பட்டணங்களின் அழிவு திருஷ்டாந்தரமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதன் எச்சரிக்கையை உணர வேண்டும். சிலர் கர்த்தரை விட நீடிய சாந்தமும், பொறுமையுள்ளவர்களாக எண்ணிக் கொண்டு நீதியின் பாதையில் நடப்பதற்கு பதிலாக யேகோவா தேவனையே நியாயந்தீர்க்கும் போதகர்களாக மாறிவிடுகிறார்கள். நம்முடைய சொந்த ஞானத்தைக் காட்டிலும், தேவனுடைய தீர்மானங்களும் ஞானமானவை என்று மட்டுமல்ல நமக்கு இறுதியும் உறுதியுமான நன்மை பயக்கக்கூடியவை என்று விசுவாசிக்க வேண்டும். தற்கால சத்திய வெளிச்சத்தை அனுபவித்த சிலர் இதுபோல கர்த்தரால் கைவிடப்பட்டு இருளான நிலைமைக்கு தள்ளப்பட்டால் அவர்கள் “ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள இருதயத்தை” உடையவர்களானார்கள் என்று அறிந்து கொள்ளலாம். R 5948:3

## ஆகஸ்டு 10

***சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல் உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தி-ருக்கிறவர்களல்லவே. (1 தெச. 5:4)***

நமக்கு தேவன் அருளிச் செய்த மகத்துவமுள்ள சத்தியத்திற்காகவும், இதைக் காணக்கூடிய, உணர்ந்து கொள்ளக் கூடிய அறிவையும் வைராக்கியத்தையும் கொடுத்ததற்காக மிகுந்த நன்றியை தேவனுக்கு ஏறெடுக்கக் கூடியவர்களாயிருக்க வேண்டும். இந்தக் கிடைத்தற்கரிய சத்தியத்தைப் பலரோடும் பகிர்ந்து கொள்ளும் பாக்கியத்திற்காக நன்றி பாராட்ட வேண்டும். அதே வேளையில் மகா நாளின் யுத்தத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை நாம் உணர்ந்து

கொள்ள வேண்டும். நம்முடைய அறிவுக்கண்கள் திறக்கப்பட்டதினாலே உலகத்தின் போக்கிலே நிகழ்ந்து கொண்டிருக்கிற மாறுதல்களை உன்னிப்பாக கவனித்து வரயிருக்கின்ற மகிமையுள்ள மேசியாவின் ராஜ்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்துவின் அதிகாரத்தில் இருக்கிற அறுப்பின் காலம் இன்னும் எவ்வளவு நாள் நீடிக்கும் என்பதை நாம் அறியாதிருப்பதால் திருப்தி பட வேண்டும். நம்முடைய நோக்கமெல்லாம் நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்வதாகும். R 5951:4

## ஆகஸ்டு 11

***கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள். கர்த்தாவே, அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள். (சங். 89:15)***

நமது கர்த்தர் தம்முடைய கிருபையின் செய்தியை கடைசி காலத்தி-ருக்கிற நமக்கு வித்தியாசமாகப் பகிர்ந்தளிக்கிறார். பொதுவாக சுவிசேஷம் என்று சொல்லப்பட்டு வந்தது. இதுமுதல் புதிய பாட்டு, மோசேயின் (மோசேயால் நிழலாக சொல்லப்பட்டது) பாட்டு, ஆட்டுக்குட்டியானவரின் பாட்டு என்று சொல்லப்படுகிறது.... இது “உலகின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற” மகா பெரிய வேலையை செய்து முடிக்கிற ஆட்டுக்குட்டியானவரைப் பற்றி அப்போஸ்தலர்கள் எல்லாரின் சாட்சியுமாகிய புதிய பாட்டு ஆகும். தற்கால சத்தியத்தின் மூலம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் மட்டுமே, “கெம்பீர சத்தமாகிய” இந்த புதிய பாட்டை பாட முடியும். தேவனுடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பவர்கள் மட்டுமே ஆசீர்வதிக்கபட்டவர்களாகவும் புதியப் பாடலாகிய கெம்பீர சத்தத்தை அறிந்தவர்களாகவும் இருப்பார்கள். R 2569:6

## ஆகஸ்டு 12

***இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோம. 5:1)***



தங்களை பிரதிஷ்டைக்கு ஒப்புக் கொடுக்காதவர்கள் பாளையத்தின் வழியாக நெருங்கிக் கொண்டு இருப்பதால் அவர்களுக்கு இந்த வசனம் பொருந்தாது. ஆனாலும எந்த அளவுக்கு அவர்கள் நெருங்குகிறார்களோ அந்த அளவுக்கு சமாதானம் உடையவர்களாயிருப்பார்கள். பாவத்தை விட்டு விலகி தேவனுக்குச் சமீபமாகும் பொழுது ஜீவ வழியிலே அடியெடுத்து வைப்பதால் இவர்களுக்கும் ஓரளவு சமாதானம் உண்டு. ஆனால் இந்தப் பாடத்தில் சொல்லப்படுகின்ற சமாதானம் தேவ புத்திரர்கள் நிலைமைக்கு வந்தவர்களுக்கு மட்டுமே ஆகும். தங்கள் சுயசித்தத்தை ஒழித்து தேவ சித்தத்திற்கு தங்களை முழுமையாக அற்பணித்து அதனிமித்தம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் மட்டுமே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறார்கள். மற்ற யாவருக்கும் இந்தச் சமாதானம் இல்லை. R 5960:1

## ஆகஸ்டு 13

***அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும் என்றார்கள்.(லூக். 17:5)***

நாம் இந்த அறுவடை கால இறுதியில் இருக்கிறோம். அறுவடைப் பணி தீவிரம் அடைந்திருக்கிறது, நாம் அதில் பங்கு பெறுபவர்கள் என்பதை விசுவாசித்தால் மாபெரும் பிரதான அறுவடையாளர் நம்மை தம்முடைய வேலையில் உபயோகப்படுத்தி ஆசீர்வதிக்கிறார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். இந்த அறுவடை ஊழியத்தில் கூட தோன்றும் ஏமாற்றங்கள், எதிர்ப்பு மேகங்கள் ஆகியவற்றைக் கண்டு பயப்படாமல், செய்யும்படி கைக்கு நேரிடுகிறது எதுவோ அதைச் செய்தால் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறலாம். விசுவாசக் கண்ணுடன் இரட்சண்யத்தின் தளபதியாகிய கிறிஸ்து இயேசுவை நோக்கிப் பார்த்து உழைப்போமேயானால் அநேகரை அவருடைய இராஜ்யத்திற்குள் அவர் கொண்டு வரக்கூடும். அதற்காக அவரது அன்பு, வைராக்கியம், பிரயாசம் யாவற்றையும் தருவார். R 2513:4

## ஆகஸ்டு 14

***அப்பொழுது பிசாசனவன் அவரை விட்டு விலகிப் போனான். உடனே தேவ தூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள். (மத். 4:11)***

நமது கர்த்தராகிய இயேசு தம்முடைய பிதாவினால் குறிக்கப்பட்ட பணியை சிரமேற்கொண்டு செய்வதில் பலவழிகளைச் சாத்தான் காண்பித்தாலும் அவைகளில் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளாமல் சுயதியாகம் செய்து இடுக்கமான வாசல் வழியாக குறிப்பிட்டபடியே நடந்து தேவசித்தத்தை நிறைவேற்றி வெற்றிச் சிறந்தார். எனவே எதிராளியான சாத்தான், பிதாவின் வார்த்தைக்கும் அவரது ஆவிக்கும் உண்மையுள்ளவராக இருக்கின்ற கிறிஸ்துவினிடத்தில் தன் நோக்கம் நிறைவேறாது என்று கண்டு அவரை விட்டு விலகி ஓடி விட்டான். சோதனை முடிந்த பின்போ அவருடைய பரிசுத்த தூதர்கள் வந்து அவருக்கு உபவாசத்தினாலே ஏற்பட்ட சோர்விலே பணிவிடை செய்தார்கள். இயேசு தம்முடைய தெய்வீக பலத்தைக் காட்டும் வாய்ப்பிருந்தும் அதைத் தமக்காக பயன்படுத்தவில்லை. இப்படியாக நமது ஆண் டவரின் அனுபவத்தைப் போல நம்மையும் வெற்றி வந்தடைகிறது. ஆவியின் ஐக்கியமும், மனஉற்சாகமும், தெய்வீக கிருபையும், உணர்வையும் பலப்படுத்தி அடுத்த சோதனைக்குத் தயார்படுத்தும். R 2568:4

## ஆகஸ்டு 15

**உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படிக்கு பிதாவானவர் விரும்புகிறார். *(யோவா. 4:23)***

உண்மையோடும் ஆவியோடும் தொழுது கொள்ளுதல் என்பது நன்றி சொல்லுதலும், ஸ்தோத்திரம் சொல்லுதல், ஜெபம் ஏறெடுத்தல் ஆகியவைகளில் மட்டுமல்ல, இவற்றைக் காட்டிலும் மேலான நம்முடைய முழு வாழ்க்கையும் நம்முடைய இருதயத்தின் யோசனைகளும் தியானங்களும் தெய்வீகத் திட்டத்திற்கு இசைவானதாய் ஆவியில் ஜெநிக்கப்பட்ட நிலைமையில் தேவனோடு ஒன்றித்து இருத்தலாகும். நம்முடைய கர்த்தராகிய இயேசு சொன்னது போல நம்முடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது தான் நமக்கு உணவும், பருகும் பானமுமாக இருக்க வேண்டும். இதுவே ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதாகும்.



இப்படிப்பட்ட உண்மையானத் தொழுகை நம்முடைய பேச்சிலும், சொல்-லும், செய-லும், அன்றாட வாழ்க்கையில் ரூபகாரப்படுத்தப்படவேண்டும். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவசித்தப்படி நம்முடைய அவயத்தின் ஒவ்வொரு திறமையையும் மனப்பூர்வமாக தேவ சித்தத்திற்கு உரிய காரியங்களைச் செய்ய பயன்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட தொழுகையே தேவன் விரும்புகிற தொழுகை. இருதயத்தில் கர்த்தருடைய நோக்கத்தை அறிந்து தெரிந்திருக்கிற வண்ணம் ஒவ்வொரு சொல்-லும் செய-லும் தேவன் விரும்பும் வண்ணமாக உண்மையோடும் ஆவியோடும் தொழுது கொள்ளுகின்றவர்களே கர்த்தர் தேடுகிற ராஜரீக ஆசாரியக் கூட்டமும் விசுவாசமுள்ள சிறுமந்தையுமாகும். R 2071:6

## ஆகஸ்டு 16

**எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள். *(சங். 122:6)***

பூமிக்குரிய எருசலேமுக்கும் உன்னத எருசலேமுக்கும் தேவையானது சமாதானமே. அதற்காக வேண்டிக் கொள்வது அவசியமே. கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கிறவர்கள் கர்த்தருடைய சித்தப்படி எவ்வளவு தேவ சேவை செய்கிறார்களோ அவ்வளவாய் ஆசீர்வாதத்தின் பங்கு இருக்கும். உன்னத சீயோனைப் பற்றியக் கவலை இல்லாதவர்கள் தேவ திட்டத்தையும், சித்தத்தையும் பற்றி சரிவரத் தெரியாதவர்கள் தாங்கள் விழுந்து போவதற்குரிய மகா அபாயத்தி-ருக்கிறவர்கள். நம்முடைய தேவைகளை நாம் எவ்வளவாய் நினைவு கூறுகிறோமோ அவ்வளவாய் நாம் நம்மை தாழ்த்த வேண்டும். நம்முடைய பற்றாக்குறையில், பலவீனத்தில் தேவபலம் விளங்கும். நம்முடைய ஜெபத்திற்கு பதிலளித்து தேவன் ஆசீர்வாத மழையை பொழிந்தருளுவார். சாத்தானாலும், எதிரிகளினாலும் வரக்கூடிய எல்லா எதிர்ப்புகளையும் தீமைகளையும், போராட்டங்களையும் ஜெயிக்கக்கூடிய ஜெயம் நம்முடைய விசுவாச ஜெபமே. தேவவசனத்திலும் தேவனிடத்திலும் நாம் உண்மையாயிருப்போமானால் தேவ பலம் கிடைப்பது நிச்சயம். R 2576:2

## ஆகஸ்டு 17

**என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிருபையினாலும், உண்மையினாலும் அன்புக் கூறக்கடவோம். *(1 யோவா. 3:18)***

நேசிப்பது என்பது நம்முடைய தனிப்பட்ட காரியம். ஆயினும் நாம் ஒவ்வொருவரும் இந்தச் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறோம். இந்தச் சோதனையிலே நாம் தேவனிடத்தில் செய்து கொண்ட பிரதிஷ்டைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா இல்லையா என்பதை நாம் சகோதரர்களிடத்தில் காண்பிக்கிற உண்மையான செய்கைகளில் நிரூபிக்க வேண்டும். நாம் நம்முடைய சகோதரர்களிடத்தில் சத்தியத்திற்காகவும், தேவ உடன்படிக்கையின்படியேயும் மெய்யாகவே நம்முடைய ஜீவனையும் கொடுக்கச் சித்தமுள்ளவர்களாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அன்பில், பேச்சிலே அல்ல, இருதயத்தில் , மனதில், சிந்தனையில், சொல்-ல் இப்படிப்பட்டவர்களாக இருக்க ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கி ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து இவ்விதமாய் நம்முடைய போதகரும், குருவுமாகிய கிறிஸ்து இயேசுவின் ஆவியில் நிறைந்து சகோதர சிநேகத்தை வளர்க்கக் கடவோம். R 5948:5

## ஆகஸ்டு 18

**ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியி-ருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். *(2 பேது. 3:17)***

தெய்வீகத் திட்டப்படி மெய் சத்தியத்தை மற்றவர்களுக்கு போதிக்க விரும்புகிறவர்களுக்கு அவர்களுக்கே உரிய பலவிதமான சோதனை துன்பங்களும் உண்டாகும். எனவே அவர்கள் வேதாகமத்தைப் பற்றி தெளிந்த அறிவும் தேவ ஆவியும், ஆவியின் கனிகளும் மிகுதியாய் உடையவர்களாய் இருக்க வேண்டும். அறிவானது, அப்போஸ்தலர் கூறுவது போல, வீணான இறுமாப்பையும், அகந்தையையும் உண்டாக்கும் சத்துருவானவனின் சோதனைக்கு உட்பட்டு "சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்கள்." *(அப். 20:30)* ஆகவே, கர்த்தருடைய ஊழியக்கரராக, போதகராக இருக்க விரும்புகிறவர்கள் ஆவியின் கனிகளையும், சாந்த குணத்தையும், அன்புடன் இணைந்த அறிவையும் வளர்த்து கொள்ள வேண்டும். "அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும்." R 2219:5



## ஆகஸ்டு 19

**தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன் கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளில் கர்த்தர் சொல்லுகிறார். *(ஆகா. 2:4)***

கர்த்தரில் விசுவாசமாயிருக்கிற யாவரும் அவர் நோக்கப்படி, சித்தப்படி எல்லாம் ஏற்ற வேளைகளில் நன்மைக்கேதுவாக நடக்குமென்ற அவரது வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்."எனவே நாம் எல்லோரும் இந்த வசனத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனெனில் தேவன் நம்மோடிருக்கிறார் . கிறிஸ்துவோடு கூட நாம் உடன் வேளையாட்கள். அவர் வாக்குத்தத்தம் செய்த மகா பெரிய வேலையை செய்து முடிப்பார். ஆவிக்குரிய ஆலயம் கட்டி முடிக்கப்படும். நாம் எவ்வளவாய் கர்த்தரில் பலப்பட்டிருக்கிறோமோ, வைராக்கியத்துடனும் முழு விசுவாசத்துடனும் கர்த்தராகிய இயேசுவுக்கு உடன் வேலையாட்களாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு நமது தனிப்பட்ட ஆசீர்வாதம் இருக்கும். R 2521:4

## ஆகஸ்டு 20

**சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொருங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும்..... என்னை அனுப்பினார். *(ஏசா. 61:1)***

தேவனால் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவரும் மனக்கடினமுள்ள இருதயமுடைய உலகத்தாரை மனந்திருப்பும் முயற்சியில் தங்கள் நேரத்தை செலவிட வேண்டியதில்லை. அது அவர்கள் வேலையல்ல. "இருதயம் நொருங்குண்டவர்களுக்கு காயங்களைக் கட்டுதலே" செய்தி. இப்படிப்பட்ட மக்கள் எங்கு உள்ளார்கள், அவர்களுடைய தேவைகளெல்லாம் எப்படிப்பட்டது என்பதை நாம் கண்டறிய வேண்டும். ஆவியில் எளிமையுள்ளவர்கள்,

உலகத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள், ஏமாற்றப்பட்டவர்கள், விரோதியானவனால் மாமிசத்தில் பலவீனப்பட்டவர்கள் ஆகிய இவர்களை, உலகில் எல்லா இடங்களிலும் கண்டறியப் பட வேண்டும். தேவ ஆவியினால் அபிஷேகம் பெற்றவர்கள் உதவி தேவையாயிருக்கிற இப்படிப்படடவர்களை, சந்தித்து அவர்களுக்கு வேண்டிய எல்லாச் சகாயமும் செய்து தெய்வீக வாக்குத்தத்தமாகிய எண்ணெயும், திராட்சை ரசமும் ஊற்றி அவர்களை ஆற்றித் தேற்ற வேண்டும். இவர்களை ராஜ்யத்தில் கிறிஸ்துவுக்கு உடன் வாரிசுகளாக சுதந்தரர்களாக தயார்படுத்துகிற வேலையை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பணியைச் செய்கிறவர்களையே தேவன் விரும்பி ஏற்றுக் கொள்கிறார். R 2580:2

## ஆகஸ்டு 21

***நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். (சங். 46:10)***

“அமர்ந்திருந்து” என்று சொல்வது எ-யா கேட்ட மெல்-ய ஓசையாகும். எ-யாவுக்கு பொருளாயிருக்கிற நாமே இந்த மெல்-ய ஓசையை தேவனுடைய வார்த்தைகளி-ருந்து கேட்கிறோம். அதாவது உலக வல்லமை மற்றும் பலத்தின்படியல்ல. தேவசித்தப்படியே குறித்த காலத்தில் சீயோனில் ஆளுகை துவங்கும். அங்கிருந்து ராஜா பூமியை நீதியாய் நியாயந்தீர்ப்பார். நீதிமான்களுக்கு வெகுமானத்தையும் தீமை செய்தவர்களுக்கு தண்டனையையும் அளித்து பூமியில் சிறியவன் முதல் பெரியவன் வரை கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்படி செய்வார். மேலும் மாம்சமான யாவர்மேலும் கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும். கர்த்தருடைய வாய் இப்படியாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறது. R 3414:6

## ஆகஸ்டு 22

***அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள்....... அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாக சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. (எபே. 4:15,16)***



ஒவ்வொரு புதிய சிருஷ்டியும் கிறிஸ்துவின் அங்கங்களாயிருக்கிறபடியால் சத்தியத்தை அன்புடன் கைக் கொள்ளுகிறவர்களாய் தங்களைப் போல் புதிய சிருஷ்டியாக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அன்பினாலே உதவியாயிருக்க வேண்டும். எல்லாருமாகச் சேர்ந்து ஒரே ஆவியிலே ஒரே சரீரமாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக தேவனுடைய சித்தத்துக்கு கீழ்ப்படிந்து ஒரே அன்பிலே நிலைத்திருந்து எந்த பேதமும் இல்லாதபடி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்குவதற்கும் அதன் கிருபையில் வளரவும் சபை முழுமை அடையவும் கிறிஸ்துவுக்குள் ஒத்துழைக்க வேண்டும். R 2227:5

## ஆகஸ்டு 23

***நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். (கலா.5:25)***

கிறிஸ்துவை பின்பற்ற மனதாயிருக்கிற யாவரும் தங்களது ஆசை விருப்பங்களை மாம்ச எண்ணங்களை சிலுவையில் அறைந்துவிட்டவர்கள் என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். இவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் விழுந்துபோன மாம்ச ஆசைகள் மற்றும் உணர்வுகளுக்கு எதிராக வாழ முடிவு செய்தவர்கள். மேலும் நாம் ஆவிக்குரியவர்களானால் ஆவியின்படியே நடக்க வேண்டும். தேவ ஆவியே நம்மை உயிர்ப்பித்தது, நம்மை பூரணப்படுத்துவதும் அந்த ஆவிதான். ஆனால் நாம் அந்த ஆவியில் நடத்தப்பட்டு, அதன் வழியில் நடந்தால்தான் நாம் பரிபூரணமடைய முடியும். இல்லையென்றால் அவருடைய ராஜ்யத்தில் நமக்கு இடம் இராது. கிறிஸ்துவ ஜீவியத்தில் இருக்கிறவர்களுக்கு தற்பெருமை மாபெரும் ஆபத்திலே முடியும். சண்டையும், பொறாமையும், குழப்பமும் மிகுதியாகும். வீண் பெருமையை விட்டுவிட்டு நமது போதகரும் குருவுமாகிய கிறிஸ்து இயேசுவின் ஆவியில் நடந்து தாழ்மையையும் அடக்கத்தையும் பெறுவோம்.

இப்படிப்பட்டவர்களுக்கே இயேசுவின் இரண்டாம் வருகையில் விசுவாசமுள்ளவர்கள் என்ற நற்சாட்சியும் கனம், மகிமை, சாகாமையும் தேவனால் உண்டாகும். R 4688:4

## ஆகஸ்டு 24

***அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்தில் களிப்பு உண்டாகும். (சங். 30:5)***

அற்புதமான நாளின் விடிய-ன் நம்பிக்கையை பெற்றிருக்கின்ற நாம் அந்த இராஜ்ய ஆளுகைக்குரிய அந்தஸ்தைப் பெற இப்பொழுதே எப்படி ஜீவிக்க வேண்டும்? அப்போஸ்தலர் சொல்லுகிறபடி, நாம் “பக-ன் பிள்ளைகளானால்” அதை நாம் நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். நாம் தேவனுடைய ஸ்தானாதிபதிகளும் பிரதிநிதிகளுமாயிருக்கிறோம். எனவே நாம் உலக ஜனங்களுக்கு வெகுவிரைவில் இந்த பூமியை நிரப்பப்போகிற தேவனுடைய வெளிச்சம், ஞானம், மகிமை பற்றி சொல்லவேண்டும். தற்போது உள்ள குழப்பமான கடினமான ஜீவியத்தையும் வர இருக்கின்ற மகிமையுள்ள ஜீவியத்தையும் ஒப்பிட்டுக் காண்பிக்க வேண்டும். இதனிமித்தம் ஒளியை நேசிப்பவர்கள் தேவனுடைய வார்த்தையில் கவனம் செலுத்தி தேவராஜ்யத்தின் அங்கமாக தங்களை தயார்படுத்திக் கொள்ளலாம். இருளின் அதிபதியாகிய சாத்தானின் வழிகளை விட்டுவிட்டு ஒளியின் அதிபதியாகிய இயேசுவின் வழியில் புதிய சிருஷ்டியாகி, புதிய ஒழுங்கில் புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டவர்களாய் இருக்க வேண்டுமென்பதை ஞாபகமாய் நினைவு கூருவோமாக. R 5339:5

## ஆகஸ்டு 25

***கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தை கீர்த்தனம் பண்ணுவதும்... நலமாயிருக்கும். (சங். 92:1)***

உலகில் லட்சோபலட்சம் மக்கள் தேவனுடைய மகிமையான இரட்சிப்பின் திட்டத்தை அறியாம-ருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே நமது வாய் தேவனுடைய மகிமையுள்ள திட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். எல்லா நேரங்களிலும், நாம் ஒய்வு எடுக்கும் பொழுதும், படுக்கையில் படுத்திருக்கும் போதும், 



இடைவிடாமல் கர்த்தரையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி அவருடைய சித்தத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவரது நீதி, இரக்கம், ஞானம் ஆகிய அவரது குணநலன்களையே சிந்திக்க வேண்டும். அப்பொழுது இத்தகைய குணங்கள் நாம் அவரைப் போ-ருக்க நம்மை ஊக்குவிக்கும். எந்தவொரு பெருந்தன்மையான குணத்தை தேவனிடத்தில் நாம் பாராட்டுகிறோமோ அதே குணம் நம்மில் உருவாக நாம் முயற்சிக்க வேண்டும். தேவனுடைய வல்லமையுள்ள செய்கைகளை உருக்கமான இரக்கங்களை நாம் காண்கின்றோமோ அவ்வளவாய் நம்முடைய இருதயத்தில் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர ப-யைச் செலுத்துவோம். இருண்ட காலங்களில் கூட தேவனுடைய ஜனங்கள் அவரை துதித்து வந்தார்கள். இப்படிச் செய்யாதவர்கள் அவருக்குரியவர்களல்ல. நாம் நன்றியுள்ளவர்களாய் அவரை ஸ்துதிப்போமாக. அவருடைய பரிசுத்தமான சித்தம், வழிகள் ஆகியவற்றை அதிகமதிகமாய் தியானித்து அவைகளிலே நடப்போமானால் பரலோகத்தி-ருக்கிற பரமபிதாவின் பண்புகளில் நாமும் வளரலாம். R 5785:5

## ஆகஸ்டு 26

***கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்கிறார். (எபே. 2:6)***

தேவனில் விசுவாசமுள்ள, மிகவும் பலவீனமான ஒரு விசுவாசி தன்னுடைய பலத்தில் நம்பிக்கை வைக்காமல் தன்னுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்க முடிவு செய்து நல்ல போர்வீரனைப் போல தீமையைச் சகிக்க தன்னை அனுதினமும் பலப்படுத்த தேவனை நோக்கினால் இந்த உன்னதமான கிருபையையும் மகிமையையும் அடையலாம். தன் பலத்தையே நம்புவானாகில் வீழ்ச்சி அடைவான். தற்காலத்தில் தோன்றுகிற எந்த ஒரு சிறிய சோதனையும், மாம்சத்திற்கும், மனத்திற்கும் மிகப்பெரியதாகத் தோற்றமளிக்கும். ஆனால் தேவபலத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கோ அது எளிதாக தாங்கக் கூடியதாக அமைகிறது. ஏனெனில் உடன்படிக்கை செய்த ஒவ்வொருவரும் சங்கீதக்காரரோடு கூடச்சேர்ந்து, “என்னை பலத்தால்

இடைக்கட்டி என் வழியை செவ்வைப்படுத்துகிறவர் தேவனே.... உம்மால் நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" என்று சொல்லலாம். பவுல் அப்போஸ்தலனைப் போல, "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" என்று சொல்லலாம். கிறிஸ்து இயேசுவின் ஆவிக்குள் நடப்பவர்களாகவும் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டவர்களாகவும் நடப்போமாக. R 2154:3

## ஆகஸ்டு 27

***நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இறங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார். (மாற். 5:19)***

தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக் கொண்ட உண்மையுள்ள உக்கிராணக்காரராக நாம் எவ்வளவு விசுவாசம் உள்ளவர்களாக, மாபெரும் மீட்பரின் பிரதிநிதியாக செயல்படக் கடமைப் பட்டவர்களாயிருக்கிறோம். நாம் நம்முடைய உதட்டால் சாட்சி சொல்வது மாத்திரம் போதாது. வாழ்வின் எந்த நிலையிலும் நாம் இப்போது புத்திசா-கள் என்பதையும், தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றிருக்கிறோம் என்பதையும், நீதியும், உண்மையும், நன்மையுமான காரியங்களை நேசிக்கிறவர்கள் என்பதையும் ரூபகாரப்படுத்த வேண்டும். மேலும், தேவன் வெறுக்கிற பாவம், தீமை ஆகியவற்றை வெறுத்து, நீதிமார்க்கத்திற்கு எதிரான எல்லாவற்றையும் விட்டுவிட்டு வாழ்கிறோம் என்பதையும் ரூபகாரப்படுத்த வேண்டும். R 3773:5

## ஆகஸ்டு 28

***எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில்.... வந்தோம். (2 நாளா. 14:11)***

உலகம் தனக்குரிய போராட்டத்தில் இருக்கட்டும். கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இறுதி விளைவுகள் நன்மையானதாயும், மகிமையானதாயும் முடியும். புதிய ராஜ்யத்தின் சுதந்திரராகப் போகிற நாம் இந்த உலகத்திற்குரிய போராயுதங்களைத் தரித்துக் கொள்ளாமல் ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொண்டு விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடக் கடவோம். நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்ற மகிமையுள்ள பரிசை எண்ணி நாம் மட்டுமல்ல, இதே ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு பரம சேனையாய் நிற்கும் அநேக அங்கங்களுக்கும் உதவி செய்பவர்களாயிருந்து நமது சரீரத்தின் தலையும் இரட்சிப்பின் தளபதியுமான கிறிஸ்துவுக்குள் நிறைவடைய வேண்டும். சீக்கிரத்தில் தேவன் தமது அருமையான குமாரன் மூலமாக ஸ்தாபிக்கப் போகும் மகிமையுள்ள ராஜ்யத்தில் சர்வ சிருஷ்டியும் தேவனுடைய கருணை கடாட்சத்தைக் காணும். அவரது குமாரனால் சர்வலோக மக்களும் உயர்த்தப்பட்டு போதிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்படுவார்கள். பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகள் களங்கத்தின் அடிமைத் தனத்தி-ருந்து மகிமையுள்ள சுதந்திரத்தை பெறுவார்கள். அப்பொழுது தேவன், உலகம் கெட்டுப் போகக் கூடாதென்று தம்முடைய ஒரே பேறான குமாரனை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்து அகில உலகையும் ஆசீர்வதித்து அன்பு பொழிந்தருளினார் என்று அனைவரும் உணருவார்கள். R 3393:5



## ஆகஸ்டு 29

***நீங்கள் எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். (கொலோ. 3:24)***

கர்த்தர் ஜனங்கள் தங்களுடைய சுதந்திரப்படி மனப்பூர்வமாக நடப்பதை விரும்புகிறார். யாவருடைய வற்புறுத்தலும் இல்லாமல் தாங்களாகவே முன்வந்து மனமுவந்து தங்கள் சரீரங்களை, தேவனுக்கு ஏற்ற ஜீவப-யாக ஒப்புக் கொடுக்க ஒவ்வொரு நாளும் முன்வரவேண்டும். யார் இப்படிப்பட்ட அன்றாட ப-யை, ப-க்குரிய ஜீவியத்தை அசட்டை செய்கிறார்களோ அவர்கள் இழப்புக்குள்ளாக நேரிடும். தேவன் பாவத்தை வெறுக்கிறவர் என்பதையும் பாவம் செய்வதற்கு அவரது பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை என்பதையும் நம் மனதில் நிலைநிறுத்த வேண்டும். நாம் சுயாதீனராயிருந்தாலும் பாவத்தை எதிர்க்கக் கடமைப்பட்டவர்கள். கர்த்தர் மனப்பூர்வமான ப-களையே விரும்புகிறார். விருப்பத்தோடும் வைராக்கியத்தோடும் செய்கிற எந்தச் செயலும் கர்த்தருக்குப் பிரியமானது. அவர்கள் வாக்குத்தத்தம்

பண்ணப்பட்ட பரிசை பெறுவார்கள். ஆனால் பாசாங்கு செய்கிறவர்கள் பரிசை இழப்பார்கள். R 3009:2

## ஆகஸ்டு 30

**கர்த்தரை நம்பி நம்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். *(சங். 37:3)***

தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நன்மைகளை, உலகம் பெறப்போகிற அவரது ஏற்ற வேளை விரைகிறது என்பதை உணர்கிறோம். கடந்த காலத்தில் தேவன் தம்மை நம்பி இருந்தவர்களை ஆதரித்து ஆசீர்வதித்ததை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, இந்த சுவிசேஷயுகத்தி-ருக்கின்ற நாம் என்ன சொல்லுவோம்? பழங்காலத்தி-ருந்தவர்களைக் காட்டிலும் வரக்கூடிய யுகத்திற்குரியவர்களைக் காட்டிலும் நம்முடைய காலத்தில் எல்லா வழிகளிலும் அவருடைய அதிகமாக கிருபைகளை அனுபவிப்பதை உணர்ந்து கொள்கிறோம். தேவன் தம்முடைய விசேஷ குடும்பத்தின் பிள்ளைகளாகும்படி அனுக்கிரகம் செய்திருக்கிறார். முற்காலத்தில் தம்முடையவர்களை தமது தயவுள்ள கரத்தால் தாங்கிய தேவன் தற்காலத்தி-ருக்கும் நம்மை அதிவிசேஷமாக ஆசீர்வதித்து காப்பது நிச்சயம். அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள நாமும் மனப்பூர்வமாய் விசுவாசத்தின் கிரியைகளை காண்பிக்க வேண்டும். நாம் பாவிகளாயிருக்கையில் தேவன் நம்மை மீட்க தம்முடைய குமாரனையே தந்தருளியிருக்க, இப்பொழுது நாம் அவருடைய புத்திரரானால், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கையில், கர்த்தராகிய இயேசுவோடு கூட நம்மை உடன் சுதந்திரராக்குவது எவ்வளவு நிச்சயம். என்ன வந்தாலும் நம்புவேன், தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்று ஒருமனப்பட்டவர்களாக ஆவியின் ஜீவியம் ஜீவிப்பவர்களுக்கு தேவன் பரிசுத்த ஆவியை அதிகமதிகமாக பொழிகிறார். R 3431:5

## ஆகஸ்டு 31

**தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். *(யூதா. 21)***

தேவனுடைய கணிப்பில் நான் ஒரு பொருட்டாக இருந்தாலும் அல்லது நான் ஒன்றுமில்லாமல் இருந்தாலும், நாம் தேவனிடத்தில் எவ்வளவாய் அன்பு கூறுகிறோம், நாம் கர்த்தருடைய நோக்கத்திற்காக அவருடைய பரிசுத்தவான்களுக்காக என்னென்ன தியாகங்கள் செய்கிறோம், நாம் பொதுவாக ஜனங்களுக்காக நம்முடைய விரோதிகளுக்காக என்னென்ன செய்கிறோம் என்பதைப் பொருத்தே நம்மை கணிக்கிறார். நம்முடைய அறிவு, ஞானம், புகழ், பேச்சுத்திறமை ஆகியவற்றை வைத்து நம்மை கணிப்பதில்லை. அன்பின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்கள் தேவகாரியங்களின் ஆழங்களை, இரகசியங்களை முழுமையாக அறிந்துகொள்ள முடியாது. தேவ ஆவியில்லாமல் தேவனுக்குரியவைகளை எந்த மனிதனாலும் தெரிந்துக் கொள்ள முடியாது. ஒருவன் அவனைக் கொண்டுவந்த அறிவை இழப்பதற்கு முன்னதாக ஆவியை இழக்கக் கூடும். ஒருவரின் குணலட்சணங்களை அளக்கக்கூடிய அளவுகோல் அன்பேயாகும். தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் அவரிடத்தில் நெருங்குவதற்கும் பிரதான சோதனை இந்த அன்பேயாகும். R 4917:6

## செப்டம்பர் 1

**இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்து இருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. *(1 கொரி. 13:13)***

தேவப் பார்வையில் அன்பைத் தவிர வேறு எதுவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே இத்தகைய அன்பை விவரிக்க வார்த்தையில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் அன்பின் இலக்கணம் இன்னது தான் என்று விளக்க முயற்சிக்கவில்லை. ஆனால்அன்பின் வெளிப்பாடுகளை சில உதாரணங்களில் காண்பிப்பதோடு நிறுத்திக் கொள்கிறார். இத்தகைய குணலட்சணங்களை உடையவர்கள் அன்பு பாராட்ட அறிந்திருக்கிறார்களே அன்றி அதைப்பற்றி விளக்கிச் சொல்ல முடிவதில்லை. உயிர், வெளிச்சம் ஆகியவைகளைப் போல அன்பை விளக்கிக் கூறுவது கடினமானது என்பது உண்மையிலும் உண்மை. அதனைப் புரிந்து கொள்ள நாம் செய்யும் மகத்தான முயற்சி அந்த அன்பு காட்டுவதால் உண்டாகும் பயன்களேயாம். அது கடவுளிடத்தினின்று வருகிறது. அது இருதயத்திலும் நாவிலும் செய்கைகளிலும், சிந்தையிலும் தேவ சிந்தையோடிருந்து மனித நடவடிக்கைகளையெல்லாம் மேற்பார்வையிட்டு அவைகளைக்

கட்டுப்படுத்துகிறது. எங்கு அன்பு தணிகிறதோ அங்கு தீமையே விளைகிறது. எங்கே அன்பு வளர்கிறதோ அங்கே அந்த அளவிற்கு நன்மையும் உண்டாகி பெருகும். R 4917:2

## செப்டம்பர் 2

**அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது. *(1 கொரி : 13:4)***

அன்றாட வாழ்விலே நான் பண்புடன் பழகி பணிவு, தாழ்வு, அடக்கம் இவைகளால் யாவருக்கும் தயை செய்கிற முறையிலே நடந்து கொள்கிறேனா? என் அன்றாடப் பேச்சுகளிலும், சிந்தனையிலும், நடக்கைகளிலும் அடையாளமான இந்த அன்பு வியாபித்திருக்கிறதா? நான் மற்றவர்களிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொள்கிறேனா? அவர்களிடத்தில் நான் பார்வையிலும் சொல்-லும் செய-லும் கனிவு காட்டுகிறேனா? எல்லோரைக் காட்டிலும் ஒரு கிறிஸ்தவன் தன் வீட்டிலும், தான் பணிபுரிகின்ற இடத்திலும், ஆலயத்திலும் சபை கூடுகின்ற இடங்களிலும் எல்லா இடங்களிலும் அன்புள்ளவனாக மரியாதையுள்ளவனாக பெருந்தன்மையுள்ளவனாக நடந்துக் கொள்ள வேண்டும். பரிபூரண அன்பை எந்த அளவில் அடைந்துள்ளோமோ அந்த அளவிற்கு நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும், சிந்திக்கின்ற ஒவ்வொரு சிந்தனையும் செயலும் உள்ளப் பூர்வமான அன்புடனும், பொறுமையுடனும் இருக்கும். அப்போது அன்பிலே நாம் பூரணப்படுவோம். R 4918:1

## செப்டம்பர் 3

**அன்புக்கு பொறாமை இல்லை. *(1 கொரி. 13:4)***

பொறாமையில்லாத அன்பு எனக்கு இருக்கிறதா? நானே சுபிட்சமாக இல்லாத நேரங்களில் கூட மற்றவர்கள் சுபிட்சமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதைக் கண்டு சற்றேனும் பொறாமைப்படாத பெருந்தன்மையான அன்பு எனக்கு இருக்கிறதா, இதுவே உண்மையான பெருந்தன்மை. இது பொறாமை போன்ற இயற்கைக்கு முற்றிலும் முரண்பட்ட இயல்புக்கு எதிரானதாகும். சுயநலமே பொறாமையின் வேர். அன்பின் வேரில் பொறாமை வளர இடமில்லை. மகிழ்ச்சியாய் இருப்பவர்களோடு அன்பும் மகிழ்ச்சியாயிருக்கும். சுவிசேஷத்திலும் நற்பணியிலும் மற்றும் கிறிஸ்தவ தயவின் அபிவிருத்தியிலும் தேவ ஆவியால் தேவசேவை செய்கிற எல்லாரிடத்திலும் உண்டாகிற அன்பின் மகிழ்ச்சியிலே அன்பும் மகிழ்ந்தே இருக்கும். R 4918:2



## செப்டம்பர் 4

**அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. *(1 கொரி. 13:4)***

தன்னைத்தானே புகழாத இறுமாப்பாயிராத தாழ்மையுடன் கூடிய அன்பு என்னிடத்தில் இருக்கின்றதா? பொறாமை பேசாத தன்னைத்தானே உயர்த்தாத அடக்கமான சுபாவத்தைச் சார்ந்திருக்கிற அன்பு எனக்கு இருக்கிறதா? நற்கிரியைகளுக்கு ஏவக்கூடிய அன்பு எனக்கிருக்கிறதா? மனிதர் எவரும் பார்க்காவிட்டாலும் கடவுள் மாத்திரம் அறிந்திருந்தால் போதும் என்ற எண்ணத்தில் நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறேனா? சுய அறிவைப் பற்றியோ அதன் கிரியைகளைப் பற்றியோ பெருமை பாராட்டாமல் எந்த நற்கிரியையும் பிதாவினிடத்தி-ருந்து வருகிற பரிபூரணக் கிருபை என்று தாழ்மையாக உணர்கிறவனாக இருக்கிறேனா? அவரிடத்தி-ருந்து பெற்றுக் கொள்கிற ஒவ்வொரு கிருபைக்கும் நன்றி உடையவனாக அவற்றை அன்பிலும் ஊழியத்திலும் காண்பிக்கிறேனா? R 4918:2

## செப்டம்பர் 5

**(அன்பு) அயோக்கியமானதைச் செய்யாது. *(1 கொரி: 13:5)***

"அயோக்கியமானதைச் செய்யாத" பண்புள்ள அன்பை உடையவனாக இருக்கிறேனா? பண்பற்ற நடத்தை, மரியாதைக் குறைவு ஆகியவை சாதாரணமாக தங்களைத் தாங்களே ஒரு அறிவாற்ற-லோ அல்லது பொருளாதாரத்தாலோ உயர்ந்தவர்களாக கருதிக் கொள்பவர்களிடமே காணப்படுகிறது. இது மனமேட்டிமையின் அடிப்படையே. அற்ப விஷயங்களிலும் அன்பே பண்பாகப் பாவிக்கப்படுகிறது. சிறு சிறு காரியங்களிலும் அன்புடைமையே ஒழுக்கமுள்ள பண்பாடு என உரைக்கப்படுகின்றது. ஒழுக்கமுள்ள பண்பாடு இருதயத்தில் அன்பு அல்லது மேல் அலங்காரம் எனப்படும். கிறிஸ்தவர்களாகிய நாம்

இருதயத்தில் அன்பு உள்ளவர்களாக இருப்போமேயானால் அது நம்மை விசுவாச வீட்டில் மாத்திரமல்ல, நமது வீட்டிலும், வெளியிலும் உலகத்தாரிடமும் அன்பும், பண்பும், ஒழுக்கமும் உடையவர்களாக இருக்கச் செய்யும். R 4918:2

## செப்டம்பர் 6

**(அன்பு) தற்பொழிவை நாடாது. *(1 கொரி. 13:5)***

தன்னைத்தானே புகழாத, தன்னுடைய சொந்த உரிமைகளைக் கூட மற்றவர்களுக்காக தியாகம் செய்யத்தக்க, சுயநலமற்ற அன்பை உடையவனாக நான் இருக்கிறேனா? மாறாக ஒவ்வொரு சமயமும் என் உரிமைகளையே பெரிதென்று எண்ணுகிறதோடு அடுத்தவருடைய வசதி, வாய்ப்பு மற்றும் உரிமைகளுக்கு எதிராக தனக்கே முன்னுரிமை வேண்டுமென்கிற சுயநலமுடையவனாக இருக்கிறேனா? இத்தகைய சுயநலமற்ற அன்புடைமை மற்றவர்களுடைய உரிமையை அனாவசியமாயப் பறிக்காமல் நம்மை அநீதியி-ருந்து காத்துக் கொள்ளும்; அத்தகைய அன்பு அடுத்தவர்களுக்கு அநீதி செய்யாது; மாறாக, அநீதியானவற்றை தாங்கிக் கொள்ளும்; மற்றவர்களுக்கு அநீதி செய்வதைக் காட்டிலும் தனக்குத் தானே அநீதியை தாங்கிக் கொள்ளும். R 4918:3

## செப்டம்பர் 7

**(அன்பு) சினமடையாது. *(1 கொரி. 13:5)***

எடுத்த எடுப்பிலே கோபம் அடையத்தக்கதான காரியம் எதையும் செய்யாமல் எப்போதும் நிதானமாய் எதையும் செய்கிற நன்மையானஅன்பைக்கொண்டிருக்கின்றேனா? ஒருபிரச்சனையென்றால் அதற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. அதைத் தெளிந்த மனதோடு பார்க்கக் கூடிய நிதான அன்பு என்னிடத்தில் உள்ளதா? இந்த அன்பின் அடிப்படையில் எதனையும் சாந்தமாக நிதானிப்பதால் பொறுமையின்மையையும் உக்கிர கோபத்தையும் மாற்றிவிட முடியும். எரிச்சலும், கோபமும் யாரிடம் காட்டப்படுகிறதோ, அவர்களுடைய உடலையும் மனதையும் காயப்படுத்தி பாதிக்கச் செய்வதோடு அதன் பலனாக நம்முடைய மனதையும் உடலையும் பாதிக்கச் செய்யும். R 4918:3



## செப்டம்பர் 8

**(அன்பு) தீங்கு நினையாது. *(1 கொரி. 13:5)***

கறை திரையற்ற, தீங்கு நினையாத, மற்றவர்களைச் சந்தேகிக்கிற, தீமைகளை எண்ணுகிற, மற்றவர்களிடம் குற்றம் காண்கிற குணங்களே இல்லாத அன்பின் ஆவி உடையவனாக நான் இருக்கிறேனா? மற்றவர்களுடைய உயர்ந்த குணலட்சணங்களை எப்போதும் பாராட்டுகிற பண்பு, மற்றவர்களுடைய பலவீனத்தில் ஏற்படுகிற சிறு சிறு தவறுகளைத் தாராளமாக மன்னிக்கிற பண்பு, இருதயத்தின் யோசனைகளை ஒழுங்குப்படுத்தும் பண்பு என்னிடத்தில் உள்ளதா? நல்ல நோக்கமே பூரண அன்பு. மற்றவர்களின் பேச்சையும், நடத்தையையும் அதே நல்ல எண்ணத்தில் நோக்குகிற தன்மையே அன்பாகும். சந்தேக ஆதாரங்களையோ, விரோத எண்ணங்களையோ. அற்ப விஷயத்தையோ பெரிதுபடுத்துகின்ற நோக்கம் அன்புக்கு ஒருபோதும் கிடையாது. “அன்பு எங்கே குறைவாக இருக்கிறதோ அங்கே குற்றங்கள் மிகப் பெரியதாகக் காணப்படும்” என்கிற முதுமொழியை எண்ணிப்பார்த்தல் நலம். R 4918:5

## செப்டம்பர் 9

**(அன்பு) அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். *(1 கொரி. 13 : 6)***

தவறு, தீது ஆகியவற்றால் வரும் எப்படிப்பட்ட லாபத்திலும் அன்பு பங்கு எடுத்துக் கொள்ளாது. தீமையின் வெகுமதிகளை அன்பு விரும்பாது. ஆனால் சத்தியத்தில் அது வெகுவாய் சந்தோஷப்படும். ஒவ்வொரு சத்தியத்திலும் விசேஷமாக தெய்வீக வெளிப்பாடான சத்தியத்தில் அது பிரபலமடையாது. இருந்தாலும் அதில் சந்தோஷப்படும். அப்படிப்பட்ட சத்தியத்தை சாட்சி பகருவதில் எப்படிப்பட்ட இன்னல்கள் நேரினும், இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் இவ்வுலகத்தின் நட்பை இழக்க நேர்ந்தாலும் சத்தியத்தையே நேசிக்கும். சத்தியத்திற்கு எதிராகவோ, அதன் ஊழியக்காரர்களுக்கு விரோதமாக வருகின்ற இழப்பு, துன்பம், வேதனை எதுவாயிருந்தாலும் அதில் அன்பின் ஆவி பங்குபெற்று களிகூறும். கர்த்தரினிமித்தம் அல்லது அவரது

வார்த்தையினிமித்தம் வெட்கப்படுகிறோமா என்பதைப் பொறுத்தே கர்த்தர் நம்மை கணிக்கும் கணிப்பு இருக்கும். அப்படி வெட்கப்படுகிறவர்களைக் குறித்து அவர் தமது பரிசுத்தவான்களுடன் மகிமையில் வரும்போது தாமும் வெட்கப்படுவதாகக் கூறுகிறார். R 4918:6

## செப்டம்பர் 10

**(அன்பு) சகலத்தையும் தாங்கும். *(1 கொரி. 13:7)***

அன்புக்கு விரோதமாக இருக்கிற அசுத்தம், தீமை, பாவங்கள், இவற்றால் உண்டாகிற அடுக்கடுக்கான இன்னல்கள் இவற்றைத் தாங்கவும், சகிக்கவும், அவமானங்கள், மரியாதைக் குறைவு, இகழ்ச்சிகள், பழி, நஷ்டங்கள், இறுதியாக மரணம் அடைய வேண்டியதாக இருந்தாலும் தேவசித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து இவற்றையெல்லாம் தாங்கக்கூடிய அன்பு என்னிடம் உள்ளதா? "இத்தகைய உங்கள் விசுவாசம் இவ்வுலகை ஜெயிக்கின்ற ஜெயம்." ஜீவனுள்ள விசுவாசத்தின் மையமாக அன்பெனும் பரிசுத்த ஆவி விளங்குகிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும் அவர் இரக்கப்படுகின்ற உலகத்தாருக்கும் இத்தகைய அன்பின் ஆவி கொடுக்கப்படுகின்றது. பரிபூரண அன்பு எத்தகைய சூழ்நிலையிலும் தேவகிருபையால் நம்மை ஜெயம் கொண்டவர்களாக்குகிறது. "நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்." R 4919:1

## செப்டம்பர் 11

**(அன்பு) சகலத்தையும் விசுவாசிக்கும். *(1 கொரி. 13:7)***

ஒருவரைப் பற்றி தீமையான காரியங்களைப் பேசுவார்களேயாகில் அதைக் கேளாதிருக்கும் பாங்கும், ஒவ்வொருவரைப் பற்றியும் தீமையான காரியங்களைப் பேசும் பொழுது அதை மறுக்கமுடியாதக் காரணங்களைச் சொல்லும் போது தவிர மற்ற நேரங்களில் எல்லார் மீதும் நன்மையானவற்றையே நம்பும் அன்பு என்னிடம் உள்ளதா? பரிபூரண அன்பு சந்தேகிக்காது; மாறாக, எதையும் நம்பக்கூடியதாக இருக்கும். சந்தேகக் கண்ணோடு நோக்குவதைக் காட்டிலும் நம்பி ஏமாற்றப்படுகிற நிலையை நூறுமுறையாயினும் ஏற்றுக் கொள்ளும். ஒரு மனிதனை ஒரு போதும் அநீதியாகவோ சந்தேகமாகவோ குற்றம் சாட்டுவதைக் காட்டிலும் நம்பிடுவதே நல்லது. மேலான சிந்தனைக்கு அடிகோலுகிற இரக்க உள்ளம் இவ்விடத்தில் தான் உதயமாகிறது. இதைக் குறித்தே நமது ஆண்டவர், "இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்றார்." R 4919:1



## செப்டம்பர் 12

**அன்பு சகலத்தையும் நம்பும். *(1 கொரி. 13:7)***

கிறிஸ்துவுக்காக நல்ல போர்ச் சேவகனாக தீமையை சகித்துக் கொள்ளத்தக்கதாக பயிற்சிகளைப் பெற "சகலத்தையும் நம்புகிற" அன்பே, பரிசுத்தவான்களை எதையும் தாங்குகிறவர்களாக ஆக்குகிறது. அதின் நம்பும் தன்மை, சுலபமாக தீங்கிழைப்பதையோ அல்லது கர்த்தருடைய பணியை நிறுத்துவதையோ தடுக்கிறது. மற்றவர்கள் பொறுமையிழந்து ஓடிவிட்டாலும் கூட, இத்தகைய அன்பின் ஆவி உடையவர்கள் பொறுமையோடு நல்ல போராட்டத்தைப் போராடி நம்முடைய இரட்சிப்பின் தளபதியாகிய கிறிஸ்துவை பிரியப்படுத்தலாம். அன்பின் நம்புகிற தன்மைக்கு ஏமாற்றமே தெரியாது; ஏனென்றால் அது நங்கூரம் பாய்ச்சப்பட்டதாக இருக்கும். நங்கூரம் திரையைக் கடந்து யுகங்களின் கன்மலையுடன் உறுதியாக இணைக்கப்பட்டிருக்கிறது. R 4919:4

## செப்டம்பர் 13

**இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். *(2 பேது. 1:8,11)***

பரிசுத்த ஆவியினாலே ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும், பிதாவின் ஆவி, அன்பின் ஆவி, விசுவாசம், மற்றும் நீதியின் ஆவியினால் ஊக்கமளிக்கப்படுகிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு ஆவியின் கனி வியாபித்து இருக்கிறது என்பதை வாழ்வின் ஒவ்வொரு பணிகளிலும் இந்த ஆவியின் இலட்சணம் இலக்கமாகக் காணப்படுகிறதா? கர்த்தருடைய இந்த ஆவி நம்மில்

பெருகினால், அது நம்முடைய வியாபாரம், தொழில், நமது வீடு, நமது தொழிற்சாலை, சமயலறை, சாப்பிடுமிடம், படுக்குமிடம் நமது சிந்தனை யாவற்றிலும் காணப்படும். இப்படிப்பட்ட நிறைவான ஆவியின் அன்பு எவரிடம் மிகுந்து காணப்படுகின்றதோ, கர்த்தருடைய ஆவியான இக்குணங்கள் யாருடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காணப்படுகின்றதோ அவர்களே மேசியாவின் ராஜ்யத்தில் மணவாட்டி வகுப்பராக நுழைவார்கள். R 4929:3

## செப்டம்பர் 14

***நமக்குத் துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் தானே. (2நாளா. 32:8)***

இன்றைக்கு ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எவ்வளவு அருமையான பாடம் இங்கே இருக்கிறது. நம்முடைய பலமான மேட்டிமையான விரோதிகள் தேவனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் அசட்டை செய்து நம்மேல் வெற்றி கொள்ள மிகுதியாய் முயன்று வருகின்ற இந்த வேளையில் நாம் நமது கர்த்தரையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். திரைக்குள்ளாக நமது நம்பிக்கையை உறுதியாய் வைத்தவர்கள் உலகில் அஸ்திபாரமே இல்லாமல் வேரற்றுப் போகக்கூடிய நேரங்களிலும் தங்களுடைய கடந்த கால சோதனைகளில் வென்றது போலவே இம்மாதிரியான சமயங்களிலும் உலகத்துக்குரிய ஆயுதங்களை நாடாமல் கர்த்தருடைய வல்லமையை மிக அதிகமாக தேடுவார்கள். பூமிக்குரிய சம்பந்தங்களை எல்லாம் ஒதுக்கி வைத்ததன் மூலம் தெய்வீக சம்பந்தங்களை பலப்படுத்துவதாகும். உலகம் மற்றும் விரோதியின் எதிர்ப்பு ஆவிக்குரிய கிருபையை அதிகப்படுத்துகிறது. ஏனெனில்“நமது பட்சத்தில் இருக்கிறவர் நமக்கு விரோதமாக இருக்கிற எல்லாரைக் காட்டிலும் வல்லவர்!” R 3582:6

## செப்டம்பர் 15

***தாம் நம்மை அழைக்கிறதினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு***



***உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்..... நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களை கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன். (எபே. 1:18:19)***

தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு வைத்திருக்கும் ஆச்சரியமான ஆசீர்வாதங்களை ஒரு நோக்கில் பார்க்க வேண்டுமென்றால் இருதயத்திலும் சிந்தனையிலும் இக்காட்சியை காண மிகுந்த காலம் தேவைப்படுகிறது. ஆனால் தேவன் தமது சபைக்கு செய்யப் போகிற நன்மையை, மகிமையின் ஐசுவரியத்தை லேசாகக் காண்கிறவர்கள் கூட அதைக் குறித்து ஆச்சரியப்படமாட்டார்கள். ஏனெனில் தேவன் தாராள மனதுடன் தெய்வீகத் திட்டத்தை உணரும்படி சபையை அழைத்து, பரிசுத்தப்படுத்தி, பூரணமாக்கி, மேசியாவோடு உடன் சுதந்தரராக்கும் பெரிதும் மகிமையான இந்தப் பணி 19 நூற்றாண்டுகளாக நடக்கிறது. அவர்கள் நம்முடைய கர்த்தரும் தேவனுமானவர் அழைத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு தெரிந்து கொள்ளப்பட்ட இராஜ்ய வகுப்பார் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து புதுமை என்று திகைக்கமாட்டார்கள். பரலோகமாகிய வாசஸ்தலத்தை அனுபவித்து வந்த இயேசு கிறிஸ்து தாம் “பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்ததால்” தாங்களும் இதே அடிப்படையில் பாடுபட்டு, கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உணர்வார்கள். மரணமட்டும் கீழ்ப்படிந்ததினால் பிதாவினிடத்தில் தாம் கொண்டுள்ள விசுவாசத்தை காட்டினது போல அவருடைய பின்னடியார்களும் தங்களது முந்தின பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு சோதிக்கப்பட்டு, கர்த்தரிடத்தில் தங்களுக்குள்ளே விசுவாசம் பரீட்சிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது. R 3168:1

## செப்டம்பர் 16

***பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக. (1 யோவா. 5:21)***

தீமை கபடமானது. ஒவ்வொரு பிரிவினை வழிகளும், தெய்வீக நெறியி-ருந்து பிரிகின்ற ஒவ்வொரு பிரிவினையும்

நீதியி-ருந்து ஓரளவு பிரிந்து போகிறதை நாம் ஆரம்பத்தில் அறிய முடியாததாயிருக்கிறது. கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பது மட்டும் பாதுகாப்பான முயற்சி என்று அதை நாடிச்செல்ல கற்றுக் கொள்வோமாக. நமக்கு தெய்வீக நிச்சயத்தால் என்ன குறிக்கப்பட்டிருக்கிறதோ அதை பெற்று சந்தோஷப்படவும், மனித ஆசைக்கு திருப்தியளிக்கும் வகையில் என்ன வந்தாலும் நாம் விரும்புகிற எது கிடைத்தாலும் அவருடைய சித்தத்துக்கு எதிரானதாயிருந்தால் அதை வெறுக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். தற்போது இருக்கிற அபூரண நிலையில் நம்முடைய தீர்மானங்களெல்லாம் விழுதலுக்குள்ளாகவும், நமது அறிவு அபூரண நிலையிலும் இருப்பதால், இதைப் பயன்படுத்தி சாத்தான் ஒளியை இருளாகவும் இருளை ஒளியாகவும் வைப்பான். கிறிஸ்து இயேசுவில் புதிய சிருஷ்டியாக இருக்க வேண்டுமானால் நம்முடைய பேராசைகளையெல்லாம் குறைத்துக் கொள்ள வேண்டும். தேவ சித்தத்துக்குள்ளும் கிறிஸ்துவுக்குள்ளும் நம்முடைய ஒவ்வொரு சிந்தனையையும் சிறைப்படுத்திக் கீழ்ப்படுத்த வேண்டும். இதுவே நமக்கு பாதுகாப்பானது. R 3386:4

## செப்டம்பர் 17

***யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. (சங். 24:3,4)***

யாரொருவர் கர்த்தருக்கென்று முழு இருதயத்தோடும் நல் மனசாட்சியின் உடன்படிக்கை செய்திருக்கிறார்களோ அவர்கள் அன்பின்பிரமாணப்படி இருதயத்தில்சுத்தமுள்ளவர்கள்எனப்படுவார்கள். இவர்கள்இருதயத்தில்தூய்மையாக இருந்தபோதிலும் இவர்களுடைய எண்ணம், மனம், இராஜரீக பிரமாணமாகிய அன்பின் பிரமாணத்தை நிறைவேற்ற இவர்கள் போராட்டம் நடத்தவேண்டியிருக்கும். நியாயப்பிரமாணமானது பாவம் மிகுந்த காலத்தி-ருந்து சுதந்தரித்தபடியால் அது சுயநலமுள்ளது. அதற்கு எதிரிடையான புதிய பிரமாணமோ அன்பின் பிரமாணமாக உள்ளது. இந்த அன்பின் பிரமாணத்திற்கு உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். புதிய



பிரமாணத்தின்படி அவர்களால் நடக்கக்கூடாமை ஏற்படுமானால், அது அவர்களுக்கு மனம் இல்லாமையையோ, தூய விசுவாசமுள்ள இருதயம் இல்லாமையையோ குறிக்காது. இப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் விழுந்து போனால் அல்லது வெற்றியடைய குறைவு காணப்பட்டால் அதற்கு காரணம் அவர்களது மாமிச பலவீனமும், விரோதியான சாத்தானுடைய சோதனைகளும் அவர்களுடைய சுத்த இருதயம் எதிர்க்கத் தவறி விடுகிறதும் தான். இங்குதான் கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் உதவியாக இருக்கிறது. தேவன் நம்முடைய பலவீனங்களையும் சாத்தானுடைய சதித்திட்டங்களையும் இவ்வுலகின் அதிபதியினுடைய வல்லமைகளையும் அறிந்திருப்பதால் அன்பின் ஆவிக்கு எதிரான சோதனைகளில் உதவ தேவன் உறுதியளித்திருக்கிறார். பரலோகக் கிருபையின் சிங்காசனத்திற்கு அவர்கள் இலவசமாகப் போகலாம். அவர்களுடைய இருதயம் ஏற்றுக் கொண்ட நல்ல முடிவுகளின்படி முழுமையான வாழ்வு வாழ இயலாவிடினும் கிருபையுள்ள தேவன் அருள்செய்வார். அவர்களுடைய எல்லாத் தேவைகளிலும் அப்படிப்பட்டவர்களுக்கு உதவியும் கிருபையும் அளிப்பதாக தேவன் வாக்களிக்கின்றார். R 5123:4

## செப்டம்பர் 18

**வாரத்தின் முதல் நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். *(யோவா. 20:19)***

அநேகர் இப்படித்தான் தங்களைப் போன்றே ஒரே திவ்விய விசுவாசத்தில் உள்ளவர்களோடு தங்கள் இருதயப்பூர்வமான விருப்பமான கர்த்தருடைய வார்த்தையின் வாக்குத்தத்தின் நற்செய்திகளையும் குறித்துப் பேசி அடிக்கடி கூடிவர முடியாத தொலைவில் இருக்கின்றனர். அப்படித் தனிமையில் தொலைவில் விடப்பட்டதால் அவர்கள் ஏமாற்றம் அடையத் தேவையில்லை. ஏனெனில் இரண்டு அல்லது மூவராய் சந்திக்கும் போது அடையக்கூடிய ஆசீர்வாதத்தை வேதம் கூறுகிறது. ஆனால் தனித்து விடப்பட்டவர்களுக்கு அவ்வாறு வாக்குத் தருகிறதில்லை. அப்படிப்பட்டவர்கள் தேவ ஏற்பாடு என்ன எனச் சிந்தித்து யாரேனும்

ஒருவர் இருவரோடாவது கலந்து கொண்டு தேவவார்த்தையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இப்படி அடிக்கடி கூடுகிற சந்தர்ப்பம் இருந்தும் இதை பயன்படுத்திக் கொள்ளாதவர்கள் இரட்சிப்பைக் குறித்துக் கவலைப்படாத அசட்டைத் தனத்தால் கொஞ்சநஞ்சமுள்ள உற்சாகத்தையுமிழந்து தேவ போதனையை மறந்து, தேவன் தமக்கு ஆபரணங்களாகச் சேர்க்கிறவர்களோடுச் சேர்க்கப்படாமல் போய்விடுவார்கள். மாறாக ஒருவருக்கு கொஞ்சம் ஆர்வம் மட்டும் இருக்குமானால் பரத்துக்குரிய காரியங்களிலும், தெய்வ திட்டங்கள், அவருடைய வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றில் ஆர்வம் இல்லாமல் உலக, வியாபாரக் காரியங்களில் மட்டும் ஆர்வம் காட்டினால், அது பாதகமான அடையாளம். தேவன் அவர்களை அணுகவே மாட்டார். அவர் தமது வார்த்தைகளில் பசிதாகமுள்ளவர்களுக்குத்தான் நிச்சயமான ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் அளிப்பாரேயல்லாமல் அவரை நாடித் தேடாதவர்களிடம் அவரும் நெருங்கமாட்டார். R 2802:1 / 2801:6

## செப்டம்பர் 19

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். *(1 தெச. 5:25)***

எதிர்ப்பைக் காட்டுவதோ, நமது உரிமைகளுக்காக உரத்த குர-ல் கத்துவதோ நமக்கு உகந்ததல்ல. நாம் சிலுவை போர் வீரராக ஆவதற்கு உலக உரிமைகளை விட்டுவிட்டு, தமது உரிமைகளை மரணப் பரியந்தம் தம்மை விட்டு நீக்க அனுமதித்த நமது இரட்சிப்பின் தளபதியுடன் பங்குதாரராக வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை உலகமும் தூதரும் நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்களை தாங்களே பலப்படுத்திக் கொண்டு ஒருவரையொருவர் மகா பரிசுத்தமுள்ள விசுவாசத்திலும் அன்பிலும் கர்த்தருக்காகவும் அவருடைய நற்செய்தியின் நிமித்தமான வைராக்கியத்திலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் ஒருவர் மற்றவர்களுக்காக ஜெபிக்கக் கடமைப்பட்டவர்கள். நமக்கோ மற்றும் நாம் ஜெபிக்கிறவர்களுக்கோ இத்தகையச் சோதனை, விசுவாசப் பரீட்சை வரக்கூடாது எனக் கர்த்தரிடம் கேட்கக்கூடாது.



ஏனெனில் எது நமக்குச் சிறந்தது என்று தெய்வீக ஞானத்தில் தேவன் அறிவார். தேவ வாக்குத்தத்தங்களின்படி அவர் நமக்கு அருள வேண்டியதை, நாம் நமது தேவை அறிந்து கேட்க, மன்றாட, ஒருவருக்கொருவர் ஊக்கமாக ஜெபித்தல் அவசியம். R 5928:5

## செப்டம்பர் 20

**வானத்தி-ருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம். *(யோவா. 6:33)***

அநேக ஜனங்கள் வானத்திற்குரிய காரியங்களில் குறைவாகவும் பூமிக்குரிய காரியங்களில் அதிகமாகவும் திருப்தியடைகிறார்கள். நாமோ பூமிக்குரிய காரியங்களில் மிகக் குறைவாகவும் வானத்திற்குரிய காரியங்களில் அதிகமாகவும் திருப்தியடையகிறோம். பழைய சுபாவத்தைக் களைந்து போடுகிறதினாலே புதிய சுபாவம் வளருகிறது. புதிய ஆசையும் புதிய நம்பிக்கைகளும் வளருகின்றன. அது போலவே பழைய சுபாவம் பெருகினால் புதியனவெல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடும். தெய்வீக ஆசீர்வாதத்தை, நித்தய ஜீவனை கொடுக்கக் கூடிய ஆகாரத்திற்கும் அழிந்து போகக்கூடிய ஆகாரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் உணர்ந்து, தெய்வீக ஆசீர்வாதத்தை தரக்கூடிய ஆகாரத்தை தெரிந்து கொள்வோம். அவருடைய வசனங்களை அதிகமாக உட்கொண்டு இவ்விதமாக தேவனிலும் தேவனுடைய பலத்திலும் உறுதியிலும் வளர்வோம். நாம் அதிகமாக உலக ஆசைகள், நம்பிக்கைகள், உலக ஆவி இவைகளி-ருந்து விலகியிருப்போம். நாம் பரலோக தேசத்தையும், பரலோக ராஜ்யத்தையும், பரலோக சுபாவத்தையும் தேடி நாம் தேவ சுபாவத்துக்கு தயாராவோம். பரலோகத்தி-ருந்து ஜீவனை கொடுக்கக்கூடியவரை, பரலோகத்தின் ஆகாரத்தை கொடுக்கக்கூடியவரை நாம் அறிந்து கொண்டோம். இந்த ஆகாரத்தை பகிர்ந்து கொடுப்பது நம்முடைய மிகப் பெரிய கடமை. "அவர்களுக்கு சாப்பிட கொடுங்கள்." "இதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்." R 3334:4

## செப்டம்பர் 21

**நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். *(எபே. 6:11)***

பாவத்திற்கு ஊழியம் செய்யாதபடிக்கும், பாவத்தில் சிக்கிக் கொள்ளாதபடிக்கும் கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும். கர்த்தருக்கு விரோதமாக இருக்கக்கூடிய எந்த நிலையி-ருந்தும் மாறுபட்டு தங்களுடைய உலகப் பிரகாரமான சமயத்துக்கு ஏற்றபடி மாறுகின்ற நிலையி-ருந்தும் விலகி ஓட வேண்டும். சாத்தானுக்கும் அவனுடைய உபாயதந்திரங்களுக்கும் உறுதியாக எதிர்த்து நிற்க கிறிஸ்தவர்கள் தீர்மானித்து விட்டால் அவனுடைய தாக்குத--ருந்து விடுபடுவார்கள். சாத்தான் அவர்களை விட்டு ஓடிவிடுகிறான். ஒரு போர்த் தளபதியால் நன்கு பாதுகாக்கப்பட்ட ஒரு கோட்டையை தாக்குவது பயனற்றது என்றறிவதினால், விரோதியானவன் தனது எதிரி தன்னை எதிர்ப்பதில் உறுதியாயும் நன்கு திடமனதுடனும் இருக்கிறான் என்று அறிவதால் பின் வாங்கிவிடுகிறான். ஆனால் பாவகாரியத்திற்கு இடங்கொடுக்கும் போது விரோதி உட்புக வழிவகுக்கப்படுகிறது. உடனே மறுபடியும் தாக்குதலை தொடருகிறான். அந்த பாவ காரியத்திற்கு இன்னும் ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து எங்கே பலவீனத்தை உணர்கிறானோ அந்த இருதயத்தில் இடம் பிடித்துக் கொள்கிறான். எனவே தேவப்பிள்ளைகள் தீமைக்கு அடிமையாவதை உணர்ந்து உடனடியாக தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு கணப்பொழுது தாமதித்தாலும் மாபெரும் ஆபத்தாகும். தேவனுடைய பட்சத்தில் நிற்கிறவர்களை, நிபந்தனையின்றி தங்களை தேவனுக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கிறவர்களை தேவன் பாதுகாக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். சில வேளைகளில் அவர்களை சோதிக்க அனுமதித்தாலும் அவர்கள் எவ்வளவாய் விசுவாசத்திலும் உண்மையிலும் தரித்து இருக்கிறார்களோ அவ்வளவாய் அவர்களை பாதுகாக்கின்றார். இப்படிப்பட்ட சோதனைகளினால் அவர்கள் மிகவும் பலபடுத்தப்படுவார்கள். R 5896:6

## செப்டம்பர் 22

**அப்பொழுது மோசேயும் இஸ்ரயேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடினபாட்டு: கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிச் சிறந்தார்; குதிரையையும் குதிரை வீரனையும் கட-லே தள்ளினார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன். *(யாத். 15:1,2)***



மாம்சீக இஸ்ரயேலர் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்தி-ருந்து மீட்டு வந்ததற்காக தேவனை மகிமைப்படுத்த வேண்டியது அவசியமே. அதைக்காட்டிலும் இக்காலத்தில் சாத்தானின் பிடியி-ருந்தும் பாவ அக்கிரமத்தின் பிடியி-ருந்தும் மீட்டதற்காக ஆவியின் இஸ்ரயேலராகிய நாம் தேவனை மகிமைப்படுத்துவது அவசியம். ஏனெனில் நமது பாவங்களுக்காக தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தப்பட்டது. நீண்ட காலமாக அடிமைத்தனத்தி-ருந்த அறியாமையின் ஜனங்கள் சுவிசேஷயுகத்தின் மேன்மையை பெற்றிராத ஜனங்கள் கர்த்தருக்கு நன்றி சொல்லும் பொழுது, தேவனுடைய நன்மையை ருசிபார்த்த நாம் நன்றி சொல்- மகிமைப்படுத்துவது எவ்வளவு மேன்மையானது. இருளில் இருந்து நம்மை தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை காண்பிப்பது *(1 பேது. 2:9)* நம்மேல் விழுந்த கடமையாகும். வேதாகமமெங்கும் கர்த்தருடைய ஜனங்களை ஊழியக்காரரென்றும் சத்தியத்தின் உக்கிராணக்காரனென்றும் சொல்லுவது எவ்வளவு மகிமையானதாயிருக்கிறது. உளையான சேற்றினின்றும் பயங்கரமான குழியினின்றும நம்மை தூக்கியெடுத்து நமது கால்களை கன்மலையின் மேல் நிறுத்தி நமது அடிகளை உறுதிப்படுத்தி நமது ஜீவனுள்ள தேவனைத் துதிக்கும் புதிய பாட்டை அவர் நம் வாயிலே அருளிச் செய்திருக்கிறார். *(சங். 40:2,3)* R 3998:6

## செப்டம்பர் 23

**(நீ) மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; *(யோசு. 1:7)***

இப்பொழுதைக் காட்டிலும் நாம் திடன்கொண்டு பலப்பட்டு நிற்கக்கூடிய காலம் இதற்கு முன் இருந்தது இல்லை. எனவே நாம் கர்த்தருக்குள் பலப்பட்டு அவருடைய பலத்த கரத்துக்குள் அடங்கி இருக்க வேண்டும். நமக்கு வரும் சோதனைகள் உபத்திரவங்கள் எந்த உருவத்தில் எந்த ரீதியில் வரும் என்று நாம் அறியோம். கடைசிக் காலத்தின் முடிவிலே, "தீங்கு நாளிலே"

சோதனைக் காலத்திலே வாழ்கின்ற நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்வது அவசியமாகின்றது. சத்தியமென்னும் கச்சையை அரையிலே கட்டியிருப்பது அவசியம். நமது எண்ணம் மனம், சிந்தனை இவற்றைப் பேணிப் பாதுகாக்க, ஆபத்தில் விழாதிருக்க இரட்சண்யத்தின் தலைச் சீராவை அணிதல் அவசியம். நீதியென்னும் மார்க்கவசத்தை அணிவது அவசியம். ஆவியின் பட்டயமாகிய இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய தேவ வசனத்தை பட்டயத்தையும் எடுத்துக் கொள்வது அவசியம். "சமாதானத்தின் நற்செய்திக்குரிய ஆயத்தமென்னும்" பாதரட்சையை தொடுத்துக் கொள்வது அவசியம். நம்மை சுற்றிலும் இருக்கக்கூடிய எதிர்ப்புகளையும் நமது சொந்த இருதயத்தில் இருக்கக்கூடிய கானானியரை வெற்றிக் கொள்ள இவைகளையெல்லாம் அணிதல் அவசியம். R 5707:5

## செப்டம்பர் 24

***நிணத்தையும், கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும் போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். (சங். 63: 5,6)***

தியானிப்பதற்கு நேரமிருக்குமானால் மெய்யாகவே பெரிய ஆசீர்வாதமாயிருக்கும். இராச்சாமங்களில் அவரை நினைத்து அவருடைய தயைக்கும் நன்மைகளுக்கும் நன்றியாக ஸ்தோத்திரங்களை ஆனந்த களிப்புள்ள உதடுகளால் போற்றுவது மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும். நீதி, நேர்மை, அன்பு, இரக்கம், ஞானம் இவையெல்லாம் உருவெடுத்தது போலவே இருப்பவர்தான் நமது தெய்வீக தகப்பன் என்று நினைத்து நாமும் இத்தகைய குணங்களை கொள்கைகளையுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணமுண்டாக வேண்டும். பெருந்தன்மையான குணங்களை எவ்வளவாய் விரும்புகிறோமோ அவ்வளவாய் அவைகளைக் கடைபிடிக்க விரும்புவோம். தேவனுடைய வல்லமையான கிரியைகளையும் நம்மீது கொண்ட இரக்கத்தையும் நாம் எவ்வளவாய் பார்க்கிறோமோ அவ்வளவாய் நம்முடைய உதடுகளும் அவரைப் போற்றும். R 5785:5



## செப்டம்பர் 25

***கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்கு காத்திருக்கிறது. (சங். 130:5,6)***

துன்பங்களும் விரோதங்களும் குரோதங்களும் இருதயத்தைக் காயப்படுத்தி வேதனையை பெருகச் செய்கிற ஒவ்வொரு அனுபவங்களிலும் தேவனுடைய பிள்ளைகள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், தேவனுக்கு நேசிக்கவும், பாதுகாக்கவும் தெரியும் என்பதுதான். அவருடைய ஊழியக்காரராகிய தூதர்கள் எப்பொழுதும் நம்மண்டையில் இருப்பார்கள் என்பதையும் எந்தச் சோதனையும் கடுமையானதாக இருக்க அனுமதிக்கமாட்டார் என்பதையும் நாம் நினைவு கொள்ள வேண்டும். இந்த காய்ச்சுகின்ற கலசத்திற்கும் உலைக்கும் பக்கத்தில் நின்று நமது அருமையான போதகர் அதிக சூட்டினாலே இந்தத் தங்கம் போன்ற நமது குணம் அழிந்து விடாதபடிக்கு பார்த்துக் கொள்கிறார். அவருடைய கிருபையினால் இந்த அனுபவங்கள் நமக்கு நன்மையை தரவில்லையென்றால் அதை ஒதுக்கிவிடுவார். நாம் தேவையற்ற துன்பத்திலும் கஷ்டத்திலும் இருக்க அவர் அனுமதிக்கமாட்டார். ஏனெனில் அவர் நம்மை அவ்வளவாய் நேசிக்கின்றார். R 5802:6

## செப்டம்பர் 26

***ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி.... (மத். 28:19)***

விதைக்கின்ற பணியை ஜாக்கிரதையாக மேற்பார்வை பார்த்தவர்கள் நிச்சயமாகவே அறுப்பின் பணியையும் வெகுஜாக்கிரதையாக மேற்பார்வையிடுவார்கள். எனவே நாம் சத்தியமென்னும் அரிவாளைக் கொண்டு பலத்தோடும் ஊக்கத்தோடும் அறுப்போமாக. விளைந்த கோதுமையை தேடிப்பிடித்து அறுவடைசெய்கிறதில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு பணிபுரிகிறோம் என்று உணர்வோமாக. மிகுந்த பிரயாசைப்பட்டு வெகுசில விளைந்த கோதுமை மணிகளைத்தான்

காண்கிறோம் என்று வருத்தப்படாமல் சந்தோஷப்பட வேண்டும். விலைமதிப்பில்லாத இந்த கோதுமை மணிகளை அருமையானதாக இருக்கக் கண்டு அவைகளை நேசித்தலும் அவைகளை ஆதரித்தலும் அவசியம். இந்தச் சேவையில் நம்முடைய ஞானம் முழுவதையும் உபயோகப்படுத்த வேண்டும். கர்த்தர் தமது பணியில் நமக்கு ஒரு பங்கைக் கொடுத்திருக்கிறார் என்றால் நம்மால் முழுவதும் செய்ய முடியவில்லை என்றாலும் எவ்வளவாய் செய்கின்றோமோ அவ்வளவாய் ஆசீர்பெறுவோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தன்னிச்சையாக ஊழியம் செய்பவர்கள் எவ்வளவாய் உழைத்தாலும் பலன் மிகக்குறைவே என்று வருந்த வேண்டாம். நாம் செய்கின்ற ஒவ்வொரு முயற்சியையும் மதிக்கிற நம்முடைய போதகரும் குருவுமானவர் நம்மை அவருடையவர்கள் என்று அறிந்து நமக்கு போதிய பலத்தையும் உற்சாகத்தையும் தந்து நாம் பலவீனப்பட்டு மயங்கிவிடாதபடி பாதுகாத்து பராமரிக்கிறார். R 2811:4

## செப்டம்பர் 27

***நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன். (யோவா. 14:3)***

அருமையான சகோதரர்களே, நாம் நம்முடைய போதகர் தம்முடைய இரண்டாம் வருகையை குறித்துச் சொன்ன வாக்குறுதியை அவர் வந்திருக்கும் காலமாகிய இப்பகுதியில் நமது மனக்கண்முன் நிறுத்துவோமாக. நம்முடைய ஒவ்வொரு வார்த்தையிலும் செய-லும் கவனமாக இதே சிந்தனையில் இருக்க வேண்டும். மிக விரைவிலே உயிர்த்தெழுத-ன் மாற்றத்தை பெறுவோம் என்பதை நம்புவோமாக. நமது இரட்சகரைப் போல் மாற்றப்பட்டு அவர் இருக்கும் வண்ணமாகவே அவரைத் தரிசிப்போம். அவரது மகிமையில் பங்கடைவோம். வரயிருக்கின்ற இராஜ்யத்தின் மகிமையில் தேவப்புத்திரராக ஒளிவீசுவோம் என்ற நம்பிக்கை நம்மை ஊக்கப்படுத்துவதாக; இது நமது இருதயத்தை ஊக்குவிப்பதாக; நம்முடைய உதடுகள் சாட்சியிடுவதாக; நம்முடைய ஒவ்வொரு கடமையிலும் சந்தர்ப்பங்களிலும்



வாய்ப்புகளிலும் நமது போதகரையும் விசுவாச வீட்டாரையும் சேவிக்க நம்மை பலப்படுத்துவதாக; கர்த்தரின் ஜனங்களுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக நங்கூரம் போல் இருந்ததென்றால், அவருடைய பிரசன்னத்தின் காலத்தில் ஜீவித்திருக்கிற நமக்கு எப்படி இருக்கும். அவருடைய வெளிப்பாட்டைக் காணக் காத்திருக்கும் நமக்கு ராஜ்யத்தின் மகிமையும் வெளிப்படும். R 3193:6

## செப்டம்பர் 28

***ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள்; அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. (சங். 45:13)***

தங்களுடைய முழுபலத்தோடும் முழுஆத்துமாவோடும் முழுமனதோடும் கர்த்தரை ஆராதிக்கிறவர்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட முழுமனதோடு கூடிய ஆத்துமாக்களின்வகுப்பாரையே ஆயிரமாண்டு ஆட்சியில் ராணியாகவும் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும், மணவாட்டியாகவும், அவருக்கு உடன் சுதந்தரராகவும் இருக்க விசேஷமாக தேடிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ராஜரீக குடும்பத்தை சேர்ந்தவர்களை தெய்வீக சுபாவத்தை தரித்துக் கொள்ளப்போகிறவர்களை முன்கூட்டியே தீர்மானித்திருக்கிறார். “தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்” அவர்களை கிருபையினாலும் மகிமையினாலும் முடிசூட்டி எந்த நன்மையும் குறைவுபடாதபடி காத்துக் கொள்கிறார். ஏனெனில் அவர்கள் நீதிமார்க்கத்தில் நிலைத்திருக்கிறார்கள். R 4256:1

## செப்டம்பர் 29

***நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். (யோவா. 13:17)***

நாம் மாம்சத்தி-ருக்கிற நாள் வரையில் நம்முடைய எண்ணத்திலும், சிந்தனையிலும், சொல்-லும், செய-லும் பூரணத் திருப்தியடைய முடியாது. ஆகவே நாம் மற்றவர்களையும் முழுதிருப்தியடையச் செய்ய முடியாது. ஆனால் நாம் ஒவ்வொருவரும் தேவகிருபையினிமித்தமாக நம்முடைய இருதயங்களை பொறுத்த வரையில் இவையெல்லாவற்றயையும்

அடைய முடியும், அடைய வேண்டும். இது இல்லாமல் கர்த்தருக்கு திருப்தி இருக்காது. கற்புள்ள கன்னிகையாக, சபையின் அங்கமாக கிறிஸ்து இயேசுவுக்காக நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைக்கு, நியாயமான ஒரு நிலைமைக்கு நாம் வரவில்லையென்றால், நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்தி மணவாட்டி வகுப்பில் இடம் பெற தவறிவிட்டோம் என்று பொருள். ஆனால் இவைகளின்படி செய்து நம்முடைய இருதயத்தில் இந்த நிலையை அடைவோமானால், நாள்தோறும், நம்மால் இயன்றளவு அவருடைய சித்தப்படி நடக்க முயற்சி செய்வோமானால், நமது பரலோக மணவாளன் நம்மை தம்முடைய மணவாட்டியாக ஏற்றுக் கொள்ள சந்தோஷப்படுவார். இந்தப் பாடத்தை கற்றுக் கொள்வதில் தான் நாம் எவ்வளவாய் கருத்தூன்றி கவனிக்க வேண்டும். R 4460:6

## <u>*செப்டம்பர் 30*</u>

***அவர்கள் இரவும் பகலும் வழி நடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பக-ல் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன்சென்றார். (யாத். 13:21)***

மாம்சீக இஸ்ரயேலரை ஒவ்வொரு நாளும் நடத்தியது போல கர்த்தர் இப்போது ஆவிக்குரிய இஸ்ரயேலரை தொடர்ந்து வழி நடத்தி வருகிறார். விசுவாசமுள்ளவர்களாக காணப்படும் எல்லா இஸ்ரயேலர்களும் காலை தொடங்கி, தங்களுடைய வாழ்வு என்னும் யாத்திரையில், ஜீவ போராட்டத்தில், வழியிலே நேருகிறச் சோதனைகளில் மீட்பின் அதிபதியாகிய கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்த்து நிச்சயமாக கற்றுக் கொள்ள வேண்டும். அவரையல்லாமல் சாத்தானையும் அவனைச் சார்ந்த தூதர்களையும் மேற்கொள்ள முடியாது. அவர் மூலமாக மட்டுமே நாம் வெற்றிகாண முடியும். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அன்றைய நாளிலே தேவனுடைய வழிநடத்துதலை நினைவுகூர்ந்து நன்றி கூறி, தொடர்ந்து அவருடைய பாதுகாப்பும், தயையும், பராமரிப்பும், இரவு முழுவதும் இருக்க ஜெபசிந்தையோடிருப்பார்கள். R 4039:1



## <u>*அக்டோபர் 1*</u>

***மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். (கலா. 6:7)***

ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் ஒவ்வொரு செயலும், சொல்லும், சிந்தனையும் ஒரு இறுதியான விளைவை ஏற்படுத்தும். ஒவ்வொரு சிந்தனையும் சொல்லும், செயலும், ஒன்று நன்மை அல்லது தீமையை விளைவிப்பதாயிருக்கும். நம்முடைய ஜீவியத்தில் எவ்வளவு விசுவாசம் உள்ளவர்களாய் எவ்வளவு உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோமோ அவ்வளவாய் நாம் செய்யும் தவறுகள் குறைவாயிருக்கும். நம்முடைய மீட்பரைப் போல நாம் பூரணராகும்படி எவ்வளவாய் முயற்சி செய்கிறோமோ, அவ்வளவாய் நமது பரிசும் பிரகாசமாயிருக்கும். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல், “மகிமையிலே நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்” என்று கூறுகிறார். எனவே உலகத்திற்குரியவர்களாயிருப்பவர்கள், அப்பொழுது, தங்களுடைய அன்றாட சிந்தனை, சொல், செய-லும் நிச்சயமாக மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியில் அவர்களுக்கு ஏற்படப்போகும் தீர்ப்பில் ஒரு பாதிப்பை உண்டாக்கும் என்பதை அறிந்து கொள்வார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் உடன்படிக்கை செய்து கிறிஸ்துவோடேகூட மரித்து, அவரோடு பாடுபட்டு, ஆளுகை செய்ய அவரோடு ஜீவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்வில் சிந்திக்கிற சிந்தனையும் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லும் செய்கின்ற ஒவ்வொரு செயலும் இறுதியில் தகுந்த பலனைக் கொடுக்கும். அப்போஸ்தலர் கூறுவது போல தேவனுக்குப் பிரியமானது எது என்று கண்டு நாம் அதையே செய்து ஜாக்கிரதையாகவும், ஞானமாகவும் நடந்து, பெரிய பரிசை அடைய வேண்டும். R 5226:5

## <u>*அக்டோபர் 2*</u>

***ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல், நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபே. 4:32)***

கிறிஸ்துவின் புண்ணியத்தினாலே ஏற்றுக் கொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளையாகிய, புதிய சிருஷ்டிகள் ஒவ்வொருவரும், தங்களுடைய சொந்த பலவீனங்களுக்கு தாங்களே பொறுப்புள்ளவராகிறார்கள். தேவபலத்தினால் கிறிஸ்துவுக்குள்ளாக நம்முடைய பாவங்களி-ருந்து நாம் இலவசமாக மன்னிப்பு பெறுகிறோம். இந்த மன்னிப்பு நமக்குள் பூரணமாக வேண்டுமானால் நாம் சகோதரர்களை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும். “நீங்கள் உங்களில் ஒருவருக்கொருவர் மனப்பூர்வமாக மன்னியாதிருந்தால் தேவனும் உங்களை மன்னிக்கமாட்டார்.” “நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.” தெய்வீக ஏற்பாடு எத்தனை ஆச்சரியமானது, எவ்வளவு ஆசீர்வாதமானது, எவ்வளவு உதவியானது? நாம் அந்த ராஜ்யத்திற்குச் செல்ல எவ்வளவு அனுகூலமானதாக இருக்கிறது! R 5135: 4

## அக்டோபர் 3

***நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். (யோவா. 15:10)***

மிகவும் பிரியமானவர்களே, நாம் கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து எவ்வளவு எச்சரிக்கையுள்ளவர்களாயிருக்க வேண்டும். எவ்விதத்திலும் நம்முடைய அன்பு தணியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு பிதாவின் அன்பில் அவருடைய நேசகுமாரனாக நிலைத்திருந்தார். பிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்ததின் மூலம் அவர் தம்முடைய நேசத்தைக் காண்பித்தார். அவரைப் போலவே நாமும் அவரது சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அன்பிலே நிலைத்திருந்து அதன் மூலம் அவருடைய சிங்காசனத்திலும் மகிமையிலும் பங்கு பெறலாம். நம்முடைய கர்த்தரின் போதனைகள், கட்டளைகள் நம்மை சந்தோஷம் இழக்கச்செய்து, பயப்படுத்தும் நோக்கம் உடையவையல்ல. மாறாக, “என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை



உங்களுக்குச் சொன்னேன்.” *(யோவா. 15:11)* கர்த்தருக்கு மிகச் சமீபத்தில் இருப்பவர்கள் என்று நம்மை காண்பிக்கிறவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்களாயும், அவரிலும் அவருடைய அன்பிலும் நிலைத்திருக்கிறவர்களாயும் இருப்பதே மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதை அறிவார்கள். இந்த உலகம் தரக்கூடிய எல்லாச் சந்தோஷத்தையும் காட்டிலும் இதுவே மிகப் பெரிய சந்தோஷம். இதுவே எல்லா புத்திக்கும் மேலான சந்தோஷ சமாதானம். இருதயத்தில் தோன்றும் இந்த ஆசீர்வாதம் இவ்வுலகில் மட்டுமல்ல வரப்போகும் ராஜ்யத்திலும் உண்டாகும். R 5082:6

## அக்டோபர் 4

***பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. (யோவா. 9:4)***

ந ான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று உன்னையே நீ கேட்பாயாக. அப்போது பாரமாய் அழுத்துகின்ற எல்லாவற்றையும் தடையாயிருக்கின்ற யாவற்றையும் விலக்கிவிட்டு, தேவகாரியத்திற்கு செய்யும் முயற்சிகளை பெருக்குவாயாக. சத்தியத்திற்கு ஊழியக்காரனாக இப்போது பல வழிகள் இருந்தும் அவைகளில் ஏதாகிலும் ஒன்றையேனும் தெரிந்து கொள்ளாம-ருந்தால் அபாத்திரனாவாய். அதில் உன் பிடிப்பை இழப்பாய். இதுவே அறுப்பின், தூற்றி பிரிக்கும் காலமாகும். அநேகக் காரியங்கள் சத்தியத்தி-ருந்து உன்னை வெளியேற்ற வசீகரித்து இழுக்கக்கூடும்; தகப்பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரி, சகோதரன் இவர்கள் எதிர்த்து உன்னை சத்தியத்தைவிட்டும் அதன் ஊழியத்தி-ருந்தும் பிரிப்பார்கள். அறுவடையின் போது சமாதானம் இராது, மாறாகப் பிரிவினையும் மாறுபாடும் உண்டாகும் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை நினைவில் கொள்ள வேண்டும். கோதுமைக்கும் களைக்கும் பிரிவினை உண்டாகும். இதைப்பற்றிய கர்த்தரின் வார்த்தைகளை கவனித்தோமானால் நலமாயிருக்கும். *(மத். 10:30; லூ க். 18:28-30)* R 969:5

## அக்டோபர் 5

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. *(பி-. 4:13)***

எளிய குடும்பத்தில் பிறந்தாலும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தேவ குடும்பத்திற்கு வந்தவர்கள், கிறிஸ்துவின் பள்ளியில் கற்று தெய்வ நெறிக்கு இசைவாக தங்களைச் சரிபடுத்திக் கொள்ள வேண்டும். பெருமை பாராட்டினவர்கள் அடக்கத்தையும் தாழ்மையையும் அனுபவங்களின் மூலம் கற்றுக் கொள்ள வேண்டும். எப்படி கேவலப்படுத்தினாலும் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அனுபவங்கள் தேவனால் அனுப்பப்பட்டு வர இருக்கின்ற ராஜ்யத்திற்கு உரிய தகுதிகளைப் பெற நமக்கு உதவியாயிருக்கிறது. எளிமையும் அடக்கமுமில்லாமல் நாம் அந்த ராஜ்யத்திற்கு தகுதி உடையவர்களாக முடியாது. நம்மை நாம் உயர்வாக எண்ணாமல் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டு தாழ்மையாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். என்ன வந்தாலும் நம்புவேன் என்று அவருடைய நடத்துத-ல் நம்பிக்கையாயிருக்க வேண்டும். தன்னம்பிக்கையைவிட தேவ நம்பிக்கையே நன்நம்பிக்கை. “ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடைய” தேவனிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்பொழுதுதான், “என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலமுண்டு” என்று கூற இயலும். “எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது” என்று அப். பவுலும் கூறுகிறார். R 5113:3

## அக்டோபர் 6

**சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள். *(ரோம. 12:10)***

சத்தியம் பலவீனமானவர்களில் நிலைத்திராமல் பலமுள்ளவர்களிடமே நிலைத்திருக்கும். பலவீனர் உறுதியற்றவர்களாக எளிதில் மாறிவிடுகிறவர்களாக இருக்கிறார்கள். எதிர்ப்புகளை எதிர்த்துச் சமாளிக்கக்கூடியவர்களாக அவர்கள் இருப்பதில்லை. சிறுமந்தைக்கு உரியவர்களாகக் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்கள் இவைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். வைரம் கூட அதைச் சுற்றி சகதி நிறைந்ததாய் இருந்தால் சிறிய பொருளைக் கூட அறுக்கமுடியாது. ஆனால் அந்த சேற்றை அகற்றி விட்டோமானால் ஒரு வைரத்தோடு பன்னிரண்டு வைரத்தையும் இணைத்து அறுத்தோமானால் எதையும் அறுக்கலாம். தனிப்பட்ட முயற்சியைக் காட்டிலும் சபையார் அனைவரும் கூடி ஐக்கியப்பட்டுச் செய்யும் காரியம் வெகு எளிதில் வெற்றி பெறும். கர்த்தருடைய ஆபரணங்களாகிய அனைவரும் ஒன்றுகூடி விழிப்புணர்ச்சி உள்ளவர்களாய் பரிசுத்த ஆவியில் எடுத்துக் கொள்ளும் எந்த முயற்சியும் வெற்றி அடையும். பரிசுத்தாவி எண்ணெய்போல வழவழப்பாக்கும் (உறவை மேம்படுத்தும்) ஆற்றல் உடையது. R 4995:5



## அக்டோபர் 7

**உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். *(பி-. 2:14-16)***

கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவட்டிலே நடக்க முயன்று சுவிசேஷத்திற்காகப் பாடுபட்டு பெறும் பரிசைப் பெற்றுக் கொள்ள ஓடும் நாம் எவ்விதத்திலும் முறுமுறுக்கக்கூடாது. அது இடுக்கணும் இடைஞ்சலுமாயிருக்கிறது என்று சொல்லக்கூடாது. தேவசித்தத்திற்கு எதிராக எண்ணவோ அல்லது தெய்வ வழியை விட்டு வேறு யோசனையோ கூடாது. கிறிஸ்துவின் பள்ளியிலே பயிலுகின்ற நமக்கு குணங்களில் அபிவிருத்தி அடைய எத்தகைய அனுபவம் அவசியம் என்பதை தேவன் அறிவார். தேவசித்தத்திற்கு இசைந்து நடக்கின்றவர்களாய் அடங்கி நடக்கின்றவர்களாய் பொறுமையோடு இடுக்கமான வழியில் முன்னேறிச் செல்ல வேண்டும். தேவஆவியில் குறையாதவர்களாய் எந்த இடுக்கண்களையும் உபத்திரவங்களையும் தொல்லைகளையும் பொறுமையோடு சகிக்கிறவர்களாயிருந்தால் ஜீவகிரீடமாகிய பரிசை பெற்றுக் கொள்ளலாம். R 4929:5

## அக்டோபர் 8

**நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள்; அவர் உங்கள் இடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். *(1 சாமு. 12:24)***

கர்த்தர் நமக்கு வைத்திருக்கின்ற பெரிதான ஆசீர்வாதங்களை நாம் தொடர்ந்து நினைவுகூர்ந்தால் நாம் இடைவிடாமல் வைராக்கிய ஜீவியம் ஜீவிக்க உதவியாயிருக்கும். தேவநன்மையை அறிந்திருக்கிற நாம் அதிலே பலப்படவேண்டும். தேவ நன்மைகளால் நாமும் வளர்ந்து நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களும் வளர எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் நம்முடைய விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்படுகிறோம். அவருடைய பிள்ளைகளாகி, உடன்படிக்கை செய்து வாக்குத்தத்தத்தின்படி இந்த ஜீவியத்திலும் பிற்கால ஜீவியத்திலும் அவரது ஆசீர்வாதத்தையும் கிருபைகளையும் பெற்று, முழு மனதோடு அவரது உதவியைத் தேடாவிட்டால் அது துன்மார்க்கமாகும். அது அழிவை நோக்கியே நம்மை நடத்தும். தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதே நம்முடைய இருதயத்தின் முழு ஆசையாக இருக்க வேண்டும். R 3224:4

## அக்டோபர் 9

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார். *(சங். 103: 2, 3)***

நியாயப்பிரமாணத்தின் கீழ் தீர்க்கதரிசியாகிய தாவீது தான் ஒரு யூதனாக இருப்பதால் தேவனிடத்தில் பெற்றுக் கொண்ட சரீரப்பிரகாரமான சுகத்திற்கும் ஆசீர்வாதத்திற்கும் நன்றி பாராட்டுகிறார். ஆனால் ஆவிக்குரிய இஸ்ரலேயருக்கோ இந்தத் தீர்க்கதரிசன சங்கீதம் அதிக அர்த்தத்தை கொடுக்கிறது. ஆவிக்குரிய இஸ்ரயேலர் இப்போது புது சிருஷ்டியாக இருக்கிறார்கள். இந்த பொக்கிஷத்தை மண்பாண்டடத்தில் பெற்றிருக்கிறார்கள். தேவனோடு ஒப்புரவாகுதல், அவரது மன்னிப்பு, அவரது சுகமாக்குதல் ஆகியவற்றை புது சிந்தை



உணர்கிறது. தேவதிட்டப்படி அழைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் தேவனால் நன்மைக்கேதுவாக எல்லாம் நடக்கிறது. இதே சிந்தனையில் அப்போஸ்தலனாகிய பவுலும் பலவீனமாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; கனவீனமாய் விதைக்கப்படும், கனமுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமாக விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரமாக எழுந்திருக்கும் என்றார். அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதால் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம். அவரது மகிமையில் பங்குபெறுவோம். R 4981:4

## அக்டோபர் 10

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். *(பி-. 3:14)***

இலக்கை அடைவதற்கு நீண்ட தாமதமாகிறது என்று எந்தக் கிறிஸ்தவனும் அதிருப்தி அடையக் கூடும். தேவவசனமாகிய ஞானப்பாலை பருக, ஆவிக்குரிய ஆரோக்கியமான குணங்களைப் பெற்று ஆவிக்குரிய நோக்கம் ஆவிக்குரிய பலம் அடைந்து கிறிஸ்தவ குணலட்சணங்களில் நாம் பூரணப்பட வேண்டும். அப்படிப்பட்ட பூரணம் அடைந்தோமேயானால் உலகம், எதிராளியாகிய சாத்தான், சரீரம் ஆகிய இவைகளை ஜெயித்தவர்களாய் இவைகள் மூலம் வரும் எல்லாச் சோதனைகளையும் வென்றவர்களாய் இறுதிவரை உறுதியாய் நிற்க வேண்டும். நாம் பூரணத்தை அடைந்த பிற்பாடு தான் பலமான சோதனைகள் உண்டாகும். தேவசேவையில் அசட்டை, நம்முடைய ப-யின் ஜீவியத்தில் உற்சாகமின்மை, வெறுத்தல், உதாரகுணமின்மை, சகோதரர்களிடம் அன்பின்மை, நீதியின்மை, சத்துருக்களிடம் பெருந்தன்மையின்மை ஆகியவை வரலாம். அதற்கு இடங்கொடாமல் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில், நம்முடைய நித்திய ஜீவனையும், தேவராஜ்யத்தில் நம்முடைய மீட்பராகிய கிறிஸ்துவோடே கூட உடன் சுதந்திரராக இருக்கப்போகிற மகிமையான நிலையை பரிசாக வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறோம். ஒரு கிறிஸ்தவனாக தன்னுடைய அன்பையும், தைரியத்தையும், விசுவாசத்தையும், வைராக்கியத்தையும் முழுமையாக நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். எதிராளியின் தாக்குத--ருந்து வெற்றிபெற தேவைப்படும்போது கர்த்தராகிய

இயேசுவின் கிருபை பொருந்திய சகயாஞ்செய்யும் வார்த்தைகள் நமக்கு உண்டு என்பதை நினைவு கூற வேண்டும். R 4470:5

## அக்டோபர் 11

***எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. (சங். 91:9-10)***

இந்தத் தீங்குநாளில் மெய்யாகவே பிரதிஷ்டை செய்து கொண்ட தேவ பிள்ளைகளானவர்கள் வழுக்கி விழாதபடி தேவன் அவர்களை பாதுகாக்க விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் தேவகிருபையினாலே நம்முடைய அறிவுக்கண்கள் திறக்கப்பட்டு தெய்வதிட்டத்தையும் அதை விளக்கும் தேவவசனத்தால் நாம் பலப்படும்படி செய்கின்றார். இப்படிப்பட்ட தேவசகாயத்தால் நாம் பலப்பட்டு உறுதியாக நிற்க ஏதுவாகிறது. ஆயிரமாயிரம் பேர் விசுவாசத்தி-ருந்து விழுந்தாலும் நாம் உறுதியாக நிற்க தேவன் கிருபை செய்திருக்கிறார். எனவே நாம் பயபக்தியோடு களிகூரக் கடவோம். எனவே பலம் உள்ளவர்களாய் இருக்கிறோம் என்ற நினைப்பில் நம்மைப் பற்றி மிதமிஞ்சி எண்ணக்கூடாது. நிற்கிறேன் என்று எண்ணிக்கொண்டு விழாம-ருப்போமாக. தாழ்மை மற்றும் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டுதல் ஆகிய இவைகளே மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்கு பாத்திரமாகக் கூடியவை. இவைகளாலே நாம் இறுதி மகிமையடைந்து அழிவுக்குரிய சரீரத்தி-ருந்து அழியாமையை பெற்றுக் கொள்ள முடியும். R 4926:5

## அக்டோபர் 12

***ஞானவான்களோ, உணர்ந்து கொள்ளுவார்கள். (தானி. 12:10)***

அருமையிலும் அருமையானவர்களே, நாம் ஆச்சரியமான தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். ஒரு காலத்தில் புதிராக இருந்த அநேகக் காரியங்கள், நம்முடைய பெற்றோருக்குத் தெரியாத அநேகக் காரியங்கள் தேவகிருபையால் இப்பொழுது நாம் காணும்படியாக தேவன் கிருபை செய்திருக்கிறார். முன்பு பாபிலோனி-ருந்து சிலர் கேட்டிற்கும் சிலர் பாபிலோனை விட்டு வெளியேறி ஆவியில் பலப்பட்டு திரைக்கு அப்பால் செல்லக்கூடிய நம்பிக்கையையும் பெறுகிறார்கள். கிறிஸ்து நம்முடைய முன்னோடியாக இருந்தால் நாமும் அவருடன் திரையைக் கடந்துபோக வேண்டும். அப்பொழுதுதான் அவருடைய ராஜ்யத்தில் மெய்யாகவே அவருடன் பங்குபெறுவோம். அதன்பின்பு பூமியின் கோத்திரங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். தேவனுடைய யுகங்களுக்கு அடுத்தத்திட்டத்தை நாம் உணரும்பொழுது நம்முடைய இருதயம் நன்றியால் பொங்கி தேவனை மகிமைப்படுத்துகிறது. “உலகம் தோன்றினது முதல் இதுவரை உண்டாயிராத, பெரும் உபத்திரவ காலத்தையும்,” அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போகும் என்கிற காரியத்தையும், கட்டியங்கூறும் புது யுகத்தையும் நாம் காண்போம். ஞானவான்கள் உணர்ந்துகொள்வார்கள். பரத்தி-ருந்து வருகின்ற ஞானத்தினால் வேதவசனங்களை பணிவுடன் ஏற்றுக்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். R 5092:6

## அக்டோபர் 13

***நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள். (ஆமோ. 5:14)***

தேவனுடைய பரிசுத்தவான்களின் கூட்டமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களோடே இருப்பதே தற்காலத்தின் பெரியபாக்கியம். இந்த பரிசுத்தவான்களின் கூட்டத்தில் இருப்பதற்கு விசுவாசமும் கீழ்ப்படிதலும் அத்தியாவசியத் தேவைகள். அந்த விசுவாசம் உலகின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி இயேசுக்கிறிஸ்து தான் என்று உணர வேண்டும். அவரே நமக்கு முன் மாதிரியும் போதகரும் குருவும் என்று உணர்வது மிகவும் அவசியம். அவருடைய ஆவியைப் பெற்று, தற்கால ஜீவியத்தில் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பவர்களுக்கே அந்தப்பரிசு கொடுக்கப்படும். அவரோடு கூட ராஜ்யத்தையும், மகிமையையும், சாகாமையையும் சுதந்தரித்துக் கொள்வார்கள். தற்கால ஜீவியத்தில் அவர்கள் உலகம், மாம்சம், பிசாசு ஆகிய இவைகளை எதிர்த்துப் போரிட்டாக வேண்டும். இப்படிப்பட்டவர்கள் தங்கள் சுயசித்தத்தை வெறுத்து தேவசித்தத்துக்கு முழுவதும் ஒப்புக் கொடுத்ததினால் உண்டாகும் சந்தோஷத்தையும், ஆசீர்வாத்தையும் உலகம் அறியாது. அதன் பலனாக அவர்கள் கர்த்தருடைய ஆவியைப்பெறுவார்கள்.

இப்படிப்பட்டவர்களே உலகம் தரக்கூடாத அல்லது எடுத்துப் போடவும் முடியாத சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். தேவனுடைய பரிசுத்தவான்கள் அனுபவிக்கிற இந்தச் சந்தோஷத்தை மற்றவர்கள் தேடினாலும் கண்டுபிடியார்கள். R 5243:5

## அக்டோபர் 14

**மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். *(1 கொரி. 9:27)***

இந்த வசனமே நமக்கு ஒரு மிகச்சிறந்த பாடம். அப்போஸ்தலர் "பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" என்று சொல்லுவதற்கேற்ப கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் புது சிருஷ்டியாகியிருக்கிறோம் என்பதை உணர்ந்து பழைய சுபாவம் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதன் ஆசைகள், விருப்பங்களை அடக்கி புதிய சுபாவம் புதிய ஒழுங்குக்கு கீழ்ப்படுத்த வேண்டும். முதலாம் உயிர்த்தெழுத-ன் மகிமையாகிய ஆவிக்குரிய மேனியைத் தரித்துக் கொள்ள ஜெபிக்க வேண்டும். இப்படி சரீரத்தை அடக்கி ஆள்வதிலே, நாம் என்னத்தைக் குடிக்கிறோம், என்னத்தை உண்கிறோம், என்னத்தை உடுக்கிறோம், என்னத்தை சிந்திக்கிறோம், எவ்விதமான கிரியை செய்கிறோம் என்பவற்றை ஞானமாகக் கவனித்து செயலாற்றுவதும் அடங்கும். R 4289:1

## அக்டோபர் 15

**உங்களி-ருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். *(1 பேது. 3:15)***

இந்த ஊழியங்களில் - சுவிசேஷத்தை பிரசங்கித்தல் - அப்போஸ்தலரையும் நம்முடைய போதகரும் குருவுமாகிய இயேசுவையும் பின்பற்றுகிறோம். அவர்கள் அன்பு, சந்தோஷம், சமாதானம், திடநம்பிக்கை ஆகிய ஆவியை மிகுதியாகப் பெற்றிருந்ததினால் எந்தத் துன்பத்தையும் பொறுமையோடு சகித்தார்கள். அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெற்றதினால்



தேவனை ஸ்தோத்தரித்தார்கள். ஆகவே அவருடைய ஆளுகையிலும் மகிமையிலும் பங்குபெறுவார்கள். உலகத்தில் கண்ணீரும் துன்பமும், துயரமும், பயமும் நிறைந்திருக்கிறதை உணர்ந்து நம்முடைய மிகுதியான நேரத்தையும் பலத்தையும் பயன்படுத்தி நமக்கு அருளப்பட்டிருக்கிற கிருபையின்படி தரித்திரரையும் திக்கற்றவர்களையும் நம்பிக்கையின் நற்செய்தியால் தேற்றுவோமாக. "அவர்களின் கண்களி-ருந்த கண்ணீர்களையெல்லாம் தேவன் துடைப்பார்," "பரலோகத்தி-ருக்கிற உங்கள் பரமபிதா பரிசுத்தமாயிருக்கிறது போல உங்கள் நடக்கைகளிலெல்லாம் பரிசுத்தமாயிருங்கள்" என்று கிறிஸ்து இயேசு கூறிய வார்த்தைகளைக் கூர்ந்து கவனிப்போமாக. கிறிஸ்துவும் அவருடைய சபையாரும் சேர்ந்து உலகின் கண்ணீரைத் துடைக்க வேண்டுவது பிதாவின் சித்தமாயிருப்பதால் தற்காலத்திலேயே அந்தப்பணியை நாம் துவக்குவோம். விரைவில் உலகத்தை தேவனிடம் ஐக்கியப்படுத்தும் வழியை ஆயத்தப்படுத்துவோமாக.நாம் தற்கால விசுவாசிகளை கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கவும் நல்வழியில் நடக்கவும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவோமாக. R 5214:4

## அக்டோபர் 16

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள். *(ரோம. 13:14)***

நம்முடைய இருதயத்தில் கர்த்தரோடு நாம் ஏற்கனவே உடன்படிக்கை செய்திருக்கிறோம். நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு அவருடைய குடும்பத்தாராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம். ஆனாலும் நம்முடைய மாம்சம் பூரணமானதல்ல, பழைய சுபாவத்தின் ஆடைகளை இன்னும் விரும்பிக் கொண்டிருக்கும். அவைகளை நாம் முழுமையாக நீக்கிப்போட வேண்டும். படிப்படியாக நாம் நீதியின் வஸ்திரத்தை தரித்தவர்களாக வேண்டும். புதிய சிருஷ்டிக்குரிய மேனியாக பரத்துக்குரியப் பண்புகளால் யாவரும் நம்மைக் கண்டு இவர்கள் மெய்யாகவே தேவ புத்திரர்கள், கிறிஸ்துவின் சகோதரர் தேவனுடைய சுதந்திரர், கர்த்தராகிய இயேசுவுக்கு உடன்சுதந்திரர் என்று சொல்ல வேண்டும். கிறிஸ்துவை நாம் தரித்தவர்களாக இருக்க

வேண்டும் என்பது ஏதோ ஒரு சில நிமிடமல்ல, ஒரு சில நாளும் ஒரு சில மாதமும், வருடமுமல்ல. வாழ்நாள் முழுவதும் ஆகும். புதிய சிருஷ்டியின் ஜீவியம் ஜீவிக்காவிட்டால், புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளாவிட்டால் நாம் பூரணப்படமுடியாது. உண்மையிலேயே கிறிஸ்துவின் குணலட்சணங்களை முழுமையாக நாம் தரித்துக் கொள்ள முடியாது. நமது கர்த்தர் நமது முயற்சிகளை பார்க்கிறார். நம்முடைய பழைய சுபாவத்தையும், மாம்சத்தின் கிரியைகளையும் நீக்கிப் போட நாம் போராடுகிறதையும் அவருடன் உறவு கொள்ள தகுதியான நீதியின் வஸ்திரத்தை அணிந்து கொள்ள போராடுகிறதையும் பார்க்கிறார். இந்த விசேஷித்த வஸ்திரம் நம்மை உலகத்தி-ருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாய் தேவனுக்கென்று கிறிஸ்து இயேசுவின் மூலமாய் பரிசுத்தம் பண்ணப்பட்டவர்களாய் நம்மை வேறுபடுத்தி காண்பிக்கும். R 4402:3

## அக்டோபர் 17

***வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவா. 5:39)***

இந்த வசனம், கர்த்தராகிய இயேசுவை வேத வாக்கியங்கள் வெளிப்படுத்தப்படுகிறது என்று குறிப்பிடுகிறது. அவரை அறிய விரும்புகிறவர்கள் அவைகள் கூறுகிறதை ஆராய வேண்டும். தேவ திருவுளத்தால் கொடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அவரை அறிந்து கொள்வதற்கு இன்றியமையாதவர்களாகும். தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக எந்த மனுஷனுடைய வார்த்தையையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. மாறாக, எந்த மனுஷன் சொல்லுகிற வார்த்தையும் வேதத்திற்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதற்கு பரிசுத்தாவி அவசியம். வேதாகமம் ஆராயப்பட வேண்டியதே. ஆயினும் முழு அர்ப்பணத்தினால் பரிசுத்த ஆவியைப் பெற்று, இருதயத்தை இசைவு நிலைக்கு கொண்டு வந்த பிறகுதான் நாம் தேவ செய்தியை புரிந்து கொள்ள முடியும். அதன்மூலமே கர்த்தரைப் பற்றி போதிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியும். R 4334:4



## அக்டோபர் 18

***தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். (யோவா. 4:24)***

சர்வவல்லமையுள்ள தேவன் ஆவியாயிருக்கிறார் என்ற எண்ணத்தை நாம் மனதில் தொடர்ந்து வைத்திருப்பது மிகவும் நல்லது. அவர் நம் உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து அறிகிறார் என்பதையும் மனதில் வைக்க வேண்டும். தேவனுக்குச் செய்கின்ற எந்த சேவையும் ஜெபமும் ஆவியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும். தம்மைத் தொழுது கொள்ள இப்படிப்பட்டவர்களைத்தான் தேடுகிறார். தற்காலத்தில் இப்படிப்பட்ட வகுப்பார் மிகச் சொற்பமான பேராக இருக்கிறார்கள். கிருபையின் உடன்படிக்கைக்குப் பின்பு எல்லா விசுவாச வீட்டாரிடமிருந்து ராஜரீக ஆசாரியக் கூட்டமும் தோழி வகுப்பாரும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். தேவனுடைய கிருபையை விஸ்தரித்து புதிய உடன்படிக்கையின் முலம் உலக ஜனங்களி-ருந்து ஆயிரமாயிரமான பேர் நீதிக்குட்படுத்தப்படுவதற்கு தேவனால் பலவந்தப்படுத்தப்படுவார்கள். தேவ அன்பையும், நீதியின் ஆசீர்வாதத்தையும் கண்கூடாகக் காண்பார்கள்; தேவனுக்கு தங்கள் இருதயத்தை இசைவாக்கினவர்கள் அதற்கேற்றாற்போல் இழந்ததை திரும்பப் பெற்று தெய்வீக பிரமாணத்தை தங்கள் இருதயங்களில் எழுதப்பட்டவர்களாயிருப்பார்கள். உண்மையோடும் ஆவியோடும் இருக்கின்ற தேவனை உண்மையோடும் ஆவியோடும் தொழுகின்ற மக்களே ஆயிரவருட ஆட்சியிலும் அதற்குப் பின்பும் நித்திய ஜீவனைப் பெற்றிருப்பார்கள். R 4410:6

## அக்டோபர் 19

***வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு; உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். (நீதி. 11:24,25)***

நாம் தேவனை பற்றி அறிந்த அறிவுக்குத்தக்கதாயும், அவரது உதார குணத்துக்குத்தக்கதாகவும் நம் உதாரகுணத்தை நாம் வளர்த்துக் கொள்வதை தேவன் விரும்புகிறார் என்ற பாடத்தை இந்த வசனம்

நமக்கு போதிக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் முற்றிலுமாக வறுமையில் விடப்படுவார்கள் என்று வேதம் எங்கும் கூறுவதில்லை. அவர்கள் கடந்தகால வாழ்வில், வசதி இருந்த போது அதன் ஒரு பகுதியை தேவனுக்கு என்று பயன்படுத்தவில்லை என்றும் கூறவில்லை. மேலே சொல்லப்பட்ட வசனம் இந்தப் பாடத்தைக் கொடுக்கிறது. அதாவது அநுதினமும் தேவன் நம்மை ஆசீர்வதித்த ஆசீர்வாதத்தி-ருந்து, ஒரு பகுதியை மிகவும் ஜாக்கிரதையாகவும், ஜெபத்துடனும், அன்புடனும் எடுத்து வைத்து, தேவன் நமக்கு கொடுக்கும் ஞானத்தின்படி தேவனுடைய ஊழியத்திற்கென்று அதை விதைப்பதற்கு நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். R 5927:2

## அக்டோபர் 20

***நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. (மத். 5:10)***

"அநேக உபத்திரவங்களின் வழியாய் பரலோக ராஜ்யத்தில் நுழைய முடியும்" என்ற நமது ஆண்டவரின் அடிப்படை உண்மையை இந்த வசனம் கூறுகிறது. சோதனை நேரும் போது தேவ வல்லமை நம்மை பாதுகாக்க முடியவில்லை என்றோ, நமது ஆண்டவருக்கு நம்மேல் அக்கரை இல்லை என்றோ இதற்கு பொருளல்ல. மாறாக, சபைக்குக் கொடுக்கப்படும் சோதனைக்கேற்ப, புதிய சுபாவம் விருத்தியடைந்து போதிக்கப்பட்டு, உருவாக்கப்படும். கர்த்தரின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவும், சோதனைகள் பரீட்சைகள் மூலமாகவும் தான் அது பூமிக்குரிய அங்கங்களுடன் நீடித்திருக்கும். இந்த சோதனைகள் பல வழிகளில் வருகிறது - விசுவாசம், கீழ்ப்படிதல், பொறுமை, அன்பு முதலானவை. ஜெயங்கொண்டவர்களுக்கு மட்டுமே பரிசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. நமக்கு தேவையான நேரத்தில் தேவையான உதவியும் ஆறுதலும் தருவதாக வாக்களித்திருக்கிற தேவ தயவுக்கு நன்றி சொல்வோமாக. நம் இருதயம் உண்மையோடு இருந்து, முழு பலத்தோடும் நாம் கிரியை செய்தால், மீதியை தேவன் பார்த்துக் கொள்வார். R 4326:1



## அக்டோபர் 21

***தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையும் மகிமையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். (சங். 84:11)***

தாவீதைப் போல தேவனுக்கு அருமையான வகுப்பினருக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் அங்கங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்ற வசனம் இதுவே. இப்படிப்பட்டவர்களுக்கு தேவனாகிய கர்த்தரே சூரியனும் கேடகமுமாயிருப்பார். தேவன் இவர்களுக்கு வெளிச்சம் கொடுப்பார். அவர் தருகின்ற ஆசீர்வாதத்தினால் அவர்கள் மிகுந்த நன்மையடைவார்களேயல்லாமல் அவர்களுக்கு ஒரு தொல்லையும் இராது. எல்லா விரோதிகளிடமிருந்தும் எவ்வித தீமையும் நேராவண்ணம் பாதுகாத்து பராமரிக்கிறார். தம்முடையவர்களுக்கு அவர் எந்த நன்மையும் குறைவுபடாமல் பார்த்துக் கொள்கிறார். தம்முடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்ட ஒவ்வொருவரையும் அவர் நேசிக்கின்றார். அவர் அளித்த வாக்குத்தத்தத்தின்படியே அவர் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்ற விசுவாசிகளுக்கு தம்முடைய மகிமையின் பரிசை வாக்குத்தத்தம் பண்ணினபடியே அருளிச் செய்வார். R 4219:6

## அக்டோபர் 22

***தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். (எபே. 2:4,5)***

கிறிஸ்துவின் அன்பும் தேவ அன்பும் எவ்வளவு ஆச்சரியமானது. இந்த அறிவுக்கெட்டாத அன்பின் ஆழம், அகலம், உயரம் இவைகளை அளப்பது அரிது. கர்த்தராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள், ப-யினாலே அவரோடு உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் தங்களுக்குரிய யாவற்றையும், அவர் வழங்குகிற ஆசீர்வாதங்களில் பங்குகொள்ள வழங்குவார்கள். சில பலவீனங்களால் சிலவேளைகளில் அசதி ஏற்பட்டாலும் பிதாவான தேவன் நம்மீது பாராட்டிய அன்பையும்

குமாரனாகிய கிறிஸ்து நாம் பாவிகளாயிருக்கையில் நம் பாவங்களுக்காக தன் ஜீவனைக் கொடுத்த அன்பையும் அடிக்கடி நினைவுக்கு கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்ட மகிமையும் ஆசீர்வாதமுமான பாக்கியங்களுக்கு நம்மை அழைத்திருக்கின்றார். அவரோடு கூட பாடுபட்டால் கிறிஸ்து இயேசுவுக்கு உடன் சுதந்தரராகக் கூடிய வாரிசு உரிமையையும் வழங்குவார். R 3553:3

## அக்டோபர் 23

**நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி..... *(யூதா 20))***

சிலருக்கு எவ்வேளையும் ஜெபம் பண்ணுவது இடைஞ்சலாகவும் சோர்வாகவும், களைப்பாகவும் இருக்கும். ஆனால் மெய்க்கிறிஸ்தவர்களுக்கோ ஜெபமானது தேவ ஆசீர்வாதங்களில் மிகச்சிறந்த ஒன்றாகும். ஏற்ற சமயத்தில் பரலோக கிருபாசனத்தைண்டையில் இரக்கத்தையும் கிருபையையும் தேடி நாடிச் செல்வது ஒரு பாக்கியமாகும். இது அதிகமாக மதிப்பிடக் கூடாததாக இருக்கிறது. ஆசீர்வாதமான ஜெபிக்கும் பாக்கியமானது கர்த்தருடைய குடும்பத்திற்குரியது. ஏனெனில் இவர்கள் தங்கள் மீட்பரும் மத்தியஸ்தருமாகிய கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவனை அடைய இதுவே வழியாக இருக்கிறது. R 4419:2

## அக்டோபர் 24

**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும், இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன். *(யோவா. 12:46)***

பரிசுத்த ஆவியே சபையாருக்கு வெளிச்சமாயிருக்கிறது. இந்த வெளிச்சத்தினாலேயே அவர்கள் எல்லா சத்தியத்திற்குள்ளும் நடத்தப்படுகிறார்கள். அதனாலே அப்போஸ்தலனாகிய பேதுரு அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் நமக்குண்டு. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் தோன்றுமளவும் இருளுள்ள ஸ்தலங்களில் பிரகாசிக்கின்ற விளக்கைப் போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது நலமாயிருக்கும் என்றார். *(2 பேதுரு 1:19)* அந்த வெளிச்சம்“நீதிமான்களின் பாதை நடுப்பகல் வரைக்கும் அதிமகதிமாகப் பிரகாசிமாயிருக்கிற சூரிய வெளிச்சம் போ-ருக்கும்.” நாம் இன்னும் இருளுள்ள ஸ்தலங்களில் இருந்தாலும் பகல் உதயமாகும் வரை பிரகாசிக்கின்ற விளக்காயிருக்க வேண்டும். பொழுது விடிந்து விடிவெள்ளி தோன்றும் வரை நமக்கு அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் தேவை. எனவே ஒரு வசனம் மற்றொரு வசனத்தை புரிந்துகொள்ள உதவுகிறது எனக் காண்கிறோம். R 5339:1



## அக்டோபர் 25

**கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. *(சங். 130:3,4)***

நாம் நம் பலவீனங்களை உணர்ந்திருக்கின்ற வேளையிலே, நீதியின் பூரண பிரமாணத்தை நிலைநிறுத்துவது எவ்வளவு கடினம் என்பதை உணருகிற பொழுது இந்த உறுதிமொழி எவ்வளவு மகத்துவமானது! நமது உள்ளங்கள் விசுவாசமும் உண்மையுமாய் இருக்கும் போது, நமது மண்பாண்டத்தின் தவிர்க்கவியலாத பலவீனத்தையெல்லாம் மன்னிக்கிறார் என்பதை அறிவது எவ்வளவு ஆசீர்வாதமானது. நம்முடைய பலவீனங்களுக்காக, அவைகளைச் சுத்திகரிக்க நாள்தோறும் நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் புண்ணியத்தினால் அவரை நெருங்கினால் நம் பாவக்கறைகள் இலவசமாய் மன்னிக்கப்பட்டு, கழுவப்படுகிறது. நமது இரட்சகராகிய இயேசுவின் நீதியினால் பூரணமாக்கப்பட்டதே நமது மகிமையுள்ள நீதியின் வஸ்திரமாயிருக்கிறது. அதன் மூலமாய் நம்மைத் தாழ்த்தி தேவனுக்கு முன்பாக வரக்கூடிய தைரியம் நமக்குக் கிடைக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நாம் மகா தேவனாகிய யேகோவா என்கிற இராஜாதிராஜனும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறவருக்கு முன்பு பிரசன்னமாக இயலும். R 5802:5

## அக்டோபர் 26

**பண்டிகை ஆசரிக்கப்படும் இராத்திரியிலே பாடுகிறது போலப் பாடுவீர்கள். *(ஏசா. 30:29)***

தேவன் கருணையுள்ளவர் என்பதை ருசிபார்த்த ஒவ்வொருவரும் எந்த மனுஷனாலும் எடுத்துப்போட முடியாத சந்தோஷத்தைப் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் பெற்றுக் கொண்ட கிருபைகளை எண்ணி

மகிழ்வதோடு கூட அவர்கள் இதழ்களின் கனியாகிய ஸ்தோத்திர ப-யால் பாடி மகிழ்வார்கள். தங்கள் முழு வாழ்க்கையையும் தேவனுக்கு நன்றி கூறும் வண்ணமாக இடைவிடாமல் ஸ்தோத்திர ப-யை செலுத்திக் கொண்டே இருப்பார்கள். இந்தப் பாடலைக் கேட்க காதுள்ளவர்கள் அனைவரும் சுத்தமாக்கப்பட்ட, நீதிமானாக்கப்பட்ட, பிரதிஷ்டை செய்யப்பட்ட இருதயத்துடன் தேவனுடைய நன்மையைப் புகழுவார்கள். R 2232:5

## அக்டோபர் 27

***தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது.(புல. 3:25,26)***

நாம் தவறு செய்யாதிருப்போமாக. பரிசுத்தமாக்கப்பட்டவர்களிடையே இது ஒரு கேள்வியாக இருக்கிறது. அற்பமானவைகளிலும் சிறிய காரியங்களிலும் கூட உண்மையாயிருப்பவர்கள் மட்டுமே, கர்த்தரையும் அவர் அளித்த பூமிக்குரிய, ஆவிக்குரிய கிருபைகளை உணர்ந்து, வைராக்கியத்துடன் தொடர்ந்து முன்னேறவும், மேய்ப்பரின் அன்பைப் பெற்றுக் கொள்ளவும் தயாராயிருப்பார்கள். ஏற்ற வேளையில் தேவன் தம் குமாரன் மூலமாய் தருகிற போஜனத்தையும், அறுவடை காலத்தின் விசேஷித்த நன்மைகளையும் அறியாதவர்கள் ஆயத்தமற்றவர்களாயிருப்பார்கள். இவர்களை வஞ்சிக்கவும் தள்ளிவிடவும் முயற்சிப்பவர்கள் இவர்களை வஞ்சிப்பார்கள். R 4459:6

## அக்டோபர் 28

***என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப-யாகவும் இருக்கக்கடவது. (சங். 141:2)***

ஒவ்வொரு நாளின் முடிவிலும் நாம் அன்றையக்கணக்கை தேவசந்நிதியில் கிருபாசனத்தண்டையில் ஒப்புக் கொடுப்போம். நாம் நித்திரைக்குச் செல்லும் முன்பாக இன்றையத் தினத்தில் எத்தகைய நல்ல சந்தர்ப்பங்கள் தேவனால் கொடுக்கப்பட்டது, அதை எவ்வளவாய் பிரயோஜனப்படுத்தினோம் அல்லது பிரயோஜனப்படுத்தாமலேயே விட்டு விட்டோம், இந்தச் சந்தர்ப்பங்களில் கிடைத்த வெற்றி அல்லது தோல்வி, தேவனுக்காக



நாம் செய்த தியாகப-, சுயநலமாய் நடந்துகொண்ட நிகழ்ச்சிகள் ஆகியவைகளில் ஏற்ற வேளையில் தேவன் அளித்த உதவிக்காகவும் கிருபைக்காகவும் நன்றி செலுத்துதல், நமது தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டல் இவையெல்லாம் குறித்துத் தியானிப்போமாக. நம்முடைய எல்லாக் குறைவிற்காகவும் கிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் மன்னிப்பைக் கேட்போமாக. கர்த்தருடைய கிருபையில் அதிக வைராக்கியத்தோடும் விசுவாச உறுதியோடும் தேவனுக்குச் சித்தமானால் அடுத்த நாளில் எவ்விதக் குறைவுமின்றிச் செய்து முடிக்க தேவ அருளைக் கேட்போமாக. R 2240:4

## அக்டோபர் 29

***சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். (லூக். 19:8)***

அநேகர் தற்காலத்தில் சகேயுவைப் போல் செய்யாமல், அநேகக் காரியங்களில் தங்களுடையதல்லாத அயலாருடைய உடைமைகளைத் தாங்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மிகுதியான தங்களது நேரத்தையும் திறமையையும் சொத்தையும் தேவனுக்கென்று அர்ப்பணிப்பதில்லை. சகேயு ஒரு யூதனாக இருந்தான். அவன் நியாயப்பிரமாணத்தின்படி பத்தில் ஒரு பங்கை கொடுக்கவேண்டிய கடமையில் இருந்தான். ஆனால் அவன் அதையும் மீறித் தன்னுடைய உடைமைகளில் சரிபாதியை, ஏழைகளுக்குக் கொடுத்தான். கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிலர் நம்மை கேட்கிறார்கள். யூதர்களைக் காட்டிலும் மேலாக பத்தில் ஒரு பங்குக்கும் மேலாக நாம் கொடுக்க வேண்டும் என்பதே நமது பதில். நாம் புரிந்து கொண்டவரை சகேயு கூட முழுமையான ப-யை செலுத்தவில்லை. R 3849:4

## அக்டோபர் 30

***சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப். 8:4)***

அருமையான சகோதரரே, திருச்சபையை ஸ்தாபித்த

ஆரம்பகாலத்தில் அப்போஸ்தலரோடு கூட இருந்து அவர்களுக்கு வழிகாட்டியவர் அதே வல்லமையின் ஆவியோடு இப்பொழுதும் நம்மோடு இருக்கிறார். யூதயுக அறுப்பில் வழிகாட்டினவர், தற்போது சுவிசேஷ யுக அறுப்பிலும் முடிவுவரை நம்மோடு இருப்பார். அப்போஸ்தலர் காலத்தி-ருந்த யூதாஸ், தட்டானாகிய அலெக்சாண்டர், யந்நேயும், யம்பிரேயும் பெற்ற அனுவங்கள் நமக்கும் ஏற்படும். ஆனால், இவைகளிலெல்லாம் தேவன் நமக்கு நன்மையாக வாய்க்கப்பண்ணுவார். இவைகளின் மூலம் அவருடைய கிருபையான வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார். தற்கால ஜீவியத்திலே, நமக்கு நிந்தையும் பாடும் உபத்திரவங்களும், சிறையும் ஏற்பட அனுமதித்தாலும் நமது ஆண்டவரின் பிரசன்னத்தையும் வல்லமையையும் நாம் சந்தேகிக்கக் கூடாது. நாம் அடையப்போகும் மகிமைக்கு முன்பாக இந்தத் துன்பமும் சோதனையும் ஒரு பொருட்டல்ல. "அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்று யோபு போல என்ன வந்தாலும் வரட்டும் என்போமாக. R 4337:5

## அக்டோபர் 31

***என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கி. 3:7)***

வேதாகமம் முழுவதும் தேவகிருபை என்றுமுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இது எபிரேயு பாஷையிலே "ஒலம்" அதாவது பரிபூரணம் என்று கூறப்பட்டுள்ளது. தற்காலத்திலுள்ள உலக ஜனங்களில் ஒரு சிறு கூட்டம் தேவ தயவைப் பெற்று நீதிமான்களாக்கப்பட்டு தேவகிருபைகளை தற்காலத்திலேயே பெறக்கூடியவர்களாகிறார்கள். தேவன் இந்த சிறு மந்தைக் கூட்டத்தை நேசித்து கிருபை காட்டுவதற்குக் காரணம் இவர்கள் பாவ வழியை விட்டுவிட்டு ஜீவ வழியைப் பின்பற்றி கர்த்தரிடத்தில் திரும்பியவர்கள். அன்பில் குறைவுள்ளவர்களையும் எதையும் மன்னிக்காதவர்களையும் கூட பொறுமையோடு அவர்களை தம்முடைய திவ்ய திட்டத்திற்கும் தயவுள்ள இராஜ்யத்திற்கும் வந்து சேர பங்குள்ளவர்களாக அழைக்கிறார். தற்காலத்தில் விசுவாசிக்கிறவர்கள் யாவருக்கும் பரிசுத்த ஆவியை ஊற்ற தேவன்



தயை செய்திருக்கிறார். இதன் மூலமாக பூமியின் ஜனங்கள் எல்லாம் தேவனைப் பற்றிய நன்மை, அறிவு, ஞானம் இவைகளை அறிந்து அவருடைய மகிமையின் இராஜ்யத்தில் நித்திய ஜீவனை அடைந்து அவரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது உறுதியாகிறது. அருமையான திவ்விய வாக்குத்தத்தங்கள் அப்பொழுது கிடைக்கும். R 3836:4

## நவம்பர் 1

***மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 54:10)***

கர்த்தர் தமது ஜனங்களை எவ்வளவு ஆச்சரியமாக நடத்துகிறார். எப்பொழுதும் அவர் தம்முடைய பிள்ளைகளைப் பற்றியே இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டே இருக்கிறார். தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு எந்த நன்மையும் குறைவுபடாமல். அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக செய்யப்படும். தேவன் தம்முடைய வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை என்று யாரால் சொல்லக்கூடும். அநேக வருஷங்களாக கர்த்தரை விசுவாசித்தவர்களுக்கு வெய்யி-லும், மழையிலும், நிழ-லும், இன்ப வேளையிலும், துன்ப வேளையிலும், புயல் வீசிய போதிலும் தேவன் உண்மையுள்ளவர்களுக்கு ஏற்ற வேளையில் ஏற்ற ஆசீர்வாதத்தை தந்திருக்கிறார். நிச்சயமாக, "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிளெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை." *(யோசு. 23:14)* நம்முடைய வாழ்வில் சிறிய காரியங்களானாலும் பெரிய காரியங்களானாலும் எல்லாவற்றையும் தேவன் அக்கறையோடு பார்க்கிறார். எனவே ஒவ்வொரு மேகத்திலும் (துன்பத்திலும்) ஒரு தங்ககீற்று உண்டு. R 5538:3

## நவம்பர் 2

***பூமிமுழுவதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது; கெம்பீரமாய் முழங்குகிறார்கள். (ஏசா. 14:7)***

அசைவில்லாத இராஜ்யம் வரப்போகின்றது, அதன் ராஜா

நீதியாக அரசாளுவார், அதன் பிரபுக்கள் நீதியாய் துரைத்தனம் பண்ணுவார்கள். இப்படிப்பட்ட நன்மையான வருங்காலத்தை ஆயத்தம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. *(ஏசா. 32:1; நீதி. 8:15)* அந்த இராஜ்யத்தில் முழு பூமியும் ஓய்ந்து இருக்கும். *(ஏசா. 14:7)* இந்த இராஜ்யத்தைக் குறித்தே தீர்க்கதரிசியானவர், "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவரின் இராஜ்யம்" என்று குறிப்பிடுகிறார். அந்த இராஜ்யம் நிறுவப்பட்ட பின் உலகம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும். மெய்யாகவே, சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்ட அந்த ஆட்சி விரைவில் அமையும். சுகம், சந்தோஷம், சமாதானம், ஆசீர்வாதம் நிறைந்ததாய் அந்த ராஜ்யம் இருக்கும். R 3053:4

## நவம்பர் 3

***அந்திசந்தி மத்தியான வேளைகளிலும், நான் தியானம் பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார். (சங். 55:17)***

தானியேலைப்போல முழங்கால்படியிட்டு முறையாக ஜெபிப்பதே மிகச் சிறந்த ஆண்கள், பெண்களின் இயல்பாம், யாரையும் எதிர்பாராமல் காலையும் மாலையும் எவ்வேளையும் இவர்கள் ஜெபித்துக் கொண்டே இருப்பார்கள். தானியேலோவென்றால் தன் வீட்டுக்குள்ளே போய், தன்மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். *(தானி 6:10)* இந்த உலகத்திற்குரிய பணிகளை மறந்து ஜீவனுள்ள தேவனை நோக்கி ஜெபதூபத்தை ஏறெடுக்கின்ற பொழுது அடையும் சந்தோஷம் அவர்களுக்கு வேறு எதிலும் கிடைப்பதில்லை. ஜெபத்தில் அசட்டையாய் இருப்பவர்கள், பிரதிஷ்டைக்குரிய வாழ்க்கையை வாழ இயலாது. ஒரு மெய்க்கிறிஸ்தவனுக்கு ஜெபவேளையே ஆசீர்வாதமான வேளை. ஏனென்றால் இந்த வேளையில் தான் "பிதாவாகிய தேவனிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகின்ற நீதிபரராகிய இயேசுகிறிஸ்து என்கிற மத்தியஸ்தர் நமக்குண்டு." இவருடைய நாமத்தினால் தான் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரலாம். R 4875:4



## நவம்பர் 4

***இதோ, மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள். (மத். 25:6)***

விழிப்பாயிருக்கின்ற கன்னிகைகளுக்கு, சத்தியத்தில் தேர்ந்திருக்கின்றவர்களுக்கு, தங்கள் விளக்கில் எண்ணெய் குறையாம-ருப்பவர்களுக்கு, கர்த்தரையே சார்ந்து மெய்யான தாழ்மையிலும், பொறுமையிலும், அன்பிலும், தெய்வபக்தியிலும், மணவாளனுக்குரிய விஷயங்களில் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின்ற மணவாட்டிக்கு இதோ மணவாளன் வந்துவிட்டார் என்ற அறிவிப்பு மிகுந்த சந்தோஷம் தரக்கூடியதாக இருக்கும். இப்படிப்பட்டவர்களையே மணவாளன் விரும்புவார்; இவர்களையே உள்ளே நுழைய அனுமதிக்கவும் செய்வார். தற்காலத்தில் ஜீவிக்கின்ற நமக்கு இதோ மணவாளன் வந்துவிட்டார் என்று அறிவிக்கிறது மாத்திரம் அல்ல. எண்ணெயோடு எரிகின்ற விளக்குகளிலே திரிகள் தூண்டப்பட நாம் உதவியாயிருக்க வேண்டும். எண்ணெய் வாங்கிக்கொள்ள முடியாமல் போகும் காலம் வரப்போகிறது. எனவே விரைவில் எண்ணெய் வாங்கி விடுவோமாக. எண்ணெய் இருந்து விளக்கு எரியாமல் அசதியாய் தூக்கமயக்கத்தில் இருப்பவர்களை நாம் எழுப்பியாக வேண்டும். ஒவ்வொருவரும் அறிய மணவாளானின் பிரசன்னத்தை உணர்த்தியாக வேண்டும். இதைப் பொறுமையாய் அன்பிலே விடா முயற்சியுடன் தொடர்ந்து செய்வோமாக. R 3869:5

## நவம்பர் 5

***நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். (ரோம. 10:10)***

ஊமைபோல் பேசாமல் இருக்கின்ற விசுவாசி எக்காலத்திலும் தன்னுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்ள முடியாது. இயற்கையாகவே ஊமையாயிருக்கிறவர்களை இப்படிச்

சொல்லவில்லை. மாறாக சத்தியத்தை அறிந்தும் உணர்ந்தும் அதை உண்மையுள்ளவர்களிடத்தில் ஒப்புவிக்காம-ருக்கின்ற நிலைமை இங்கே ஊமை என்று சொல்லப்படுகின்றது. இதே அர்த்தத்தில் தான் நமது இருதயத்தின் காதுகள், அறிவின் கண்கள் என்று பேசுகிறோம். தேவனுடைய கிருபையை கேட்டுணர்ந்த இருதயம் அதை உண்மையாய் ஏற்றுக் கொண்டு, ஏற்ற வேளைகளில் சத்தியத்தால் உண்டாகின்றச் சந்தோஷத்தை, சமாதானத்தை, நம்பிக்கையை, நன்றியறிதலை வெளிப்படையாக காண்பிக்காம-ருக்க முடியாது. ஆகவே தான் அப்போஸ்தலன், “நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாம-ருக்கக் கூடாதே” என்று சொன்னார். தெய்வீகத் திட்டத்தையும் சத்திய வெளிச்சத்தையும் அறிந்து கொண்ட அனைத்து கிறிஸ்தவர்களும் தாங்கள் ருசி பார்த்ததை கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாகக்கப்பட்டதுமாயிருக்கிற இவ்வளவு பெரிய மீட்பைக் குறித்து அசட்டையாயிருக்கக்கூடாது. விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்கக்கூடாது. பிரகாசம் பெற்றும் அதை மற்றவர்களுக்கு வழங்காமல் வளராமல் இருக்கின்ற நிலைமை கர்த்தரையும் அவருடைய வார்த்தைகளையும் குறித்து வெட்கப்படுவதற்கு ஒப்பாக இருப்பதால் அவர்கள் இராஜ்யத்திற்கு தகுதியற்றவர்களாவதுடன் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். R 2966:5

## <u>நவம்பர் 6</u>

**இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. *(1 பேது. 1:5)***

நம்முடைய அன்றாட வாழ்வில் நமக்கு கிடைக்கக்கூடியச் சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் நாம் எவ்வளவாய் அனுசரிக்கிறோமோ, அவ்வளவாய் தேவனுக்கு சமீபமாய் சேர்வோம். சந்தர்ப்பங்களை சூழ்நிலைகளை உலக ஆதாயத்திற்கு எடுத்துக் கொண்டோமானால் தேவனுக்கு விரோதமான வழியில் பாவத்திற்கு ஆளாக நேரிடும். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் இரண்டு குரல்கள் மனிதனை நோக்கிப் பேசுவதாகக் காண்கிறோம். ஒன்று தாழ்மையையும் தேவனுக்குக் கீழ்ப்படிதலையும் சொல்லும். இன்னொன்று எதிரிடையாக கர்வமாக சுய இஷ்டப்படி பேசும். நாம்



மெய்யாகவே கிறிஸ்தவ ஜீவியத்தில் முன்னேறிச் செல்லுகிறவர்களாயிருந்தால் நாம் உலகப்பிரகாரமாக வெற்றிகளை அடைய முடியாது. மாறாக, அநேகத் தோல்விகளையும் வருத்தங்களையும் பிரயாசங்களையும் எதிரியான தந்திரக்காரனான சாத்தானால் பெறுவோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த பலவீனமான மண்பாண்டத்திலே நாம் புதிய சிருஷ்டியை ஒரு பொக்கிஷம் போல, பெற்றிருக்கிறோம். நமது மாம்சத்தில் பரிபூரணம் இல்லை என்பதை நாம் நினைவு கூற வேண்டும். ஆகவே நாம் மிகுந்த மனத்தாழ்மையோடு தேவசித்தத்துக்கு நம்மால் இயன்றளவு ஒட்டிச் செல்ல வேண்டும். நம்முடைய சிந்தனையிலும், சொல்-லும், செய-லும் தேவசித்தத்திற்கு ஒத்துச் செல்வதை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டும். R 4233:6

## <u>நவம்பர் 7</u>

**சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளைகளையும் மரணத்துக்கு ஒப்புக் கொடுப்பார்கள். *(மத். 10:21)***

தேவனுடைய அன்பு எந்த நேரத்திலும் நம்மை கட்டுப்படுத்தத் தவறி, நாம் அவருடைய அன்பி-ருந்தும் ஐக்கியத்தி-ருந்தும் நீங்குவது மட்டுமல்ல, சகோதரர்களை வெட்டுவதற்கு பட்டயத்தை பயன்படுத்தும்படி வரலாம். இப்படிப்பட்ட காரியத்தை மனதுக்கு முன்பாக நிறுத்தவே கொடுமையாகத் தோன்றுகிறது. ஆனாலும் தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் நெஞ்சிலே இது பதியும் படியாகச் செய்திருக்கிறார். அவருடைய ராஜ்யம் நிறுவப்படுவதற்கு முன்பாக இப்பொழுது இருக்கிற இந்தக் கொடுமையின் காலத்தில் சகோதரருக்கு விரோதமாக சகோதரர்கள் எழும்புவார்கள். இந்த உலகம் வேறுவிதமான ஆயுதங்களில் யுத்தம் செய்யும், நம்முடைய ஆயுதங்கள் அவைகளல்ல. நம்முடைய ஆயுதம் மாம்சீக பிரகாரமானதல்ல. ப-யினால் கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்ட நம்முடைய சகோதரர்களோடு நம்முடைய போராட்டம் இருக்கக்கூடாது. மாறாக, மாபெரும் எதிராளியான அந்தகார லோகாதிபதியாகிய சாத்தானோடு நாம் போரிட வேண்டும். மாம்சீக பிரகாரமான ஆயுதம் வாள், துப்பாக்கி போன்றவைகள்

மட்டுமல்ல, மிகவும் கொடுமையான ஆயுதம் நாவே. இந்த நாவு பழிசொல், களங்கம் கற்பித்தல் போன்றவற்றால் மரண காயம் ஏற்படுத்தும். இதே நாவினால் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். ஆதலால் இந்த நாவை விசுவாச வீட்டிலுள்ள ஒருவர் மீதும் கூட தவறாக உபயோகப்படுத்தக்கூடாது. R 4235:5

## நவம்பர் 8

***சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. (1 கொரி. 1:26)***

தேவநோக்கம் எவ்வளவு வித்தியாசமானதாயிருக்கிறது! உலகப் பார்வையில் வல்லமையான நீதியாய்த் தோன்றுகிற எவரும், தேவப் பார்வையில் உயர்த்தப்படமாட்டார்கள். மாறாக யார் தங்களை மிகவும் தாழ்த்துகிறார்களோ அவர்களை தேவன் மிகவும் உயர்த்துகிறார். தங்களைத் தாங்களே உயர்த்துகிறவர்கள் தாழ்த்தப்படுவார்கள். உலகத்தில் இழிவானவர்களே, தாழ்மையான மக்களே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட தகுதியுடையவர்கள். யார் இவ்வித எளிய அடக்கமான நிலைமையில் கிறிஸ்துவின் பள்ளியில் பயிலுகின்றார்களோ அவர்களே கர்த்தரால் விரும்பப்பட்டவர்கள். கர்த்தருடைய அங்கீகாரம் பெறுவார்கள். நாமும் இப்படிப்பட்ட தேவன் அங்கீகாரம் செய்கின்ற ஏழை எளிய மக்களை ஏற்றுக் கொள்வதும் தேவனை ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பாகும். அப்படிப்பட்டவர்களை நேசிப்பது தேவனை நேசிப்பதாகும். உலகம் தள்ளிவிட்டவர்களை அசட்டை செய்தவர்களை தேவன் நேசித்து நீதிமான்களாக்குகிறார். அப்படிப்பட்டவர்களுடைய இருதயம் தேவனைச்சார்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட தேவநோக்கம் நம்மிலுமிருந்தால் நாமும் தேவனுடையவர்கள். இவ்வுலத்திற்குரியவர்கள் யார் என்பதை தெரிந்து தெளிந்து பலவீனமான உலகத்தால் வெறுக்கப்பட்ட மக்களோடு நாமும் அவர்களும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு தேவநீதியை அறிந்து தேவ நோக்கத்திற்குட்பட்டு நீதிமான்களாய் நடப்போமாக. R 4269:4



## நவம்பர் 9

***சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். (எபி. 10:25)***

தாவீது உடன்படிக்கை பெட்டியை நெருங்கி கர்த்தரை அணுகியிருந்தது போல, நாமும் மணவாளனுக்குரியவர்களாக மணவாளனால் நேசிக்கப்பட்டவர்களாக, கிறிஸ்து இயேசு என்னும் கிருபாசனத்தை விட்டு விலகாமல் அணுகியிருப்போமாக. கிறிஸ்துவோடு கூட சிந்தித்தலும், நடத்துதலும், ஆசாரிப்புக் கூடார ஒழுங்கிலே பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருப்பதற்கு ஒப்பாக நாம் திரையின் இப்புறத்திலே இருக்கிறோம். மகிமையின் மேல் மகிமையடைந்தால் திரைக்கு அப்பால் செல்கிறவர்களாயிருப்போம். கர்த்தரை நெருங்கி அவரோடு ஐக்கியமாக இருக்க விரும்புகிறவர்கள் புதிய சுபாவத்திலே சகோதர அன்பிலும், தேவ அன்பிலும், விசுவாசத்திலும், வெளிச்சத்திலும், ஞானத்திலும், அன்பிலும், படிப்படியாக வளர்ந்து தேவசாயல் பெற்று தேவனோடிருப்போம் என்ற நல்நம்பிக்கைக்கு இசைவாய் நடப்போமாக. R 4260:5

## நவம்பர் 10

***அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். (2 கொரி. 12:9)***

இந்த நோயை பெற்றிருப்பதின் மூலம் அதிக தேவ கிருபை கிடைக்கும் என்பதால் நான் இதில் திருப்தியடைந்து, இதைப் பிரிய வருந்துகிறேன் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். எனவே என் அன்பு சகோதரர்களே, நமது சோதனைகள், வருத்தங்கள், பிரயாசங்கள் யாவும் நமது நன்மைக்காக தேவனால் அனுமதிக்கப்படுகிறது என்பதை உணர்வோமாக. அவர் நம்மை அழைத்த அழைப்பினாலே நம்மை குமாரர்களாக ஏற்றுக் கொண்டு தேவ அன்பினாலே கட்டப்பட்டு அவருடைய ஆவிக்குள்ளாக ஜெநிப்பித்திருக்கிறார். நமது சோதனையிலும் துன்பத்திலும் அவர் நம்மேல் அக்கரை கொண்டு

இந்த அனுபவங்கள் நமது நன்மைக்கு ஏதுவாகும்படி செய்கிறார். R 4356:6

## நவம்பர் 11

***கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். (அப். 11:21)***

கர்த்தருடைய கரம் அவருடைய வழிகாட்டுதலையும் தேவபலத்தையும் உணர்த்துவதாயிருக்கிறது. கிறிஸ்துவ ஊழியத்தில் தெய்வ அங்கீகாரமும், எல்லாக் காரியங்களிலேயும் வெற்றி தரக்கூடிய இரகசியமும் இதிலே அடங்கியிருக்கிறது. சொல்லப்போனால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய கரமாக இருக்கிறான். நாம் தேவனுடைய பிரதிநிதிகளாக தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் தேவனுக்கு உபயோகமாகவும், எல்லா மாந்தருக்கும் உதவியாகவும் இருக்கவேண்டுமானால், உத்வேகத்துடன் அவரது வழி நடத்துதலை தேட வேண்டும். தேவகுரலை வேதாகமத்தின் மூலமாகக் கேட்டு, சத்திய ஆவியினால் பலம் பெற்று, தேவக்கரத்தால் நடத்தப்படுகின்ற உணர்வை அடைய வேண்டும். திரளான எண்ணிக்கையில் பெருத்த, பலத்தை வைத்து நாம் வெற்றித் தோல்வியை நிச்சயிக்க முடியாது அதற்கு விதி விலக்காக தேவ நோக்கத்தால் குறைவிலும் நிறைவு காணமுடியும். நம்முடைய உழைப்பிற்கான கனியின் பலனைத் தருவது தேவன்; நாம் தேவகாரியமாக தேவசார்பாக நடக்க முனையும்போது தேவன் தம்முடைய அனந்த ஞானத்தி-ருந்து அநேக பாடங்களை கற்றுத் தருகிறார். நடைமுறையில் நலமானவை யாவும் செய்ய தம் கரத்தால் நம் கரம்பிடித்து நடத்துகிறார். R 4357:2

## நவம்பர் 12

***நான் உன்னோடே இருப்பேன்..... (யாத். 3:12)***

எல்லா இடங்களிலேயும் எல்லா நேரங்களிலேயும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கர்த்தருடைய பணியைச் செய்யும் பொழுது ஊக்கம் அளிக்கக்கூடிய தேவவசனம் இதுவே. தேவன் நமக்காக எல்லாம் செய்யும் பொழுது நம்மோடு இருக்கும் போது யார் நமக்கு விரோதமாக தீங்கு செய்யக்கூடும்? மோசேயின் காலத்தில்



அவருக்கு நேரிட்ட சோதனை, துன்பம், கலக்கம் நமக்கும் வரக்கூடும். அப்பொழுது மோசேயோடு இருந்த தேவன் இப்பொழுது நம்மோடும் இருக்கிறார் என்ற தைரியத்தில் நாம் வெற்றிமேல் வெற்றியடைய முனைந்து செயல்படவேண்டும். பூமிக்குரிய மண்பாண்டமாகிய இந்தச் சரீரத்தில் புதிய சுபாவத்தை பெற்றிருக்கும் நாம் நம்முடைய அபூரண நிலையிலே பலவீனத்தில் அநேகச் சோதனைகள் ஏமாற்றங்கள் இவைகளில் அகப்படக்கூடும். அம்மாதிரி வேளைகளில் நம்முடைய அறிவுக்கண்களைத் திறந்து நாம் சேவிக்கின்ற தேவனை நோக்கிப்பார்க்க வேண்டும். அவருடைய வாக்குத்தத்தமாகிய “நான் உன்னோடே இருப்பேன்,” என்பதை நம் கவனத்தில் கொண்டு வரவேண்டும். அப்படி நாம் தைரியமாகச் செயல்படும்போது எல்லாச் சோதனைகளி-ருந்தும் ஏமாற்றங்களி-ருந்தும் நீங்கினவர்களாகி நம்முடைய போதகரும் குருவுமாகிய கிறிஸ்துவின் மகிமையில் வெற்றி சிறக்க எல்லா வழிகளும் நமக்குத் திறக்கும். R 2910:1

## நவம்பர் 13

***உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. (ஆமோ. 4:12)***

தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுவதற்கும், குணலட்சணத்தைக் குறித்த தேவத்தீர்மானங்களை கேட்கத் தீவிரிப்பதற்கும், சரியான வழி நாம் சாதாரணமாக எதிர்ப்பார்ப்பது போல அல்ல. வியாதி, வருத்தம், துன்பம் இவைகள் இடையில் வந்தாலும் நாம் செய்து கொண்டிருக்கும் ஆயத்தத்தி-ருந்து பின்வாங்கக்கூடாது. கிறிஸ்துவுக்குள் நாம் விசுவாசிகளானபோது, பாவ மன்னிப்பைப் பெற்று தேவ தயவுக்குள் பிரவேசித்தோம். நம்முடைய சரீரங்களை தேவனுக்கேற்ற ஜீவப-யாக ஒப்புக் கொடுப்பதன் மூலமாக அவருடைய ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு ஐக்கியம் பெறுவோம். அப்படியிருக்கும் போது நாம் கிறிஸ்துவின் பள்ளியில் சேரத் தகுதியுள்ளவர்களாவோம். அந்தப் பள்ளியில் நாம் தேவக்குமாரர்களாக போதிக்கப்படுவோம். மகிமையுள்ள ராஜ்யத்தின் வேலைகளுக்கு மீட்பரோடும் கூட நாம் ஆயத்தமாக்கப்படுவோம். அதனால் நாள்தோறும் அறிவிலும் ஞானத்திலும் தயையிலும் தெய்வ கிருபையிலும் வளர்ந்து எந்தச் சமயத்திலும் தேவனைச் சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாவார்கள்,

எப்பொழுதும் ஆயத்தமாயிருப்பவர்கள் அவரை சந்திப்பது ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. இதற்கு தடையாக வரக்கூடிய எந்த நிகழ்ச்சியும் முடிவில் பேராபத்தாக முடியும். R 4234:5

## <u>நவம்பர் 14</u>

**காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். *(யோவா. 20:29)***

இருளாக இருக்கும் போது, நீதியின் சூரியன் தன்னுடைய ஆரோக்கியமுள்ள கதிர்களை அனுப்புவதற்கு முன்பாக, எல்லா சந்தேகங்களையும், பயங்களையும், தடைகளையும் நீக்கிப் பெறுகிற வெகுமதிகளையும் ஆசீர்வாதங்களையும், விசுவாசமுள்ளவர்கள் தங்கள் விசுவாசத்தினாலே உறுதிப்பட்டவர்களாயிருந்து பெற்றுக் கொள்வார்கள். இந்த சுவிசேஷயுக மந்தையைக் குறித்து வேதம் கூறுகிறதாவது, "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்," "விசுவாசத்தினாலே அதரிசனமானவரை நாம் தரிசிக்கிறோம்." விசுவாசக் கண்களால் காணக்கூடிய கிரீடத்தையும், சிங்காசனத்தையும் பெற நாம் ஒடுகிறோம். பரலோகத்தி-ருந்து மெல்-ய சத்தத்தின் மூலம் பேசுகிறவரின் சத்தத்தைக் கேட்டுக் கீழ்ப்படிகிறோம். விசுவாசத்தினால் வெகுசிலரே இந்த சத்தத்தைக் கேட்கவும், உணரவும் புரிந்து கொள்ளவும் முடியும். கூடிய விரைவில் இந்த மெல்-ய சத்தம் பூமியை அசைக்கச் செய்யும். அப்பொழுது முழு பூமியும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கச் செய்யும். கீழ்ப்படிதல் அப்பொழுது ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். ஆனால் இப்பொழுது கீழ்ப்படிந்து, பூமிக்குரிய எல்லாவற்றையும் தியாகம் செய்து, கர்த்தரின் அடிச்சுவட்டை பின்பற்றி ஒரு முன்மாதிரியான வாழ்க்கை வாழ்கிறவர்களுக்கு பெரிய ஆசீர்வாதமாகிய கனம், மகிமை, சாகாமை கிடைக்கும். R 2804:5

## <u>நவம்பர் 15</u>

**முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். *(எபிரே. 12:13***

அப்போஸ்தலர் இந்த இடத்தில் சொல்லுகிற பாதையும் கால்களும் சொல்லர்த்தமானது அல்ல என்பதை அனைவரும் அறிவார்கள். கர்த்தருடைய ஆடுகள் பூமிக்குரிய குறைபாடுகளை அந்த முடமான தன்மையை படிப்படியாக களைந்துப் போட்டு நேர்மையான வழியிலே நடப்போமாக. செம்மையான நெறியிலே நேராக இடது வலது சாயாமல் செல்வோமாக. கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவட்டிலே செல்வோமாக. நம்முடைய பலவீனங்கள் மனதிற்குரியதாயிருந்தாலும், சரீரப்பிரகாரமாயிருந்தாலும் அவைகளை சரிசெய்து கொண்டு சாத்தான் கொடுக்கிற எந்தச் சோதனையையும் ஜெயிக்கத்தக்கதாக உறுதியோடு நிலைநிற்க முயல்வோமாக. நம்முடைய பலவீனத்திற்கு தகுந்த மாதிரி அதை மேலும் பலவீனமாக்கிவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். சோதனையில் எங்களை கை விட்டுவிடாதேயும் என்று ஜெபிக்க வேண்டும். ஜெபிப்பதோடு நின்றுவிடாமல் சோதனைக்குரியக் காரியங்களை தவிர்க்கவும் முயற்சிக்க வேண்டும். எப்படி நாம் இதை தவிர்க்கலாம்? உறுதியான தீர்மானத்தோடு நம்முடைய சித்தப்படியல்ல தேவசித்தப்படி ஒவ்வொரு காரியத்தையும் நாம் செய்வோமேயானால் தேவவாக்குத்தத்தின்படி சோதனைகளி-ருந்து தேவன் நம்மை காக்கிறார். கர்த்தரிடத்தில் நாம் செய்து கொண்ட உடன்படிக்கைகளை, நம்முடைய பொருத்தனைகளை விசுவாசத்தோடு நிறைவேற்றும் பொழுது தெய்வ சித்தத்தோடு தேவ பலத்தால் வெற்றிமேல் வெற்றியடைவோம். R 4348:2

## <u>நவம்பர் 16</u>

**அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி..... *(வெளி. 15:3)***

மணவாட்டியாகவும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் ஆகப்போகின்ற ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாட கற்றுக் கொண்டிருக்க வேண்டும். "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும் பெலத்தையும், கனத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிறார்." மிகுந்த மகிழ்ச்சியானச் செய்தியை தரக்கூடிய இந்தப் புதிய பாட்டை எப்படிப் பாடுவது எப்படி எல்லா ஜனங்களையும் மகிழ்விப்பது

என்பதே நம்முடைய தற்கால சிந்தனையாகிறது. இந்தப் புதிய பாட்டு நம்முடைய வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டியதாயிருக்கிறது. தேவனுக்கு முன்பாக தேவ சாட்சியாக தேவக் காரியங்களை கேட்கக்கூடிய செவியையுடைய ஒவ்வொருவருக்கும் எடுத்துச் சொல்வதே புதிய பாட்டாகும். இதைச் செய்யும் பொழுது எவ்வளவோ எதிர்ப்புகள், ஏச்சும் பேச்சும் கேட்கவேண்டிவரும். இத்தனைக்கும் பொறுமையாக விசுவாசத்தில் நிலைத்து தொடர்ந்து உறுதியாக இருக்க வேண்டும். இந்த ஆசீர்வாதமான ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரைக்கும், நமது மகிமையின் மாறுதல் வரும்வரைக்கும் நாம் காத்திருக்க வேண்டும். பூமியின் குடிகள் யாவும் ஆசீர்வதிக்கப்படும். மகிழ்ச்சியின் நாள்வரை உண்மையுள்ளவர்களுக்கு அந்தச் சத்தியத்தைச் சாட்சியாக அறிவிக்க வேண்டும். R 4236:5

## நவம்பர் 17

***இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார். (அப். 9:34)***

முடக்குவாதமுள்ள ஐனேயா என்பவனை நோக்கி அப்போஸ்தலனாகிய பேதுரு சொன்ன வார்த்தைகள் இவைகள். அப்போஸ்தலன் இவனை -த்தாவில் கண்டு சுகப்படுத்தினார். அவன் கர்த்தருடைய பரிசுத்தவான்களில்ஒருவனா என்று நமக்குத் தெரியாது. ஆனாலும் சில பரிசுத்தவான்கள் அவருடைய நண்பர்களாக இருந்தார்கள். அதனால் அப்போஸ்தலரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டான். அவன் எட்டாண்டுகளாக உதவியற்ற நிலைமையிலே படுத்தப்படுக்கையாக கிடந்தவனாயிருந்தும் சுகமடைந்தது ஒரு புதுமையே! அதன் மூலமாக இந்தச் செய்தி பல இடங்களிலும் பரவினதால் அநேகரை கர்த்தரிடத்திற்கும் சத்தியத்திற்கும் சபைக்கும் வந்து சேர வாய்க்காலாயிருந்தது. இப்படியாக கர்த்தர் படிப்படியாக பல பக்கங்களி-ருந்த சரியான இருதயம் உள்ளவர்களை சபைக்கு கொண்டு வர பல அதிசயங்கள் நடத்திக் காண்பிக்கப்பட்டது. அது அக்காலத்தில் அவசியமாயிருந்தது. அவைகள் நீண்ட காலத்திற்கு நிலைக்கவில்லை. ஏனெனில் சுகமாக்கும் வரமும், அப்போஸ்தலர்கள், மற்றவர்கள் மேல் கைகளை வைக்குதல் ஆகியவை அப்போஸ்தலர்களுக்குப் பிறகு நிறுத்தப்பட்டன.



அப்போஸ்தலர்களுக்கு வாரிசுகளாக யாரையும் ஏற்படுத்தவில்லை. பரலோக எருசலேமாகிய வரப்போகிற மகிமையின் ராஜ்யத்தில் பன்னிரண்டு அஸ்திவாரங்கள் தான் உள்ளன. அதில் எழுதப்பட்டிருக்கிறது இந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் நாமமேயல்லாமல் வேறு நாமமல்ல. R 2987:5

## நவம்பர் 18

***உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி. 12:2)***

இந்த ஆசீர்வாதம் இப்பொழுதே நம்முடைய இருதயங்களில் துவங்கிவிட்டது. ஆனாலும் முடிவாக முழுமையாக முற்றுப்பெறவில்லை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பரிசுத்த தேவராஜ்யமாக தேவவல்லமையால் மகிமையால் ஸ்தாபிக்கப்பட்டே தீரும். நம்முடைய வெளிச்சம் மற்றவர்களையும் பிரகாசிக்கச் செய்ய நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதமான சந்தர்ப்பம். கர்த்தரால் வழங்கப்பட்ட, இந்த ஆவி நம்முடைய இருதயத்தில் கொழுந்துவிட்டு எரிய வேண்டும். இந்த பிரகாசம் நம்மிடத்திலே தோன்றினால் தான் அநேகரை பிரகாசிக்கச் செய்ய முடியும். இந்த பிரகாசமான ஆசீர்வாதத்தின் நாள் விரைவில் வருவதற்காகத்தான் “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக” என்று ஜெபிக்கக் கட்டளை பெற்றிருக்கிறோம். இப்பொழுது நாம் எல்லாராலும் பழிக்கப்பட்டும் தீமையாக நம்மீது அநேக காரியங்கள் சொல்லப்பட்டாலும் நம்முடைய தலையாகிய கிறிஸ்துவின் நாமம் உயர்த்தப்பட்டது போல நாமும் அவருடைய ராஜ்யத்தில் உயர்த்தப்படுவோம். சர்வபூமியும் மணவாளனைக் கண்டு கொள்ளும் பொழுது மணவாட்டியும் உடன் சுதந்தரருமாகிய நம்மையும் அறிந்துகொள்ளும். அப்படிப்பட்ட பரிசுத்த ராஜ்யத்தையும் அந்த காலத்தையும் சந்தோஷத்தோடு எதிர்பார்க்கிறோம். இந்த உலகம் செய்த எல்லாத் தீங்குக்கும் சாத்தான் செய்த தீவினைகளுக்கும் பெயர் கிறிஸ்தவ மண்டலங்கள் செய்த தீவினைக்கும் தேவ நீதியால் தேவ தண்டனை வரும்பொழுது, நம்முடைய ஆசீர்வாதம் மிகுதியாக வரும் வேளையில், கீழ்ப்படிந்து தெய்வ வழியில் நடக்க விரும்பும் அனைவரையும் ஆசீர்வதிக்கின்ற பெரும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும். R 2847:2

## நவம்பர் 19

**ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். *(வெளி. 21:7)***

இங்கே சொல்லப்படுகின்ற காரியம் சுவிசேஷயுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு அல்ல; மத்தேயு 25ம் அதிகாரத்தில் சொல்லப்படுகிற செம்மறியாட்டு வகுப்பை சேர்ந்தவர்களுக்கே; ஆயிரவருட அரசாட்சியில் மேய்ப்பனின் சத்தத்துக்கு கீழ்ப்படிந்து வருகின்றவர்களுக்கே. அவருடைய சத்தத்துக்கு கீழ்ப்படிகிற மக்களுக்கு பிதாவினால் உலகத்தோற்றத்துக்கு முன் ஆயத்தமாக்கப்பட்ட சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள் என்ற அழைப்பு கிடைக்கும். அவர்கள் பரலோக ராஜ்யத்திற்கு அல்ல பூலோக ராஜ்யத்திற்கே அழைக்கப்பட்டவர்கள். நாமோ பரலோக ராஜ்யத்திற்குரியவர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உடன் சுதந்தரராகிறவர்கள். கீழ்ப்படியாமையினால் ஆதாம் இழந்துபோன பூமியின் ஆசீர்வாதங்களையெல்லாம் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டு பெற்றுக் கொள்வார்கள். இந்த செம்மறியாட்டுக் கூட்டத்தார் தேவதயவை கிறிஸ்துவின் மூலமாய் பெற்றுக் கொண்டு தேவனுக்கு குமாரர்களாக இருப்பார்கள். தேவன் அவர்களுக்கு தகப்பனாக இருப்பார். R 2833:5

## நவம்பர் 20

**கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். *(சங். 27:14)***

நம் அனுபவத்திலே நாம் சொந்த புத்தியிலே கர்த்தருக்கு முன்பாக செல்வது ஆபத்தானது என்று கண்டிருக்கிறோம். நமக்கு நாமே வழிகாட்ட ஏற்ற ஞானம் நம்மிடம் இல்லை. சில சமயங்களில் தர்மசங்கடமான நிலைமையை உணர்ந்து கொண்டால், அது நம்மை ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் அடக்கம் உடையவர்களாகவும் மாற்றும். நமது நன்மைக்காக மட்டுமல்ல, நித்திய மகிமை ஆபத்தில் இருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தின் சக அங்கத்தினரின் நன்மைக்காகவும் நாம் பார்க்க வேண்டும். ஒரு கடுமையான சொல், சிந்தனையற்ற ஒரு செயல், கவனிப்பின்மை ஆகியவை இருதயத்துக்கு அனுகூலமற்ற நிலையை ஏற்படுத்தும். வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருந்தால் கூட தேவன் நம்மை சோதனை மூலமே வழி நடத்தி, அதைத் தந்தருளுவார். R 4235:2



## நவம்பர் 21

**ஆதலால் தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பாரென்று சொல்-யிருக்கிறார். *(எபே. 5:14)***

விசுவாசித்து மனமாறுதலுக்குட்பட்டு, தன்னை பிரதிஷ்டைக்குட்படுத்தி ஜெநிபிக்கப்பட்ட உறங்குகிற புதிய சிருஷ்டி விழித்து எழுந்திருக்கிறான். அறிவின் கண்ணும் காதும் திறந்திருக்க மெய்யாகவே இந்த உலகின் நிலைமைகளை தெரிந்து தெளிவடைந்து கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டி என்பதை உணர்ந்து, அடுத்து அவனது கடமை "எழும்புவது." மரித்தோரி-ருந்து எழும்புவது என்பது புதிய மனது புதிய சிந்தை புதிய உத்வேகம் கொண்டு அழிவுக்குரிய இந்தச் சரீரத்தை ஆண்டுகொள்ள வேண்டுமென்று காண்பிக்கிறது. பாவம், மரணத்திற்குரிய நிலைகளி-ருந்து எழுந்து பிரகாசமடையும் நிலைமைக்கு படிப்படியாக மாறுவதே புதிய சிருஷ்டியின் நோக்கம். ஒவ்வொரு முயற்சியும் நம்மை பரிசுத்தமாக்குகிறதினாலும் சத்தியத்திலும் நீதியிலும் படிப்படியாக முன்னேற்றமடைந்தாக வேண்டும். அப்போஸ்தலருடைய இந்த உபதேசப்படி ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவுக்குள் ஒளிவீச சில நாட்கள், மாதங்கள், வருடங்கள் செல்லக்கூடும். ஆனாலும் இடைவிடாமல் முயன்று மாம்சீக, உலக பலவீனங்களை ஜெயித்தாக வேண்டும். நாம் பூரணமடைந்துவிட்டோம் என்ற எண்ணம் எப்பொழுதும் வரக்கூடாது. இன்னும் சுத்தமாக வேண்டும் இன்னும் பூரணப்பட வேண்டும் என்றே எண்ணவேண்டும். எல்லாக் காவலோடும் இந்த உலகம், மாமிசம், எதிராளியாகிய சாத்தான் ஆகியவற்றி-ருந்து நம்மை காத்துக் கொள்ள வேண்டும். நாளும் கர்த்தரின் கிருபையில் திட்டமிட்டுப் படிப்படியாய் முன்னேற வேண்டும். R 2967:1

## நவம்பர் 22

***நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து.... (எபே. 5:20)***

சில நாடுகளில் ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்றைக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்துவார்கள். ஆனால் பரலோகத்திற்குரிய ராஜ்யத்தின் பிரஜைகளாகிய நமக்கோ ஒவ்வொரு நாளும் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டிய நாளாகும். நாம் தேவனிடத்தி-ருந்து பெற்றுக் கொண்ட எல்லா நன்மைகளுக்காகவும் எப்பொழுதும் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். அதற்கு மேலாக நமக்கு ராஜாவாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினால் ஸ்தாபிக்கப்போகும் பரிசுத்த ராஜ்யத்திற்கும் அதன் சமாதானத்திற்கும் சந்தோஷத்திற்கும் அந்த மகிமையான நம்பிக்கைக்கும் ஆவிக்குரிய அநேக நன்மைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் பூரணமான தெய்வ நடத்துதலுக்கும் நாம் நன்றி சொல்-யே ஆக வேண்டும். இந்த உலகத்திலே பெற்று வருகிற தற்கால சுகம், செல்வம், மழை, வெயில், அறுவடை ஆகிய நற்பலன்களுக்காகவும் உலகக் கிறிஸ்தவர்கள் மனப்பூர்வமாக நன்றியறிந்த ஸ்தோத்திரம் சொல்லுகிறார்கள். ஆனால் இவைகளுக்கெல்லாம் மேலாக ஒப்பிடமுடியாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தெய்வீக கனம் மகிமையையும் பெறப்போகிற ராஜ்யத்திற்காக நாம் நன்றி சொல்லுதல் எவ்வளவு அவசியம். தேவன் நீதியுள்ளவர். மேலும், அநீதியுள்ளவர் மேலும் தம்முடைய கொடைகளாகிய இந்த சூரிய வெளிச்சத்தையும், மழையையும், பனியையும் பொழிந்தருளுகிறார். இது எல்லாரும் காண்கிற ஒன்று. நாமோ காணாததை விசுவாசிக்கின்ற நித்தியமானவைகளை நேசிக்கிற தேவக்குமாரர்களாக உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெறப்போகிற கூட்டமாக கிறிஸ்து இயேசுவின் நாமத்தினால் பிதாவாகிய தேவனை எல்லாக் காரியத்திற்காகவும் இடைவிடாமல் எப்பொழுதும் நன்றி சொல்-க் கொண்டே இருக்க வேண்டும். R 1490:1



## நவம்பர் 23

***வழியிலே அவர் நதியில் குடிப்பார்; ஆகையால் அவர் தமது தலையை எடுப்பார். (சங். 110: 7)***

நம்முடைய மகிமையுள்ள கர்த்தருக்கு அவர் பரலோகத்தி-ருந்து இறங்கி வந்திருந்தாலும் அனுபவங்களின் நதியில் குடிக்கவேண்டிய அவசியமாயிருந்தது; பாடுகளைச் சகிப்பதால் மேன்மையான ஞானம் அடைந்ததன்மூலம் தாம் தேவனிடத்தில் வைத்திருக்கின்ற விசுவாசத்தை மெய்ப்பித்துக் காட்டினார். அவருடைய சரீர அங்கங்களாயிருக்கிறவர்களும் அப்படியே அனுபவங்களின் நதியில் பாடுகளை சகித்து, ஞானம் பெற்று கீழ்ப்படிந்து தங்கள் கர்த்தரோடேகூட மகிமை, சாகாமை, கனம், தெய்வீக சுபாவம் ஆகியவைகளை சுதந்தரித்துக் கொள்ளும் நம்பிக்கையைப் பெற வேண்டும். நமது அருமையான போதகரும் குருவுமாகிய கிறிஸ்து இயேசு அனுபவங்களின் நதியில் குடித்தலும் தலையை எடுத்தலும் நடந்து முடிந்தாயிற்று. ஆனாலும் அந்தச் சம்பவங்கள் நமக்கு முன்பாக வேதாகமத்தில் நமக்குச் சாட்சி பகர நம்முன் வைக்கப்பட்டுள்ளது. அனுபவ நதியின் நீரைப் பருக வேண்டிய வேளை நமக்கு வந்திருக்கிறது. நாம் அந்த ராஜ்யத்திற்கு ஆயத்தமாக வேண்டிய அவசியமான பாடங்களை கற்றுத் தேர்ந்தாக வேண்டிய நேரம் இது. நாம் அனுபவ ஓடையின் தண்ணீரை ருசி பார்த்துவிட்டோம், கொஞ்சம் கீழ்படிதலையும் கற்றுக் கொண்டோம் என்பது போதாது. சில சோதனைகளைத் தாங்கி நாம் வெற்றி கொண்டது போதாது. மேலும் மேலும் தொடர்ந்து இந்த அனுபவ நீரைப் பருகிக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுது தான், பிதாவே, என் சித்தப்படி அல்ல உம்முடைய சித்தப்படியே யாவும் நடக்கட்டும் என்று சந்தோஷத்துடன் சொல்லும் வரை நதியின் நீரை நாம் குடித்தாக வேண்டும். இந்த நதியின் நீரை குடிக்கவில்லையென்றால் வரப்போகும் மகிமையில் நமக்குப் பங்கு இராது. R 2936:1

## நவம்பர் 24

***கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குக் கற்பனையின் மேல் கற்பனையும்.... பிராமணத்தின் மேல் பிரமாணமும்.... (ஏசா. 28:13)***

கிறிஸ்தவ அனுபவம் என்பது தொடர்ந்தேற்றியாக கிறிஸ்துவின் பள்ளியிலே பயிலுவது. தேவஞானம் பற்றியும், நீதியைப் பற்றியும் நம்மைப் பற்றியும் நாம் நாள்தோறும் இதில் கற்கிறோம். நாள்தோறும் இந்தப் பாடங்களைக் கற்றுக் கொள்வது நம்மை நாமே சரிசெய்து கொள்வதற்கும் திருத்திக் கொள்வதற்கும் உதவும். இதன் மூலமாக நாம் எவற்றில் குறைவாயிருக்கிறோம் என்பதையும் நாமே இவ்வளவு குறைகளை வைத்துக் கொண்டு மற்றவர்களை குற்றம் பிடிக்க முயலக்கூடாது என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். நம்மைத் தவிர மற்றவர்களெல்லாரும் பூரணமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. மற்றவர்களிடம் இருக்கின்ற நற்குணங்களை, உயர்ந்த நோக்கத்தை நன்கு மதிக்க வேண்டும். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கப்போகிற மற்ற சகோதரர்களையும், அவர்களுடைய ஐக்கியத்தையும், அன்பையும், சேவையையும் மாபெரும் நோக்கத்தையும் நாம் மதித்து நாமும் அத்தகைய கர்த்தருடைய சரீரமாக பூரணப்படுதவற்கு முயற்சி செய்ய வேண்டும். R 5124:3

## நவம்பர் 25

***கழுகு தன் கூட்டை கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி.... (உபா. 32:11)***

இப்படியாக சிலவேளைகளில் சோதனை, நிந்தை, பரிகாசங்களை தேவன் அனுமதிக்ககூடும். வெளித்தோற்றத்தில் இவைகளால் நாம் மேலான பாக்கியத்தை இழந்து போகக்கூடிய கொடிய நிர்பந்தம் ஏற்படலாம். ஆனாலும் தெய்வ சித்தமில்லாமல் எந்தத் தீங்கும் நம்மை முற்றிலுமாக அழித்துவிட முடியாது. அவரது மேற்பார்வையின் கீழ் கூட்டை கலைத்து, பொறுப்பை நம்மிடம் விட்டுவிடும் போது, அது நமக்கு அநுகூலம் ஆகும்படி செய்து பலத்தையும், உதவியையும் தருகிறார். அப்படியே ஆவிக்குரிய போதனை, தேவதேற்றுதல் மற்றும் அறிவில் வளர சந்தர்ப்பம் கிடைக்கிறது. கூட்டை கலைத்து குஞ்சுகள் தாமாக தங்களை பாதுகாத்துக் கொள்ள வழிவகுக்குமாப்போல, தேவனும் தம்முடைய பிள்ளைகளுக்கு செய்யும் போது, அவரது அருளையும், போதனையையும் பயன்படுத்தி, ஊழியத்தில் அதாவது நீதி, சத்தியம், அன்பு ஆகியவற்றில் மேன்மேலும் ஊக்கம் அடையும் பொழுது சந்தோஷம் உண்டாகும். R 4335:2



## நவம்பர் 26

***அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். (அப். 9:16)***

நான் அவனுக்கு பெரிய காரியங்களை காண்பிப்பேன் என்று சொல்லுகிற கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தம் துன்பப்பட வேண்டும் என்று சொல்லுகின்றார். தேவ வழியில் நடக்கிறவர்களுக்கு அல்லாமல் யாருக்குத் துன்பம்? இவ்வுலகில் துன்பம் உண்டு என்று சொல்-யே கர்த்தர் தன்னுடைய சீடர்களை அழைத்தார். நாமும் அதுபோலவே அவரோடு கூட துன்பம் அனுபவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய பூமிக்குரிய யாவற்றையும் நம்மையுமே அவருக்கு ப-யாகச் செலுத்த வேண்டும். அவரோடு கூட சிலுவை சுமப்பது என்பது இதுவே. இப்படிப் பாடுகளில் பங்கு கொள்வதன் மூலமே நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ரூபகாரப்படுத்துவதாகும். இந்த அனுபவங்களால் நம்முடைய இருதயம், எண்ணம் யாவும் தேவனுடைய பிரியமான குமாரனுடைய சாயலுக்கு ஒத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசத்தின் காரணமாக மீட்பருடைய ராஜ்யத்தில் அவரோடு கூட உடன் சுதந்தரராகும் பரிசைப் பெறலாம். இந்த உரிமையைப் பெற வேறு எந்த வழிமுறையும் கிடையாது. எந்த அளவு நம்முடைய மாம்சத்திலே கிறிஸ்துவின் அச்சடையாளங்களை (பாடுகளை)பெற்றிருக்கிறோமோ அந்த அளவு மகிமையிலே பங்கு பெறுவோம். அவருடைய சரீரத்தின் அங்கமாவோம். "என்னுடைய நாமத்தினிமித்தமாக" என்று சொல்வதிலே ஆழமான பொருள் இருக்கிறது. அது தெய்வ திட்டத்தில் தொடர்புடையதாயிருக்கிறது. அதன் மெய்ப்பொருளாக மேசியாவாகிய கிறிஸ்து இருக்கிறார். அந்த ஒரே நாமத்தில் சத்தியமிருக்கிறது. அந்த சத்தியத்தினிமித்தமாக பாடுகள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. கிறிஸ்துவின் நாமம் தரிப்பிக்கப்படட சகோதரர் அதில் அடங்குவர். அவரது நாமத்தின் கீழ் அவர்கள் அவரது சரீரத்தின் அங்கம். ஆயிரவருட அரசாட்சியின் பணி முழுவதையும் அது குறிக்கின்றது. ஏனெனில் அவரே எல்லாருக்கும் தலையாகவும் அவருடைய நாமமும் மகிமையும் எல்லாரோடும் சம்பந்தப்பட்டிக்கிறது. ஆகவே நாமும் நேரிடையாகவோ

வேறுவிதமாகவோ வருகின்ற உபத்திரவங்களையும் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளும் பொழுது, நம்முடைய விசுவாசத்திற்கு சாட்சி பகர்கின்றவர்களாகி அந்த விலையேறப் பெற்ற நாமத்திற்கு நெருங்கி சொந்தமும் தொடர்புடையவர்களும் ஆவோம். R 4356:4

## நவம்பர் 27

***ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். (அப். 20:28)***

ஒவ்வொரு மூப்பரும் தங்கள் மந்தையைக் குறித்து விசேஷ கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் மிக முக்கியமாகவும் அதிகமாகவும் நேசிக்கப்படுகின்றவர்களுக்கு மிக அதிகமாகச் சோதனை உண்டாகும். எனவே, அப்போஸ்தலன் சொல்கிறார். “என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.” அதைப்போலவே சுயநலமற்று இருதயத்தில் தூய்மையாயிருக்கின்ற மூப்பர்களுக்கு அவர்கள் எல்லா மனித குலத்திற்கும் அன்பையும் நல்லெண்ணத்தையும் கொண்டிருப்பதோடு ஆவியின் கனிகளாகிய அருங்குணங்களால் நிரம்பியிருக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் மந்தையைக் குறித்து சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். மந்தை முழுவதும் கர்த்தருடையது. கர்த்தர் உங்களை பொறுப்பாக வைத்ததினால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றியாக வேண்டும். அவர்களைக் குறித்த ஒவ்வொரு காரியங்களையும் கண்காணிக்க வேண்டும். ஏனெனில், பிரதான மேய்ப்பருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.இவையெல்லாவற்றையும் அன்பின் அடிப்படையில் அவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆவியை விருத்தி செய்யத்தக்கதாக கவனம் செலுத்த வேண்டும். ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் அவர்கள் பங்கு அடையத்தக்கதாக நடத்த வேண்டும். தீங்கு நாளில் ஏற்படும் துயரங்களால் துவண்டு விடாமல் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றையும் செய்து முடித்தவர்களாக நிற்கத்தக்கதாகவும் அவருடைய சரீரத்தின் அங்கமாகவும் உடன்ப- செலுத்துகிறவர்களாகவும், உடன் சுதந்தரராகவும் அவர்கள் ஆகும்படி நடத்த வேண்டும். R 4346:5



## நவம்பர் 28

**தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. *(1 யோவா. 1:5)***

வேதாகமம் தேவன் வெளிச்சமாயிருக்கிறார் என்று அறிவிக்கிறது. ஆசாரிப்புக் கூடாரத்தில் கிருபாசனத்தின் மேல் பிரகாசமாய்த் தோன்றிய ஒளியையே மகிமையுள்ள செக்கினா ஒளி என்று அழைத்தார்கள். நமது கர்த்தராகிய இயேசுவும் பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தால் நிரப்பப்பட்டு “மெய்யான ஒளி” என்று அழைக்கப்பட்டார். அவரே தம்மைப் பின்பற்றுகிறவர்களை நோக்கி, “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.... மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தி-ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பிரகாசிக்கக்கடவது” என்றார். இப்படியே பெந்தெகொஸ்தே நாளிலே தெய்வீக வல்லமையானது பிரிந்திருக்கிற அக்கினி நாவுகள் போல காணப்பட்டது. அதுபோலவே வேதத்தி-ருந்து புறப்படுகிற கர்த்தருடைய ஆவியும் விளக்கி-ருந்து சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற தீபமாக காண்பிக்கப்படுகிறது. சங்கீதத்தில் உம்முடைய வேதம் என் கால்களுக்கு வெளிச்சமும் பாதைக்கு பிரகாசமுமாயிருக்கிறது என்று வாசிக்கின்றோம். பரிசுத்த அன்பின் ஜூவாலையானது கிருபையின் வசனங்களால் பிதாவின் ஆவியையும் குமாரனின் ஆவியையும் நம்முடைய இருதயத்தில் சுடர்விடச் செய்கிறது. சத்தியத்தோடு இந்த தீபத்தை நாம் எவ்வளவாக நமக்குள் வளர்க்கிறோமோ அவ்வளவாய் கர்த்தரின் ஆவி நமக்குள் தங்கித்தரித்து எரிந்து பிரகாசித்து உலகுக்கு ஒளியாய் இருக்கும். R 4419:4

## நவம்பர் 29

***மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். (வெளி 1:18)***

சுவிசேஷத்திலே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் காட்டிலும் முக்கியமான பாடமில்லை. இயேசுவின் மரணத்தில் இயேசுவின் அன்பையும் நம்மீது பிதா கொண்டுள்ள அன்பையும் சாட்சியாக அறிகின்றோம். ஆனால் தெய்வீக திட்டத்திலே ஒவ்வொரு மனிதரும் தனக்குரிய நல்ல பங்கை

பெற்றுக் கொள்ள மரித்த இயேசு மரித்தோரிடமிருந்து எழுந்தாக வேண்டும். அதன்மூலம் அவர் நமக்கு மீட்பராகவும் இரட்சணியத் தளபதியாகவும் ஆகவேண்டும். மரித்த கிறிஸ்து நமக்கு இரட்சகராக இருக்க முடியாது. "நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்." *(யோவா. 14:19)* வேதாகமம் வெளிப்படுத்துகிறபடி ஆயிரவருட அரசாட்சியின் உயிர்த்தெழுத-ன் காலையில் நாம் வருகிறபடியால் நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி கர்த்தர் அனைவருடைய கண்ணீரையும் துடைப்பார் என்கிற வாக்குத்தத்தம் அதி-ருந்து நிறைவேறும். R 4174:2; 4175:2

## நவம்பர் 30

**தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்..... உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். *(எபி. 10:21,22)***

தேவனுடைய பிள்ளையானவன் தேவனுக்கு சமீபமாயிருக்கவும் தொடர்ந்து அவரது ஆசீர்வாதத்தைப் பெறவும் வேண்டுமானால், தேவனுக்கும் மனிதருக்கும் தீமை செய்யாத மனதைத் தேடவேண்டும். அதாவது மனப்பூர்வமாக தேவனுக்குப் பிரியமானதை செய்கிறேன், நான் செய்து கொண்ட ப-யின் உடன்படிக்கைக்கு இசைவாக இது இருக்கிறது என்று கூறும்படி செய்ய வேண்டும். மேலும் நீதிமான்கள் அங்கீகரிக்கக் கூடியதையே செய்கிறேன் என்று கூறும்படி இருக்க வேண்டும். இதற்கு குறைவானது எதுவும் கிறிஸ்துவோடு ஊழியம் செய்யவும் ராஜரீக ஆசாரிய அங்கமாகவும் அர்ப்பணம் செய்தவர்களுக்கு போதுமானதாக இருக்காது. இந்த நல்ல பணியை நம்மில் தோற்றுவித்தவர் என்றும் மாறாதவர் என்பதை நாம் மறக்கக்கூடாது. நமது இருதயங்களை அவருக்கு நேராக்கி, நம்முடைய விசுவாசம் இன்னும் உறுதிப்பட்டு நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட செய்யப்பட்ட மாபெரும் ஒப்புரவாகுத-ல் தெளிவடைந்து நாம் அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை இடைவிடாமல் புதுப்பித்து, நமக்குரிய எல்லாவற்றையும் நமது இஷ்டப்படியல்ல, அவரது சித்தத்தின்படியே ஒப்புக் கொடுப்போமேயானால், தொடங்கிய நல்ல பணி நம்மில் நிறைவேறும் என்று நம்பலாம்.



நம்முடைய ஆண்டவரின் நித்திய ராஜ்யத்தில் சந்தோஷத்துடன் பிரவேசிப்போம். "உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே, நல்லது" என்று அவரது ஆசீர்வாதமான வார்த்தைகளைக் கேட்போம். R 5425:2, 5

## டிசம்பர் 1

**அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். *(யோவா. 19:26,27)***

நமது கர்த்தர் தாம் பாடுகள் பட்டு தம்மைப் பற்றியே எண்ண வேண்டிய நேரத்திலும் கூட மற்றவர்களைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார். அவர் தம்முடைய ஊழியத்தில் நன்மை செய்கின்றவராகவே சுற்றித் திரிந்தார். மரிக்கும் வேளையிலும் மற்றவர்கள் நலனையே எண்ணி மற்றவர்களுக்கு மிகுந்த நன்மையைச் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பதை அவர் தாம் மரிக்கும் முன்னர் தன் தாயைப் பார்த்து, இதோ உன் குமாரன், உன்னைப் பார்த்துக் கொள்வான் என்று மரியாளிடத்திலும் இதோ உன் தாயைப் போல் பாதுகாத்திடு என்று யோவானிடத்திலும் கூறினதி-ருந்து அறிகிறோம். இது எவ்வளவு அழகிய பாடம். நமது கர்த்தருடைய விரிந்து பரந்த இருதயத்தையும் தாம் மரிக்கப்போனாலும் மற்ற ஒவ்வொருவருக்கும் உரியக் கடமைகளை எண்ணிச் செய்தது போல நாமும் நம்முடைய துன்பத்துயரங்களையே பெரிதாக எண்ணிவிடாமல் ஒவ்வொருவரும் நாம் பெறும் இந்த ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும் வண்ணமாக ஒவ்வொருவருக்கும் உரிய சரீரத்துக்குரிய உதவிகளையும் ஆவிக்குரிய உதவிகளையும் செய்து கர்த்தரைப் போலவே நாமும் எல்லாருக்கும் எல்லாமாக இருந்து சேவை செய்யவே இதனால் உணர்த்தப்படுகிறோம். R 4173:1

## டிசம்பர் 2

**....ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். *(எபே. 2:18)***

நாம் அடிக்கடி கிருபாசனத்தண்டையில் சேராவிட்டால் நாம் வழிவிலகி எங்கோ சென்றுவிட நேரிடும். அந்த மாபெரும் தெய்வீக

சுனையை நெருங்காமல் இருப்போமேயானால் தேவ ஆவியில் நிரப்பப்பட்டவர்களாக இருக்க முடியாது. நம்முடைய பாதுகாப்பும் அற்றுப் போய்விடும். நாள்தோறும் நாம் பூமிக்குரிய மண்பானையாய் இருக்கிறோம் என்பதை உணர்ந்து தெய்வீகச் சுனையண்டை சென்று திருவசனமாகிய தண்ணீரால் நிரப்பிக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் ஒழுகுகிற பானைகளாய் இருக்கிறோம். நாம் விரும்புகிற வேகத்திற்கு தெய்வ நெறியில் வளரவில்லையே என்பதால் உடனே தோல்வி மனப்பான்மைக்கு வந்துவிடக்கூடாது. எந்தப் புய-லும் விழாமல் நிற்கக்கூடிய பெரும் மரங்கள் ஒரே நாளில் அந்த வளர்ச்சியை அடையவில்லை. மாறாக அரும்பாக, செடியாக, கொடியாக பல ஆண்டுகள் கழித்தே அவை பருமனடைந்து பலமடைந்து உறுதியானது போல நாமும் தெய்வ சந்நிதியில் படிப்படியாக வளர்ந்து பலப்பட்டாக வேண்டும். R 5912:5

## டிசம்பர் 3

***சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். (பி-. 1:15)***

நம்முடைய சுயமகிமைக்காக, பெருமைக்காக நாம் சத்திய ஊழியம் செய்வதாக நினைத்துக் கொள்ளக்கூடாது. மாறாக சத்தியத்தின் மேல் உள்ள வாஞ்சையால், கர்த்தர் மேல் உள்ள வாஞ்சையால், கர்த்தருடைய ஜனங்களாகிய சகோதரர் மேல் உள்ள வாஞ்சையால் நற்செய்தியை சொல்லுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். அன்பின் ஆவியினால் நோக்கத்தினால் உந்தப்பட்டு செய்கின்ற எந்தக் காரியமும் எந்த அன்பையும் பொறுமையையும், பெருந்தன்மையையும், தாழ்மையையும் எல்லா உடன் ஊழியக்காரரிடமும் காண்பிக்கச் செய்யும். “நாம் எல்லாரிடத்திலும், சாந்தமுள்ளவர்களாக” இருப்போமாக. “தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை” எடுத்துக் கொள்வோமாக. அது இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுத்துவிடும். R 4803:5

## டிசம்பர் 4

***தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். (1 கொரி. 3:17)***

கர்த்தருடைய சபையாகிய தேவாலயத்தை கட்டுகிறதில் உள்ள பாடம் என்னவென்றால் நாம் அந்த ஆலயமாக இருக்க வேண்டுமானால் உலகப்பிரகாரமான மனுஷனையும் உலகப்பிரகாரமாக முறைகளையும் உலகப்பிரகாரமான ஞானத்தையும் தள்ளிவிட வேண்டும். ஜீவனுள்ள கற்களாக இருக்கவேண்டியவர்கள் மகாப்பெரிய சிற்பாசாரியாகிய கர்த்தருடைய கண்காணிப்பில் செதுக்கப்பட்டு மெருகேற்றப்பட்டு தயார்பண்ணப்படவேண்டும். இருதய விருத்தசேதனம் பண்ணப்பட்டு மெய்யான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக இருக்க வேண்டிய ஒவ்வொருவரும் இவ்விதமாய் சத்தியத்தினாலே சுத்திகரிக்கப்பட்டவர்களாயிருப்பது அவசியம். சிலர், சிலரை நல்லப் பிரசங்கிகள், பொதுமேடைப் பேச்சாளர் என்ற ஒரே காரணத்தினால் தேவ ஊழியம் செய்ய நியமிக்கப்படுவதினால் கர்த்தருடைய நோக்கத்திற்கு பயங்கர தீவினையாய் முடியும். மெய்யான இஸ்ரயேலராய் இருப்பவர்கள், கட்டடம் கட்டும் தலைமை சிற்பியாகிய கிறிஸ்து இயேசுவுக்கு ஒத்த குணநலன்களையுடையவர்களாய் எல்லா விதத்திலேயும் தங்களை வெட்கப்படாத ஊழியக்காரரென நிரூபிக்க வேண்டும். சத்திய வசனத்தை நிதானமாக பகுத்துப் போதிக்கிறவர்களாயிருக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் வேதத்திற்கு இசைந்திருக்க வேண்டும். R 2512:5



## டிசம்பர் 5

***ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. (2 பேது. 1:10)***

கிறிஸ்துவின் நீதியால் வரும் பலன்களை நாம் ஏற்றுக்கொண்டு அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறபடி அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் விசுவாசத்தோடே தைரியத்தையும், ஞானத்தையும், பொறுமையையும், தேவபக்தியையும், சகோதர சிநேகத்தையும் கூட்டி வழங்குவதால் நாம் பூரணராக முடியாது. நம்முடைய அநுதின குறைவிலும் மீறுத-லும் கிறிஸ்துவின் நீதியினால் மூடிக் கொள்ள வேண்டும். நம்மேல் சாட்டப்பட்ட கிறிஸ்துவின் நீதியுடன் நமது விசுவாசம் வளர்ந்து பெருகினால் நாம்

இடறிவிழமாட்டோம். நம்மால் முடிந்ததெல்லாம் செய்தாலும் நாம் பிரயோஜனமற்ற ஊழியக்காரனாயிருக்கிறோம். நம்முடைய சுயநீதியை நாம் நம்பாமல் கிறிஸ்துவின் நீதியாகிய சால்வையைப் போர்த்தியவர்களாக இருக்க வேண்டியது அவசியம். நாம் ஜாக்கிரதையோடு இவைகளையெல்லாம் செய்வோமேயானால் நாம் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடையலாம். "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லையே." ஜாக்கிரதையாயிருந்து இவைகளையெல்லாம் செய்வதன் மூலம் நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்வோமாக. R 2155:6

## டிசம்பர் 6

***நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். (கொலோ. 3:23,24)***

கிறிஸ்தவ மத அடிப்படைக் கொள்கைகள் இந்த வரிகளில் அஸ்திபாரமாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இது உலகில் நடப்பதற்கு நேர்மாறாய் இருக்கிறது. சபையில் மிக அதிகமாய் ஊழியம் செய்கின்றவர்களே சபையில் பெரியவர்களாக இருக்கிறார்கள். நமக்காக தமது ஜீவனையே கொடுத்த சபையின் தலையாகிய நமது ஆண்டவரே சபையின் மகாபெரிய ஊழியக்காரர். அவரது பார்வையில் பெரியவர்களாக இருக்க விரும்பினால் நாமும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி பார்வைக்கு ஊழியம் செய்யாமல் தேவனுக்கு பயப்படுகிறவர்களாய் கபடற்ற இருதயத்தோடே ஊழியம் செய்ய வேண்டும். நமது கர்த்தரின் ப-யை நாம் கண்டோம். அது நம்மை விலைக்கிரயமாக வாங்குவதற்கு கொடுத்த ப-. அந்த செய்கை வெறும் பேச்சே அல்ல. அதே போல நாமும் சகோதரர்களை வெறும் வார்த்தையினால் சிநேகிக்காமல் முழுமனதோடு மனப்பூர்வமாக சிநேகிக்க வேண்டும். "கிரியைகளினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்." R 2343:5



## டிசம்பர் 7

***பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களி-ருந்து பேசுகிறவர். (மத். 10:20)***

கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டு பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டு, குமாரன் நிலைமையில் உள்ளவர்களே தேவச்செய்தியை பிரசிங்கிக்க நியமிக்கப்பட்டவர்கள். உலகிலுள்ள எல்லாக் கண்காணிகளும் அவர்கள் செய்யும் சடங்காச்சாரங்களும் எந்த மனுஷனையும் தேவன் நாமத்தில் பேசும்படி செய்யமுடியாது. நமது கர்த்தராகிய இயேசு கூட தேவனிடத்தில் இந்த அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வரையில் அதாவது முப்பது வயது வரை தன்னுடைய ஊழியத்தை துவக்கவில்லை. அவர் ஞானஸ்நானம் பண்ணி பிரதிஷ்டைக்குட்படும் பொழுது பரிசுத்த ஆவியினால் நிறைந்து தேவ அங்கீகாரம் பெற்று சிறுமைப்பட்டவர்களுக்கு நற்செய்தியைக் கூறவும், இதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயங்கட்டுதலையும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கூறவும் துயரப்பட்டவர்களுக்கு ஆறுதலைக் கூறவும் கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைக் கூறவும் அபிஷேகம் பெற்றார். இந்த பரிசுத்த ஆவியை உடையவர்களேயன்றி இதே பரிசுத்த ஆவியின் அதிகாரம் பெற்றவர்களேயன்றி வேறு எவரும் தேவதிட்டத்தை அறிந்துகொள்ள முடியாது. இவர்கள் கேட்கிறதுக்கு காதுள்ள யாவருக்கும் சிறுமைப்பட்டவர்களுக்கும் இருதயம் நொறுங்குண்டவர்களுக்கும் தேவனைத் தேடுகிறவர்களுக்கும் இப்படிப்பட்ட நற்செய்தியை அறிவிப்பார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சபையிலுள்ள பெண்களுக்கு பேசும்படி உத்தரவு இல்லை என்று கூறுவதை வைத்து அவர்களுக்கு பேசவோ போதிக்கவோ அதிகாரமில்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது. பொதுமேடைகளில் பேசாமல் அவர்கள் பெண்களிடையே சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் போதிக்க எந்தத் தடையும் இல்லை. R 5363:2

## டிசம்பர் 8

***அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும், அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத். 5:45)***

இந்த வசனத்தை நாம் வாசிக்கின்ற பொழுது தேவன் அநீதியுள்ளவர்களுக்கும் பாவிகளுக்கும் நன்றியில்லாதவர்களுக்கும் கூட தம்முடைய இரக்கம், கருணை, தயை இவைகளைக் காண்பிக்கின்றார் என்று கூறுகிறது. அதே போல நாமும் நமக்கு வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் எல்லா மனுஷருக்கும் அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும், அன்பு, கருணை, தயை இவைகளைக் காண்பிக்க வேண்டும். தேவபார்வை நம்முடைய இருதயங்களை தொடவேண்டும். இவ்வளவு அன்பான தேவனைப்பற்றி நாம் எவ்வளவாய் படித்து அறிகிறோமே அவ்வளவாய் இந்த தெய்வமே மெய்யான தெய்வம் அன்பான தெய்வம் என்று உணரவேண்டும். மற்ற தெய்வங்களெல்லாம் நம்மைப் போன்ற மனிதர்கள் உண்டாக்கியவைகள். அவைகள் விக்கிரகங்களாய் கற்களால், உலோகங்களால், களிமண்ணால் ஆனவை. அதிக உறுதியான தேவனுடைய வார்த்தையே நன்மையென்று கண்டு நாம் அதில் உறுதியாய்ப்பற்றி நிற்போமாக. இருண்ட யுகத்தில் மனிதர்கள் கற்பித்தக் கற்பனையான தேவசெய்திகளை தள்ளிவிடுவோமாக. நாம் மெய்தேவவழியைத் தெரிந்து கொண்டவர்களாய் அதைக் காத்து நடப்போமேயானால் நம்முடைய போதகரின் வார்த்தையின்படியே நாம் சத்தியத்தை அறிந்தவர்களாவோம். சத்தியத்தால் விடுதலை பெற்றவர்களாவோம். R 5474:5

## <u>டிசம்பர் 9</u>

***உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. (மத். 6:10)***

1900 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஜெபம் செய்யப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகள் இந்த ராஜ்யம் நிறுவப்பட்டதை இன்னும் பார்க்கவில்லை. அப்படியானால் நாம் ஜெபிப்பதை நிறுத்திவிடுவோமா? ஒருக்காலும் கூடாது. அந்த ராஜ்யம் நிச்சயமாய் வருமென்று நாம் விசுவாசிக்கிறோம். இப்பொழுது அது வாசலருகே வந்து இருக்கிறது. தேவனுடைய ராஜ்யம் படிப்படியாக முழுமைபெறும். அப்பொழுது பூமியில் விசுவாசமற்றவர்கள் இல்லாத காலம் வரும். பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும். நாம் ஜெபிப்பதினாலே மட்டும் தேவராஜ்யம் திட்டமிட்ட நேரத்திற்கு முன்பு ஒருநிமிட நேரம் கூட முன்னால் வரமுடியாது. ஆனால் ஜெபத்தின் மூலம் அந்த ராஜ்யத்திற்காக நாம் கொண்டிருக்கிற ஏக்கத்தையும் அவருடைய வாக்குறுதி நிறைவேறுத-ன் நிச்சயத்தையும் நம்முடைய எதிர்பார்க்குதலையும் காண்பிக்கிறோம். இப்படி ஜெபிப்பதில் தேவபிள்ளைகள் தளர்வதில்லை. மாறாகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள். தேவனுடைய மகிமையுள்ள ராஜ்யம் வெளிப்படையாக ஸ்தாபிக்கப்படும். அதுவும் விரைவிலேயே யார், யார் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாயலைப் பெற்றவர்களாய் இருக்கிறார்களோ அவர்களெல்லோரும்கூட உயர்த்தப்பட்டு அவரோடு கூட ஆளும்படி மகிமைப்படுவார்கள். R 5710:4



## <u>டிசம்பர் 10</u>

***கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே. (எபி. 13:6)***

கர்த்தருடைய எளிமையும் சிறுமையுமானவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் எத்தனை தீமைகள் தாக்கினாலும் அமைதியாக இருப்பதைக் கண்டு உலகம் அடிக்கடி ஆச்சரியமடைகிறது. தேவனை மகிமைப்படுத்தி உலகில் ஏற்படும் எந்தச் சோதனை துன்பங்களையும் ஞானமாக தைரியமாகச் சந்தித்து அவருடைய கிருபைகளை பிரசித்தப்படுத்தி நாம் கிறிஸ்தவர்கள், பரலோக ராஜாவின் பிரதிநிதிகள் என்பதை காண்பிக்க வேண்டும். நம்முடைய உபத்திரவங்களையெல்லாம் சந்தோஷ ஆவியினால் ஏற்றுக் கொண்டு நம்முடைய கர்த்தருக்கு ஏற்ற இருதயமுடையவர்களாய் இருப்பதற்கு இந்த உபத்திரவங்கள் அவசியம் என்று உணரவேண்டும். நமக்கு எந்த மனுஷருடைய பயமும் தேவையில்லை. மனித பயம் கண்ணியை வருவிப்பதால் நாம் அதை மேற்கொள்ள வேண்டும். அவரது சித்தமே நமது சித்தம். நம்முடைய சொந்த பலத்தினால் இதையெல்லாம் நிறைவேற்ற முடியாது. ஆனால் தேவபலத்தால் மட்டுமே எல்லாவற்றையும் ஜெயிக்க முடியும். பலவீனமான அழிந்து போகிற மனிதனுக்கல்ல என்றும் இருக்கின்றவராகவே இருக்கின்ற ஜீவனுள்ள தேவனுக்கே பயப்படும்படி போதிக்கப்பட்டிருக்கிறோம்.

நீதிமான்கள் சிங்கத்தைப் போல தைரியமுள்ளவர்களாயும், ஆட்டைப் போல அடக்கமுள்ளவர்களாயும், புறாவைப் போல் கபடமற்றவர்களாயும் இருப்பார்கள். இந்த அடக்கமும், கபடற்ற தன்மையும் தைரியமும், சாந்தமும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் அவசியம் இருக்கவேண்டிய குணலட்சணங்கள். R 5540:5

## டிசம்பர் 11

***நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்கு கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே என் பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறது. (யோவா. 5:36)***

நமது கர்த்தர் செய்த அற்புத அடையாளங்கள் அவர் யார் என்பதை ரூபகாரப்படுத்த போதுமானவை. அதற்காக மட்டும் அவை செய்யப்பட்டன. திருச்சபையையும் உலகையும் குணமாக்கும் அற்புதத்திற்கு முன்னோடியல்ல. கர்த்தர் எல்லோருக்கும் சுகமளிக்கும் காலமுண்டு. அது "திரும்ப கொடுத்த-ன் காலம்" என்று வேதாகமம் வரையறுக்கிறது. அந்தக் காலம் வரும்போது, ஆயிரவருட அரசாட்சி அமைக்கப்படும்போது எல்லாத் தேசங்களையும் குணப்படுத்துவதே மாபெரும் பணியாக இருக்கும். அது வெறும் சரீர சுகமட்டுமல்ல மனமும், குணமும் கூட சுகமடையும். ஏதெனில் இழந்த நன்மைகளை எல்லாம் திரும்பப்பெற்று அனுபவமும் அறிவும் ஆற்றலும் அதிக வளர்ச்சியடையும். R 3495:5

## டிசம்பர் 12

***கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். (நீதி. 3:3)***

சத்தியம், நீதி போன்ற பிரதான குணங்களை தன் மனதில் ஆழமாக யார் பதிக்கிறார்களோ அவர்களே நீதிமான்கள். அவர்களிடம் சத்தியம், தூய்மை, நன்மை நிறைந்து காணப்படும். எல்லா அடக்கத்துடனும் இருப்பார்கள். இத்தகைய குணங்கள் இருப்பது மாத்திரம் போதாது. இவைகளுக்கு மேலாக இரக்கத்தையும் விருத்திசெய்ய வேண்டும். இவைகளை நம் கழுத்தை சுற்றி ஆபரணமாக அணிந்திருக்க வேண்டும். ஆபரணங்கள் எப்படி அலங்கரிப்பாயிருக்கிறதோ அவ்வளவாய் இரக்கமும் ஒரு பிரதான இடம் பெற வேண்டும். அப்போது தேவனுக்கு மிக ஏற்புடையவர்களாகக் காணப்படுவோம். ஆபரணங்களுக்கு கழுத்து எப்படி ஏற்புடையதாய் இருக்கிறதோ அதற்கு ஒப்பாக பெருந்தன்மையான இந்த குணலட்சணங்கள் மிகுந்து காணப்படும். நம் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த நல்ல குணங்களை நாம் இடைவிடாமல் அணிந்திருக்கிறவர்களாக காணப்பட வேண்டும். உள்ளும் புறமும் இந்த குணங்களே அலங்கரிப்பாய் இருந்தால் நம்மை காண்கிறவர்கள் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை பிரத்தியட்சமாக அறிந்து கொள்வார்கள். நம்மிடத்தே இகழ்ச்சிக்குரிய வேண்டாத குணங்கள் காணப்படக்கூடாது. மாறாக இந்த நற்குணங்களை யாவரும் கண்டு அதற்காக பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தும்படியாக இருக்க வேண்டும். R 5309:2



## டிசம்பர் 13

***நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். (எபே. 5:16)***

நமக்குக் கிடைத்திருக்கும் காலத்தை தேவனுக்கடுத்தக் காரியங்களில் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய அத்தியாவசிய தேவைகள், அன்றாட வாழ்க்கை பிரச்சனைகள், உலகிற்கடுத்தசிந்தனைகள்இவைகளேநம்மைஆட்கொண்டுவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பரத்திற்குரிய ராஜாவின் பரலோகக் காரியங்களை வெகுசிரத்தையாக செய்து முடித்திட புதிய நம்பிக்கையோடு புதிய சிருஷ்டியின் நோக்கமெல்லாம் அந்த ராஜ்யத்தை குறித்ததாகவே இருக்க வேண்டும். இதுவே நம்முடைய மையக்கருத்தாக இருக்குமானால் நமக்கு அதிக நேரம் கிடைக்கும். கிடைத்த நேரத்தை பரலோக ராஜ்யத்திற்குரியக் காரியங்களை படிப்பதற்கும் ஞாபகப்படுத்தி கொள்வதற்கும் நேரம் உண்டாக்கிக் கொள்வோம். நம்முடைய காரியங்களையெல்லாம் உலகப்பிரகாரமான யோசனைகளில் நடத்துவோமானால் தெய்வீக ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நமக்கு நேரமும் இருக்காது. நற்செய்தியை பிறருக்குச் சொல்வது எப்போது? பரத்திற்குரியவைகளுக்காக பூமிக்குரிய எந்த ஆர்வத்தையும் தியாகம் செய்வோம். முன்பு

உலகப்பிரகாரமான காரியங்களுக்காக ஒதுக்கிய நேரத்தையெல்லாம் இப்போது ஆவிக்குரிய பரலோக வாழ்வுக்குரிய நெறியில் செலவிடக்கடவோம். நமது போதகரும் கர்த்தருமான அவரிடத்தில் நாம் நேர்ந்துகொண்ட புதிய சிருஷ்டியின் பிரதிஷ்டையைப் பூர்த்தி செய்ய தேவ சேவையிலும் உடன் ஊழியக்காரர்களான சகோதர சேவையிலும் எந்தத் தியாகத்தையும் செய்ய சித்தமுள்ளவர்களாவோம். நம்முடைய பொக்கிஷம் பாக்கியம் யாவும் பரத்திலுள்ளதால் அதையே மையமாகக் கொண்டு வாழ்வோம். R 4190:2

## டிசம்பர் 14

**அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். *(1 யோவா. 4:18)***

பூரண அன்பிலும், பயபக்தி உண்டு. நம்முடைய மீட்புக்காவது பரலோகத்தின் பிதாவுக்காவது எவ்வித கனவீனமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகுந்த பயமுள்ளவர்களாக இருப்போம். ஆனாலும் சகோதரரிடமோ மற்ற யாரிடமும் காண்பிக்கிற அன்பிலே பயம் இருக்கக்கூடாது. அன்பு பூரணப்பட்டிருக்கும் போது வீண் பயத்தைப் புறம்பே தள்ளும். ஆனாலும், தெய்வீக பயபக்தியைப் பூரண அன்பு புறம்பே தள்ளாது. மாறாக பயபக்தியை அதிகரிக்கச் செய்யும். பூரண அன்பை புறம்பே தள்ளுகின்ற பயமானது அடிமைத்தனமான பயம் அல்லது சாத்தானைக் கண்டோ கர்த்தரைக் கண்டோ பயப்படும் பயம். விழுந்து போன தூதர்களையோ, மனிதர்களையோ கண்டு நாம் அஞ்ச வேண்டுவதில்லை. வேத அறிவு, விசுவாசம், தைரியம் இவைகளைக் கொண்டு உலகம், மாமிசம், சாத்தான் ஆகிய இவைகளை ஜெயங்கொள்ளுகிற நிலைமைக்கு வரும்பொழுது தான் பூரண அன்பைப் பெற முடியும். தேவனுக்கு மிகச்சமீபமாக நெருங்கக் கூடிய தெய்வீக ஏற்பாட்டின்படி ஒவ்வொரு குணங்களையும் பயிற்சி செய்வதின் விளைவாக நாம் மெய்யாகவே தேவனுக்கு சமீபமானோம். தேவனுடைய சர்வவல்லமையினால் அவருடைய கிருபையுள்ள நோக்கங்களுக்கு உட்பட்டு மெய்யாக தேவசாயல் பெற்று நன்றியுள்ளவர்களாகவும் நன்மை பெற்றவர்களாகவும் ஆகக்கடவோம். R 4379:1



## டிசம்பர் 15

**கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும், எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். *(2 கொரி. 4:10)***

இவ்விடத்தில் பவுல் அப்போஸ்தலன் மனித சரீரத்தைக் குறித்துச் சொல்வது என்னவென்றால், இந்த சரீரம் புதிய சிருஷ்டிக்கு சொந்தமாயிற்று. உலக ஜனங்களில் இரண்டு விதமான சுபாவம் இருப்பதில்லை. ஒரே சிருஷ்டியாய் இருப்பார்கள். ஆனால் புதிய சிருஷ்டியோ பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டதாயிருக்கும். பழைய சரீரம் துன்பப்படும், புதிய சிருஷ்டியோ சந்தோஷப்பட்டு களிகூறும், அன்றாடம் படுகின்ற உபத்திரவங்களுக்கு தேவனுக்கு நன்றி கூறும். ஏனெனில் இந்த உபத்திரவங்களால் மட்டுமே திவ்விய, அருமையான, “நித்திய கனமகிமையை” பெறமுடியும். இப்படியாக கிறிஸ்துவின் வாழ்க்கை நமது மூலமாக சகோதரர்கள் மத்தியிலும், உலகத்தின் மத்தியிலும் பிரசித்தமாக வெளிப்பட வேண்டும். இந்த உலகம் எதையும் அறியாது. அதனால் இப்படிப்பட்ட உபத்திரவத்தின் மத்தியில் நாங்கள் இருந்தால் மகா கஷ்டப்படுவோம். நீங்கள் எப்படி சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்று கேட்கும். எனவே நமது புது நிலைமையை உலகம் அறியாது, உணராது, பாராட்டமுடியாது. ஒரு புதிய ஜீவியம் நமக்கு உண்டு. இந்தப் புதிய ஜீவியத்தை மனதார விரும்புகிற யாவரும் தேவ அறிவிலும், தேவ கிருபையிலும் நாளும் வளர வேண்டும். நம்முடைய சரீரத்திலும் நம்முடைய குணங்களிலும் அதிக அதிகமாக கர்த்தருடைய ஜீவியத்தைக் கடைபிடிக்க வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் கர்த்தருடைய ஆவியை உடையவர்களாய் கர்த்தருடைய பணியை அதிக அதிகமாக செய்பவர்களாவோம்; படிப்படியாக இயேசு கிறிஸ்து போலவே மாறி மகிமையின் மேல் மகிமையடைந்து புதிய சிருஷ்டியின் நிலைமையில் பூரணப்பட்டு தெய்வ மகிமையின் பரிசைப் பெறுவோம். R 5671:6

## டிசம்பர் 16

**நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். *(யோவா. 10:11)***

நமது கர்த்தர் நமது ஜீவனை தானே மனமுவந்து கொடுப்பதை அனைவரும் அறிந்திருக்க வேண்டுமென்று விரும்பினார். குறிப்பாக அவருடைய சீடர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். கர்த்தரை அவர்கள் வெகுவாக புகழ வேண்டும் என்று விரும்பவில்லை. மாறாக அவருடைய தியாகப-யின் மூலமாக பாவம், சாபம் ஆகிய தீமைகளி-ருந்து ஆதாமையும், மனுக்குலத்தையும் மீட்டார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்றிருந்தார். அவரில் விசுவாசம் வைக்க அவருடைய சீடர்கள் அவருடைய உயிர்த்தெழுத-லும் விசுவாசம் வைக்க வேண்டும். பிதா தம்முடைய குமாரனுடைய ப-யை ஏற்று அங்கீகரித்து உயிர்த்தெழுப்புவதற்குரிய அதிகாரத்தையும், வல்லமையும் அவருக்கு அளித்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தம்முடைய உயிர்த்தெழுதல் வரை சர்வவல்லமையும் அதிகாரங்களும் பிதாவினுடையவை என்றே கூறினார். அவர் பிதாவின் சித்தத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிந்தார். அப்படி கீழ்படிகிறதாலே மந்தைகளுக்காகத் தன்னுடைய ஜீவனையும் கொடுக்கக் கூட முடிந்தது. அவருடைய அடிச்சுவட்டில் நடக்கிறவர்கள் யாவருக்கும் மேலான பாக்கியங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஜீவனை கொடுப்பதில் நம்பிக்கை உள்ளவர்களாய் நாம் இருக்க வேண்டுமென்றால் பிதாவிலும் அவருடைய இரட்சிப்பிலும் திட்டத்திலும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனெனில் அது கிறிஸ்துவின் ப-யில் ஆதாரப்பட்டிருக்கிறது. இந்தத் தெளிவான சிந்தனை தொடர்ந்து நமது மனதில் இருக்குமேயானால் நமக்கு தேவையான ஒவ்வொரு சமயத்திலும் தேவதயவும், தேவபலமும் உதவியும் கிடைக்கும். R 3528:6

## டிசம்பர் 17

***மூன்று படைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து, தீவட்டிகளைத் தங்கள் இடதுகைகளிலும் ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று சத்தமிட்டார்கள்.*** *(நியாயா. 7:20)*

தீமை பெருகி இருக்கின்ற இக்காலத்தில் நமது இரட்சிப்பின் தளபதியாக இருக்கிற கர்த்தர் தாம் தெரிந்துகொண்டவர்களுக்கு விசேஷமான போதனையை அளிக்கின்றார். ஒவ்வொருவரும் நம்முடைய மீட்பின் தளபதியாகிய கர்த்தரையே முன்மாதிரியாக பின்பற்ற வேண்டும். முதலாவது எக்காளமாகிய சத்தியத்தை அவர் முழங்குவார். ஆவியின் பட்டயமாகிய சத்தியம் யோகோவாவிடமிருந்தும் அவருடைய நேசகுமாரனாகிய கிறிஸ்துவிடமிருந்தும் புறப்படும் என்று முழங்குவார்கள். இரண்டாவதாகத் தங்களுடைய பானைகளை உடைத்துவிட்டு தீபத்தை பிரகாசிக்கச் செய்வார்கள். இந்தப் பானை பூமிக்குரிய இந்த உடலைக் குறிக்கும். இந்தப் பானையை உடைப்பதினால் உள்ளிருக்கின்ற வெளிச்சம் பிரகாரமாகத் தெரியும். “சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவப-யாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். புத்தியுள்ள ஆராதனை இதுவே” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். நம்முடைய தலையாகிய கிறிஸ்து எப்படி பூமிக்குரிய சரீரத்தை உடைத்துப் போட்டு வெளிச்சத்தைக் கொண்டுவந்தாரோ அதுபோல நாமும் நம்முடைய சரீரத்தை ஜீவனை சகோதரர்களுக்காக தயங்காமல் தத்தம் செய்யும் பொழுது நாம் அவரை மெய்யாகவே பின்பற்றுகிறவர்களாவோம். எக்காளம் முழங்கிக் கொண்டே இருக்க வேண்டும். ஆவியின் பட்டயத்தை ஏந்திக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய விரோதிகளெல்லாம் கதிகலங்கிப் போவார்கள். விளைவோ வெற்றியாக இருக்கும். R 4083:5

## டிசம்பர் 18

***கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுவார்.*** *(சங். 145:20)*

தேவவழியில் நடக்கின்றவர்களுக்கு ஒவ்வொரு நன்மைகளும் தெய்வாதீனமாக ஏற்படும்பொழுது நம்முடைய விசுவாசம் உறுதிப்படுகின்றது. நாம் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகள் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. நாம் பாவிகளாயிருக்கும் போதே தம்முடைய குமாரனை நமக்கு ப-யாக கொடுத்தார். இன்னும் அவர் நம்மேல் அன்பு கூர்ந்து நாம் பாவிகளும் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் அவரோடே கூட உடன்படிக்கை செய்து நமது

இரட்சகரின் அடிச்சுவட்டில் நடக்கும்படி செய்திருக்கிறார். மாம்சீக இஸ்ரயேலர்களோடே தேவ நடத்துதல் தேவ பராமரிப்பு எவ்வளவாய் இருந்ததோ அதைக் காட்டிலும் ஆவியின் இஸ்ரலேயர்களுக்கு அதிகமதிகமான பாதுகாப்பு பராமரிப்பு உண்டாகும். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பவர்களுக்கு உடன்படிக்கையின்படி தேவதயவு நிச்சயமுண்டு. இதற்கு இசைவாகவே நமது வசனம் இருக்கிறது. “கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுவார்.” முழு உலகமும் கெட்டுப்போகக்கூடாதென்று எல்லா மனுஷரும் ஏற்ற வேளையில் மீட்கப்படும் பொருட்டு தம்முடைய குமாரனையே தந்தளித்த தேவன் தம்முடைய குமாரர்களாக இருக்கப் போகிற ஆவியின் இஸ்ரயேலரை தன்னுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற்ற இருப்பதால் இந்த சுவிசேஷ காலத்திலேயே அவர்களுக்கு தெய்வீக ஆசீர்வாதங்களை பொழிந்தருள்கிறார். இந்த ஆசீர்வாதங்களைப் பெறுகிறவர்கள், கிறிஸ்துவின் சரீரமாகப் போகிறவர்கள் மணவாட்டியாக இருக்கப்போகிறவர்கள். தங்களைக் காட்டிலும் தங்கள் பிள்ளைகள், பெற்றோரைக் காட்டிலும், தங்களுடைய வீடு, செல்வம் ஆகியவற்றைக் காட்டிலும் தேவனை அதிகமாய் நேசிக்க வேண்டும். தங்கள் இருதயங்களை தேவனுக்கு நேராக இருத்தி சத்தியத்திலும் விசுவாசத்திலும் தங்களை இவ்விதமாக ஒப்புக் கொடுத்தவர்களுக்கு தேவனால் உண்டாகிற எல்லாக் காரியங்களும் இகத்திலும் பரத்திலும் நன்மைக்கேதுவாகவே நடக்கும். R 3658:5

## டிசம்பர் 19

***ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன். (யோவா. 7:37)***

கர்த்தரிடத்தில் வருவதற்கு முன்பாக தாகமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தண்ணீர் எப்படி தாகத்தை தணிக்கின்றதோ அதுபோலவே நித்திய வாழ்வுக்குரிய புத்துணர்ச்சியைப் பெறக்கூடிய வாஞ்சையிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கே கர்த்தர் ஜீவத்தண்ணீரை நித்திய ஜீவனை பொழிந்தருளுகிறார். அடிப்படைக் காரியம் என்னவென்றால் கர்த்தரிடத்தில் வரக்கூடியவர், தான் ஒரு பாவியென்பதையும் கிறிஸ்துவையல்லாமல் எதிர்காலத்திற்கு எந்த நம்பிக்கையும் இல்லை



என்பதையும் கற்றறிந்திருக்க வேண்டும். விசுவாசத்தில் நெருக்கமாயிருக்கிறவர்கள் கர்த்தரை நோக்கி வந்துகொண்டிருப்பவர்கள். இங்கு தாகம் என்பது நமது வாஞ்சையே. தெய்வீக செய்தியையே நாம் உணர்ந்து கொள்வது தண்ணீர் பருகுவதற்கு ஒப்பானது. “உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்” தண்ணீர் என்பது சத்தியமே. நீதியினிமித்தம் பசிதாகமுள்ளவர்களுக்கே இந்த ஆசீர்வாதம். இந்த தாகமுள்ளவர்கள் தாகம் தீர்க்கப்படுவார்கள் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. இந்தப் பாடம் “நான் கொடுக்கும் தண்ணீரைக் (சத்தியத்தை) குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது” என்ற நம் கர்த்தரின் கூற்றுக்கு இசைவாக இருக்கிறது. R 4132:4

## டிசம்பர் 20

***பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள். (பி-. 3:2,3)***

இயல்பாக எந்த மனிதனும்ஆதாமுக்குள் விழுந்து போன நிலைமையில் இருப்பதால் முழு இருதய விருத்தசேதனம் பண்ணப்பட்டவன் அல்ல. அப்படி இருதய விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள் உலகிற்கு மரித்தவர்களாயிருப்பார்கள். உலகின் நம்பிக்கைகள், பேராசைகள், நோக்கங்கள் ஆகியவை அவர்களுக்கு சிலுவையில் அறையப்பட்டிருக்கும், அவர்கள் தேவனுக்கென்று பிழைப்பவர்களாயிருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமையி-ருக்கிற ஒவ்வொருவரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாயும், மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களுக்கு வாரிசுகளாவார்கள் என்பது நிச்சயம். இப்படிப்பட்ட காரியத்தில் பங்குள்ளவர்கள் மரணம் மட்டும் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட சடங்காச்சாரம், கலகம், பிரிவினை ஆவிகளுக்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். தீங்கு நாளில் ஏற்படும் சோதனைகளை ஜெயிக்க ஆவியோடும் உண்மையோடும் தேவனை தொழுது

கொள்ளுபவர்களால் மட்டுமே கூடும். ஏற்கனவே பயங்கர சோதனைகள் சகிப்புத் தன்மையை சோதித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் கடினமானச் சோதனைகள் வரலாம் என்பதை பாவத்திற்கு எதிராக நீங்கள் இன்னும் இரத்தம் சிந்தும்படி போராடவில்லை என்கிற வசனத்தின் மூலம் அறிந்துகொள்கிறோம். இந்தத் தீங்கு நாளில் யாரும் எளிதில் ஜெயித்துவிட முடியாது. எந்தவித நிபந்தனையுமின்றி கர்த்தருக்கென்றேத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்கள் மட்டுமே இந்தத் தீங்கு நாளில் நிலைநிற்க முடியும். இப்படி உடன்படிக்கைக்கு உண்மையாயிருப்பவர்கள் கிறிஸ்து இயேசுவோடு கூட மிகுந்த ஆனந்த சந்தோஷமடையக் காரணமுண்டு. ஏனெனில் விலையேறப்பெற்ற அவருடைய இரத்தத்தால் மீட்கப்பட்டு அவருடைய கிருபையினாலே நிலைநிற்பார்கள்; அந்தக் கிருபையே அவர்களுக்கு போதுமானது. R 1671:4

## டிசம்பர் 21

***நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள். (நீதி. 29:2)***

இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான் இந்த பொல்லாத உலகத்தை ஆளுவதனால் இந்த வசனத்தை மனித அரசாங்கத்திற்கு பயன்படுத்த முடியாது. ஆதாமி-ருந்து வந்த இனமாக இருக்கிறபடியினால், மனித இனம் இயல்பாகவே பலவீனமாக இருப்பதால், வெகு நீதிமான்கள் இருப்பதில்லை. அபூரணமான மாந்தர் ஆளுவதால் இந்த வசனத்தை நிறைவேற்ற முடியாது. ஆனால் வேதாகமம் முழுவதும் சொல்லப்படுகின்ற நீதியுள்ள ராஜ்யம் ஏற்படப்போகிறது. இம்மானுயே-ன் (தேவன் நம்மோடிருக்கிறார்) தேவ ராஜ்யம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியே ஸ்தாபிக்கப்பட்டு பூச்சக்கரத்து குடிகள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படுவர். இந்த நோக்கத்திற்காகத்தான் கர்த்தருடைய ஜனங்கள் இன்னும் “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக” என்று ஜெபித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதற்காகவே அப்போஸ்தலனும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ



வேதனைப்படுகிறது. அதுவல்லாமல் ஆவியின் முதற்பலன்களைப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றோம் என்று எழுதுகிறார். தேவ புத்திரர்களாகிய சிறுமந்தை தங்களுடைய தலையாகிய கர்த்தராகிய இயேசுவோடும் கூட வல்லமை, அதிகாரம், பெற்று படிப்படியாக அந்த நீதியுள்ள ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள். அதற்காகவென்றே தம்மை ஜீவப-யாக கொடுத்து மாபெரும் ஒப்புரவாகுதலை உண்டாக்கினார். இந்த ஆளுகைக்குரிய காலத்தையும் அந்தப் பெரிய ஆளுனரையும் அவரது சரீர அங்கத்தையும் குறித்து, “அவருடைய நாட்களிலே நீதிமான் செழிப்பான்” என்று எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய ராஜ்யத்தின் ஆரம்பத்திலே உலகைக் கெடுத்துக் கொண்டிருக்கிற சாத்தான் இனிமேலும் யாரையும் கெடுக்காவண்ணம் ஆயிரமாண்டுகள் அவனைக் கட்டிப்போடுகிறார். தீமை உலகில் இல்லாமல் நீதிமான்களே மிகுதியாயிருப்பதினால் உலகம் தேவனுடைய மகிமையினாலும் அறிவினாலும் வெளிச்சத்தினாலும் நிறைந்ததாயிருக்கும் அந்த ஆசீர்வாதமான சூழ்நிலையிலே எல்லோரும் இலவசமாய் ஜீவத்தண்ணீரைப் பருகி என்றென்றும் ஜீவனோடிருப்பர். R 3285:5

## டிசம்பர் 22

***ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும். (சங். 51:15)***

முதலாவது தேவன் அவர்களுடைய உதடுகளை அவரது இரக்கத்துடனும் சத்தியத்துடனும் திறக்காவிட்டால், தேவனை துதிக்கவும், இருளி-ருந்து அவரது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைப்பை கொடுக்கவும் யாரும் தங்களது வாய்களை திறக்க இயலாது என்று இந்த வசனம் கூறுகிறது. இல்லையென்றால் மகா சந்தோஷம் தரும் இந்த நற்செய்தியை எல்லா ஜனங்களுக்கும் அறிவிக்கும்படி எப்படி எதிர்பார்க்க முடியும்? யாருடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டனவோ யார் தங்களை முழு மனதோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கையைச் செய்தார்களோ அவர்கள் எல்லாருக்கும் இது பொருந்தும். இவர்கள் தங்களுக்குரிய யாவற்றையும் கர்த்தருக்கென்று அர்ப்பணித்தவர்களாகி கர்த்தரால் வாய் திறக்கப்பட்டவர்களாகி, ஒவ்வொரு மனிதரும் இதே

வாயினால் தேவனுடைய கிருபையும் சத்தியத்தையும் பிரசித்தப்படுத்த வேண்டும். அநேகருக்கு இந்த ஆசீர்வாதங்களை எடுத்துச் சொல்- போதிக்க வேண்டும். இதையே "உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது" என்றும் நமது தேவனை துதிக்கும் புதுப்பாட்டை அவர் வாயிலே கொடுத்தார் என்றும் எழுதியிருக்கிறது. இந்த வாசகங்களெல்லாம் நமது அருமை மணவாளனாகிய கிறிஸ்து இயேசுவுக்கே பொருந்துவதால் அவருடைய மணவாட்டிகளாக, சரீர அங்கமாக மாறுகிற ஒவ்வொருவருக்கும் இதழ்கள் திறக்கப்படுகிறது. அதனாலே கர்த்தரைப் போற்றி துதிக்கவும் அவரோடு தங்களுக்குரிய உறவைப் பற்றி எண்ணி மகிழவும் இடமுண்டாகிறது. R 3255:3

## டிசம்பர் 23

**நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். *(வெளி 3:21)***

தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு ஜெயிக்கவேண்டிய போராட்டங்கள் இன்னும் உண்டு. அவைகளை உலகப்பிரகாரமானப் போர் ஆயுதங்களால் அல்ல, ஆவிக்குரிய போர் ஆயுதங்களால் வாழ்வில் நேரிடும் போராட்டங்களைச் சந்தித்து மேற்கொள்ள வேண்டும். அப்படி ஜெயிக்கிற ஜெயம் தாவீது பெற்ற ஜெயத்துக்கு ஒப்பானதாயிருக்கிறது. தாவீது தன் போராட்ட ஜீவியத்திலே விசுவாசத்தினாலே வெற்றி பெற்றான். அதே அடிப்படையிலே நமது விசுவாசமே போராட்டங்களை ஜெயிக்கின்ற ஜெயம். நம்முடைய போராட்டத்தின் காரணங்களை தேவன் நன்கு அறிவார். இதில் நாம் தேவன் மேல் கொண்டுள்ள விசுவாசத்தினால் போராடுவது தேவ அங்கீகாரம் பெறுவதோடு தேவ அனுக்கிரகமும் கிடைக்கும். அதனால் நாம் பலமும் தைரியமும் அடைகிறோம். அந்த விசுவாசத்தினாலே சிறிய சிறிய பகைவர்கள் மேல் வெற்றி பெறுவதுமில்லாமல் கர்ஜிக்கிற சிங்கமாகிய இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தானையும் நாம் வெற்றி கொள்ள முடியும். R 5662:4

## டிசம்பர் 24

**இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். *(லூக்.2:10)***



தேவனின் மீட்கும் அன்பின் சத்தியம் எங்கெல்லாம் செல்கிறதோ அங்கே ஆசீர்வாதத்தையும் கூட எடுத்துச் செல்கின்றது. அநேகர் வேதத்தை அசட்டையாய் கேட்கிறவர்களாய் இருந்தாலும், பலர் வேதத்தைக் கேட்டபடிச் செய்யாதவர்களாயிருந்தாலும், பகுதியாய்க் கேட்டு பகுதியாய்க கீழ்ப்படிகிறவர்களாயிருந்தாலும் எல்லோருக்கும் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது. ஆனாலும் ஆசீர்வாதங்களிலெல்லாம் சிறந்தவற்றை ராஜரீக ஆசாரியக் கூட்டமாகிய தம்முடைய சிறுமந்தைக்கே தருகின்றார். கிறிஸ்துவின் ஈடுப-யில் பங்குபெறுவதும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டு தேவஅழைப்புப் பெற்றவுடனே தேவனுக்கு ஏற்கும் ஜீவப-களாகத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்களுக்கே இந்த ஆசீர்வாதம். தற்காலத்திலேயே கிறிஸ்துவின் பாடுகளுக்கு ஒப்பாகும் பாடுகளில் பங்கு கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படப்போகும் ராஜ்யத்தின் மகிமையை சுதந்தரித்துக் கொள்ள முடியும். இருண்ட யுகங்களின் சத்திய ஆதாரமில்லாத குருட்டு நம்பிக்கைகளை வெறுத்து சத்தியத்திற்கு உட்பட்டவர்களாக கர்த்தருடையப் பாடுகளில் பங்கு கொள்ள முயலவேண்டும். இப்படிப்பட்டவர்களும் அந்த தெய்வ அன்பு மற்றும் தெய்வீக திட்டம் ஆகியவற்றின் நீளம், உயரம், ஆழம் ஆகியவற்றை பகுத்துணர்ந்து இப்போது களிகூருகிறார்கள். முழு உலகமும் ஆயிரவருட அரசாட்சியிலே தேவனுடைய குணங்களில் விருத்தியடைந்து நீதியை நேசித்து பொல்லாப்பை வெறுக்கிற நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும். R 3115:6

## டிசம்பர் 25

**இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். *(லூக். 2:11)***

தெய்வீக அன்பையும் பெருந்தன்மையையும் நாம் வெளிப்படையாக காண்பிக்க வேண்டிய தருணம் இதுவே. தேவஅன்பின் பெருங்கொடையாக மேசியா நமக்கு அருளிச்செய்யப்பட்டார். வரப்போகிற ராஜ்யத்தின் அறிவும் அந்த ராஜ்யத்தில் நமது பங்கும் உலகையே ஆசீர்வதிக்கின்ற ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் இலவசமாய்ப் பெற்றுக் கொண்டவைகளை இலவசமாகவே வழங்குவோம். நமது பரலோக

பிதாவின் குணத்தையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் குணத்தையும் உடையவர்களாக இருக்க முயல்வோம். சிலருக்கு அநேக நன்கொடைகளைக் கொடுக்கக்கூடியச் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். தங்கள் உடன் ஊழியக்காரருக்கு நேரிடையாகவோ மறைமுகமாகவோ தேவ அன்பை பிரதிப-க்கக்கூடிய அநேகக் கொடைகளை கொடுத்துதவி அன்பை நிரூபிக்கலாம். யுகங்களுக்கு அடுத்த தெய்வீகத் திட்டத்தில் ஒவ்வொருவருக்கும் தேவன் அருளிச் செய்த தேவ கிருபையின் ஐசுவரியத்தை அறிந்துகொண்டு அதையே அன்பிற்கு உகந்ததாக நம்முடைய ஜீவியத்தை தேவனுக்குப்பிரியமான சுகந்த ப-யாகச் செலுத்துவோமாக. தேவ அன்பின் இந்தச் செய்தியே நாம் கேட்டவைகளில் மிகுந்த மகத்தானது. மற்ற கொடைகளை நம்முடைய நண்பர்களுக்கு அண்டை அயலாருக்கு நம்மால் நேசிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பதோடு இந்த தெய்வீகச் செய்தியை நாம் கொடுப்பதே மிகச்சிறந்ததாகும்; இந்த தெய்வீக அன்பின் செய்தி உலகிலுள்ள எந்த விலைமதிப்புள்ள முத்து மாணிக்கங்களை விட உயர்ந்தது. தேவனுடைய கொடையாகிய அன்பை நாம் எவரிடம் காட்டுகிறோமோ அவர்களும் அதே அன்பை மற்றவர்களுக்கு காண்பிக்க ஏதுவாகிறது. இரக்கமான வார்த்தை, உருக்கமானப் பார்வை, பொங்கிவருகின்ற இருதயத்தின் அன்பு ஆகிய இவைகள் கொடையாகச் செல்லும் பொழுது விரோதியாகிய சாத்தான், சுயநலம், பாவம் ஆகியவைகளின் ஆட்சி சத்தியத்தினால் வீழ்ச்சியடையும். எனவே நாம் இப்படிப்பட்ட கொடைகளை கிருபையுடனும் சத்தியத்தோடும் கூட வருடத்துக்கு ஒருமுறை மட்டுமல்ல ஒவ்வொரு நாளிலும் காண்பிப்போமாக; சத்துருக்களிடம் மட்டுமல்ல பகைவரிடத்திலும் அன்பு பாராட்டுவோமாக. ஏனெனில் தேவன் தம்முடைய நீதியின் சூரியனை கருணை மழையை நல்லார் பொல்லார் மேல் பொழிவது போல நாமும் விருப்பு, வெறுப்பு அற்று எல்லாரிடமும் கருணை காட்டுவோமாக. R 4298:6

## டிசம்பர் 26

***நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப் போ-ருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை. (சங். 141:5)***



இந்தப் பாடத்தில் சொல்லப்பட்டிருக்கிற நீதிமான்கள் என்பது கர்த்தருடைய பிள்ளைகளையே குறிக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லாம் நன்மைக்காகவே செய்பவர்கள், கடிந்து கொள்ளுதலும் நன்மைக்காகவே செய்பவர்கள். கடிந்து கொள்வதினால் மனந்திரும்பி அதனால் நன்மையடையலாம். சீர்பொருத்தி ஆதரவும் ஆசீர்பெறுவதற்கும் அது ஒருவழியாக இருக்கும். அந்த அன்பினாலே சீர்திருத்தப்பட்டவர்களுக்கு நறுமணம் வீசும் தைலம் பூசியது போ-ருக்கும். அந்த தைலத்தின் மணம் பல மணி நேரம் இருக்கும். இப்படிப்பட்ட சிந்தனை நம் மனக்கண் முன் இருந்தால் இதில் நல்ல பாடம் ஒன்று இருக்கிறது. முதலாவது கர்த்தரே நம்மைச் சீர்த்திருத்துகிறார் என்று எண்ண வேண்டும். நம்மை திருத்திக் கொள்ள நாம் மிகுந்த மனமகிழ்ச்சி கொள்ள வேண்டும். அதே வேளையிலே சீர்திருத்தம் செய்கிறவர்களும் அன்பாக சீர்திருத்தம் செய்ய வேண்டும். காயப்படும் அளவிற்கு கடிந்து கொள்ளல் ஆகாது. எல்லாச் சீர்திருத்தமும் ஒரே நோக்கில் ஆவிக்குரிய மனமகிழ்ச்சியையும் உயர்வையும் தரக்கூடியதாய் இருக்க வேண்டும். R 4977:2

## டிசம்பர் 27

***உங்கள் காரியங்களெல்லம் அன்போடே செய்யப்படக்கடவது. (1 கொரி. 16:14)***

அன்பு, இரக்கம் ஆகியவற்றின் வடிவாகவே தேவன் இருக்கிறார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று வேதவசனங்கள் சாட்சியிடுகின்றன. தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லப்படுகிறவர்களும் கூட இத்தகைய அன்புடைமையால் நேசமுள்ளப் பிள்ளைகளாக இருந்து தேவசாயலைப் பெற்று அபிவிருத்தியடைவார்கள். "அன்பிலே நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" என்று அப். யோவான் கூறுகிறார். புதிய சிருஷ்டிகளாக நாம் வளர்வது அன்பில் எவ்வளவாய்ப் பூரணப்படுகிறோம் என்பதைப் பொறுத்தது. எவ்வளவு அன்பு பெருகுகின்றதோ அவ்வளவாய் தேவசுபாவம் அபிவிருத்தியடைகிறது. அதோடு கூட நம்முடைய நிதானிப்பும் கணிசமாக முன்னேறி சரியாய் நிதானிக்கக் கூடியவர்களாகிறோம்.

கர்த்தருடைய ஆவியில் யார் அபிவிருத்தியடைந்திருக்கின்றார்களோ அவர்கள் தங்களுடைய பழைய நிலைமையைக் காட்டிலும் நல்ல நிதானத்தை அடைவார்கள். நாள் செல்லச் செல்ல மனுக்குலத்தை எவ்வளவு கருணை கண்ணோக்கத்தோடு அணுக வேண்டும் என்று அறிந்து கொள்வார்கள். இந்நிலையைப் பெற பரலோகத்தி-ருந்து வரும் ஞானத்தால் மட்டுமே கூடும். R 5417:2

## டிசம்பர் 28

***நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவா. 1:9)***

கர்த்தர் மனித பலவீனத்தை முன்பாகவே அறிந்திருகின்றார். ஆதிமனிதனின் சரீர பலவீனத்தால் பிறந்த மனுக்குலம் முழுவதும் திரும்பத் திரும்பத் தோல்வியை தழுவக்கூடிய ஒருநிலையில் போய்க்கொண்டிருக்கும் என்பதை உணர்ந்ததால் உடைந்த உள்ளத்தின் மாந்தர் ஊக்கம் பெறவும் "நாம் இரக்கத்தைப்பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், கிருபாசனத்தண்டையில் தைரியமாகச் சேரக்கடவோம்" வாருங்கள், என்று அழைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் நன்கு நினைவில் கொள்ள வேண்டிய வசனம் இதுவே. ஒரு ஆண்டு கழித்து புதிய ஆண்டு வரப்போகின்றது. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய தவறுகளுக்கெல்லாம் மன்னிப்பைக் கேட்டுப்பெற்று ஒவ்வொரு நாளும் ஆக்கப்பூர்வமான பணிகளை செய்து, இன்று நல்ல பணி செய்தேன், கர்த்தர் மகிழ்வார் என்ற நிச்சயத்தைப் பெற்றவர்களாயிருக்க வேண்டும். இதைப்பற்றி அக்கறை இல்லாமல் இருப்போமேயானால் கர்த்தருக்கும் நமக்கும் மத்தியில் மேகம் எழும்பி எல்லாவற்றையும் இழக்கும்படி நேரிடும். வருகிற ஆண்டிலாவது தேவ வாக்குத்தத்தத்தின்படி புதிய வருஷத்தில் புதிய தீவிர தேவப்பணிகளை முழுமனதோடுச் செய்யத் துவங்குவோமாக. தேவமுகப்பிரகாசம், மீட்பரின் முகப்பிரகாசம் இவைகளால் பிரகாசமடைந்து எல்லா ஜாக்கிரதையோடும் வைராக்கியத்தோடும் அவருடைய அடிச்சுவட்டில் நடப்போமாக. R 4932:1



## டிசம்பர் 29

***மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன். (ஓசி. 11:4)***

வேதாகமத்தின் திறவுகோல் வார்த்தையே அன்பாயிருக்கிறது. அன்பிலே அநேக வாக்குத்தத்தங்களும் அநேக எச்சரிக்கைகளும், கிருபையின் பிரகடனங்களும் நீதியின் பிரசித்தமும் அடங்கியிருக்கிறது. ஆகவே தேவ குணத்தில் அன்பு அதிகமாயிருந்து நீதி குறைவாயிருக்க முடியாது. நீதி அதிகமாயிருந்து அன்பு குறைவாயிருக்க முடியாது. அப்படி இருந்துவிட்டால் அது எவ்வளவு பயங்கர விளைவாயிருக்கும். பலவீனத்தில் தேவபலம் விளங்குகிறது. தேவனுடைய ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகியவை முழுமையாக இசைந்து இணைவதால் நாம் அவரில் நம்பிக்கை வைக்கிறோம், அவரை நேசிக்கின்றோம், அவரை வியந்து பாராட்டுகிறோம்; இந்தப் பாராட்டுக்களெல்லாம் அதிகரித்து எக்காலத்திலும் அவர் மாறாதவர் என்பதை உணருகிறோம். R 5809:2

## டிசம்பர் 30

***நான் உமக்கு ஸ்தோத்திரப-யைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன். (சங். 116:17)***

தெய்வீக தயையினாலே நாம் ஆவிக்குரிய விருந்துகளை தேவனிடத்தி-ருந்து பெற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்த வேண்டும். இவ்வுலகத்துக்குரிய நன்மைகளையும் நாம் தேவனிடத்தி-ருந்து பெற்றுக் கொண்டோம். நாம் எந்த நிலைமையி-ருந்தாலும் தேவனிடத்தில் அன்பு கூருகின்றவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும் என்ற நிச்சயத்தை பெற்றிருக்கின்றோம். போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்பதை உணர்ந்தவர்களாய் தற்கால ஜீவியத்திலே தேவன் நாம் இங்கே எவ்வளவு காலம் எவ்விதமாய் இருக்கவேண்டுமென்பதை நிர்ணயித்திருக்கிறார். அதன்படியே இங்கிருக்கவும் வருங்கால ராஜ்யத்தில் அதற்குரிய ஆசீர்வாதங்களைப் பெறவும் தேவன் செய்கின்ற ஏற்பாடுகளுக்காக தேவனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். நம்முடைய உதடுகளின் காணிக்கையான ஸ்தோத்திர ப-யை செலுத்துவதோடு நின்றுவிடாமல் மெய்யாகவே செய்து கொண்ட

உடன்படிக்கையின்படி இந்த ஆண்டு முழுவதும் ஜீவித்திருப்பது இனி தொடர்ந்தும் தேவனுக்கு சுகந்த வாசனையாயிருக்கும். அருமையிலும் அருமையானவர்களே கர்த்தரிடத்தில் நீங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையை இன்றும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். அப்படிச் சொல்லும் பொழுது நீங்கள் ஏற்கனவே செய்து கொண்ட உடன்படிக்கை பலனற்றதாய்ப் போய்விடும் என்பதல்ல. ஒருவேளை பிரதிஷ்டை செய்து பல ஆண்டுகள் காத்திருப்பதால் மேலும் அந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாகும். அருமையான கர்த்தரிடத்தில் நீங்கள் முழுமையாக அவருடையவர்கள் என்று உங்களுடைய எல்லாவற்றையும் ப-பீடத்தின் மேல் வைப்பதே உங்கள் நோக்கமென்றும் தெரிவித்துவிடுங்கள். வருகின்ற புதிய ஆண்டிலே முழுமையான தேவசேவை செய்வதாக தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் இதே தீர்மானத்தோடு முழு உடன்படிக்கையின் பொருத்தனைகளை மகா உன்னதமான தேவனிடத்திற்கு கிறிஸ்து மூலமாய் இன்றே செலுத்துவோமாக. இப்பொழுதே செலுத்துவோமாக. R 3695:3

## டிசம்பர் 31

**ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். (யோவா. 14:23)**

நீங்கள் விழித்திருக்கிறீர்களா? வாசற்படியி-ருந்து கர்த்தர் தட்டும் சத்தம் காதில் விழுகிறதா? மணவாளனின் பிரசன்னத்தின் அறிவிப்பை கேட்டிருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரங்களை உடுத்தியிருக்கிறீர்களா? அந்த இயேசுவின் அடிச்சுவட்டிலே நடந்து உங்கள் நீதியின் வஸ்திரங்கள் “கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்” பார்த்துக் கொள்ளுங்கள். “நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் ஒருவருக்கொருவர் உதவவேண்டும்.” “ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்” (வெளி 19:7) என்று கேள்விப்படுகிற நாம் எல்லா ஆயத்தத்தோடும் ஜாக்கிரதையோடும் நம்மை காத்துக் கொள்ளக் கடவோம், ஆமென். R 88:6



## இரவின் கீதங்களின் வசன அட்டவணை


### ஆதியாகமம்

| | |
|---|---|
| 12:2 | நவ. 18 |
| 12:8 | ஜூலை 7 |
| 24:58 | ஜன. 8 |
| 24:63 | ஜூலை 1 |

### யாத்திராகமம்

| | |
|---|---|
| 3:12 | நவ. 12 |
| 13:21 | செப். 30 |
| 15:1,2 | செப். 22 |
| 15:2 | ஜன. 29 |
| 16:15 | மார். 29 |

### லேவியராகமம்

| | |
|---|---|
| 20:7,8 | ஜூன் 29 |

### எண்ணாகமம்

| | |
|---|---|
| 10:29 | பிப். 4 |
| 23:10 | மார். 1 |
| 28:3,4 | ஜூன் 2 |

### உபாகமம்

| | |
|---|---|
| 5:9 | மே 15 |
| 8:2 | மார். 12 |
| 8:7-11 | மார். 24 |
| 8:18 | பிப். 9 |
| 32:11 | நவ. 25 |
| 33:12 | ஏப். 2 |
| 33:27 | ஜன. 16 |

### யோசுவா

| | |
|---|---|
| 1:2 | மார். 21 |
| 1:6 | மார். 8 |
| 1:7 | செப். 23 |
| 1:8 | மார். 27 |

### நியாயதிபதிகள்

| | |
|---|---|
| 7:20 | டிச. 17 |

### ரூத்

| | |
|---|---|
| 1:16 | ஏப். 7 |

### 1 சாமுயேல்

| | |
|---|---|
| 7:3 | மார். 14 |
| 12:22 | ஏப். 23 |
| 12:24 | அக். 8 |
| 17:47 | ஜூன் 15 |

### 2 சாமுயேல்

| | |
|---|---|
| 5:10 | ஜன. 24 |

### 1 ராஜாக்கள்

| | |
|---|---|
| 8:56 | மே 9 |

### 2 நாளாகமம்

| | |
|---|---|
| 14:11 | ஆக. 28 |
| 32:8 | செப். 14 |

### யோபு

| | |
|---|---|
| 23:10 | ஜன. 4 |

### சங்கீதம்

| | |
|---|---|
| 1:1,3 | ஏப். 11 |
| 4:8 | ஜூலை 10 |
| 17:15 | மார். 18 |
| 24:3,4 | செப். 17 |
| 25:14 | ஏப். 1 |
| 27:14 | நவ. 20 |
| 30:5 | ஆக. 24 |
| 32:11 | பிப். 8 |
| 34:13 | பிப். 21 |
| 37:3 | ஆக. 30 |

*37:7* ................ *ஜன. 17*
*37:23,24* ................ *மே 24*
*40:4* ................ *மே 28*
*40:10* ................ *ஜன. 12*
*42:8* ................ *ஏப். 5*
*42:11* ................ *ஆக. 2*
*45:13* ................ *செப். 28*
*46:10* ................ *ஆக. 21*
*48:14* ................ *மே 4*
*51:15* ................ *டிச.22*
*55:17* ................ *நவ. 3*
*55:22* ................ *ஜூன் 1*
*60:4* ................ *ஜூலை 4*
*63:5,6* ............. *செப். 24*
*68:19* ................ *மே 5*
*71:16* ................ *ஜன. 10*
*73:24* ................ *ஜன.11*
*84:11* ................ *அக். 21*
*89:15* ................ *ஆக.11*
*89:34* ................ *ஜன. 26*
*91:9,10* ................ *அக். 11*
*92:1* ................ *ஆக. 25*
*95:6* ................ *ஜன.1*
*96:2,3* ............. *ஜூலை 27*
*103:2,3* ................ *அக். 9*
*103:8* ................ *ஏப். 12*
*107:7* ............. *ஏப். 9*
*107:13* ............. *ஜூன். 14*
*110:7* ................ *நவ. 23*
*116:7* ................ *மே 6*
*116:17* ................ *டிச. 30*
*119:54* ................ *பிப். 3*
*119:66* ................ *மே 13*
*121:4* ................ *ஜூலை 5*
*122:1* ................ *மே 27*
*122:6* ................ *ஆக.16*
*130:3,4* ................ *அக். 25*
*130:5,6* ............. *செப். 25*
*132:2,4* ............ *ஜூலை9*
*139:3* ................ *ஜன.6*
*141:2* ................ *அக். 28*
*141:5* ................ *டிச. 26*
*145:10,12* ............ *ஜூலை31*
*145:20* ............. *டிச. 18*
*149:1,8* ................ *ஜூன் 6*
*149:4* ................ *பிப். 15*
*149:5* ................ *பிப். 2*

## நீதிமொழிகள்

*3:3* ................ *டிச. 12*
*10:22* ......... *ஜன. 25, ஏப். 3*
*11:24,25* ............. *அக். 19*
*14:12* ................ *ஆக.6*
*15:33* ................ *ஏப். 8*
*17:17* ................ *ஜன. 19*
*29:2* ................ *டிச. 21*

## பிரசங்கி

*5:4* ................ *ஜூலை 6*

## ஏசாயா

*1:19* ................ *ஜூன் 18*
*14:7* ................ *நவ. 2*
*28:12* ................ *பிப். 16*
*28:13* ................ *நவ. 24*
*30:29* ................ *அக். 26*
*32:18* ................ *ஜூன் 5*
*33:22* ................ *மே 26*
*40:31* ................ *ஏப். 6*



*43:2* ................ *ஜன. 31*
*45:3* ................ *ஜூலை 11*
*53:12* ................ *ஏப். 22*
*54:10* ................ *நவ.1*
*55:9* ................ *ஜூன் 27*
*61:1* ................ *ஆக. 20*

## எரேமியா

*31:3* ................ *ஆக. 3*

## புலம்பல்

*3:25,26* ................ *அக்.27*

## தானியேல்

*12:10* ................ *அக். 13*
*12:12* ................ *பிப். 10*

## ஓசியா

*11:4* ................ *டிச. 29*

## ஆமோஸ்

*4:12* ................ *நவ. 13*
*5:14* ................ *அக். 13*

## மீகா

*7:18* ............... *ஜூலை30*

## நாகூம்

*1:7* .............. *ஜூலை 23*

## ஆகாய்

*2:4* ................ *ஆக. 19*

## சகரியா

*4:6* ................ *பிப். 25*

## மல்கியா

*3:7* ................ *அக். 31*
*3:10* ............. *ஜூலை 17*

## மத்தேயு

*4:10* ................ *ஜன. 9*
*4:11* ................ *ஆக. 14*
*5:10* ................ *அக். 20*
*5:13,14* ................ *பிப். 28*
*5:14* ................ *ஆக. 7*
*5:16* ................ *மே 19*
*5:45* ................ *டிச. 8*
*6:10* ................ *டிச. 9*
*6:11* ................ *பிப். 24*
*7:7* ................ *பிப்.26*
*7:14* ................ *மார். 15*
*7:17* ................ *மார்.25*
*10:20* ................ *டிச.7*
*10:21* ................ *நவ.7*
*15:28* ................ *ஏப். 14*
*16:19* ................ *மார். 28*
*18:35* ............. *ஜூலை 13*
*20:12* ................ *ஜூலை 8*
*24:42* ................ *ஜூன் 24*
*25:6* ................ *நவ. 4*
*25:8* ................ *ஏப். 4*
*26:26* ................ *ஏப். 16*
*26:27* ................ *ஏப். 18*
*26:29* ................ *ஏப். 19*
*26:36* ................ *ஜூன் 17*
*28:19* ................ *செப். 26*
*28:20* ................ *மார். 4*

## மாற்கு

*4:20* ................ *ஏப். 24*

4:39 ................ மே 8
5:19 ................ ஆக. 27

### லூக்கா

2:10 ................ டிச. 24
2:11 ................ டிச. 25
6:12 ................ ஜன. 15
6:32,33................ ஏப். 28
9:26 ................ பிப். 20
11:28................ ஜூலை 18
12:32................ மார் 3
17:5 ................ ஆக. 13
17:32................ ஆக. 9
19:8 ................ அக். 29
24:48................ ஜூன் 11

### யோவான்

1:5 ................ மார். 22
1:14 ................ பிப். 11
4:14 ................ ஜன. 3
4:23................ ஆக. 15
4:24 ................ அக். 18
5:36 ................ டிச. 11
5:39 ................ அக். 17
6:33 ................ செப். 20
6:35 ................ மார். 2
6:37 ................ மே 2
6:51................ பிப். 7
6:63 ................ஜூலை 28
7:16 ................ மே 3
7:17 ................ ஜூன் 10
7:37 ................ டிச. 19
9:4 ................ அக். 4
10:11................ டிச. 16
12:26................ ஆக. 1
12:46................ அக். 24
13:17................ செப். 29
14:3 ................ செப். 27
14:16................ ஜன. 27
14:23................ டிச. 31
15:4 ................ ஜூலை 21
15:5 ................ மார். 5
15:8................ ஜன. 13
15:10................ அக். 3
15:13................ ஜூன் 8
16:13................ மே 30
16:22................ பிப். 17
16:24................ஜூலை 14
19:26,27................ டிச. 1
20:19................ செப். 18
20:29................ நவ. 14
20:31................ ஜூலை 12

### அப்போஸ்தலர்

1:8 ................ மார். 26
2:42 ................ ஜன. 23
4:33 ................ஜூலை 24
8:4........ ஜூலை 26,அக். 30
9:16 ................ நவ. 26
9:34 ................ நவ. 17
10:43................ மே 21
11:21................ நவ. 11
13:38................ ஜூலை 15
14:22................ ஜூலை 16
16:25................ பிப். 1
20:28................ நவ. 27
20:31................ மார்ச் 19



20:35................ மே 11
26:22............. ஜூலை 20

### ரோமர்

2:7 ................ பிப். 22
4:7 ................ மே 23
5:1 ................ ஆக. 12
5:1,3-5............ ஜூலை 2
5:5 ................ மார். 9
5:20 ................ மே 29
6:22 ................ ஜூன் 13
6:23 ................ ஜன 5
7:18 ................ ஜூன் 21
8:10 ................ ஜன. 18
8:22 ................ ஜன. 28
10:10................ நவ. 5
12:9 ................ மார். 17
12:10................ அக். 6
12:12................ஜூலை 29
13:11,12............ ஏப். 26
13:12................ ஜன. 7
13:14................ அக். 16

### 1 கொரிந்தியர்

1:26 ................ நவ. 8
2:2 ................ மே 1
3:9 ................ பிப். 12
3:16 ................ மே 10
3:17 ................ டிச. 4
5:7,8................ ஏப். 20
9:27 ................ அக். 14
13:4 ............. செப். 2,3,4
13:5 ...........செப். 5,6,7,8
13:6 ................ செப். 9
13:7 ..........செப். 10,11,12
13:13................ செப். 1
15:20................ ஏப். 15
16:14................ டிச. 27

### 2 கொரிந்தியர்

2:11 ................ மார். 13
3:5,6 .............. ஜூலை 19
4:10 ................ டிச. 15
4:17 ................ பிப். 14
4:17,18................ மே 17
5:19 ................ மே 14
6:3,6................ ஜூன் 16
6:17,18................மார். 20
11:3 ................ ஜூன் 7
12:9 ................ நவ. 10

### கலாத்தியர்

4:28 ................ மார். 11
5:13 ................ ஜன. 22
5:25 ................ ஆக. 23
6:7 ................ அக். 1

### எபேசியர்

1:11,12.............. ஜூன் 26
1:18,19..............செப். 15
1:22,23................ ஆக. 4
2:4,5................ அக். 22
2:6 ................ ஆக. 26
2:18 ................ டிச. 2
3:20 ................ பிப். 5
4:1,2................ ஜூன் 23
4:15,16................ஆக. 22
4:26 ................ மே 16
4:32 ................ அக். 2
5:1 ................ பிப். 18

5:8 ................ ஜன. 2
5:14 ................ நவ. 21
5:16 ................ டிச. 13
5:20 ................ நவ. 22
6:10 ................ மே 25
6:11 ................ செப். 21
6:13 ................ ஜூன் 19
6:16 ................ பிப். 27

## பி-ப்பியர்

1:15 ................ டிச. 3
2:10 ................ ஜூன் 12
2:14,15................ அக். 7
3:2,3................ டிச. 20
3:14 ................ அக். 10
4:13 ................ அக். 5

## கொலோசேயர்

3:2 ................ பிப். 6
3:3 ................ மார். 16
3:9,10................ மே 20
3:12 ................ பிப். 23
3:13 ................ ஏப். 21
3:15 ................ ஜன. 30
3:24 ................ ஆக. 29
3:23,24................ டிச. 6

## 1 தெசலோனிக்கேயர்

2:4 ................ ஏப். 10
5:4 ................ ஆக. 10
5:23 ................ ஜூன் 30
5:24 ................ பிப். 13
5:25 ................ செப். 19

## 1 தீமோத்தேயு

1:12 ................ ஆக. 5

## 2 தீமோத்தேயு

1:3 ................ ஏப். 25
2:15 ................ ஏப். 30

## எபிரேயர்

2:3 ................ மே 12
4:12 ................ மார். 31
4:16 ................ பிப். 19
6:18................ ஏப். 13
7:25 ................ மே 18
10:21,22.............. நவ. 30
10:25................ நவ. 9
10:30................ஜூலை 3
10:39................ மே 31
11:30................ மார். 7
12:1 ................ மே 22
12:3 ................ ஏப். 17
12:13................ நவ. 15
12:14.........ஏப். 29, ஜூன் 3
13:6 ................ டிச. 10

## யாக்கோபு

1:19 ................ ஜன. 14
2:20 .............. ஜூலை 22
4:6,7 ................ ஜூன் 20
5:7,8 ............... மார். 10

## 1 பேதுரு

1:5 ................ நவ. 6
1:8 ................ ஜூன் 4
2:21 .............. ஜூலை 25
3:8 ............... ஜூன் 9
3:12 ................ ஜன. 21
3:15 ................ அக். 15
4:16 ................ ஜன. 20

## 2 பேதுரு

1:8,11................செப். 13



1:10 ................ டிச. 5
1:12 ................ மார். 23
1:16,18............... மே 7
3:17 ................ ஆக. 18

## 1 யோவான்

1:5 ................ நவ. 28
1:9 ................ டிச. 28
2:1 ................ மார். 6
3:18 ............... ஆக. 17
4:18 ................ டிச. 14
4:21 ................ ஜூன் 22
5:1 ................ ஆக. 8
5:3 ................ ஏப். 27
5:21 ................ செப். 16

## யூதா

3 ................ ஜூன் 25
20 ................ அக். 23
21 ................ ஆக. 31

## வெளிப்படுத்துதல்

1:18 ................ நவ. 29
3:18 ................ ஜூன் 28
3:21 ................ டிச. 23
15:3 ........ மார்.30; நவ.16
21:7 ................ நவ. 19

# அநுதின பரலோக மன்னா

# DAILY HEAVENLY MANNA

மன்னா / இரவின் கீதங்கள்

# இரவின் இனிய கீதங்கள்

# SONGS IN THE NIGHT